வெளியீடு : 5-4-2007
Issued : 5-4-2007

809
05/x/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஆகஸ்ட் 19, 2006—தொகுதி 12—எண் 1
Saturday the 19th August, 2006—Volume 12—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V2II, 31'P06
P:6 12 1.
227481

[Price Rs. 3.00

19-8-2006

உள்ளடக்கம்

1. வினாக்கள்-விடைகள்

2. தகவல் கோரல்

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

| | | பக்கங்கள் |
|---|---|---|
| **4. அறிவிப்பு—** | | |
| | அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளை விமர்சனம் செய்வதைப் பத்திரிகைகள் தவிர்க்கக் கோரல் | 47-48 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | | 48-177 |
| | (அ) கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் | |
| | (ஆ) கோரிக்கை எண் 8 — கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – பால்வளம் | |
| | மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி | 48,75,126,129, 155-165, 166 |
| | * மாண்புமிகு திரு. உ. மதிவாணன் | 60-61,75,82, 138,144-155, 165,167 |
| | திரு. சி. சண்முகவேலு | 76-86 |
| | திரு. ஓ. சுப்பிரமணியம் | 86-94 |
| | திரு. கு. ஹசன் அலி | 94-102 |
| | * திரு. கோ. எதிரொலி மணியன் | 103-107 |
| | * திரு. ஞா. ஜாண் ஜோசப் | 107-112 |
| | * திரு. கே. உலகநாதன் | 112-116 |
| | * திரு. பெ. காமராஜ் | 116-123 |
| | * திரு. பி. பலராமன் | 124-129 |
| **6. அரசினர் தீர்மானம்—** | | |
| | விதி 32-ஐத் தளர்த்தல் | 177-178 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | | 178-179 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கரும்புச்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227481
சென்னை-600 008
நூலகம்

**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**12. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**13. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம்

**17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**19. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

**23. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிலையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** - **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** - **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** - **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste Land Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா வீராசாமி, திரு. | - | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - | திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தேனி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பேரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வி.எடி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78 சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. த. - தலைவாசல் (செ.வ)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. த. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஜா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. க. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி
108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. யா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எஸ்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்

131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வி.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரா. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)

155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)
177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு



178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்
200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்

| | | |
|---|---|---|
| 201. | ராஜா, திரு. என்கேகே.பெ. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 224. | ஜான் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | - மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 3, விய - திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 19, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளாமல், உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**51—**

### மின் வசதி

***437–திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலத்தில் தடையில்லாமல் மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் நகர்ப் பகுதியில் ஏற்கெனவே தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதி. இந்தத் தொகுதியில் 4 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 2 ஊராட்சி ஒன்றியங்களிலே மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2 ஊராட்சி ஒன்றியங்களில் இரு முனை மின்சாரம் மட்டும் வழங்குகிறார்கள். அதையும் முறைப்படுத்தி வழங்குகிறார்கள். ஆகவே, மும்முனை மின்சாரம் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பகுதியில் ஏற்கெனவே மின்சாரம் சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல மலைப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு மின்சார வசதி மேலும் சீராக்கப்பட வேண்டும் என்று எண்ணி, அந்தப் பகுதிக்கு 110/22 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில ஆர்ஜிதம் செய்தவுடன், புதிய துணை மின் நிலையம் அங்கே அமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா மாவட்டங்களில் தண்ணீர் திறந்து விடப்படுவதற்கு முன்பாக ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பம்புசெட்டுகள் மூலம் விவசாயம் தொடங்கப்படுகிறது. அப்போது மின்மாற்றிகளில் பழுது ஏற்பட்டால், பழுது நீக்கம் செய்ய, கால அவகாசம் தேவைப்படுகிறது. அதை நீக்கி, உடனுக்குடன் பெறுவதற்கு, rolling stock-ல் போதுமான அளவிற்கு மின்மாற்றிகள் வைக்கப்பட்டு, தடையில்லாமல் மின்சாரம் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதிகளில் இருக்கக்கூடிய



விவசாயிகளுக்குச் சிறப்பு நேர்வாக எடுத்து முதலமைச்சர் அவர்கள்
1996-2001 ஆம் ஆண்டில் 5,000 புதிய மின் இணைப்புகள் தர
வேண்டுமென்று ஆணையிட்டு, ஏற்கெனவே மின் இணைப்புகள்
தந்திருக்கிறோம். அங்கே துணை மின் நிலையங்களை பற்றிக்
கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்
அவர்கள் எந்தெந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் வேண்டுமென்று
சொன்னாரோ, அங்கேயெல்லாம் புதிய துணை மின் நிலையங்கள்
அமைக்கப்பட்டு, அந்த டெல்டா பகுதிகளிலே சீரான மின்சாரம்
வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்டு எங்கேயாவது குறை இருக்குமானால்,
அதை என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வந்தால், அது நிறைவேற்றித்
தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலே பல்வேறு இடங்களிலே விவசாயிகள் தங்கள் மின் மோட்டார்களை இயக்குகிறபோது, அடிக்கடி அதில் இருக்கிற coil எரிந்து விடுகிறது. அதற்குக் காரணம், பல்வேறு இடங்களிலே தேவையான transformer-கள் குறைவாக இருக்கின்றன. அதற்குத் தேவையான transformer-கள் அங்கே இல்லை. குறைந்த மின் அழுத்தம் இருக்கின்ற காரணத்தினாலே அது பழுதுபடுகிறது என்ற குறைபாடுகள் இருக்கின்றன. அனைத்துப் பகுதிகளிலும் அதை service செய்து, குறைவான மின் அழுத்தம் இருக்கின்ற பகுதிகளில் transformer-கள் அனைத்தையும் மாற்றுவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் தெரிவித்ததைப்போல, தமிழ்நாட்டிலே, சில பகுதிகளிலே புதிய transformer-கள் வேண்டுமென்ற கோரிக்கை வந்த காரணத்தால், மின் வாரியம் இந்த ஆண்டு 14,000 புதிய transformer-களை வாங்கி, எங்கேயெல்லாம் குறைகள் தெரிவிக்கப்படுகின்றனவோ, அந்த இடங்களிலே உடனுக்குடன் புதிய transformer-களை நிறுவி வருகிறார்கள். அதே அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்களுடைய அந்தத் தொகுதியிலேயும் புதிய transformer-கள் விரைவில் அமைக்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட, மின்சாரம் கடத்துவதற்கே தகுதியில்லாத கம்பிகள் எல்லாம் பல ஆண்டு காலமாகத் தமிழகம் முழுவதும் இருந்து வருகின்றன. அப்படி இருக்கின்ற அந்தக் கம்பிகள் மழைக் காலங்களில் அறுந்து விழுந்து, பல உயிர்களும் போவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதனால், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், தமிழகம் முழுவதும் இருக்கின்ற, 30 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட மின் கம்பிகளையெல்லாம் மாற்றி, தமிழகம் முழுவதும் ஒரே சீரான மின்சாரம் கிடைப்பதற்கும், அதேபோன்று, விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்கும், தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழ்நாடு முழுவதும் Copper Wire-களிலேதான் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. Copper wire விலை உயர்ந்த காரணத்தினாலும், பல இடங்களிலே திருடர்கள் Copper Wire-ஐ வெட்டி எடுத்துக்கொண்டு போய், மார்க்கெட்டிலே விற்பனை செய்த காரணத்தினாலும், கடந்த 20 ஆண்டு காலமாக, Copper Wire-ல் அந்த இணைப்புக் கொடுப்பதை மாற்றி, மின் வாரியம் புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, 15 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்கு மேல் புழக்கத்தில் உள்ள மின் கம்பிகள் பழுதாகியிருந்தால், அதை மாற்றுவதற்கும் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோதுதான் தருமபுரி மாவட்டத்தில், சித்தேரி என்ற இடத்தில் உள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறத்தக்க வகையில், அங்கே மின்சாரத்தை வழங்கினார்கள். அதற்குப் பிறகு இன்று வரையில் அங்கே மின் இணைப்புகள் வழங்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலை இல்லை. காரணம், வனத் துறையினுடைய அனுமதி வேண்டுமென்று சொல்கிறார்கள். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி, அதற்கு service கொடுக்கப்பட்டிருந்தாலும், low voltage காரணமாக, எந்த motor-ம் இயங்குவதில்லை. அதனால் குடிதண்ணீருக்குப் பெரும்



2006 ஆகஸ்ட் 19]

பிரச்சினையாக இருக்கிறது. எனவே, போர்க்கால அடிப்படையில் மலைவாழ் மக்களுடைய நலன் கருதி, சிறப்பு நேர்வாக, அரசின் சார்பாக ஏதேனும் திட்டங்களை உருவாக்கி, மலைவாழ் மக்களுக்கு மின்சார வசதி தருவதற்கும், குடிதண்ணீர் வசதி உருவாக்கித் தருவதற்கும் அரசு முன்வர வேண்டும். சம்சாரம் இல்லாமலும் இருந்துவிடலாம். மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது என்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், தலைவர் கலைஞருடைய ஆட்சியில் இந்த நன்மைகளைச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 1971 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், இன்றைய முதல்வர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், இந்தியாவிலேயே தமிழகத்தில் மின்சாரம் இல்லாத கிராமமே இருக்கக்கூடாது என்று முயற்சியை மேற்கொண்டு, 95 சதவீதக் கிராமங்கள் மின்மயமாக்கப்பட்டன. இன்னும் மலைப் பகுதிகளிலே 200 கிராமங்கள்தான் மின் வசதி பெறாமல் இருக்கின்றன. அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 94 கிராமங்களிலே சூரிய வெப்பத்தின்மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து, தெரு விளக்குகள், வீட்டு விளக்குகள் போன்றவற்றிற்கு எல்லாம் அந்த ஏற்பாட்டைச் செய்து தருவதற்காக, மரபு சாரா எரிசக்தித் துறை அமைச்சர் அவர்கள் மத்தியிலேயிருந்து 10 நாட்களுக்கு முன்னாலே வந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்த ஆண்டிற்கு 94 கிராமங்களிலேயும், அடுத்த ஆண்டுக்கு மீதமுள்ள 106 கிராமங்களுக்கும் அந்த வசதிகளைச் செய்து தருவதற்கான நிதியை ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டோடு இந்தக் குறைபாடுகள் முடிவடைந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

52—

## குடியிருப்பு வசதி

***794—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 19

சீர்காழி தொகுதி, அரசூர், திருவெண்காடு, ஆச்சாள்புரம் மற்றும் வைத்தீஸ்வரன்கோயிலிலுள்ள துணை மின் நிலையங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருவெண்காடு, வைத்தீஸ்வரன்கோயில் மற்றும் ஆச்சாள்புரம் துணை மின் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் குடியிருப்பு கட்டப் போதுமான இடங்கள் உள்ளன. அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனுமதி கிடைக்கப்பெற்று, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால், கட்டடம் கட்டி முடிக்கப்படும். ஆனால், அரசூரில் துணை மின் நிலையம் அருகில் அரிசி ஆலை உள்ளதால், சுற்றுப்புறச் சூழல் மாசு ஏற்படுவதால், குடியிருப்பு கட்டுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

முற்பகல் 9-40

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை, 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தபொழுது, வைத்தீஸ்வரன்கோயில் துணை மின் நிலையம் 110 கே.வி., அதேபோன்று ஆச்சாள்புரம் துணை மின் நிலையம் 33 கே.வி., திருவெண்காடு துணை மின் நிலையம் ஆகிய துணை மின் நிலையங்களுக்கெல்லாம் அனுமதி தந்து, அவை இன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றிலே பணிபுரியக்கூடிய அலுவலர்கள் குடியிருப்பதற்கு இடமில்லாமல் வெளியிலிருந்து வருகிறார்கள். அங்கே குடியிருந்தால்தான் அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற காரணத்தின் அடிப்படையிலே, மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிதித் துறையின்மூலமாக நிதியைப் பெற்று, எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? இதனைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கான வழிவகை உண்டா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவதென்று மின் வாரியம் முடிவு செய்துவிட்டது. சுற்றுப்புறச் சூழல் துறையிலேயிருந்து அனுமதி பெற வேண்டும். அந்த அனுமதி கிடைத்தவுடன் வீடுகள் கட்டுவதற்கான பணி தொடங்கப்படும்.



2006 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. சின்னப்பன்.

**திரு. பொ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் விளாத்திகுளம் தொகுதியில் பல கிராமங்களிலே, குறைந்த மின் அழுத்தம் காரணமாக, peak hours என்று கூறப்படுகின்ற அந்த நேரங்களிலே, tube light-கள் எரிவதில்லை. Voltage test பண்ணிப் பார்க்கும்போது, 165 voltage அளவில்தான் வந்துகொண்டிருக்கின்றது. அது உடனடியாகச் சரி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, peak hours என்று சொல்லப்படுகின்ற நேரங்களிலே சில இடங்களிலே தாழ்வான மின் அழுத்தம் இருப்பது உண்மை. அதற்காக இந்த அரசாங்கம் மின் வாரியத்தோடு விவாதித்து, அப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம், தேவைப்படுகின்ற இடங்களிலே புதிய transformer-கள் அமைக்கவும், அந்த transformer-கள் அமைத்ததற்குப் பிறகும் low voltage இருக்குமானால், துணை மின் நிலையங்கள் அமைக்கவும் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரில் வீடுகள் மிகவும் நெருக்கமாக உள்ளதாலும், அடிக்கடி மழை பெய்வதாலும் மற்றும் பலத்த காற்று வீசுவதாலும், மின் கம்பிகள் அறுந்து விழுந்து, அதனால் பல ஆபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதைச் சரிசெய்யும் விதத்தில், underground cable அமைத்து, நகரின் வசதியைப் பெருக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் அவர்கள் தெரிவித்ததைப்போல, overhead line மூலம் மின்சாரம் கொடுக்கப்படுகின்ற காரணத்தினாலே, சில இடங்களிலே விபத்துகள் ஏற்படுகின்றன. இதை மனதிற்கொண்டு, முதல் கட்டமாகத் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா மாநகராட்சிகளிலேயும் underground cable பதிப்பது என்றும், படிப்படியாக இந்த ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக எல்லா நகராட்சிப் பகுதிகளிலேயும் underground cable பதிப்பது என்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான உதவிகளையும் இந்த அரசு செய்யும்; முதல்வர் அவர்களும் தேவையான நிதியை ஒதுக்குவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. ஆர். சாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**53—**

## குடிநீர் வழங்கல்

***83-திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் நகராட்சிக்குக் காவிரியிலிருந்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகராட்சிக்குக் காவிரியிலிருந்து குடிநீர் வழங்கக்கூடிய திட்டம் ஆய்வில் உள்ளது.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகருக்குக் காவிரி குடிதண்ணீர்த் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் கூறியிருக்கின்றார். மேலூர் நகரம் என்பது இன்றைக்கு வளர்ச்சியடைந்த நகரமாக மாறிக்கொண்டிருக்கிறது. அதிலேயும், மதுரை அருகே இருக்கின்ற காரணத்தினால், மதுரையிலே சென்னை உயர் நீதிமன்றக் கிளை பக்கத்திலே இருக்கின்ற காரணத்தினால், இங்கு புதிதாகக் குடியிருக்க வருகிறவர்கள் எல்லாம் மேலூரிலேதான் விஸ்தரிப்பாகி வீடுகள் கட்டி குடியிருந்துகொண்டிருக்கின்றார்கள். மக்கள் தொகை அதிகமாகக் கூடிக்கொண்டிருக்கிறது. ஆகையால், குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த நடப்பாண்டே நிதி ஒதுக்கீடு செய்து, கூடிய விரைவிலே காவிரி குடிதண்ணீர்த் திட்டத்தை வழங்குவாரா? மேலூர் நகராட்சிக்கு அமைச்சர் அவர்கள் எப்போது பணியைத் துவக்குவார்? எப்போது அந்தத் தண்ணீர் மேலூர் நகராட்சிக்குக் கிடைக்கும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, மேலூர் நகராட்சி, கொட்டாம்பட்டி, அலங்காநல்லூர், திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு, வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த குடியிருப்புகளும், பாலமேடு, அ. வெள்ளாளப்பட்டி





பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான 148 கோடி ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அடிப்படையிலே, மேலூர் நகராட்சியினுடைய மக்கள் தொகை இன்றைக்கு அதிகரித்து இருக்கிறது. தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு வழங்கப்படக்கூடிய குடிநீரினுடைய அளவு 62 லிட்டராக இருக்கிறது. அதை அதிகப்படுத்தக்கூடிய வகையிலே, தோராய மதிப்பீடாக, ரூ.148 கோடியில் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நிதி ஆதாரத்தை இறுதி செய்தபின், திட்டச் செயலாக்கத்திற்கு இது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான குடியிருப்புகளில் குடிநீர் வழங்குகின்ற இடங்களிலே, அரசு திட்டமிட்டுள்ளவாறு, நபர் வாரியாக வழங்குகின்ற தண்ணீர் சரியாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், பல்வேறு நகரங்களிலே, திருட்டுத்தனமாக மோட்டார்களை வைத்து நீர் எடுப்பதால், எல்லோருக்கும் கொடுப்பது தடைப்படுகிறது, பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனை நீக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இடையிலே திருட்டுத்தனமாக ஆங்காங்கே மோட்டார்களை வைத்துத் தண்ணீர் எடுக்கக்கூடிய அந்த நிலையையும், நான் ஆய்வுப் பணியை மேற்கொண்டபோது, பல்வேறு மாவட்டங்களில் பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இது குறித்து உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட துறை நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2006 ஆகஸ்ட் 19

**54—**

## சொகுசுப் பேருந்துகள்

***556—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி–சென்னை வழித்தடத்தில் அதிகப்படியான கட்டணத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் ஆம்னி பேருந்துகளுக்கு இணையாக, அரசு சொகுசுப் பேருந்துகளைக் குறைந்த கட்டணத்தில் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம், பெங்களூரிலிருந்து சென்னைக்கு கிருஷ்ணகிரி வழியாக 6 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள், ஆம்னி பேருந்துகளுக்கு இணையாகக் குறைவான கட்டணத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 831-ல், பெங்களூரிலிருந்து சென்னைக்கு கிருஷ்ணகிரி வழியாக நாள்தோறும் 22 பேருந்துகள், 38 நடைகள்வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், 6 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகளும் அடங்கும். புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்போது, கூடுதலாக அதிநவீன சொகுசுப் பேருந்துகள் இவ்வழித்தடத்தில் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்கள் காலத்திலே தொடங்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களின்மூலமாக பெங்களூர், ஓசூர், கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு அரசுப் பேருந்துகள் குறைந்த கட்டணத்திலே இயக்கப்பட்டு வந்தன. இந்தப் பேருந்துகள் எல்லாம் சீரும், சிறப்புமாக இயக்கப்பட்டு கொண்டிருந்த நிலையில், கடந்த ஆட்சியிலே ஓசூர்-சென்னை, கிருஷ்ணகிரி-சென்னை போன்ற வழித்தடங்களிலே இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன. அதன் காரணமாக பெங்களூர், மைசூர் போன்ற பெருநகரங்களில் இருந்து வரக்கூடிய பேருந்துகளில், 100 ரூபாய், 70 ரூபாய் அளவிலே கட்டணம் கொடுத்து, சென்னைக்கு வரவேண்டிய பொதுமக்கள் எல்லாம், இரவு நேரங்களிலே கிருஷ்ணகிரி, ஓசூர் போன்ற நகரங்களிலிருந்து அவர்களுக்கு இடம் கிடைக்காமல், புற்றீசல்போல் ஓடி



2006 ஆகஸ்ட் 19]

வருகின்ற தனியார் துறை ஆம்னி பஸ்களில் இன்றைக்கு ரூ.400/-, ரூ.500/- என்ற அளவிலே கட்டணம் கொடுத்து, சென்னைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல், கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்ட ஒரு நேரக் காப்பக அலுவலகத்தை மூடிவிட்டார்கள். அதற்குப் பக்கத்திலேயே தனியார் துறைப் பேருந்துகளுடைய Reservation Counters அலுவலகங்களெல்லாம் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, கிருஷ்ணகிரி, ஓசூர் போன்ற நகரங்களிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசுப் பேருந்துகளை இயக்கக்கூடிய எண்ணம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமும் யாராவது ஓர் உறுப்பினர் தமது பகுதியிலே புதிய பேருந்து விட வேண்டுமென்று கேட்பதும், புதிய பேருந்துகள் வருகின்றபோது அது கவனிக்கப்படும் என்று பதில் சொல்வதும் வழக்கமாக இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள், போக்குவரத்துக் கழகத்திலே தொமுச. தலைவராக இருப்பவர். நிச்சயமாக இந்த அரசு ஏழையெளிய மக்கள் பயன்பெறத்தக்க அளவிலே, புதிய பேருந்துகளை விடவேண்டுமென்ற எண்ணத்தோடுதான், இன்றைக்குப் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு முயற்சி எடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல; தனியார் பேருந்துகளோடு போட்டி போடக்கூடிய அளவிற்கு, அரசு விரைவுப் பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே அவையெல்லாம் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியிலே, "ஆம்னி பேருந்துகளுக்கு இணையாக, அரசு சொகுசுப் பேருந்துகளைக் குறைந்த கட்டணத்தில் இயக்கும் திட்டம் உள்ளதா" என்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆம்னி பேருந்துகளுக்கு இணையாக என்றால், என்னவோ அரசுப் பேருந்துக் கட்டணம் கூடுதலாக இருப்பதைப்போல இருக்கிறது. ஆனால், ஆம்னி பேருந்துகளில் கட்டணம் மிக அதிகமாக, இரட்டிப்பாக இருக்கிறது. ஆகவே, ஆம்னி பேருந்துகளில், அந்தக் கட்டண விகிதத்தை வரையறை செய்வதற்கான முயற்சியை

நமது அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்துவதோடு, அதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன். சமீபத்திலே எங்களுடைய தலைவர் ஒருவர் பயணம் செய்கிறபோது ஏற்பட்ட ஒரு சம்பவம்; சென்ற வாரம் ஒரு கோரிக்கை மனுவை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்; இன்றைக்கு வந்திருக்கிறது; உங்களிடம் அளிக்கவிருக்கிறேன். தனியார் பேருந்திலே அப்படிப்பட்ட மோசமான நடவடிக்கைகள்; 6, 7 பேர்கள், தனியார் பேருந்தில் ஏறிக்கொள்கிறார்கள். அவர்கள் அச்சுறுத்திக் கட்டணத்தை விருப்பத்திற்கேற்ப வசூலிக்கிறார்கள் என்று ஒரு கருத்து இருக்கிறது. எங்கிருந்து எங்கு அழைத்துச் செல்கிறார்களோ, அந்த இடத்திலே கொண்டு இறக்குவதற்குப் பதிலாக, மாற்று இடத்திலே இறக்குகிறார்கள். சென்னையிலேயிருந்து மதுரைக்கு அழைத்துச் செல்கிறபோது, 'பெரியார் பேருந்து நிலையத்திலே இறக்குவேன்' என்று சொல்லிவிட்டு, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலேயே இறங்கிச் செல்ல வேண்டுமென்று பெண்களை வலியுறுத்தியதாக ஒரு செய்தி வந்தது. இப்படி பல முறைகளிலே, ஆம்னி பேருந்துகளை நடத்துபவர்கள், முறைகேடாக நடத்துகிறார்கள் என்று சொல்லப்படுகிற காரணத்தினாலே, கட்டணத்தையும், அதனுடைய பயண நேரங்களையும், மற்றவற்றையும் ஒழுங்குபடுத்தி, அதை நிர்வாகம் செய்வதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று சொல்லியிருக்கின்ற செய்தியைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக ஆம்னி பேருந்துகளை எங்கெங்கெல்லாம் அதிகமான அளவில் இயக்குகிறார்களோ, அங்கே அவற்றைப் பரிசோதிக்கின்ற பணி, நாளை மறுநாளே தொடங்கும் என்பதையும் நம்முடைய உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், ஆம்னி பேருந்துகளின் கட்டணத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்குப் புதிய சட்டத்தை நாம் இயற்ற வேண்டும். அப்படிச் சட்டம் இயற்றுகின்றபோதுதான், அதைக் கட்டுப்படுத்த இயலும். அதனால்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு இணையாக நல்ல பேருந்துகளை நமது போக்குவரத்துக் கழகத்திலே இயக்க வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அருகில் இருக்கின்ற ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், அங்கெல்லாம் இப்பொழுது புதிய, புதிய பேருந்துகளை எவ்வாறு விடுகிறார்கள் என்று சொன்னால், பேருந்துகளை மட்டும் வாடகைக்கு எடுக்கிறார்கள்; ஒரு கிலோ மீட்டருக்கு இவ்வளவு என்று பொது Tender



மூலம் வாடகைக்கு எடுத்து, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய பேருந்துகளை மாற்றுகின்ற system-ஐ அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதையே இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஏற்கலாம் என்று நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட, நம்முடைய மானியக் கோரிக்கையிலேகூட அறிவித்திருக்கிறோம். இந்தக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், அதற்கான பணி தொடங்கவிருக்கிறது. மிக விரைவிலே, 900 நடைகளையும், இருக்கின்ற அந்த வழித்தடங்களையும் புதிய பேருந்துகளாக இயக்க அரசு முடிவெடுத்திருக்கிறது. தொடர்ந்து உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, ஏற்கெனவே இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்குமானால், அங்கே அதில் வசூல் நன்றாக இருக்குமானால், அந்தப் பகுதியும் கவனத்தில் கொள்ளப்படும். ஆம்னி பஸ்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அந்த முயற்சியை அதிகாரிகள் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் பேருந்து, நேரம் மாற்றுதல், தூரத்தை நீட்டித்தல் போன்ற பொது மக்களுடைய கோரிக்கைகளோடு இணைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் கடிதம் கொடுக்கின்ற நேரத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடைய அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல நேரங்களிலே அவர்கள் உரிய பதிலை அளிப்பதில்லை. தேர்தலுக்குப் பிறகு, நான் போக்குவரத்துக் கழக அலுவலர்களுக்கு 11 கடிதங்கள் கொடுத்திருக்கிறேன். ஆனால், இதுவரை ஒரு கடிதத்திற்குக்கூட அவர்கள் பதில் அனுப்பவில்லை. போக்குவரத்துக் கழகத்தினுடைய அதிகாரிகளுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதிலை அனுப்புவதற்குரிய அறிவுறுத்தலை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியில், 5 புதிய வழித்தடங்கள் இப்போது இயக்கப்பட்டிருக்கின்றன. ஆட்சிக்கு வந்த 90 நாட்களுக்குள்ளாக, ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியிலே, வயலூரிலிருந்து திருச்சிக்கும், வாசன் நகரிலிருந்து திருச்சிக்கும், குழுமணி வழியாக அவருடைய சொந்த ஊருக்கே ஒரு பேருந்து இயக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவருக்கும் அந்தச் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது; "பேருந்து இயக்கப்படும்; சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்ள வேண்டும்" என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்ளவில்லை. அதுதான் உண்மை. நீங்கள் கேட்டிருப்பதுபோல, அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் போக்குவரத்துக் கழக அலுவலர்களிடம் ஒரு மனு அளிப்பீர்களானால், அதற்குரிய பதிலை உங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆம்னி பேருந்துகளிலும், நம்முடைய அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்ற சில பேருந்துகளிலும், மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரகாரம் அந்த வண்டிகளில் வீடியோக்கள் பொருத்துவதற்கு வாய்ப்பில்லை என்ற தகவல் தெரிய வருகிறது. அப்படிப் பொருத்துவதற்கு அரசு அனுமதித்திருக்கிறதா? அப்படிப் பொருத்தி, பல பாடல் காட்சிகளும், சில அருவருக்கத்தக்க திரைப்படங்களும் அதிலே காட்டப்படுகின்றன. செய்தித்தாள்களில் வந்த செய்தி; சில பேருந்துகளில் ஆபாசமான படங்களையும் வெளியிட்டு, அதை எதிர்த்து மக்கள் வண்டியை நிறுத்தி, மிகப் பெரிய தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, இந்த விரைவுப் பேருந்துகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருசில குறிப்பிட்ட இடங்களைக் கடப்பதற்காக நேரத்தை ஒதுக்கிக் கொண்டு மிக அதிக வேகமாகப் பயணம் செய்து, தினந்தோறும் விபத்து ஏற்பட்டு விழுப்புரம் நெடுஞ்சாலை, சங்கராபுரம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை பகுதிகளில் ஐந்து பேர், பத்து பேர் இறந்தார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. கடந்த காலங்களில் அந்தத் தனியார் ஆம்னி பேருந்துகளுடைய வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, ஒரு குறிப்பிட்ட வேகத்திற்குமேல் அந்த ஓட்டுநர் வண்டியை ஓட்ட முடியாத அளவுக்கு ceiling வைத்திருப்பார்கள். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் அதுபோன்ற ceiling வைக்கும் முறை இருக்கும். இவற்றையெல்லாம் இந்த அரசு மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கும், அந்த அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களிலும், தனியார் ஆம்னி பேருந்துகளிலும் தற்போது ஒளிபரப்பி வரும் அந்தப் பாடல் காட்சிகளையும், படங்களையும் நிறுத்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன செய்தி நேற்று முன்தினம் அரசுக்குக் கிடைக்கப்பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே அவையெல்லாம் கட்டுப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**55—**

**சொந்தக் கட்டடம்**

***2878—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு போக்குவரத்துத் துறை ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு போக்குவரத்துத் துறை ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு போக்குவரத்துத் துறை ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பில்லை என்று கூறியிருக்கிறார்கள். அந்த அலுவலகம், செங்கற்பட்டு வட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், செய்யூர் வட்டம், மதுராந்தகம் வட்டம் ஆகியவை அடங்கிய அத்தனை பகுதிகளிலும் இருக்கின்ற வாகனங்களைப் பதிவு செய்கிற அலுவலகமாக இருக்கிறது. அங்கே ஒரு நாளைக்கு நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஏறக்குறைய ஒரு நாளைக்கு 25–லிருந்து 30 விபத்துகள் அந்தப் பகுதியிலே ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் தவிர்ப்பதற்குரிய பெரிய அலுவலகமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்குகிறது. ஒரு மாதத்திற்கு

வாடகை, ஏறக்குறைய 5,500 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த இடம்கூட ஒதுக்குப்புறமாக இருக்கிறது. மையப் பகுதியிலும் இல்லை. அரசுக்குச் சொந்தமான நிலங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே, ஏராளமான வருமானம் வரக்கூடிய ஒரு துறை. எனவே, சொந்தக் கட்டடங்களைக் கட்டுவது சிறப்பாக இருக்கும். அதே சமயத்தில், பொதுமக்களுக்குக் கூடுதலாக வசதியைச் செய்து கொடுக்கிற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் நம்முடைய அரசாங்கம் மீண்டும் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர், நாமக்கல், திருப்பூர் ஆகிய இரண்டு வட்டாரப் போக்குவரத்துத் துறை அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி தந்தார்கள். இப்போது பார்த்தால், தமிழ்நாட்டிலே இதுவரை மொத்தம் 89 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நாள் ஒன்றுக்குச் சராசரியாக 5,000 வாகனங்களைத் தமிழ்நாடு முழுவதும் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் முதலமைச்சரிடம் தெரிவித்தபோது, மேலும் ஐந்து அலுவலகங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். திருச்சி, ஈரோடு, திருவாரூர், மதுரை வடக்கு, சேலம் ஆகிய பகுதிகளிலே கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. நமது காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காஞ்சிபுரத்திலும், மீனம்பாக்கத்திலும் ஏற்கெனவே அலுவலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. செங்கற்பட்டிலே இடம் கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு துறையின் சார்பாக எழுதப்பட்டிருக்கிறது. நீங்கள் உரிய இடம் ஒதுக்கித் தருவீர்களானால், அடுத்த ஆண்டே இந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்திருக்கிற அறிவிப்பிற்கிணங்க, உடனடியாக அந்தப் பகுதியிலே நிலத்தைத் தேர்வு செய்ய நானும் முயற்சிக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். அதேபோன்று, நம்முடைய துறையைச் சார்ந்த கேள்வியாகவே, ஏற்கெனவே நான் இந்த அவையிலே பல முறை பேசியிருக்கிறேன். விரைவுப் பேருந்துகள், நெடுந்தொலைவு செல்லுகின்ற பேருந்துகள் எல்லாம் செங்கற்பட்டு நகருக்குள்ளே வந்து செல்ல வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். நம்முடைய அமைச்சர் அவர்களும்,





பேருந்துகள் வந்து செல்லும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தப் பேருந்துகள் எல்லாம் உள்ளே வந்து செல்கின்றனவா என்பதைக் கண்காணிக்க, நேரக் காப்பாளர் அலுவலகம் ஒன்று 24 மணி நேரமும் செங்கற்பட்டு நகரிலே இயங்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய முன்னிலையில், காஞ்சிபுரத்திலே, போக்குவரத்துத் துறையின் சார்பாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டபோது, காஞ்சிபுரத்தில் இருககினற அதிகாரிகள் நேரடியாக செங்கல்பட்டு பகுதியைக் கண்காணிக்க முடிவதில்லை என்ற காரணத்தால், புதிய அலுவலகம் ஒன்று திறக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்து, இப்போது புதிய அலுவலகமே செங்கல்பட்டில் தொடங்க இருக்கிறோம். ஆகவே, அதிகாரிகள் வந்து சிறப்பாகக் கண்காணித்து —நேரக் கண்காணிப்பாளர்கள் மட்டுமல்ல, ஒரு G.M.-அளவில் அங்கு வருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் பஸ் வேண்டுமென்று சொல்கிறார்கள். நானும் சொல்லியிருக்கிறேன். ஆனால், வருவாயைக் கூட்டுவதற்கு நமது அமைச்சர் அவர்களுக்கு ஒரு சின்ன idea. இப்போது Courier Service எல்லா இடங்களிலும் ரொம்ப இலாபகரமாக நடந்துகொண்டிருக்கிறது. காலையிலே கொடுத்தால் இரண்டு மணி நேரத்திலே கிடைக்கும். இல்லையென்றால், Night–லே கொடுத்தால் அடுத்த நாள் கிடைக்கும் என்கிற மாதிரி ஒரு Parcel Service–ஐத் தமிழக அரசு ஆரம்பித்தால், உங்களுக்கு அதிக வருமானம் வரும். Video Coach உங்களுக்கு இருக்கிறது. இப்பொழுது கிராமங்களிலும்கூட Video Coach–ஐப் போட்டு, அங்கே Local–லிலே இருக்கிற Business People–இடம் விளம்பரம் வாங்கினால், இன்னும்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இது மூலக்கேள்விக்குச் சம்பந்தம் இல்லை. பஸ் போக்குவரத்து என்பது, இலாப நோக்கத்தோடு நடத்தப்படுவது அல்ல. மக்களின் சேவைக்காக நடத்தப்படுவது.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காகத்தான் நடத்தப்படுகிறது. அந்த நேரத்தில் வருவாயையும் கூட்டினால், விளம்பரம் போன்றவைமூலம் வந்தால், அரசுக்கு இலாபம் கிடைக்கும் என்ற ரீதியில்தான் சொல்கிறேன். பஸ்ஸில் முன்புறம், பின்புறம், side-ல், விளம்பரங்களை வைத்தால், தமிழக அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்பதால், உங்கள் அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே விளம்பரங்களெல்லாம் செய்யப்படுகின்றன. சென்னை மாநகரில் இருக்கின்ற 2,300 பேருந்துகளுக்கு இப்போது டெண்டர் விடப்பட்டு, விளம்பரங்கள் வைப்பதற்காக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல மற்ற தலைநகரங்களிலும், எங்கெங்கு அதிகமான மக்கள் தொகை இருக்கிறதோ, அங்குதான் விருப்பப்படுகிறார்கள், விளம்பரம் வைப்பதற்கு. அதற்கும் ஒவ்வொரு இடத்திலும், ஆண்டுதோறும் விளம்பரங்களைப் பெறுவதற்காக—15-க்கு மேற்பட்டவர்கள் அதிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையிலே Courier Service போலச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஆம்னி பஸ்காரர்கள் இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆம்னி பஸ் என்று எடுத்துக்கொண்டால், அவர்கள் மக்களை ஏற்றுவதைக் காட்டிலும், திருச்சியிலிருந்து சென்னைக்கு வருகின்றபோது, முக்கியமாக அந்த அலுவலகங்களிலே சென்று, அதை ஒப்படைத்துவிட்டால், அதற்கான ஒரு பெரிய தொகை அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. துறையின் சார்பாகவும் விரைவுப் போக்குவரத்துக் கழகங்களிலே அதைச் செய்ய முடியுமா என்பதை ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் பேருந்து நிலையம், போக்குவரத்திற்கு மிகவும் நெருக்கடியாக உள்ள நிலையமாக இருக்கிறது. எனவே, அந்தப் பேருந்து நிலையத்தை விஸ்தரிக்கவோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றி, புதிய கட்டடங்களை அமைத்துத் தரவோ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாக, Mini Bus permit வழங்க இயலுமா என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரத்தில் நெசவாளர்கள் அதிகம் உள்ளதால், காஞ்சிபுரத்திலிருந்து தொழில்ரீதியாக, ஈரோடு மற்றும் தஞ்சாவூர் செல்ல, நேரடி பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்து தரப்படுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் என்றில்லை. தமிழ்நாட்டிலே மொத்தம் 7,000 மினி பேருந்துகள் இயக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அவற்றிலே 3,985 பேருந்துகள் இதுவரை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள 3,015 பேருந்துகளுக்கான அனுமதியை இப்போது தரச் சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கூட்டத் தொடர் முடிந்தவுடன் அதற்கான மனுக்களையெல்லாம் பெற்றுக்கொண்டு, சுய உதவிக் குழுக்கள் மட்டுமல்ல, யார் கேட்டாலும், அவர்களுக்கு வழங்குவதுதான் அரசினுடைய பணி. நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள்; காஞ்சிபுரம் பகுதியில் இருந்து புதிதாகப் பேருந்துகளெல்லாம் இயக்கப்பட வேண்டுமென்று. ஏற்கெனவே அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய பேருந்துகள் வருகின்றபோது, அது கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம்.

**திருமதி செல்வி இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, மணலூர் பணிமனையில் இருக்கும் 25 அரசுப் பேருந்துகள், டயர்கள் இல்லாமல் பழுதாகி, இயக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை உடனடியாகச் சரிசெய்து, அந்த அரசுப் பேருந்துகளை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும், கேட்கும் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் இந்தப் பிரச்சினை ஓரிரு நாட்கள் இருந்தது உண்மை. காரணம், திடீரென்று இரப்பர் விலை டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய்க்கு மேல் ஏறிவிட்ட காரணத்தால், ஏற்கெனவே டெண்டர் போட்டு, அந்த டயரைத் தருகின்றவர்கள் தர மறுத்து, அவர்களோடு போராடித்தான் பெறவேண்டியிருந்தது. மறுபடியும் அரசிடம் அனுமதி பெற்று புதிய டெண்டர் விடப்பட்டு, நேற்று அனுமதி அளிக்கப்பட்டு, அனைத்துப் பகுதிகளுக்கும் டயர் வழங்கப்பட்டுவிட்டது. ஆனாலும், அந்த டயர் இல்லாத நேரத்திலேகூட, உடனுக்குடன் ஏற்பாடு செய்து, அங்கு வண்டிகள் எல்லாம் நிற்காமல் இயக்கப்பட்டுத்தான் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**56—**

## வட்டம்

***1977—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையை மையமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகாவானது ஏழு வருவாய் பிர்காக்கள், 50 வருவாய் கிராமங்கள், கிட்டத்தட்ட 4,000 எக்டேர் நஞ்சை நிலமும், 67,000 எக்டேர் புஞ்சை நிலமும் 15,000 எக்டேர் அரசுப் புறம்போக்கு நிலமும், 1,000 எட்டேர் நத்தம் நிலமும், ஆக, கிட்டத்தட்ட 87,000 எக்டேர் அளவிற்கு நிலப்பரப்பு உள்ளது. அங்கு மக்கள் தொகையை எடுத்துக்கொண்டால், 2,64,595 பேர் 2001 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி உள்ளார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய ஒரு





வட்டத்தை இரண்டாகப் பிரித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வதோடு, தங்கள் மாவட்டத்தில் ஒரு வட்டத்தை எவ்வாறு பிரித்தீர்களோ, அதேபோன்று நெல்லை மாவட்டத்தில் ராதாபுரம் தாலுகாவையும் இரண்டாகப் பிரித்துத் தருவீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசையன்விளையை மையமாகக் கொண்டு ஒரு வட்டம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். அந்தக் கேள்வியிலே, திசையன்விளையை உள்ளடக்கி ஒரு வட்டம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டர் இருக்க வேண்டும். அதேபோல, மக்கள் தொகை குறைந்தபட்சம் ஒரு இலட்சத்திலிருந்து, அதற்கு மேல் இருக்க வேண்டும். வருவாய் கிராமங்கள் 30 கிராமங்கள் இருக்க வேண்டுமென்று அரசினுடைய குறிப்பிலே வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கவிருக்கின்ற வட்டம் 8 வருவாய் கிராமங்களையே கொண்டிருக்கின்ற காரணத்தாலும், அதேபோல, மக்கள் தொகை 55,000 தான் அந்த 8 வருவாய் கிராமங்களிலே இருக்கின்ற காரணத்தாலும், 111 சதுர கிலோ மீட்டர்தான் பரப்பளவு உள்ள காரணத்தாலும், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டம் அமைக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தாலுகாவை எடுத்துக்கொண்டால், வள்ளியூர் பேரூராட்சி, மற்றும் வள்ளியூர் பிர்காவானது, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பேரூராட்சிப் பகுதியாகும். அதே அடிப்படையில், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டம் பிரிக்கப்படுகின்ற சமயத்தில், அதன் அருகில் இருக்கின்ற நாங்குநேரி தாலுகாவிற்கு உட்பட்ட இட்டாமொழி, மன்னார்புரம், விஜயநாராயணம் போன்ற வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கி, கிட்டத்தட்ட அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கின்ற, அருகிலிருக்கின்ற பல வருவாய் கிராமங்களைத் திசையன்விளையோடு இணைத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதி வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருவாய் வட்டம் அமைக்கின்றபொழுது, ஒரு ஊராட்சி ஒன்றியம் இரண்டு வட்டங்களிலே வருவது சாத்தியமில்லை. அதுதான் அரசினுடைய குறிப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு ஒன்றியம், இரண்டு வட்டங்களிலே வருவது, எதிர்காலத்திலே நடைமுறையிலே அது சாத்தியமில்லை என்று வரையறுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, தற்சமயம் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிக்க இயலாது.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியைத் தனி வட்டமாக ஆக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினாவை எழுப்பக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில், 30, 40 ஆண்டுகளுக்கு முன்பாக 5 தாலுகாக்களாக இருந்தது. தண்டையார்பேட்டை தாலுகா, பெரம்பூர் தாலுகா, மாம்பலம்–கிண்டி தாலுகா, எக்மோர்–நுங்கம்பாக்கம் தாலுகா என கிட்டத்தட்ட 25 இலட்சம் மக்கள் தொகை உள்ள சூழ்நிலையிலே அந்தத் தாலுகாக்கள் இயங்கி வந்தன. தற்போது 65 இலட்சம் மக்கள் தொகை உள்ள சூழ்நிலையில், இந்தத் தாலுகாக்களைப் பிரித்து சீரமைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, ஒரு இலட்சம் மக்கள் தொகை என்ற அடிப்படையிலே ஒரு தாலுகாவை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியதுபோல, தமிழ்நாட்டிலே அதிக மக்கள் தொகை, சதுர கிலோ மீட்டரில் அதிகமாக உள்ள பகுதிகள் எதிர்காலத்திலே பிரிக்கப்படவிருக்கின்றன. குறிப்பாக, எல்லை வரையறை ஆணையத்தினுடைய, தடையாணையின் காரணமாக தற்சமயம் அரசு





*புதிய வட்டங்களை உருவாக்கும் சூழ்நிலையில் இல்லை. வருகின்ற காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 57, திரு. பெ. காமராஜ், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.*

**57—**

**வட்டம்**

***2027—திரு. பெ. காமராஜ்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியை மையமாக வைத்து கடவூர் தனி வட்டமாக அமைக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவூர், குளித்தலை வட்டத் தலைநகரிலிருந்து சுமார் 56 கி.மீ. தொலைவில் இருப்பதால் கிராம மக்கள் அவசரத் தேவைகளுக்காக வட்டாட்சியர் அலுவலகம் சென்று வர மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 வருவாய் கிராமங்கள் உள்ளன. இந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நஞ்சை நிலங்கள்போல் இல்லாமல் புஞ்சை நிலங்களாகவும், பெரும்பாலானவை சாகுபடி செய்ய முடியாத நிலையில் தரிசாகவும் உள்ளதால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் வறுமை நிலையில் உள்ளனர். அதனால், வெளியூர்களுக்குச் சென்று கூலி வேலை செய்து பிழைத்து வருகின்றனர். இந்தப் பகுதியின் பின்தங்கிய நிலையினைக் கருத்தில் கொண்டு, தனிக் கவனம் செலுத்தி, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியுள்ளது. மேலும், சான்றிதழ்களைப் பெற, குளித்தலை வட்ட அலுவலகம் செல்ல பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இந்தப் பகுதி மக்கள் தரகம்பட்டியைத் தலைநகரமாகக் கொண்டு கடவூர் என்ற புதிய வட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நீண்ட காலமாகக்

கோரிக்கை வைத்து வருகின்றனர். இதைப் பொறுத்து, அரசாணை நிலை எண்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. பெ. காமராஜ்:** ஒரு நிமிடம். அரசாணை நிலை எண் 913, வருவாய்த் துறை, நாள் 30-9-1995, அரசாணை நிலை எண் 1375, வருவாய்த் துறை, நாள் 26-12-1996, அரசாணை நிலை எண் 710, வருவாய்த் துறை, நாள் 25-8-1998; ஆக, கடந்த 10 ஆண்டுகளாக, என்னுடைய தொகுதி மக்கள், தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுது கடலூரைத் தனி தாலுகாவாக அறிவிப்பார் என்று எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, எனக்காக ஒரு சிறப்பு நேர்வாக அளிக்க வேண்டுமென தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு, கடவூர் வட்டம் அமைக்க வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை. குளித்தலை வட்டம் என்பது மிகப் பெரிய வட்டம். 1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், முதல் முறையாக மிகப் பெரிய வட்டமாக இருந்த குளித்தலையை, கிருஷ்ணராயபுரம் வட்டமாகப் பிரித்துத் தந்தார்கள். தற்சமயம் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பதைப்போல, தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு, கடவூர் வட்டம், அதன் சுற்றளவு கிட்டத்தட்ட 427 சதுர கி.மீ. இருக்கின்றது. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமாக இருக்கிறது. மக்கள் தொகையும் கிட்டத்தட்ட 90 ஆயிரம் இருக்கிறது. அதுவும் ஓரளவுக்குச் சரியாக இருக்கிறது. 30 வருவாய் வட்டங்கள் என்பது 20 வருவாய் வட்டங்களாக இருக்கின்றன. இருந்தாலும், எல்லை வரையறை ஆணையத்திலுடைய அனுமதி கிடைத்தவுடன், கடவூர் வட்டம் வழங்குவது பற்றி இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் கையை உயர்த்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். சரி, சந்திரகாசி சொல்லுங்கள்.



*முற்பகல் 10-15*

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், வேப்பூர் ஒன்றியம் ஆகிய இந்த இரண்டு ஒன்றியங்களையும் உள்ளடக்கிய, குன்னம், வட்டாட்சித் தலைநகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால், குன்னத்திற்கு வருவதற்கு ஆலத்தூர் ஒன்றியத்திலிருந்து இரண்டு பஸ்கள் மாறி வருகின்ற சூழ்நிலை உள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் சொன்னார்கள், ஒரு வட்டம் அமைவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று சொன்னார்களோ, அந்த அத்தனை தகுதிகளையும் உள்ளடக்கிய பாடாலூரை மையமாகக் கொண்டு, பாடாலூரை தனியாக வட்டாட்சித் தலைநகரமாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்முலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதே அவையிலே பல முறை சொல்லியிருக்கிறேன். நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய, எல்லை வரையறை ஆணையத்தினுடைய பணி தொடர்ந்து நடைபெறுகின்ற காரணத்தால், அந்தத் தடை நீங்கியவுடன், நிச்சயமாக அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**58—**

## அரசு அச்சகம்

***1945—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் அரசு அச்சகம் ஒன்று துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உடுமலைப்பேட்டையில் அரசு அச்சகம் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். ஏற்கெனவே அரசு அச்சகம் கோவை மாநகரிலே இருக்கிறது. உடுமலைப்பேட்டை பகுதியிலே ஏன் வேண்டுமென்று கேட்டேன் என்றால், அங்கு 5 காகித ஆலைகள் இருக்கின்றன. அதற்குப் போதிய காகிதங்கள் கிடைக்கக்கூடிய வகையிலும், ஏற்கெனவே அங்கே வாக்காளர்கள் பட்டியல்கூட திண்டுக்கல்லிலே தனியார் அச்சகத்திலே அடிக்கச் செல்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, இங்கே அந்த இடத்திலேயே ஓர் அச்சகம் அமைத்தால் நன்றாக இருக்கும் என்பதை கருத்திலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு அச்சகம் அமைப்பதற்கு முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அருகிலே, சேலம் மற்றும் மதுரையிலே அரசு கிளை அச்சகங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களுக்கான பணிகள் அண்டை மாவட்டங்களில் உள்ள சேலம், மதுரை அச்சகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** தமிழ்நாட்டில் அரசு அச்சகங்கள் எங்கெங்கு உள்ளன என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் அரசு அச்சகங்கள், மைய அச்சகம் ஒன்றும், கிளை அச்சகங்கள் 7-ம் செயல்பட்டு வருகின்றன. மைய அச்சகம், தங்க சாலை, சென்னை-79 என்ற இடத்திலே செயல்பட்டு வருகிறது. கிளை அச்சகங்கள், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒன்றும், அதேபோல், மதுரை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒன்றும், அதேபோல், மதுரை மாவட்டத்திலும், அதேபோல், சேலம் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் விருத்தாசலத்திலும் என, 7 கிளை அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்.

**59—**

## குடிசை மாற்று வாரிய வீடுகள்

***1675 - திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக வீடுகளைக் கட்டும் சூழ்நிலை இல்லை என்றாலும், வட்டத் தலைநகரங்களிலாவது குறைந்தபட்சம் இதுபோன்று குடிசை மாற்று வாரியம்மூலமாக வீடுகள் கட்டினால், அரசு அலுவலர்கள் அதிகமாகப் பணியாற்றுகின்ற காரணத்தினால் வசதியாக இருக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு, குறைந்தபட்சம் வட்டத் தலைநகரங்களிலாவது குடிசை மாற்றுத் துறைமூலமாக வீடுகள் கட்டும் உத்தேசம் அரசின் ஆய்வில் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் என்பது ஒரு குறிக்கோளைக் கொண்டது. குடிசைகள்மூலமாக சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு விடாமலும், நெருக்கமாக குடிசைகள் அமைந்திருப்பதால் விபத்துகள்

ஏற்படாமல் இருப்பதற்காகவும் சாலை ஓரங்களிலே இருக்கும் குடிசைகளை அப்புறப்படுத்துவதற்காக, மாற்று இடங்களில் வாரியத்தின் சார்பில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி, இந்த மக்கள் அங்கு போய் குடியமர்த்தப்படுகிறார்கள். எனவே, கிராமப்புறங்களுக்கு இப்பொழுது இந்தத் திட்டம் இல்லை. மாநகர் மற்றும் பேரூராட்சிகளில் இந்தத் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கேள்வியில், வட்டாட்சியினுடைய தலைமையிடத்திலே யாவது அது பரிசீலிக்கப்படுமா என்று கேட்டார்கள். எங்கள் மாவட்டத்திலேயே கூடலாடி, திருவாடனை போன்ற வட்டங்களினுடைய தலைமையிடங்கள் சிற்றூராட்சியாகவே இருக்கின்றன. எனவே, தகுதிக்குட்பட்ட பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிக்கு மட்டும்தான் இப்பொழுது இத்திட்டம் அமலில் உள்ளது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சிப் பகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக குடியிருப்புகள் கட்டுவதற்குக் கடந்த கால ஆட்சியில் 39 ஏக்கர் மனைகளை அரசு கையகப்படுத்த உத்தரவிட்டிருக்கிறது. அவற்றில் கிட்டத்தட்ட 20 ஏக்கர் மனைகளைக் கையகப்படுத்தக்கூடாது என்று வழக்கு மன்றம்மூலமாக மக்கள் தடையாணை வாங்கி இருக்கிறார்கள். மீதம் இருக்கக்கூடிய 19 ஏக்கர் மனைகளைக் கையகப்படுத்தக்கூடாது என்று அங்கே இருக்கக்கூடிய பொது மக்கள் மிகப் பெரிய போராட்டங்களையெல்லாம் நடத்தி இருக்கிறார்கள். நாங்களும் அதிலே கலந்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் அதிலே கலந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அரசால் கையகப்படுத்தப்பட்ட அந்த நிலங்களை ஏழை எளிய மக்களுக்கு, அதனுடைய உடைமைதாரர்களுக்கு அரசு மீண்டும் வழங்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் நிலங்களை ஆர்ஜிதம் செய்வது தனியாருக்குத் தாரை வார்ப்பதற்காக அல்ல, மக்களுடைய தேவைகளை உணர்ந்து, வீட்டுமனைப் பட்டாக்களை உரிய நேரத்தில், ஒரே நேரத்தில் வாங்கும் சக்தி இல்லாத மக்களுக்குத் தவணை முறையில் அந்த



plot-களைக் கொடுப்பதற்காக, தரம் உயர்த்தப்பட்ட வீட்டு மனைகளைக் கொடுப்பதற்காக அப்படிப்பட்ட ஆர்ஜிதங்கள் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள் இல்லையா? உட்காருங்கள். திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் இட நெருக்கடியாக குடிசைகளிலே வாழ்ந்து வருகிற ஏழை எளிய மக்களுக்குக் கடந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 504 பேர்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலமாக வழங்கப்பட்டது. அந்த இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்ட இடங்களில், சிறப்பு நேர்வாக, நகராட்சிப் பகுதி எல்லைக்குட்பட்ட பகுதியாக இருப்பதால், குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக அந்த ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பீர்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் பட்டாக்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். குடிசை மாற்றுப் பணியாக இருந்தாலும், வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் இதுபோன்ற வீடுகளைக் கட்டிக்கொடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. தனி நபருடைய வீட்டு வசதி கடனுக்கு நகரக் கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பு அங்கே உள்ளது. அந்த நிர்வாகிகளை அணுகி, அவர்கள்மூலமாக கடன் பெற்றுத் தரும் திட்டத்தின் அடிப்படையில், அந்த உறுப்பினருக்குக் கடனைப் பெற்றுத் தர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆவன செய்யலாம் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாணபுமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிக்க முடியாத மிகப் பெரிய, பெரிய சாதனைகளையெல்லாம் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு செய்துகொண்டிருக்கின்றீர்கள். அதிலே ஒரு சாதனையாக இப்பொழுது குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தொகுப்பு வீடுகளால் கிராமப்புறங்களிலே இருக்கின்ற

மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில், அவர்கள் பிஷப்புகளை நாடிச் செல்கின்றார்கள். போலியான வாக்குறுதிகளை நம்புகின்றார்கள். அதன் காரணமாக அங்கே அந்த ஏழை எளிய மக்கள் மோசடி செய்யப்படுகின்ற சூழ்நிலையைத் தடுப்பதற்கு, அரசாங்கத்தினுடைய பேரூராட்சி என்கின்ற நிலையை மாற்றி, ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாகவும் இந்த வீடுகளைக் குடிசை மாற்று வாரியம் உருவாக்கித் தருவதற்கு முன்வருமா என்பதைக் கருணையுடன் பரிசீலிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. கப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரையும் நாம் குறையாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால், சில நேரங்களில் நாடே போலிகளை நம்பிப் போகிறபோது, நாங்கள் என்ன செய்ய முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**60—**

## நவீன விளையாட்டு அரங்கம்

***464—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் விளையாட்டு அரங்கம் அமைக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் நவீன விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் நவீன விளையாட்டு அரங்கம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 10 ஆண்டுகளுக்கு முன்பு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக அரசு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகளும் தொடங்கி, பில்லர்கள் எழுப்பப்பட்டு, பிறகு அந்த இடம் எங்களுக்குரியது என்று ஒரு தனியார் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே அந்தப் பணிகள் பாதியிலே நிற்கின்றன. சற்றேறக்குறைய 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட ஒரு நிலையில் அதற்காகக் கொண்டு வந்திருக்கிற இரும்பு, சிமெண்ட், இவை அனைத்துமே உபயோகமற்ற நிலைக்குப் போய் இருக்கின்றன. ஆகவே, நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, அரசு அந்த இடத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் விளையாட்டு அரங்கம் அமைத்திட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ஒப்படைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையைப் பெறுகிற நேரத்தில், விளையாட்டு அரங்கம் அமைக்க வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு ஏற்கெனவே எழுந்த இடப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிற காரணத்தாலும், அதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லாத காரணத்தாலும், அதனைத் தமிழ்நாடு அரசுமூலம் செய்வதற்கு இப்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் ஏற்கெனவே நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்டு, அதன் பிறகு, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது, அந்த இடத்தை உரியவர்களுக்கே மீண்டும் திருப்பி வழங்கி அரசு உத்தரவு வழங்கப்பட்டதாகவும், 1991-க்குப் பிறகு அ.தி.மு.க. அரசாங்கம் வந்த நேரத்தில் அதைக் கவனத்தில் கொள்ளாமல், அந்த இடம் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கருதி, அது விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட காரணத்தினால், இன்றைக்கு அவர்கள் நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வாய்ப்பில்லையென்றால், மாநகராட்சியாக மாறியிருக்கிற இந்தச் சூழ்நிலையில், ஏராளமான விளையாட்டு நிகழ்ச்சிகள் அங்கே தொடர்ந்து நடக்கின்றன. அதற்காக காலியிடங்களில் பல இலட்சக்கணக்கில் செலவு செய்து, அந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டிய காரணத்தினால், மாற்று இடம் ஏற்பாடு செய்து, அரசு அந்த விளையாட்டு அரங்கத்தை அமைக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் சம்பந்தப்பட்ட நீதிமன்றப் பிரச்சினையை மட்டும் தீர்த்து வைத்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆலோசனையைப் பெற்று, விளையாட்டு

ஆணையத்தின்மூலமாக அதற்கு ஏற்பாடு செய்வதை இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு சிறந்த விளையாட்டு அரங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் அகில இந்திய அளவில் பெண்களுக்கான கால் பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவ்வாறு நடத்தப்பட்டபோது, பெண் வீராங்கனைகள், தங்குவதற்கான இட வசதி, ஹாஸ்டல் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டார்கள். ஆகவே, திண்டுக்கல் உள்பட, மாவட்ட விளையாட்டு அரங்கங்கள் இருக்கக்கூடிய இடங்களில் பெண் வீராங்கனைகள் தங்குவதற்கு விடுதி ஏற்பாட்டினை எதிர்காலத்தில் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்க முன்வருமா என்பதனை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பெண் வீராங்கனைகள் தங்குவதற்கான இட வசதிகளைச் செய்வதற்கு இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் கட்டப்படுகின்ற நவீன விளையாட்டு அரங்கம், இரண்டாண்டு காலமாக, காலதாமதமாகக் கட்டப்பட்டுக்கொண்டு வருகிறது. அதை விரைந்து கட்டுவதற்கு அந்தக் கட்டட கான்ட்ராக்டருக்கு அறிவுறுத்தப்படுமா? அங்கே ஒரு நீச்சல் குளம் அமைத்துத் தரப்படுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் அந்த விளையாட்டு அரங்கத்தின் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த மாவட்ட



ஆட்சித் தலைவர், அந்தப் பணியை இந்த ஆண்டு வருகிற 10-வது மாதத்திற்குள் முடித்துத் தருவதாக உறுதி அளித்திருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளின்படி அந்தப் பணி சீக்கிரமாக நடைபெறும். மேலும், நீச்சல் குளம் சம்பந்தமாக, இந்த அரசு மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) இலங்கை முல்லைத் தீவு மாவட்டத்தில் குழந்தைகள் காப்பகத்தின்மீது இராணுவம் நடத்திய குண்டு வீச்சினால் மாணவிகள் உயிரிழந்தது தொடர்பாக பேரவை நிறைவேற்றிய இரங்கல் தீர்மானம் குறித்து இலங்கை துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், 14–8–2006 அன்று இலங்கை முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள அனாதைக் குழந்தைகள் காப்பகத்தின்மீது இலங்கை இராணுவத்தினர் சரமாரியாகக் குண்டுகள் வீசித் தாக்கியதன் காரணமாக, 61 மாணவிகள் உயிரிழந்தது குறித்தும், 150–க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயம் அடைந்தது குறித்தும் இந்தப் பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்தது. அதையொட்டி இன்றையதினம் வந்திருக்கக்கூடிய பத்திரிகைச் செய்தியில், இலங்கை அரசின் தென்னிந்தியத் துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில், 'தமிழகச் சட்டப் பேரவையில் 17–8–2006 அனறு நிறைவேற்றப்பட்ட இலங்கை பற்றிய தீர்மானம், இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் யூகங்களின் அடிப்படையில் திரித்துக் கூறப்பட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை முதலில் தெரிவிக்க விரும்புகிறோம்' என்று ஒரு விஷமத்தனமான செய்தியை இலங்கையினுடைய

[திரு. மு. கண்ணப்பன்] [2006 ஆகஸ்ட் 19

தென்னிந்தியத் துணைத் தூதரகம் வெளியிட்டுள்ளது. அதோடு, இன்றைய பத்திரிகைச் செய்தியின்படி, அமெரிக்காவினுடைய அதிபர் புஷ் அவர்களுடைய சிறப்புத் தூதுவர் இலங்கைக்கு வந்ததாகவும், இலங்கையினுடைய அதிபரை இரண்டு மணி நேரம் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் நாம் இந்தச் செய்தியில் காண்கின்றோம்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்திய அரசு மிகவும் கூர்ந்து கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு காலகட்டம் வந்திருக்கிறது. பாகிஸ்தானும், சீனாவும் ஏராளமான ஆயுதங்களை சிங்கள அரசுக்குத் தருகின்றன. பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. அமைப்பு, இலங்கையிலேயே இருந்துகொண்டு அரசுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறது. திரிகோணமலையையும், அதன் இயற்கைத் துறைமுகத்தையும், இந்துமாக் கடலையும் ஆதிக்கத்திற்கு வழி அமைக்கும் சூத்திரகேந்திரம் என்று அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் ஆதிக்கக் கரங்களுக்குள் வளைக்க முயன்று வருகின்றது.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்தபோது, ஈழ மண்ணில் அன்னிய நாட்டின் இராணுவ தளம் அமைவதைத் தனக்கு எதிரான செயலாக இந்தியா கருதும் என்று ஒரு கடுமையான எச்சரிக்கையை இலங்கை அரசுக்கு அப்பொழுது விடுத்தார்கள். அமெரிக்காவினுடைய முயற்சி அந்தக் காலகட்டத்தில் முறியடிக்கப்பட்டது. தற்பொழுது அமெரிக்கா, திரிகோணமலை வட்டாரத்தில் கால் ஊன்றுவதற்குத் தொடங்கியிருக்கிறது. எனவே, ஈழத் தமிழர் நலன் மட்டுமல்ல, இந்தியாவின் பூகோள நலன்களையும் பாதுகாக்க இந்தியா மிகுந்த எச்சரிக்கையோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராகக் கொழும்பு நகரத்தில் சிங்கள வெறியர்கள் கொலைவெறி கொண்டு தாக்கியபோது, அன்னை இந்திரா காந்தி அவர்கள் அன்றைய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் அவர்களையும், ஜி. பார்த்தசாரதி அவர்களையும் இலங்கை நாட்டுக்கு அனுப்பி, ஜெயவர்த்தனே அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்கள். உடனே இனக் கலவரம் அங்கே நிறுத்தப்பட்டது. தற்போது மாதா கோயிலில் தஞ்சம் புகுந்தவர்கள்மீதும், அனாதைக் குழந்தைகள் காப்பகத்தின்மீதும் திட்டமிட்டு சிங்கள இராணுவம் குண்டு வீசி, இளம் தமிழ் தளிர்களைக் கொன்று குவித்துள்ளது. இந்தக் கொலை பாதகச் செயலை ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் கோஃபி அன்னான் அவர்கள் கண்டித்துள்ளார்கள். நமது நாட்டின் தலைநகரான டெல்லியிலிருந்து ஒரு எச்சரிக்கைகூட இலங்கைக்குக் கொடுக்கப்படாமல்



2006 ஆகஸ்ட் 19] [திரு. மு. கண்ணப்பன்]

இருப்பது வருத்தத்தைத் தருகிறது. இந்த நிலையில் இலங்கையின் சிங்கள அரசு, இந்தியாவின் இராணுவத் தளவாடங்களையும், இந்தியக் கடற்படையின் உதவிகளையும் நாடியதாகவும், அந்த மாதிரியான உதவியைச் செய்வதற்கு இந்திய அரசின் இராணுவ அமைச்சகம் முன்வந்துள்ளதாகவும் இலங்கை அரசின் ஆதரவு ஊடகங்களிலிருந்து தெரிய வருகிறது.

*முற்பகல் 10–35*

கடந்த ஆண்டு பலாலி விமான தளத்தை இலங்கை அரசு புதுப்பிக்கின்ற சமயத்தில் இந்தியா உதவியதாலும், ஏற்கெனவே ரேடார் சாதனங்களை இலங்கை விமானப் படைக்கு இந்தியா வழங்கியுள்ளதாலும், தற்போது வெளிவந்துள்ள செய்திகள் நமக்கு மிகவும் கவலையைத் தருகின்றன.

இலங்கையில் தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு சிங்கள அரசு, அறிவிக்கப்படாத யுத்தத்தைத் தொடுத்திருக்கும் இந்த நேரத்தில் இந்தியா எந்தவிதமான இராணுவ உதவியையும் இலங்கை அரசுக்குச் செய்யக்கூடாது. அத்துடன், இலங்கையில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில், குறிப்பாகத் திரிகோணமலை வட்டாரத்தில் உள்ள தமிழர்களுக்கு—அவர்கள் அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக, இருப்பிடத்தை விட்டு வெளியேறுவது மட்டுமல்ல, இலங்கை அரசினுடைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, அரிசி மற்றும் உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உயிர் காக்கும் மருந்துகள்கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, நம்முடைய நாட்டிலேயிருந்து உயிர் காக்கும் மருந்துகளையும், உணவுப் பொருட்களையும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அனுப்பி, அங்கேயிருக்கக்கூடிய பொதுச் சேவை நிறுவனங்கள்மூலம் தமிழ் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு நம்முடைய அரசு அதற்கான முயற்சிகளை, மத்திய அரசின்மூலம் எடுக்க வேண்டுமென்று தங்கள்மூலமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ம.தி.மு.க.வினுடைய சட்டப் பேரவைக் கட்சித் தலைவர் கண்ணப்பன் அவர்கள் எழுப்பியிருக்கின்ற இந்தப் பிரச்சினை மிக, மிக முக்கியமான பிரச்சினை என்றாலும்கூட, இதுபோன்ற பிரச்சினைகளை எந்த அளவுகோல் கொண்டு நாம் தீர்மானிப்பது, விமர்சிப்பது என்பதற்கு ஒரு நிலை உண்டு.

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 ஆகஸ்ட் 19

பொதுவாக இலங்கைப் பிரச்சினை என்பது, குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது, இன்னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், ஈழத் தமிழர் பிரச்சினை என்பது, இரண்டு காலக்கட்டங்களை உள்ளடக்கியதாகும், இந்தியாவைப் பொறுத்தவரையில். ஒரு காலகட்டம் இராஜீவ் காந்திக்கு முன், இன்னொரு காலகட்டம் இராஜீவ் காந்திக்குப் பின் என்ற இரண்டு காலகட்டங்கள்.

இராஜீவ் காந்திக்குப் பின் என்ற காலகட்டம் உருவாகாமல் இருந்திருக்குமேயானால், இப்பொழுது ஈழத் தமிழகத்தின் நிலையே வேறு. ஏனென்றால், ஒரு சம்பவத்தை நான் நீண்ட நாட்களுக்குப் பிறகு சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அது பற்றி என்னுடைய நண்பர் சகோதரர் கண்ணப்பன் அவர்களுக்கும் தெரியும்.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று, நான் முதல்வராகப் பொறுப்பேற்று, மரியாதை நிமித்தமாகப் பிரதமராக இருந்த இராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க டெல்லிக்குச் சென்றிருந்த காலம். அப்பொழுது என்னுடன் தம்பி முரசொலி மாறனும் வந்திருந்தார். இராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தபோது, மரியாதைச் சந்திப்பு ஒரு 5 நிமிடத்தில் முடிந்து, சென்னை திரும்பலாம் என்பதற்காக மாலை விமானத்திலே நான் பயணச் சீட்டெல்லாம் ஏற்பாடு செய்து, அதற்குத் தயாராக இருந்தேன். ஆனால், இராஜீவ் அவர்களைச் சந்தித்துப் பேசிய பிறகு, அவர்கள் இலங்கைப் பிரச்சினையை என்னிடத்திலே பேசத் தொடங்கி, 'நீ முன்னின்று அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வை'— அப்பொழுது வைகோ—தம்பி கோபாலசாமியும் எங்களோடுதான் இருக்கிறார். 'நீங்கள் இருவரும் சென்று, மாறனையும் அழைத்துக்கொண்டு, கொழும்பிலே போய் தங்கி, அங்கிருந்து வவுனியாவிற்குச் சென்று— செல்வதற்கான ஏற்பாடுகளை, விமானம் போன்ற வாகன வசதிகளை, நான் செய்து கொடுக்கிறேன்—சென்று, வவுனியாவிலே இருக்கின்ற பிரபாகரனோடு பேசுங்கள், பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள்' என்று சொன்னார். சொல்லிவிட்டு, 'நீயும், கோபாலசாமியும் சென்றாலும் சரி'—கோபாலசாமி என்று சொல்வதற்காக கண்ணப்பன் அவர்கள் வருத்தப்படக்கூடாது, அப்போதெல்லாம் அவருக்கு வைகோ என்று பெயரில்லை. அதனால் கோபாலசாமி என்கிறேன். 'நீயும் கோபாலசாமியும் சென்று பாருங்கள் அல்லது மாறனை அழைத்துச் செல், இருவரில் ஒருவரை அழைத்துச் செல்லுங்கள் அல்லது இருவரையும் அழைத்துச் சென்றாலும் சரி' என்று குறிப்பிட்டு, ஒரு தேதியும் சொல்லி, 'இதற்குள்ளாக நீ சென்னை சென்றதும், எனக்குப் பதில் அனுப்பு' என்று குறிப்பிட்டார்.



2006 ஆகஸ்ட் 19] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 10-40

இதற்கிடையே, மறு நாள் காலையிலே, 'டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு, நட்வர்சிங் அவர்களை அனுப்பி வைக்கிறேன்'. அப்போது வெளிநாட்டு விவகார இலாகாவிலே செயலாளராக இருந்தார் நட்வர் சிங். இன்றைக்குப் புகழப்படுகின்ற நட்வர்சிங் அவர்கள் அன்றைக்கு செயலாளராக இருந்தார். அவர் காலையிலே Tamil Nadu House-க்கு வந்தவர், 11½ மணி வரையிலே என்னிடத்திலே அளவளாவி, இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி, இதற்குப்பிறகு மீண்டும் நீங்கள் 2½ மணிக்கு இராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று கூறிவிட்டுப் போனார். அதன்படி இராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தேன். அவர் அப்போது சொன்னார், நீங்கள் நடத்திய பேச்சுவார்த்தை முழுவதையும் நட்வர்சிங் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். நான் சொன்னது அப்படியே உறுதி. நீங்கள் சென்னை சென்றவுடன், நான் சொன்னவாறு பயணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள், நான் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால், அவர் அந்த உரையாடலுக்கிடையே குறிப்பிட்டது— எல்லோரிடத்திலும் அப்போது சொல்லியிருக்கிறேன், புதியதாகச் சொல்லவில்லை—பிரபாகரனைப் பெரிதும் புகழ்ந்தார். அவருடைய வீரத்திற்கு ஈடு யாரும் இல்லை என்றெல்லாம்கூட இராஜீவ் காந்தி அவர்கள், பிரபாகரனை அன்றைக்குப் புகழ்ந்தார். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நான் மறுநாள் திரும்பி வந்து, இங்கிருந்து இராஜீவ் காந்தி அவர்களுக்குத் தொலைபேசிமூலமாகப் பேசி, 'நீங்கள் சொன்னபடி நாங்கள், இலங்கைக்குச் சென்று ஏற்பாடுகளைக் கவனிக்கத் தயாராக இருக்கிறோம், வைகோ-விற்காக, கோபாலசாமிக்காக காத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன்.'

அதற்குள் என்னவாயிற்று என்றால், தம்பி கோபாலசாமி அவர்கள இலங்கைக்குச் சென்றுவிட்டார். அப்போது இலங்கைக்குச் செல்கின்ற வழி நேரான வழியல்ல. எப்படியெல்லாம் செல்ல வேண்டும், யார், யார் எப்படியெல்லாம் சென்றார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அந்த வழியிலே அவர் சென்றுவிட்டார். உடனடியாக எனக்கு மிகுந்த வேதனையாகிவிட்டது. எனக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுத்தான் சென்றார். 'சொல்லாமல் செல்கிறேன், இருந்தாலும் மன்னித்துக்கொள்ளுங்கள்' என்று, செல்வதற்கான காரணங்களை அதிலே விளக்கியிருந்தார். பிறகு நான், இராஜீவ் காந்தி அவர்களிடத்திலே இதைச் சொல்லி வருத்தம் தெரிவித்துக்கொள்ள வேண்டுமே என்பதற்காக, உடனடியாக அவர்களிடத்திலே வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டேன்,

59-318—5a

நான் சென்னை செல்வதற்குள்ளாக அவர் இலங்கை சென்றுவிட்டார் என்று. ராஜ்ய சபாவிலேகூட அந்தப் பிரச்சினை வந்தது. எப்படி ஒரு எம்.பி. இப்படி இந்த வழியிலே செல்லலாம் என்று. அப்போதுகூட, பெருந்தன்மையாக இராஜீவ் காந்தி அவர்கள் ராஜ்ய சபாவிலே என்ன சொன்னார் என்றால், அவர் போனதைப் பற்றிக் கவலையில்லை. பத்திரமாகத் திரும்பினால் போதும் என்றுதான் இராஜீவ் காந்தி (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அவையிலேகூட சொன்னார். எல்லோருக்கும் தெரியும். அதற்குப் பிறகு நடந்தவை நீங்கள் யாரும் அறியாதவை அல்ல. என்னென்னவோ நடந்துவிட்டது. நான் அவரிடத்திலே அளித்த வாக்குறுதியின்படி யாரையும் அனுப்பி வைக்கக்கூடிய ஏற்பாடு நடைபெறவில்லை. பிறகு, வேறு ஒரு இடத்திற்குச் செல்கின்ற வழியில் சென்னை விமான நிலையத்திலே இராஜீவ் தங்கி என்னை வருமாறு பணித்தார். நான் விமான நிலையத்திற்குச் சென்று அவரிடத்திலே பேசும்போதுகூட, என்ன நான் சொன்னது நடக்கவில்லையே என்று கேட்டார். நான் வைகோ சென்ற விஷயத்தை அவரிடத்திலே சொல்லி, அதன் காரணமாக தேக்கம் ஏற்பட்டுவிட்டது என்பதை விளக்க விரும்பவில்லை. அத்தோடு பேச்சு முடிந்தது. சரி, தொடருவோம் இந்த முயற்சியை என்று சொல்லிவிட்டுப் போனார். ஆனால், தொடர முடியாமல் இலங்கை அரசாங்கத்திலே பல்வேறு குழப்பங்கள், பிரேமதாசா பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகள் எல்லாம் எழுந்தன. அன்றைக்குத் தமிழ் ஈழத்திலே ஏற்பட்ட அந்த எழுச்சிக்கு ஒரு தடங்கல் ஏற்பட்டது. அதன் பின்னர் நடந்த விஷயங்கள் எல்லோரும் அறிந்தவைதான்.

முற்பகல் 10–45

இராஜீவ் காந்தி அவர்கள் நம்முடைய தமிழ் மண்ணிலே இரத்தம் சிந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி அந்த நிலைமை ஏற்பட்ட பிறகு, இந்தியாவிலே இருந்த அனுதாபம், எழுச்சி, உணர்ச்சி, வேகம், இவை எல்லாம் எந்த அளவிற்கு மாய்ந்து போயின என்பதற்கு கடந்த ஆண்டுக்கு, சில மாதங்களுக்கு முன்பு இதே அவையில் அன்றைய முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் படித்த அந்தத் தீர்மான வாசகங்களே போதும். எந்த அளவுக்கு அவர் அந்தப் பிரச்சினையை அணுகினார். எவ்வளவு கோபத்தோடு, எவ்வளவு வெறுப்போடு அந்தப் பிரச்சினையை அணுகினார். என்ன காரணம் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். அதே நிலைதான். எல்லோருக்கும் அதே மனோநிலைதான் இருந்தது. அதனால்தான் நான் இராஜீவ் காந்திக்குப் பிறகு, இராஜீவ் காந்திக்கு முன் என்று, கி.பி., கி.மு., என்று பிரித்துக்கொள்வதைப்போல இதைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று



சொன்னேன். இருந்தாலும்கூட இன்றைய சூழ்நிலையில், நம்முடைய தமிழர்கள், தொப்புள்கொடி உறவு கொண்டவர்கள், நம்முடைய சகோதரர்கள், நம்முடைய இன மக்கள் இலங்கையிலே கொல்லப்படுகிறார்கள், வேட்டையாடப்படுகிறார்கள், பழி வாங்கப்படுகிறார்கள் என்ற இந்தச் செய்திகள் நமக்கு இனிப்பானவை அல்ல.

நம்மைக் கணை கொண்டு தாக்குவதைவிட மிக மோசமானவை. அப்படிப்பட்ட செய்திகளைத் தாங்கிக்கொண்டு நாம் இன்றைக்கு இருப்பதற்கான காரணம் சில சூழ்நிலைகள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. மறந்துவிடவும் முடியாது. இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் இந்தப் பிரச்சினையை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்கு இடையிலே தமிழ் மாணவர்கள், சிறார்கள், குழந்தைகள் காப்பகத்திலே கொடுமையாகக் கொல்லப்பட்டார்கள். விமானக் குண்டு வீச்சால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியால் இந்த அவையே அதிர்ந்து போய் ஒரு அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அன்று நான் இல்லை, இருந்தாலும்கூட அந்தத் தீர்மானம் இந்த அவையிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றால், அது ஒன்றே, ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தமிழர்கள் இன ஒற்றுமையோடு இருப்பார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் என்று நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குப் பிறகு, நம்முடைய கண்ணப்பன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, இலங்கை அரசின் சார்பாகவோ அல்லது அதிகாரிகள் சார்பாகவோ வந்துள்ள செய்திக் குறிப்பில், இது தவறான தீர்மானம் என்பதுபோலக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழனை கொல்லப்பட்டதைத் தமிழன் கண்டிப்பது தவறு என்றால், அந்தத் தவறைத் தமிழன் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பான். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்றும் தவறான தீர்மானம் அல்ல. அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள், அவர்கள் குழந்தைகள் அல்ல. ஏதோ பயிற்சி பெற வந்தவர்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், இறந்து கிடக்கின்ற பிணங்களினுடைய புகைப்படங்களைப் பார்த்தால், எல்லோரும் பாலகர்கள்தான், இளம் சிறார்கள்தான். இளம் மாணவர்கள்தான். அதிலே எந்தச் சந்தேகமும் கிடையாது.

அந்தப் பதில் அறிக்கையிலேகூட, இன்றைக்கு வந்திருக்கின்ற சமாதான அறிக்கையிலேகூட, இலங்கை அரசின் கவனத்தைக் கவர ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்று சரியாகவோ, தவறாகவோ

ஒரு வாசகம் இருக்கிறது. ஆமாம், கவனத்தைக் கவரத்தான் நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். இல்லாவிட்டால், ஒரு அனுதாபத் தீர்மானத்தால் இறந்தவர்கள் பிழைத்து விடுவார்கள் என்பதற்காக அனுதாபத் தீர்மானத்தை யாரும் இங்கே போடவில்லை. இந்தத் தீர்மானத்தின்மூலம் இலங்கை அரசின் கொடுமையைக் கண்டிக்கிறோம் என்று அவர்களுடைய கவனத்திற்காகக் கொண்டு வந்தோம். அதே நேரத்திலே, இன்னமும் இதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது என்பதற்காக இந்திய அரசின் கவனத்தைக் கவர்வதற்காகவும் இந்தத் தீர்மானத்தை நாம் அன்றைக்கு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றி இருக்கின்றோம். எனவே, அந்தத் தீர்மானத்தினுடைய வாசகங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை அல்ல. உண்மையானவைதான். உள்ள உறுதியோடு, வேதனையோடு, வெளிப்பட்ட வார்த்தைகள்தான் அந்தத் தீர்மானத்தில் இருக்கின்ற வார்த்தைகள் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இதற்காக மேல் நடவடிக்கை என்ன எடுப்பது, இதைப் பற்றிய அணுகுமுறை என்ன, இவற்றையெல்லாம் நான் மத்தியிலே இருக்கின்ற அரசுக்கு விட்டுவிட்டு, அவர்கள் இதைக் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்தப் பிரச்சினையை இந்த அளவிலே முடிக்கலாம் என்று கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10–50)

## (ஆ) உறுப்பினரின் முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஞானசேகரன், என்ன வேண்டும்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேண்டும்? சொல்லுங்கள் முதலில். இந்த விஷயமாகப் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) சொல்லுங்கள், என்ன வேண்டும்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–8–2006 ஆம் தேதி வேலூருக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அல்லேறி மலைப் பகுதியில் சாராய வியாபாரிகள், 2 வனத் துறை அதிகாரிகள் — அந்த 2 பேர் பெயர்களும் மூர்த்தி—அவர்களை அரிவாளால் வெட்டி, அவர்கள் காயமுற்று, இன்று C.M.C. மருத்துவமனையில் சிகிச்சைப்



பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது குறித்து நான் ஏற்கெனவே அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அங்கே சாராயம் காய்ச்சுபவர்கள், அவர்கள் இன்று வனத் துறை அதிகாரிகளையே வெட்டக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. அவர்களிடம் ஆயுதங்கள் இல்லையா? அவர்கள் மாமூல் வாங்கச் சென்ற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள், அவர்கள் அடி வாங்கி வர வேண்டிய நிலை வந்தது என்றும் பத்திரிகைகளிலே செய்திகள் வந்தன. இது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், வனத் துறை அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட இந்த மாமூல் பெறக்கூடிய நிலையை அவர்கள் தவிர்த்து, மாமூல் வாழ்வுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்த வேண்டுகோள் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. துறைக்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வந்ததற்குப் பிறகு எடுக்கப்படும்.

## (இ) இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுதல்

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே— (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். எல்லோரும் எழுந்திருக்காதீர்கள். உட்காருங்கள் முதலில். திரு. சின்னப்பன், உட்காருங்கள். பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற உள்நாட்டு பிரச்சினையில் சிங்கள இராணுவம் நடத்துகின்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குப் பயந்து, இலங்கை வாழ் தமிழர்கள் இன்றைக்கு அகதிகளாகத் தமிழகம் நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் உயிருக்குப் பயந்து, அகதிகளாகத் தமிழகம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். வருகின்ற வழியில் மீண்டும் அவர்களை சிங்கள இராணுவம் தொடர்ந்து விரட்டுவதும், அப்படி விரட்டுகின்றபொழுது, கடந்த நான்கு தினங்களுக்கு முன்பாக அந்த களேபரத்தில், ஒரு 6 மாதக் குழந்தை தவறிக் கடலில் விழுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அப்படி வருகின்ற நேரத்தில், கடந்த 14 ஆம் தேதியன்று படகில் வந்த 5 பேர் தவறிக் கடலில் விழுந்து இறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

அப்படி இறந்தவர்களில் ஒருவர், திருமணமாகி மூன்றே தினங்கள்தான் ஆகியிருந்த நிலையில் அந்தத் துயரச் சம்பவம் நடந்து. தொடர்ந்து இதுபோன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உள்நாட்டுப் போரில், அகதிகளாகத் தமிழகம் வருகின்ற இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு, அவர்கள் பாதுகாப்பான முறையில் இங்கு வந்து சேர்வதற்குரிய நடவடிக்கைகளை இந்திய அரசுமூலமாகத் தமிழக அரசு எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அன்றைக்குக்கூட விளக்கியிருக்கின்றேன். மத்திய சர்க்கார்மூலமாக இங்குள்ள தமிழர்களுக்கு, ஈழத் தமிழர்களுக்கு, அதுவும் அகதிகளாக வந்துள்ள தமிழர்களுக்கு, மாதந்தோறும் 200 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதைக்கூட நாங்கள் இப்பொழுது 400 ரூபாயாக, மாநில அரசின் சார்பாக 200 ரூபாய் உயர்த்தித் தந்துகொண்டிருக்கின்றோம். மேலும், உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கின்றோம். அவர்கள் புறப்பட்டு வரும்பொழுது வழியிலே, எங்கே போய் அவர்களைச் சந்தித்து அழைத்து வருவது என்பதெல்லாம் பெரிய பிரச்சினை. அந்தப் பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்பதைக் கடற்படை அதிகாரிகளோடு கலந்து பேசி, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு**—தொடர்ச்சி

**திரு. வி.பி. கலைராஜன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி. (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததெல்லாம் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்ததற்குப் பிறகு எடுக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள்.

முற்பகல் 10-55

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) கலைராஜன்,



உட்காருங்கள். உங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. பதிலைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. பதிலைப் பார்த்துவிட்டுப் பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது உங்களுக்கு. அதைப் பார்த்துவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசும்போது குறுக்கிடக்கூடாது. கலைராஜன், உங்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். பதில் கொடுக்கப்பட்டுவிட்டது இனி அதைப் பற்றி விளக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், கலைராஜன். பேரவை விதி எண் 224-ஐ நான் வாசிக்கிறேன். கலைராஜன், கேளுங்கள். பேரவை விதி எண் 224-ன்படி "பேரவைத் தலைவர் இசைவினை மறுத்தாலும், அல்லது அவையின் கவனத்தீத ஈர்க்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதினாலும், அறிவிப்பு அளித்த உறுப்பினருக்கு அத்தகைய தகவலை அனுப்பியபின், அதன் பிறகு அப்பொருள் குறித்து எவ்வகையிலும் பேரவையில் எழுப்பக்கூடாது." உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பதில் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள்.

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தரிசு நில விநியோகம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த அரசின் முடிவுகள்—மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அளிப்பது என திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டது. தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களின் பரப்பளவு குறித்துக் கணக்கெடுக்கும் பணி ஒரு மாத காலமாகத் தமிழக அரசின் வருவாய்த் துறைமூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் பல்துறை அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடத்தி முடிக்கப்பட்டு, முதற்கட்டப்

புள்ளிவிவரங்கள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-8-2006 ஆம் நாளன்று தெரிவித்தார்கள்.

தரிசு நில விநியோகம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டத்தினைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்குமுன், மேற்கு வங்காள மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்தகைய திட்டத்தின் நடைமுறைகள் குறித்து அறிந்துகொள்வது நலம் பயக்கக்கூடும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருதினார்கள். அதன் அடிப்படையில், அவர் வழங்கிய அறிவுரைகளை ஏற்று, என்னுடைய தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்று, இம்மாதம் 10 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி முடிய மேற்கு வங்காள மாநிலத்திற்குச் சென்று வந்தது.

கொல்கத்தாவில், முதலில், மேற்கு வங்காள அரசின் மாண்புமிகு நிலம் மற்றும் நிலச் சீர்திருத்த அமைச்சர் அவர்களுடனும், அரசின் உயர் அதிகாரிகளுடனும், நில விநியோகத் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டு, விவரங்கள் கேட்டறியப்பட்டன. அதனைத் தொடர்ந்து, மேற்கு வங்காள மாநிலத்தில், மேற்கு மிதினாப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்து, அங்கு நில விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படும் முறைகள் குறித்து நேரில் ஆய்வுகள் செய்யப்பட்டன. அங்கு பின்பற்றப்படும் நிலச் சீர்திருத்தம், நில ஒப்படை, நிலப் பண்படுத்துதல் போன்றவை குறித்து, மேற்கு மிதினாப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வேளாண் துறை அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோருடன் நேரில் கலந்துரையாடி, திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விவரங்கள் திரட்டப்பட்டன. பின்னர் தமிழ்நாடு திரும்பியவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சுற்றுப்பயணத்தின்போது கேட்டும், கண்டும் அறிந்தவை பற்றிய விவரங்கள் அனைத்தும் எடுத்துக் கூறப்பட்டன. மேற்கு வங்காள மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நில விநியோகத் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களைத் தமிழ்நாட்டில் உள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப எவ்வாறு மாற்றியமைத்தால் இத்திட்டத்தின் பயன்கள் ஏழை விவசாயப் பெருமக்களுக்கு உரிய முறையில் சென்றடையும் என்பது குறித்தும் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் வழங்கிய சீரிய அறிவுரைகளின்படி, தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பின்வருமாறு முடிவுகள் செய்யப்பட்டுள்ளன:



(முற்பகல் 11.00

***பரிந்துரைகள்:*** 1. மேற்கு வங்காள மாநிலத்தைப் பொறுத்தளவில், உபரி நில விநியோகம் என்பது, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்களை எவ்வாறு விநியோகிப்பது என்பதை மையமாகக் கொண்டுள்ளது. இந்த வகையான நிலங்கள், ஏற்கெனவே சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலங்களாக இருந்ததால் அவற்றைப் பண்படுத்த வேண்டிய அவசியம் அங்கே எழவில்லை. ஆனால், தமிழக அரசின் இப்புதிய திட்டம், இதுவரை சாகுபடிக்கு வராத தரிசு நிலங்கள் பற்றியதாகும். இருப்பினும், தமிழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 2 ஏக்கர் தரிசு நில விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மேற்கு வங்க அரசின் அனுபவம் ஓரளவிற்குத் துணைபுரியும் வகையில் அமைந்துள்ளது.

2. தமிழகத்தில் வருவாய்த் துறை நிலை ஆணை எண் 15-ன்கீழ் ஒப்படை செய்யப்படும் நிலங்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகளுள் ஒன்று, ஒப்படை செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்தாண்டுகளுக்குள் விற்பனை செய்யக்கூடாது என்பதாகும். மேற்கு வங்க மாநிலத்தில் இந்த நிபந்தனை மாறுபட்டுள்ளது. அதாவது, நிலவள மேம்பாடு, உற்பத்தித் திறன் அதிகரிப்பு அல்லது சொந்தமாக வீடு கட்டுதல் போன்றவற்றிற்கு Scheduled வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது மத்திய, மாநில அரசின் நிறுவனங்கள் ஆகியவற்றில் கடன் பெறுவதற்கு மட்டுமே ஒப்படை செய்யப்பட்ட நிலத்தை அடமானமாக வைக்க இயலும். இது தவிர, நில உரிமையை விற்கவோ, மாற்றவோ இயலாது. இதனை அமல்படுத்த, மேற்கு வங்க நிலச் சீர்திருத்தச் சட்டம் 1955-ன்கீழ் இதற்கான சட்டபூர்வமான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை, நில ஒப்படை செய்வதற்கு முன்பு, அரசுப் பணம் கணிசமாகச் செலவழிக்கப்பட்டு, தரிசு, புறம்போக்கு நிலம் மேம்படுத்தப்பட உள்ளதால், நில மாற்றம் அல்லது விற்பனையைக் குறைந்தது 30 ஆண்டுகளுக்குத் தடை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. இரண்டு ஏக்கர் தரிசு நில விநியோகத் திட்டத்தில் அடங்கியுள்ளவை முதல் வகை, எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள். இரண்டாம் வகை, சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள். மூன்றாம் வகை, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்கள். இவற்றுள் முதல் வகையான, ஆக்கிரமிப்பு செய்யப்படாத அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள், கடுமையான தரிசு நிலங்களாக உள்ளவை. அவற்றை விளை நிலமாகப் பண்படுத்திட

கணிசமான பணம் செலவிட வேண்டிய அவசியம் ஏற்படும். இரண்டாவது வகையான, சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள் தேவைக்கு ஏற்ப பண்படுத்தப்படும். மூன்றாவது வகையான தரிசு நிலங்கள், சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா நிலங்கள். அவற்றை விளை நிலமாகப் பண்படுத்திட கணிசமாகச் செலவு செய்திட வேண்டிய. இதற்காக ஏற்படும் செலவினத் தொகையை மாநில அரசின் திட்டமான ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலிருந்தும், மத்திய அரசின் திட்டங்களில் இருந்தும் நிதி ஒதுக்கீடு செய்து, இலவச நில விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. மேற்கு வங்க அரசு, மைய அரசின் உணவுக்கு வேலை மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பயன்படுத்தி, அரசு தரிசு நிலங்களையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சொந்த நிலங்களையும் மேம்படுத்தியதைப்போல, தமிழக அரசு, தற்போது உள்ள மைய அரசின் திட்டங்களையும் பயன்படுத்தி, தரிசு நிலங்களை மேம்படுத்தும்.

5. தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், பாசன ஆதாரத்தை உருவாக்குவது தரிசு நில மேம்பாட்டிற்கான மிக முக்கியமான செயலாகும். எனவே, மின்சார வாரியத்தின்மூலம் முன்னுரிமை அளித்து, தரிசு நிலத்தில் உள்ள பம்புசெட்டுகளுக்கு மின் வசதி செய்தல், ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், சமுதாய ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கசிவுநீர்க் குட்டை அமைத்தல் ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். எனவே, பாசன ஆதாரம் உருவாக்குவது தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியமான அம்சமாக இருக்கும்.

6. மேற்கு வங்க மாநிலத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும், பணிகளைச் செய்து முடிப்பதிலும், கண்காணிப்பதிலும், கிராமப்புறப் பஞ்சாயத்துகள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின்மூலம் பணிகள் செய்து முடிக்கப்படுகின்றன. தமிழகத்திலும், கிராம ஊராட்சி அளவில், கிராம ஊராட்சித் தலைவர், ஆதி திராவிடர், பழங்குடி உறுப்பினர், உதவி வேளாண்மை அலுவலர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மக்கள் நலப் பணியாளர் ஆகியோர் கொண்ட குழுவை ஏற்படுத்தி, அதன்மூலம் இந்தத் திட்டத்தின் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து, நில விநியோகப் பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



தந்தைப் பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் நாளன்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருவள்ளூரில், நிலமில்லாத ஏழை விவசாயக் குடும்பங்களுக்குத் தரிசு நிலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்க இருக்கிறார் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*(முற்பகல் 11-05*

## 4. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளை விமர்சனம் செய்வதைப் பத்திரிகைகள் தவிர்க்கக் கோரல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்றத்தில் நடைபெறும் அலுவல்களைச் சட்டமன்ற அலுவல் ஆய்வுக் குழு நிர்ணயிக்கிறது. இந்த அலுவல்கள் நடைபெறுவதற்கான காலவரையறை மற்றும் கால அட்டவணை அனைத்தையும் இக்குழுதான் முடிவு செய்கிறது. இக்குழுவில் எல்லா சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். குழு உறுப்பினர்கள் என்ற முறையில், அவர்கள் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து, சட்டமன்ற அலுவல்கள் சிறப்புடன் நடைபெறுவதற்குத் தங்களுடைய கருத்துகளைக் குழுவில் தெரிவிக்கின்றனர். பேரவை அலுவல்கள் தொடர்பாக மாற்றங்கள் செய்யப்படுவது, அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கான தேதிகள் மாற்றப்படுவது அனைத்தும் குழு உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலே செய்யப்படுகிறது. ஆனால், ஒரு சில பத்திரிகைகள் அலுவல் ஆய்வுக் குழுவில் மேற்கொள்ளும் முடிவுகளைக் குறித்து, மறைமுகமாகத் திரித்துச் செய்தி வெளியிடுகின்றன. இது, இக்குழு தனது கடமையைச் செவ்வனே ஆற்றுவதற்கு மாசு கற்பிப்பதற்கு ஒப்பானது ஆகும். மேலும், இது அவையை அவமதிக்கும் செயலாகக் கருதப்பட வாய்ப்புள்ளது. எனவே, இதனையே ஓர் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, பத்திரிகைகள் அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்படும் முடிவுகளை எந்த வகையிலும் விமர்சிப்பதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். அடுத்த அலுவலுக்குப் போயாகிவிட்டது. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. உட்காருங்கள். Allow பண்ண முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதாவது, இப்படியே இதுபோல் செய்துகொண்டிருந்தால் அனுமதி கொடுத்துவிடுவேன் என்று நினைக்கக்கூடாது. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) நச்சரிப்புப் பண்ணினால் கொடுத்து விடுவேன் என்று நினைக்காதீர்கள், உட்காருங்கள் முதலில்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்

### (ஆ) கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம்

---

### (அ) கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006–2007* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *7*–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.*93,98,09,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.*5,33,03,000*/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் *1900*, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2536*, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.



**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. மேலும், தற்பொழுது நகரங்களில் உள்ள வீடுகளில் வண்ண மீன்களைக் கண்ணாடியில் வைத்து அழகுபடுத்தும் கலாச்சாரம் பெருகி வருகிறது. எனவே, இத்தொகுதியில் வண்ண மீன் வளர்க்க இளைஞர்களுக்கு ஒரு பயிற்சி நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*93,98,09,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,33,03,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3050*, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*93,98,09,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,33,03,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5010*, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுப் பணித் துறை ஏரிகளில் வளர்க்கப்படும் மீன்களை விற்பனை செய்ய ஆற்காடு நகரில் மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*93,98,09,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,33,03,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7181, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் ஒன்றியம், விளந்தை, அகரம், மணலூர்பேட்டை போன்ற பகுதிகள் தென்பெண்ணை ஆற்றின் அருகே இருப்பதால், இப்பகுதி விவசாயிகளுக்கு மீன் பண்ணை வைக்கக் கடனுதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7861, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, மேட்டூர் நகரில் மீன் விற்பனைக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8384, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் அணையில் மிக அதிகமான அளவில் உயர்ந்த ரக மீன்கள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8602, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் கோவளம் மீனவர்கள், மீன்பிடித் தொழில்கள் நிறைந்த கடற்சார்ந்த பெரிய ஊர். இவ்வூரில் மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க, மீன் பதப்படுத்த குளிர் சாதனக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3703, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இயந்திரப் படகு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6057, திரு. க.ப. வேலுமணி.

**திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி குளத்தில் வருடம் முழுவதும் தண்ணீர் இருப்பதால் மீன் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2735, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3259, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5380, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடல் பாதுகாப்புப் படையினரால் ஏற்படும் பிரச்சினையைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9408, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3865, திரு. கே. உலகநாதன்.



**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6512, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9355, டாக்டர் திருமதி கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9340, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள பெரிய கண்மாய்களில் மீன் வளர்ப்பதற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6269, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பழவேற்காடு பகுதியில்

சுமார் 40,000–க்கும் மேற்பட்ட மீனவ சமுதாயத்தினர் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். எனவே, அவர்கள் பிடிக்கின்ற மீன் மற்றும் இறால் போன்றவற்றைப் பாதுகாக்கக் குளிர் சாதனக் கிடங்கு ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5500, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் ஏரி, குளங்களில் மீன் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2959, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நீரோடி முதல் இரயுமன்துறை வரையுள்ள கடற்கரைப் பகுதி மக்களுக்குப் பஞ்ச கால நிவாரணம் வழங்க வேண்டிய காலம் கடந்தும், இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. மேலும் காலம் கடத்தாமல், அதை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2910, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் நிதி ஒதுக்கியுள்ளன. அதனை உடன் அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6795, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் மீன்கள் வளர்க்க, மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2444, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டத்தில் உள்ள பொதுப் பணித் துறைக் கண்மாய்களில் மீன் வளத்தினைப் பெருக்க மீன் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5228, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலை, திருமூர்த்தி அணை, அமராவதி அணைப் பகுதிகளில் அதிகமாக மீன்கள் வளர்த்து, மீனவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு கிடைக்கவும், அரசுக்கு வருவாய் ஈட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7652, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க குளச்சலில், மீனவர் நலன் கருதி 2006–07 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள 23½ கோடி மதிப்பீட்டிலான குளச்சல் மீன்பிடித் துறைமுகத் திட்டத்திற்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3564, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்கள் விரும்பிச் சாப்பிடும் மீன் உணவு வகைகளை அழியாமல் பாதுகாத்து, மீன்களை அதிகமாக உற்பத்தி செய்ய, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு, பால வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3191, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2035, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீன்வளத் துறைமூலம் மீன் விற்பனை அங்காடிகள் திறக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5559, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, "சூள் பல்லடம், சாமாபுரம் முகபுதூர், இதுர் ஆகிய பகுதிகளில் மீன்வளத் துறை கூட்டுறவுச் சங்கம் அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3417, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மீனவர்கள் வருடத்திற்கு 45 நாட்கள் மீன் பிடிக்கத் தடை உள்ள காலங்களில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3575, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள மீனவர்களுக்கு என, தனி வாரியம் அமைக்க வேண்டும். அதில் மீனவர்களை மட்டும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பறறிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5726, திரு. எஸ். இராசசேகரன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8275, திரு. ம. குணசேகரன்.

முற்பகல் 11–10

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், கடலோரப் பகுதிகளில் மீன் ஆராய்ச்சி மையம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2082, திரு. சி. ஞானசேகரன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரில் மீன்வளத் துறை பெரிய மீன் வளாகம் அமைத்து, அனைத்து வகை மீன்களையும் குறைந்த விலையில் விற்க வேண்டியதன்



அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9179, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8145, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீனவப் பெண்களுக்கு ரஃப் சீசனில் உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4885, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீன் பிடிக்கும் தொழில் செய்யும் பூலாம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2825, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4846, திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4601, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மீனவர்களின் நலன் கருதி, ஒருங்கிணைந்த கடலோர மீனவ கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் அடிப்படைத் தேவைகள் மற்றும் பாலங்கள், இணைப்புச் சாலைகள், அணுகு சாலைகள் அமைக்க வேண்டியும், மற்றும் கடற்கரையோர உள்நாட்டு மீனவர்களுக்கு சமுக, கல்வி நிலைகள் அளித்து மீனவர்கள் வாழ்க்கை மேம்பாடு அடைய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6571, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படகுகளில் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழில் செய்யும் ஏழை மீனவர்களுக்குப் பொது விநியோக முறையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,33,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 8–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்



கணக்கில் ரூ.17,93,88,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல், வெட்டுத் தீர்மானம் எண் 1732, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மலைப் பகுதியின் குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கு பசு மாடுகளை வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2733, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3260, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5417, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6300, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களுக்கு உடனடியாக நிலுவையின்றி பால் பணம் பட்டுவாடா செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9410, திரு. து. செல்வராஜ். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5634, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பாலுக்கான விலையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2537, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள அனைத்து கிராம மக்களும் பால் உற்பத்தித் தொழிலையே பிரதானமாகக்



கொண்டுள்ளனர். எனவே, பால் பவுடர் உற்பத்தித் தொழிற்சாலை அமைத்தால் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, விவசாயமும் சிறப்பாக நடைபெறும். இதற்காக அரசு முயற்சி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3701, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அரசே நேரடியாக பாலினைக் கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4103, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் பால் வளத்தைப் பெருக்க பால் கூட்டுறவுச் சங்கம்மூலம், தரமான, அதிகமான பால் வளம் கொடுக்கக்கூடிய மாட்டுத் தீவனம் வழங்க, அங்காடி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6464, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட காவிரிப்பூம்பட்டினம்

பால் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கூடுதல் கட்டடம், மற்றும் பால் குளிரூட்டும் சாதனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7187, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர், கானை ஒன்றியங்களில் நேரடி பால் கொள்முதல் மையங்களை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7390, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பால் வழங்குவோருக்குப் பால் விலையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9059, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் உள்ள ஜெ. பட்டி, கோழிப்புலியூர், கோட்டுப்பாக்கம், வயலூர், இசாகுளத்தூர், தென்னாத்தூர், மடம், பர்வதம்பூண்டி, பெருங்கடம்புத்தூர், திரக்கோயில், வடவணக்கம்பாடி, கீழ்வெள்ளியூர், கண்டவராட்டி, கீழநந்தியம்பாடி, மேல்பாதி, தக்கண்டராயபுரம் ஆகிய



ஊர்களிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்தப் பாலையும், செய்யாறு அருகிலுள்ள அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்காமல் புறக்கணிப்பதாலும், காஞ்சிபுரம் ஒன்றியத்திற்கு மாற்றுவதாலும், உற்பத்தியாளர்களும், சங்கங்களும் பாதிப்படைவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2826, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3499, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கொருக்கை கால்நடைப் பண்ணையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9198, திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3816, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6007, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் இயங்கி வரும் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7236, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகரங்களிலும், கிராமங்களிலும் பால் பண்ணைகள் அமைத்து, ஏழை எளியவர்களுக்கு வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6497, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதியில் பல கிராமங்களில் மகளிர் பால் மாடுகள் வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மகளிர் பால் கறவை மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2108, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பால் வளத் துறைமூலம் தயாரிக்கும் ஆவின் பால் பாக்கெட்டுகளை door delivery மூலம் தந்து விற்பனையைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8257, திரு. ம. குணசேகரன்.



**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8863, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூய தரமான பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால் உற்பத்தி, உள்கட்டமைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1969, திரு. எஸ். இராசசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8832, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், கூட்டுறவு பால் உற்பத்தி நிலையங்களுக்குப் புதிய கேன், உபகரணங்கள் தங்குதடையின்றி வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9339, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுவதால் பால் பவுடர் தயாரிக்கும் அரசு தொழிற்சாலை

ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6913, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் பால் சேமிப்புக் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3626, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் பால் பண்ணைகளின்மூலம் தயாரிக்கப்படும் பாலில் கலப்படம் செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3623, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, வெள்ளலூர் பகுதியில் உற்பத்தியாகும் பாலினைக் கொண்டு பால்கோவா போன்ற பண்டங்கள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5627, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2036, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியில் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5978, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் செயற்கை முறையில் கருவூட்டலுக்கான உறை விந்துக் குச்சியின் விலையை ரூபாய் 15-லிருந்து ரூபாய் 25 ஆக உயர்த்தியிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3921, திரு. தி. இராமசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3960, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சங்கக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3098, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8484, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் கராண்டிபாளையம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8017, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட சேத்தியாத்தோப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் பால் குளிரூட்டும் நிலையத்தை விரிவுபடுத்தி, பால் பவுடர் மற்றும் பால் பண்ணைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8178, திரு. எல். ரவிச்சந்திரன்.



**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் ஆவின் பால் விற்பனையை மேலும் அதிகரிக்க அந்தந்தப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்கு முகவர்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4606, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியாருக்கு இணையாக ஆவின்மூலம் பால் பொருட்களின் தரத்தினை உயர்த்தியும், புதிய பால் பொருட்களை உற்பத்தி செய்தும் பொது மக்களுக்கு நியாயமான விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6513, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, ஆவின் பால் பண்ணையில் பணிபுரியும் தினக்கூலித் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6286, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் தாழ்த்தப்பட்ட,

மக்களும பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர், பெரும்பான்மையோர் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர, அரசு கறவை மாடுகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2468, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை விவசாயிகளின் நலன் காக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்மூலம் கொள்முதல் செய்யும் பாலுக்கு விலை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5324, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில் கறவை மாடுகள் வளர்த்து தொழில் செய்யும் ஆதி திராவிடர்களுக்கு, மாட்டுத் தீவனப் புல் மற்றும் கூடாரங்கள் அமைக்க மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4897, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் உற்பத்தியைப் பெருக்க மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள



வனைவருக்கும கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கடன் வழங்க வண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் ர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் ளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் ணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8375, ரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் ற்பத்தி செய்யும் பாலுக்குக் கூடுதல் தொகை வழங்கவும், பாலுக்கான தாகையை நிலுவை இல்லாமல் உடனடியாக வழங்கவும் வேண்டியதன் வசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மாழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் ளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் ணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5077, ரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ருத்தணி தொகுதி, திருத்தணியில் பால் வியாபாரம் செய்யும் யாபாரிகள் பயனடையும் வகையில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை மைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் ளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் ணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7502, ரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜயங்கொண்டம் பகுதியில் போதிய பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் இல்லை. புதிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்

தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2332, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானியில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் விலையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6901, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்நாட்டு உயர் இரகப் பசுங்கன்றுகளை சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்துடன்கூடிய விலையில் அரசு வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1989, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5564, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர், செங்கத்துறை, பல்லடம் போன்ற பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,88,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை● நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை●● நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

● 181 முதல் 216 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

●● 217 முதல் 246 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். 9 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மிகைப்படாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்குச் சீமையிலே, கோவை மாவட்டத்தின் கடைக்கோடியிலே ஒரு குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை அரசியலில் ஆளாக்கி, இரண்டு முறை உடுமலை சட்டமன்ற உறுப்பினர் என்னும் மாபெரும் அந்தஸ்தை வழங்கிய எங்களது கழக நிரந்தரப் பொதுச் செயலாளரும், மாண்புமிகு எங்கள் உத்தமத் தலைவி, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வெற்றிக்காக அயராது பாடுபட்ட கழக உடன் பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், எனக்கு இரண்டாவது முறையாகவும் வாக்களித்த உடுமலை சட்டமன்றத் தொகுதியிலே உள்ள வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கால்நடை பாராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை மானியக் கோரிக்கைகள் தொடர்பாக என்னுடைய கருத்தை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மீன்வளத் துறை என்று எடுத்துக்கொண்டால், மீன், புரதச் சத்து நிறைந்த உணவுப் பொருளாகக் கூறப்படுகிறது. தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டருக்கும் கூடுதலான நீளமுள்ள கடற்கரையைப் பெற்றிருக்கிறது. இந்தக் கடற்பரப்பில் கட்டுமரங்கள், வல்லங்கள், மீன்பிடி விசைப் படகுகள் ஆகியவற்றின்மூலம் கடலோர மீனவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வருகிறார்கள். 2004 ஆம் ஆண்டு, 26–12–2004 அன்று சுனாமி என்ற ஆழிப் பேரலை வந்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம் உட்பட 13 கடலோர மாவட்டங்களில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதை நாட்டு மக்கள் அறிவர். 8,010 உயிர்களை ஆட்கொண்டுவிட்டது. குவியல், குவியலாகச் சடலங்கள் என அனைத்து வகையிலேயும் நாட்டையே உலுக்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மீட்பு நடவடிக்கை, நிவாரண உதவி, நிரந்தர மறுவாழ்வு என்ற மூன்று கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிவாரணப் பணிகளை எங்களது முதலமைச்சராக இருந்த அம்மா அவர்கள் நேரடியாகச் சென்று கவனித்ததுடன், அப்பணிகள் முறையாக நடைபெற அமைச்சர்களை அங்கேயே தங்கி மேற்பார்வையிடச் செய்ததுடன், பல்வேறு துறைகளின் செயலாளர்களையும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முகாமிடச் செய்தார்கள்.



சுனாமி என்ற ஆழிப் பேரலையால் 35,530 கட்டுமரங்கள், 11,118 வல்லங்கள், 4,430 மீன்பிடி விசைப் படகுகள், 2,200 மெட்ரிக் டன் எடையளவு கொண்ட வலை வகைகள் அடித்துச் செல்லப்பட்டன; சேதமடைந்தன. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர் போன்ற தலைவர்கள் வந்து பார்வையிட்டதுடன், மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி கிளின்டன் மற்றும் ஐ.நா. சபையினர் போன்றவர்களும் பாராட்டியுள்ளதை இந்த நாடு நன்கு அறியும்.

தமிழ்நாட்டில் எங்களுடைய மாவட்டத்தில் உள்ள ஆழியாறு நீர்த்தேக்கத்தில் கூண்டுகளில் மீன் வளர்த்தல் என்பது முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை, கொளத்தூரில் 250–க்கும் மேற்பட்ட வீடுகளில் குறைந்த மூலதனத்தில் அலங்கார மீன் உற்பத்தியினை குடிசைத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். அதேபோல, மீனவர் குடும்பத்தினர் கடற்பாசி வளர்ப்புமூலம் குடும்பம் ஒன்றுக்கு ரூ.200 முதல் ரூ.250 வரை சம்பாதித்து வருகிறார்கள்.

(முற்பகல் 11–20

கடல் பொருள் ஏற்றுமதியில் அதிகமான தொகை அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவது இறால் மீன் ஆகும். தமிழ்நாட்டில் 56 ஆயிரம் எக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளில் இறால் பண்ணைகளை அமைக்க வாய்ப்பு இருந்தாலும், 4,550 எக்டேர் பரப்பளவு மட்டுமே இறால் வளர்ப்புக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற ஆணையின்படி அமைக்கப்பட்ட நீர்வாழ் உயிரின ஆணையம், 3,331 எக்டேர் பரப்பில் இயங்கி வந்த 883 இறால் பண்ணைகளை மட்டுமே ஒழுங்குபடுத்தியுள்ளது.

மத்திய அரசு நிதி உதவி 80%, மாநில அரசு நிதி உதவி 20% அடிப்படையில் மீன் துறை பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் 3 மீனவர் பயிற்சி மற்றும் விற்பனை நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

மீனவ மாணவர்களுக்கு, இயந்திரப் படகுப் பராமரிப்பு மற்றும் இயக்கம் பற்றி 10 மாதப் பயிற்சி மையங்கள், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு 10 மாதத்திற்கும் பிறகு சுமார் 200 முதல் 240 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடந்த 30 ஆண்டுகளில் 50,887 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அரசால் 2 ஆயிரம் வீடுகள் கட்ட 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் எங்கள் ஆட்சிக் காலத்தில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளால் 50:50 சதவிகித நிதி உதவியின்கீழ் 2 ஆயிரம் வீடுகள், 90 ஆழ்குழாய்க் கிணறுகள், 7 சமுதாய நலக் கூடக் கட்டடங்கள் ரூ. 8 கோடியே 40 இலட்சம் செலவில் கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்து, அதில் மத்திய அரசு ரூ. 37 இலட்சம் ரூபாயை விடுவித்துள்ளது. மத்திய, மாநில அரசுகள், 74.76 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மீனவர் காப்புறுதித் திட்டத்தின்கீழ், மீனவர்களின் ஆண்டு சந்தாத் தொகை ரூ.14–ஐ மாநில, மைய அரசுகள் சமமாகப் பகிர்ந்து, அத்தொகையைச் செலுத்துகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் உயிரிழக்க நேரிடும் அல்லது நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரமும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.25 ஆயிரமும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 43 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் காப்புறுதி சந்தா தொகையில் டெல்லியில் உள்ள மீனவர் கூட்டுறவு இணையத்தின்மூலமாகக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதியுடன்கூடிய சினை மீன் இருப்பு, உற்பத்தி மற்றும் வளர்ப்புக்காக செம்பரம்பாக்கத்தில் ஓர் அலங்கார மீன் வளர்ப்புப் பிரிவு, ஒரு ஏக்கர் நிலத்தில் ஆறே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது. சாத்தனூர் அணை, ஆழியாறு அணை, அமராவதி அணை, திருமூர்த்தி அணை, உப்பாறு, பாலாறு, பொறந்தலாறு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வரும் மீன் குஞ்சு வளர்ப்புத் திட்டத்தைத் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புரதச் சத்துமிக்க மீன்களைப் பிடித்து வந்து, பின் அதைக் குளிர் பதனப் பெட்டியில் பக்குவப்படுத்தி வைக்க வேண்டும். அதற்குப் போதுமான வசதி மீனவ மக்களிடம் கிடையாது. அதனால் குளிர் பதன வசதியுடன்கூடிய மீன் விற்பனை அங்காடியை அவர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களைத் தவிர, உள்ளூர் நீர் நிலைகளில் மீன் பிடித் தொழிலை மேற்கொண்டுள்ள மீனவர்களின் நலன்களைப் பேண நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



மீனவர்களைப் பொறுத்தவரை, மீன் பிடித்து வந்தால் அவர்களுக்குப் போதிய விலை கிடைப்பதில்லை. இடைத்தரகர்களுக்குச் சென்றுவிடுகிறது. அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டீசல் எரிபொருள் எண்ணெய் மீதான விற்பனை வரி விலக்கு அளித்து 20,200 மீனவர்கள் பயனடைந்துள்ளார்கள். லிட்டருக்கு ரூ.6.74 குறைந்துள்ளது. மாதம் 1,000 லிட்டர் வழங்கப்பட்டது. தற்போது அரசு 1,500 லிட்டர் வழங்குவதாகக் கூறியுள்ளது.

மேலும், நாகப்பட்டினம் நகரத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நல்லியான் தோட்டம் பகுதி மக்கள் வீடிழந்து தவித்தபோது, மாண்புமிகு அம்மா அவர்களால், நாகப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட தெத்தி என்ற கிராமத்தில் தற்காலிகக் குடியிருப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும், அவர்களுக்கு செல்லூர் என்ற கிராமத்தில் நிரந்தரக் குடியிருப்பு கட்டித் தர ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், ஆனால், அப்பணி இதுநாள் வரையிலும் நிறைவடையாமல் உள்ளதாகவும் தெரிகிறது. இந்நிலையில், கடந்த 10–7–2006 அன்று தெத்தி கிராமத்திலுள்ள தற்காலிகக் குடியிருப்புகள் தீ விபத்து ஏற்பட்டு முற்றிலும் எரிந்துவிட்டதாகவும், பாதிக்கப்பட்ட 75 குடும்பங்கள் குடியிருக்க வீடின்றி, வெட்டவெளியில் வாழ்ந்து வருவதாகவும் தெரிகிறது. அவர்களுக்கு அரசு ஏதாவது உரிய ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பால் வளத் துறை. பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியில் குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக நான்காவது இடத்தில் தமிழ்நாடு விளங்குகிறது என்றே சொல்ல வேண்டும்.

மாதவரம், அம்பத்தூர் ஆகிய பால் பண்ணைகளின்மூலம் சென்னை நகருக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, நகர மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–25

நகர மக்களின் தேவையைக் கருத்திலேகொண்டு, சோழிங்கநல்லூரில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டப் பண்ணை அமைக்கப்பட்டது. மாதவரத்தில் இருந்து நாள்தோறும இரண்டு இலட்சம் லிட்டரும், அம்பத்தூரில் இருந்தும், சோழிங்கநல்லூரில் இருந்தும, தலா நான்கு இலட்சம் லிட்டரும் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தப் பால் பண்ணைகளின்மூலம் உற்பத்தி செய்யப்படும பத்து இலட்சம் லிட்டர் பால், நகர மக்களின் மொத்தத் தேவையில், பாதி அளவைத்தான் மாநில

அரசின் சார்பு அமைப்பான ஆவின்மூலம் ஈடு செய்ய முடிகிறது. எஞ்சிய தேவையைப் பல்வேறு வெளி மாநிலங்களைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள், ஆந்திர மாநிலத்தின் பல நகரங்களிலிருந்து tanker லாரிகளின்மூலம் சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள். அதைப் பக்குவப்படுத்தி, பல பெயர்களில் விற்பனை செய்கிறார்கள். பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்ததன்மூலம், இலாபத்தில் இயங்கி வந்த 3,960 பால் உற்பத்தியாளர் சங்கங்கள், கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே 7,080 சங்கங்களாக உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, நட்டத்தில் இயங்கி வந்த 3,000 பால் உற்பத்தியாளர் சங்கங்கள், 465 சங்கங்களாகக் குறைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. ரூ.93.20 இலட்சம் மதிப்பீட்டிலான பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களையும் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில்தான் உற்பத்தியாளர்களுக்கு விலையை உயர்த்திக் கொடுத்தபோதும், ஒரு லிட்டர் பால் ரூ.12.50 என்ற விலையில் வழங்கும் மாநிலம் என்ற சிறப்புப் பெற்றதை நாம் மறந்துவிட முடியாது, மறுக்கவும் முடியாது.

ஆவின் வரலாற்றிலேயே, உலகத்தில் பணக்கார சாமி என்று போற்றப்படும் திருமலை-திருப்பதி தேவஸ்தானத்திற்கு லட்டு தயாரிப்பதற்காக நெய் விற்பனை செய்யும் பாக்கியத்தைப் பெற்றது. கடந்த 2004–2005 ஆம் ஆண்டில், சுமார் ரூபாய் 28 கோடி செலவில் 2,580 மெட்ரிக் டன் நெய் அக்கோயிலுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பால் பொருட்களை ஏற்றுமதி செய்ய, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உரிமம் பெற்று, 'டெட்ரா பேக்' பால், நெய் மற்றும் பால் பவுடர் ஆகியவற்றை 55.52 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்துள்ளதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இவையெல்லாம் கடந்த எங்களது ஆட்சிக் காலத்தில்.

மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த பத்தாயிரம் மகளிருக்கு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ரூ.6 கோடியே 50 இலட்சம் செலவில் பால் பண்ணை பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள நான்கு பெருநகரங்களில் இரண்டிற்கு புதுடெல்லி மதர் டைரி மற்றும் கொல்கத்தா பால் திட்டம் ஆகியவற்றுக்குப் பால், மற்றும் பால் பவுடர் வழங்குவது குறித்து நீண்ட கால வியாபார உடன்படிக்கை செய்யப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில்



ரூ.196.38 இலட்சம் லிட்டர் பால், மற்றும் 12 ஆயிரம் மெட்ரிக் டன் பால் பவுடர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு பால் பண்ணையிலிருந்து புதுடெல்லி மதர் டைரிக்கு, 40,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர்கள்மூலம் செறிவூட்டப்பட்ட பால், சராசரியாக வாரம் மூன்று நாட்கள் அனுப்பப்படுவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது, அதற்குச் சான்றாகும்.

2000–2001 ஆம் ஆண்டு, நாள் ஒன்றுக்கு 16 இலட்சத்து 65 ஆயிரம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் என்ற நிலையை மாற்றி, நாள் ஒன்றுக்கு 21 இலட்சத்து 69 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த மார்ச் மாதத்தில் இது 20 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

நெய் மீதான விற்பனை வரி 11 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. பல நாட்கள் வரை கெடாமல இருக்கும் 'டெட்ரா பேக்' பாலிற்கான விற்பனை வரி 16 சதவிகிதம் என்றிருந்தது அறவே தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரைக் கோடி சேமிப்பாகக் கிடைக்க வழி செய்யப்பட்டது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் மாதம் ஒன்றுக்கு சுமார் 2.32 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பால் பொருட்கள், 100 நாட்களில் சுமார் ரூபாய் 3.15 கோடி உயர்த்தப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். நெய் என்றாலே, அது மேட்டுக்குடி மக்கள் பயன்படுத்தும் பொருள் என்றிருந்த நிலையை மாற்றி, சாதாரண மக்களும் வாங்கிப் பயன்படுத்தும்வகையில், ரூ.5 என்ற அளவில் பாக்கெட்டுகள்மூலம் விற்பனை செய்து வருவதை நல்ல முன்னேற்றம் என சொல்ல வேண்டும்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000–2001 ஆம் ஆண்டில், பால் கொள்முதல் விலை 7 ரூபாய் 51 காசு என்றிருந்ததை, 9 ரூபாயாக உயர்த்தினார்கள். (மணியடிக்கப்பெற்றது) எங்களுடைய ஆட்சிக் காலத்தில், 4.5 சதவிகிதம் கொழுப்புச் சத்து உள்ள பாலின் கொள்முதல் விலையை, 10 ரூபாய் 50 காசாக உயர்த்தியிருக்கிறோம். எங்கள் பங்கிற்கு நாங்கள் பாலின் கொள்முதல் விலையை

உயர்த்தியிருக்கிறோம்; உங்கள் பங்கிற்கு ஒரு தொகையை உயர்த்தினால், அதன்மூலம் 30 மாவட்டங்களைச் சேர்ந்த (குறுக்கீடு) 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே இருக்கக்கூடிய கூட்டணிக் கட்சி, பாண்டிச்சேரியையும் சேர்த்து, 40 தொகுதிகளையும் வென்ற பிறகு, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பாலின் கொள்முதல் விலையில் 1 ரூபாயை ஏற்றினார்களே தவிர, பொது மக்களுக்கு எதிரான சட்டங்களை எல்லாம் இரத்துச் செய்ததைப்போல, இதைச் செய்தார்களே தவிர, அதற்கு முன்பாக ஏற்றவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) கொறடா, கொறடாதான்...(குறுக்கீடுகள்) தினமும் கொறடாதான் பேசுவார்; அவர் பேசட்டும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் முடிவை வைத்துக்கொண்டு, அது அன்றைக்கு வழங்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 40 நாடாளுமன்றத் தொகுதிகளின் தேர்தல் முடிவிற்குப் பிறகு, இது வழங்கப்பட்டது என்று சொன்னார்கள். அது அல்ல; விவசாயிகளுடைய நிலைமைகளை மனதிலே கொண்டு, விலையை 1 ரூபாயாக விவசாயிகளுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்றைக்கு வழங்கினார்களே தவிர, நீங்கள் சொல்வதைப் போல் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** அதற்கு முன்பாக, 3 ஆண்டுக் காலத்தில், எந்த விலையையும் உயர்த்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதிலுரையில் அமைச்சர் சொல்லலாம். (குறுக்கீடு) இல்லை, திரு. சி. சண்முகவேலு பேசட்டும்; அதுதான் கொறடா சொல்லிவிட்டாரே!



**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்றியதைச் சொல்கிறோம். அதை இப்போது ஏற்றித் தரச் சொல்லிக் கேட்கிறோம். வேறு ஒன்றும் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதனாலேதான், முன்னாலேயே உங்களை பேசி முடிக்கச் சொன்னேன், இந்த மாதிரிப் பிரச்சினை வரக்கூடாது என்று. (சிரிப்பு)

**திரு. சி. சண்முகவேலு:** அதேபோல, வெண்மைப் புரட்சியை ஏற்படச் செய்திட்டால், துணைத் தொழிலாகக் கொண்டுள்ள பசுமைப் புரட்சியின் உரிமையாளர்களான விவசாயப் பெருமக்கள் பயனடைவார்கள் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மேலும், கடந்த 31-3-2001-ல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 131 கோடி ரூபாய் நஷ்டத்தில் இருந்த ஆவின் நிறுவனமானது, எங்களது ஆட்சிக் காலத்திலே, கடந்த 5 ஆண்டு காலத்திலே, அந்த 131 கோடி ரூபாய் நஷ்டத்தையும் தவிர்த்து, 22 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பால் கொள்முதல் செய்யும்போது, நிறைய இடங்களிலே பாலை வாங்காமல் கீழே கவிழ்த்ததெல்லாம் உண்டு. ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொள்முதல் செய்து, அதை powder ஆகப் பண்ணக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினோம். அதேபோல, பாலுக்குண்டான பணப் பட்டுவாடா விவசாயிகளுக்கு, உடனடியாக கிடைக்காது. மூன்று மாதங்கள் எல்லாம் கிடைக்காமல் இருந்தது. அதை எங்களுடைய ஆட்சிக் காலத்திலே குறைத்து, 10 நாட்களுக்குள் அதைப் பட்டுவாடா செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நாங்கள் செய்தோம் என்பதை இங்கே பெருமையோடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; ஆவின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, அங்கே பணிபுரிகிற பணியாளர்களுக்கு 2.85 கோடி ரூபாய்க்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளது என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதேபோல, ஜனவரி 2001-ல், ஆவின் நிறுவனத்தின்கீழ் இயங்கும், உதகையிலே இருக்கக்கூடிய ஜெர்சி மைய கரு மற்றும் பொலி காளைப் பண்ணையிலே, 'A' Grade சான்று பெற்றுள்ளோம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆவின் வரலாற்றில் முதன்முதலாக, இந்தியாவில் இயங்கும் 10 கூட்டுறவுப் பால் பண்ணைகளிலே, I.S.O.

மற்றும் HACCP தரச் சான்று பெற்றதில், தமிழ்நாட்டில், சென்னை மாநகரத்தில் 4 பால் பண்ணைகள் உள்ளடங்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். அந்தப் பாலிலே கொழுப்புச் சத்துக் குறைந்ததா உங்களுடைய ஆட்சியிலே? (சிரிப்பு) ஒன்றும் குறையவில்லை.

**திரு. சி. சண்முகவேலு:** எங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொழுப்புச் சத்து normal-ஆகத்தான் இருந்தது. இப்போது எப்படி என்று தெரியவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் பகுதியிலே, Society No.1884, சங்கரன்கோவில் பால் உற்பத்தியாளர் சங்கத்திலே, கடந்த 2 மாத காலத்தில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னவென்று பார்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும்,-

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலுவைப் பார்த்தால் அப்படியே பால் வடிகிற முகம். (சிரிப்பு) முடித்துவிடுங்கள்.

*முற்பகல் 11–35*

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பேசும்போது மீன்வளத் துறை மற்றும் பால் வளத் துறை பற்றிப் பல்வேறு கருத்துகளை எடுத்துக் கூறினேன். ஆனால், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லும்போது, கடந்த நிலைமையைக் கூறாமல், பால் விற்பனையையும், பால் கொள்முதல் விலையையும் கூறும்போது, '2006–2007 ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு 27.00 இலட்சம் லிட்டர் பால், சங்க அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. மாவட்ட ஒன்றியங்கள் நாளொன்றிற்கு 23.50 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளன. இது சென்ற ஆண்டு சராசரியாக நாளொன்றிற்குக் கொள்முதல் செய்யப்பட்ட 21.59 இலட்சம் லிட்டருடன் ஒப்பிடும்போது குறியீட்டிற்கு 9 சதவிகிதம் அதிகமாகும்' என்று கூறியுள்ளார்கள். அது அப்படியல்ல. 2003–2004 ஆம் ஆண்டில் 20.6 இலட்சம் லிட்டராக இருந்தது, 2004–2005–ல் 23.86 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது என்பதை இங்கு கூறி, அந்தக் காலக்கட்டத்திலே 15.83 உயர்ந்துள்ளது என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். இருபது நிமிடங்கள் ஆகிவிட்டன.



**திரு. சி. சண்முகவேலு:** எந்தப் பிரச்சினைக்கும் வரவில்லை. ஒனுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியே பால், தயிராகி, மாராகி, வெண்ணெயாகி, நெய்யாகிவிட்டது. நேரம் ஆகிவிட்டது ருங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ரவர்களே, என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். என்னுடைய டுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலே கடந்த காலத்தில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்காக தளி ரோடு பகுதியிலே ஒரு oposal, நம்முடைய மாநில அரசுமூலமாக மத்திய சர்க்காருக்கு னுப்பப்பட்டுள்ளது. 27 மேம்பாலங்களுக்கு அனுமதி கேட்டு னுப்பப்பட்டதிலே, எங்களது அந்தப் பாலம் 14–வது இடத்திலே ள்ளது. அதை நம்முடைய அரசு துரிதப்படுத்தி மத்திய அரசிடமிருந்து னுமதியைப் பெற்று, அந்த மேம்பாலத்தைக் கட்டித் தர வேண்டுமாய் ாண்புமிகு துணைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்ள ிரும்புகிறேன்.

அதேபோல, எங்களது உடுமலைப்பேட்டை தொகுதியிலே பை பாஸ் ரோடு கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. Land cquisition ஆகியுள்ளது. அதுவும் மத்திய அரசிடம் உள்ளது. நம்முடைய மாநில அரசுமூலமாக அனுப்பப்பட்டுள்ளது. அந்த பை-பாஸ் ரோடை அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு இந்த அரசைக் கேட்டுக்கொள்ள ிரும்புகிறேன்.

அதேபோல, எங்களது பகுதியிலே N.H.209 -லே இருக்கக்கூடிய bus stand ஆனது விஸ்தரிப்பு செய்யக்கூடிய நேரத்தில், அங்கே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களை அப்புறப்படுத்தக்கூடியவகையிலே மாரியம்மன கோயில் இடம் 13 ஏக்கர் வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்திற்குப் பட்டா கொடுப்பதிலே, பாதி கொடுத்துள்ளார்கள், பாதி கொடுக்காமல் இருக்கிறார்கள். அதேபோல அந்த இடத்திலே குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக 4.13 கோடி ரூபாயிலே நிதி ஒதுக்கப்பட்டு அது நிலுவையிலே உள்ளது. அந்தப் பணியைச் செய்து தர வேண்டுமாய் உங்கள்மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** அதேபோல, பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடியவகையிலே உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டு, குப்பம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், அதேபோல இளயமுத்தூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருமூர்த்தி அணைப் பகுதி சுற்றுலாத் தலமாக உள்ளது. அங்கு சுற்றுலா மையம் அமைக்கக்கூடியவகையிலே நம்முடைய உலக வங்கித் திட்டத்தின்மூலமாக, அந்த P.A.P. திட்டத்தின்மூலமாகச் செய்கிறார்கள். அதிலே செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டு இந்த வாய்ப்பைக் கொடுத்த நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெற்றுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம். *(குறுக்கீடு)*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** பிரச்சினையில்லாமல் பேச்சை நிறைவாகப் பேச அனுமதித்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதோ பாருங்கள், இந்த மாதிரியெல்லாம் ice-ஐத் தயிரில் போட்டுக் கொடுக்கக் கூடாது. *(குறுக்கீடுகள்)* இல்லை, பிரச்சினையில்லாமல் பேசினார், அவ்வளவுதான். திரு. ஓ. சுப்பிரமணியம்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 14 வயதிலே திருவாரூர் வீதியிலே தேடி வந்த இந்திப் பெண்ணை, 'கேள், நீ நாடி வந்த கோழை நாடு இதுவல்லவே' என்று தமிழ்க் கொடி பிடித்து நடந்தவர் நம் தலைவர் கலைஞர். இளம் வயதிலேயே வீட்டுக்குத் தெரியாமல் தன் தங்கக் கைச் செயினை விற்றுக் கூட்டம் நடத்தியவர் நம் தலைவர் கலைஞர். திருமணத்திற்கு வழங்கிய வெள்ளிக் கிண்ணத்தை விற்று கொள்கைக் கூட்டம் நடத்தியவர் நம் தலைவர் கலைஞர். தன் துணைவியார் மரணப் படுக்கையில் இருப்பதை உணர்ந்திருந்தும் கழகப் பணிதான் பெரிதென எண்ணி புதுக்கோட்டை கூட்டத்திற்குச் சென்று துணைவியாரை இழந்தவர் நம் தலைவர் கலைஞர் தந்தை கவலைக்கிடமாய் இருக்கிறார் என்று மருத்துவரை அழைக்கப் போய். மருத்துவர்கள் வற்புறுத்தலால், மாநாட்டில் உரையாற்றுகையில் தந்தையைப் பறிகொடுத்தவர் நம் தலைவர் கலைஞர்.



புதுவையிலே பெரியார், அண்ணாவை அழைத்துக் கழகக் கொடியேற்றி, அங்கு ஏற்பட்ட கலவரத்தால், தாக்கப்பட்டு இறந்துவிட்டார் என்று சாக்கடையிலே வீசியெறியப்பட்டு, பின் காப்பாற்றப்பட்டு, தந்தை பெரியாரால் மருந்து இடப்பெற்று, குணமடைந்தவர் நம் தலைவர் கலைஞர். 'என் தம்பி கருணாநிதி அடைபட்டுக் கிடக்கும் பாளையங்கோட்டைச் சிறைச்சாலைதான் எனக்கு யாத்திரை ஸ்தலம்' என்று அண்ணாவால் போற்றப்பட்டவர் நம் தலைவர் டாக்டர் கலைஞர். தமிழுக்காகத் தண்டவாளத்திலே தலை வைத்துப் படுத்தவர் நம் தலைவர் கலைஞர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களையும், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களையும் கதாநாயகர்களாக உருவாக்கியவர் நம் தலைவர் கலைஞர். 1957 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 50 ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக, ஐந்தாம் முறை தமிழக முதல்வராக மக்கள் பணியாற்றி வரும் தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் வாழும் ஒவ்வொரு வினாடியும் தமிழினத்தின் வரலாறாக வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர் அவர்களே, நீங்கள் வறட்டுத் தாய் அல்ல, தமிழினத்தின் வரலாற்றுத் தாய்.

*முற்பகல் 11–40*

தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் மக்களுக்கான நலத் திட்டங்களை மழையாகப் பொழிந்துகொண்டிருக்கின்ற நீங்கள், ஒரு ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து, போக்குவரத்துத் துறையிலே 20 ஆண்டு காலம் பணியாற்றிய எனக்கு, மூன்று முறை வாய்ப்புக் கொடுத்து, இரண்டு முறை தோல்வியுற்று, மூன்றாவது முறையில் வெற்றி பெற்று, முதன்முதலில் சட்டமன்றத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நல்லதொரு வாய்ப்பினை நல்கிய தமிழினத்தின் ஓய்வறியா உதய சூரியன், தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம்.

தேர்தல் பிரச்சாரத்திலே, கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல், பிரச்சார வண்டியில் நின்றுகொண்டே மக்களைச் சந்தித்து, வாக்குக் கேட்ட தளபதி அவர்களை நான் எண்ணிப் பார்க்கின்றேன். தன்னுடைய தந்தை கலைஞர் அவர்கள், பாளையங்கோட்டை சிறையிலே இருக்கின்றபொழுது, தனது அன்னையாருடன் சென்று பார்த்தவர் நம்முடைய தளபதி அவர்கள். அதேபோல, தளபதி அவர்கள் சிறைச்சாலையிலே இருக்கின்றபொழுது, அவருடைய பச்சிளங்குழந்தை உதயநிதி, சிறைச்சாலையிலே தன்னுடைய தாயுடன் சென்று பார்த்தார். எனவே, சிறைச்சாலை என்பது தலைவர் அவர்களுடைய குடும்பத்திற்குப் பள்ளிக்கூடத்தைப் போன்றது. தியாகச்

சிறையில் பூத்த சிங்கார மலர், மக்கள் நல்லாட்சி நடத்தும் எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

அதேபோல, தேர்தலிலே எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்த அண்ணன் என்.கே.கே. அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களுக்கும், திரைப்பட நடிகர் அண்ணன் பாக்கியராஜ் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும், என்னை அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்த பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் இந்தச் சட்டப் பேரவையின் வாயிலாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதியில், மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள், 200–க்கு மேல் இருந்தும், சரியாகப் பராமரிக்கப்படாததால், பவானிசாகர் அணைக்குத் தேவையான மீன் குஞ்சுகளை ஆந்திராவிலிருந்து கொண்டு வருகின்றார்கள். எனவே, பவானிசாகரிலே மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகளைச் சரி செய்தால், அணைக்குத் தேவையான குஞ்சுகள் போக, குளம், குட்டைகளில் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்குத் தேவையான மீன் குஞ்சுகளைக் கொடுத்து உதவிடவும் முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ரோகு, கட்லா, மிருகால் தவிர, மற்ற மீன் குஞ்சு வகைகளும் அங்கே வளர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்றும், அந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு முறையான நியமனமும், சம்பள விகிதமும் சீர் செய்தல் வேண்டுமென்றும் பால் வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் என்று தொகுதிக்கு வளமான பெயர். ஆனால், தொகுதியில் மூன்று பங்கு வறட்சியான பகுதி. அந்த வறட்சியைப் போக்குவதற்கு பவானி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு, அவிநாசி–அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். இத்திட்டம், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அவிநாசி–அத்திக்கடவுத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. அந்த



அவிநாசி–அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம், கோவை, ஈரோடு மாவட்டங்களில் 8 சட்டமன்றத் தொகுதிகளில், வறட்சியான 13 ஒன்றியங்களில் உள்ள 220 குட்டைகளிலும், 85 குளங்களிலும் நீரை நிரப்புவதன்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயருவதோடு, 20 இலட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையும் தீர வாய்ப்பு உள்ளதால், அவிநாசி–அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 1948–1952 ஆம் ஆண்டு வாக்கில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பவானிசாகர் அணையைக் கட்டியபொழுது, அந்த அணைக்கட்டில் பணியாற்றிய சுமார் 300 தொழிலாளர் குடும்பங்கள் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இன்று வரை கிடைக்கப்பெறவில்லை. எனவே, தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்கள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் குடியிருக்கும் கூலித் தொழிலாளர்களான 300 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பவானி, கொடிவெரி அணைக்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள கடப்பள்ளி வாய்க்காலின் குறுக்கே 10 கிராம விவசாயிகளின் விவசாய நலனுக்காக ஒரு நடைபாதைப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகரில் பாசன வசதியுடன்கூடிய விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, 500 ஏக்கரில் அமைந்துள்ளது. இங்குள்ள தட்ப வெப்ப நிலை, கடலை, கரும்பு, நெல், பருத்தி, காய்கறிகள் எனப் பல்வேறு பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள நிலமும், போதிய நீர் வசதியும், கட்டடங்களும், ஆராய்ச்சியாளர்களும் உள்ளனர். எனவே. பவானிசாகரில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பவானிசாகரில், சத்தி பகுதியில், மல்லிகை, சம்பங்கி, ஜாதிமல்லி, முல்லை போன்ற பூக்கள் சுமார் 5,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. சாதாரணக் காலங்களில் 10 டன்னிலிருந்து, பருவக் காலங்களில் அதிகபட்சம் 25 டன்கள் வரை மலர்கள் விளைகின்றன. அந்தப் பூக்களெல்லாம் மைசூர், பெங்களூர் என்றில்லாமல், கோவைக்குக் கொண்டு சென்று, விமானத்தின்மூலம் மும்பை வரை அனுப்பப்படுகிறது.

இது மிகவும் விவசாயிகளுக்குச் சிரமமாக உள்ளது. எனவே, இப்பகுதியில் விளையும் மல்லிகை, சம்பங்கி, ஜாதிமல்லி, முல்லை மலர்களிலிருந்து வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை பவானிசாகர் பகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பவானிசாகரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் சகல வசதிகளுடன் நிறுவப்பட்டு, கட்டப்பட்ட ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்குக் கடந்த ஆட்சிக் காலத்திலேயே மூடுவிழா நடத்தப்பட்டது. அதை மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தின் தொடர்பில்லாத கிராமமாக விளங்கக்கூடிய, அன்னக்கிளி புகழ் தெங்குமரஹடா என்னும் கிராமத்திற்குச் செல்வதற்கு, பவானிசாகர் வழியாக வனப் பகுதியில் அமைந்துள்ள மண் பாதை வழியாக 35 கிலோ மீட்டர் தூரம் வரை, வனப் பகுதியிலே செல்லவேண்டியுள்ளது. இதில் 10 கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைந்துள்ளது. எனவே, பொது மக்களை யானை, புலி போன்ற கொடிய வன விலங்குகளின் ஆபத்திலிருந்து காப்பாற்ற, மீதமுள்ள 25 கிலோ மீட்டர் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–45

தமிழகத்திலேயே ஒரே ஒரு கதர்ச் சாயம் மற்றும் அச்சு அலகுத் தொழிற்சாலை சகல வசதிகளுடன் பவானிசாகரிலே அமைந்துள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே மூடப்பட்டதால், சுமார் 300 தொழிலாளர் குடும்பங்களும் அதைச் சார்ந்த வெளியிடத் தொழிலாளிகள் சுமார் 200 பேருமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமிழக முதல்வர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் வருகை புரிந்து பார்வையிட்டுவிட்டு, ஒரு நல்ல தொழிற்சாலையை இந்த அளவுக்குச் சீரழித்து விட்டார்களே என்று வேதனைப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களிடம் தெரிவித்து இந்த ஆலை இயங்குவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்வதாக, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, பவானிசாகரில் உள்ள கதர்ச் சாய அச்சுத் தொழிற்சாலையை திறந்து, 500 தொழிலாளர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்குமாறு தமிழக முதல்வரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



ஈரோடு மாவட்டம், பவானிசாகர், சத்தி ஒன்றியங்களில் பவானி நதிக்கரையில் 11 காகித ஆலைகள் இயங்கி வருகின்றன. இந்தக் காகித ஆலைகள், பவானி நதியிலிருந்து 40 எச்.பி. முதல் 50 எச்.பி. மின் மோட்டார்களைக் கொண்டு விவசாயத்திற்கு என்று தண்ணீர் எடுத்து, முறைகேடாக ஆலைகளுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்தக் காகித ஆலைகளிலிருந்து வெளிவரும் இரசாயனக் கழிவு நீரை சுத்திகரிக்காமல், அருகிலுள்ள நிலங்களில் குட்டைகளை அமைத்துத் தேக்கி வைக்கிறார்கள். இதனால், மேற்படி ஊராட்சிகளில் நிலத்தடி நீர், கிணற்று நீர் ஆகியவை இரசாயன நீராக மாறிவிட்டன. இந்தக் காகித ஆலைகளின் கழிவுகளை, தீ வைத்து எரிப்பதன்மூலம் ஏற்படும் கரும்புகையினால் காற்று மாசுபட்டு, சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கழிவு நீரை நேரடியாக ஆற்றிலும், வனப் பகுதியிலும் வெளியேற்றுகிறார்கள். வனப் பகுதி விலங்குகள் கழிவு நீரைக் குடித்து மடிகின்றன. இந்த நிலை தொடருமானால், பவானி நதி இரசாயனம் கலந்த நீராக மாறிவிடும். மேலும் பல இலட்சம் மக்கள் குடிநீர் இன்றி அவதிப்படும் நிலை உருவாகும். எனவே, உரிய நடவடிக்கை எடுத்து, பவானி நதி நீர் மாசுபடுவதைத் தடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சமத்துவபுரம் இல்லாத பவானிசாகர் தொகுதியில், சமத்துவபுரம் அமைத்துத் தர வேண்டுமென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஈரோடு மாவட்டத்தில் அரசுக் கலைக் கல்லூரி இல்லை. எனவே, கல்லூரி இல்லாத என்னுடைய பவானிசாகர் தொகுதியிலே, அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று, மாண்புமிகு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பவானிசாகர் தொகுதியில் அரசு மருத்துவமனை இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் உள்ளன. புன்செய் புளியம்பட்டி, நகராட்சி ஆகியும்கூட இன்னும் ஆரம்ப சுகாதார நிலையமாகவே உள்ளது. சுமார் ஒரு இலட்சம் மக்கள் மருத்துவ வசதி பெறக்கூடிய இப்பகுதியில், போதிய இட வசதியுள்ள புன்செய் புளியம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைப், படுக்கை வசதியுடன்கூடிய 24 மணி நேரமும் செயல்படக்கூடிய, அரசு மருத்துவமனையாக மாற்றித் தர மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஊராட்சி ஒன்றியங்களில், சாலைப் பணியாளர்கள் gang ஆட்களை வைத்து, கிராமப்புறங்களிலுள்ள சாலைகளை பராமரித்து வந்தார்கள். இன்று அந்த ஆட்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே,

கிராமப்புறங்களிலுள்ள சாலைகளைப் பராமரித்து, அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டுபல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்;
கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.
மலர் என்றால் தாமரைதான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே
எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான்; மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் – நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம் போலப்
பண்பட்ட தமிழர் வாழ்வில் – முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் முண்டதந்தோ!
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங்கமழ்கின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள் கண்டுவிட்டார்.
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள் – தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார்; பிழை குவித்தார்.
மழையற்றுப்போன வயல்போல் மாறிற்றுத் தமிழர் மனம்
அழுக்காறு – அவா – வெகுளி – இன்னாச் சொல் நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்!
பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் – இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடி போட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை – சோகப் பாட்டுப்
பாடினாள் தமிழன்னை சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை......



ஓடினாள்..... ஓடினாள் ..... ஒரு வழியும் கிடைக்கவில்லை!
புலியூர் விட்டுப் புகழூரில் வாழுகின்றான்
கலியூரில் பெருவேந்தன் குறளாசான்!
ஆண்டு சென்று, 'அருமை மகனே!
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்' என்றாள்.
'என்னம்மா?' என்றான் குறளோன்.
'தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டு'மென்றாள்.
'தங்கம் எடுக்கவா?' என்றான்
'தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க' என்றாள்.
'இன்றென்ன ஆயிற்'றென்றான்.
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்றாள்;
சென்றமையக் குடில் இல்லை ஏழைக்கென்றான்;
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற்றென்றாள்; அறிவில்
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும் சொன்னாள்
அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்பதென்றான்;
தொழுத மகன் உச்சிமோந்து ஆல
விழுதனைய கைகளாலே...... அணைத்துக் கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது
இனிமேலே என எண்ணி மனமகிழும்
உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத் துள்ளி எழ
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக! என்றாள்.
பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக."

அந்த அறிவு மன்னனாக விளங்கிய பேரறிஞர் அண்ணாவினுடைய இதயத்தை இரவலாகப் பெற்றிருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள், தந்தை பெரியார் அவர்களுடைய நினைவாக எங்களுடைய ஈரோடு மாவட்டத்தின் சார்பாக, ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களிடம் நான் கோரிக்கை வைக்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–50*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் வெளியிலே இருக்கின்றபோது, இந்தச் சட்டமன்றத்தை நினைக்கின்றபோது, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பணியாற்றிய இடம் இந்தச் சட்டமன்றம். பேரறிஞர் அண்ணா அவர்கள் பணியாற்றிய இடம் இந்தச் சட்டமன்றம். தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக முதல்வராக இருந்து பணியாற்றும் இடம் இந்தச் சட்டமன்றம். இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் பணியாற்றுகிற இடம் இந்தச் சட்டமன்றம். அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் பணியாற்றுகிற இடம் இந்தச் சட்டமன்றம். அண்ணன் தளபதி அவர்கள் பணியாற்றுகிற இடம் இந்தச் சட்டமன்றம். எங்கள் பகுதியிலே அரசியலிலே போற்றப்படக்கூடிய மறைந்த மேதை பி.ஜி. கருத்திருமன் அவர்கள் பணியாற்றிய இடம் இந்தச் சட்டமன்றம். எனவே, மக்களுக்காகப் பணியாற்றப்படும் இந்தச் சட்டமன்றத்தை நாங்கள் எல்லாம் கோயிலாகக் கருதினோம். ** நீங்கள் சட்டமன்ற இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுப்பிரமணியம், நன்றாகப் பேசினீர்கள். என்னுடைய வாழ்த்துக்கள், உங்களுக்கு. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஹசன் அலி. (குறுக்கீடு) Point of Order-ஆ? (குறுக்கீடு) வழக்கம்போல அவர்தானே?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, ** என்ற ஒரு வார்த்தை வந்திருக்கிறது. அது அவைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. ஏனென்றால், இந்த மாமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு சொல் இடம்பெறுவது என்பது, ** இருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட வேண்டும். இங்கே எல்லாமே ஞானசேகரன்தான், இதை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் அவர்தான், இதை வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்கிறவரும் அவர்தான். அடுத்தது, ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச அனுமதி அளித்ததற்கு உங்களுக்கு முதற்கண்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய சார்பாக நீ அங்கே செல் என்று சொன்ன, என்னைத் தேர்ந்தெடுத்த இராமநாதபுரம் வாக்காளர் பெருமக்களுக்கும், என்னை அங்கு சென்று, நீ போட்டியிடு என்று ஆணையிட்ட அன்னை சோனியாவிற்கும், சுட்டெரிக்கும் வெயிலிலும் தட்டுத் தடுமாறாமல், அங்கே வந்து எனக்காகப் பேசி, எனக்காக வாக்குச் சேகரித்த அன்புத் தலைவர் வாசன் அவர்களுக்கும், இவற்றிற்கெல்லாம் மேலாக, எனக்கு வாக்களியுங்கள், நான் கலைஞரின் கரத்தைப் பலப்படுத்துவேன் என்று இந்தக் கலைஞா பெயரைச் சொல்லித்தான் நான் சென்ற இடமெல்லாம வாக்குச் சேகரித்தேன். ஆக, தன்னுடைய பெயரைத் தந்து உதவிய அண்ணன் கலைஞா அவர்களுக்கும், நான் என்னுடைய நன்றியை முதலில் இதயத்தின் அடித்தளத்திலேயிருந்து காணிக்கையாகச் செலுத்திவிட்டு இன்றைக்கு நல்லோராக இருப்போர், நயன் அறிவார்கள், இந்த நிதிநிலை அறிக்கையைப் போற்றுபவர்களாக இருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை, பாமரனாக இருந்தாலும், பரமனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் ஒரு ஆறுதல் அளிக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கை.

*முற்பகல் 11–55*

இதிலே முக்கியமாக நான் பார்க்க வேண்டியது என்னவென்றால், நான் வந்திருக்கின்ற இராமநாதபுரத்திலே, இதுவரை நாங்கள் தண்ணீர், தண்ணீர் என்று தண்ணீர் கேட்டுக்கொண்டிருந்தோம். இப்போது அவர்கள் அளித்திருக்கும் திட்டத்திலே எங்களுக்குத் தண்ணீர் தரவில்லை. எங்களுடைய நெஞ்சத்திலே பாலை வார்த்திருக்கிறார்கள். 671 கோடி ரூபாய்க்கு அழகான ஒரு திட்டம் படைத்து, இனிமேல் இந்த இராமநாதபுரத்திலே தண்ணீர்ப் பஞ்சமே இருக்காது என்று அவர்கள் சொல்லியிருப்பதற்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்த சமயத்திலே பாதாளச் சாக்கடைத் திட்டம் இராமநாதபுரத்திலும், இராமேஸ்வரத்திலும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பாதாளச் சாக்கடைத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் என்று அந்த இடத்திலேயே சொன்னதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய கலைஞர் அவர்கள் 1991 ஆம் ஆண்டில் ஊட்டியிலே மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள். அப்போது அவர் சொன்ன சொல்லை இன்று வரை இராமநாதபுரத்துத் தொகுதி மக்கள் பசுமையாக நினைவில் வைத்திருக்கிறார்கள். இங்கே வந்து இந்த அழகான,

குளுமையான ஊட்டியையும், இங்கே உள்ள மலர்க் கொத்துக்களையும் நான் பார்க்கின்றேன். ஆனால், இவை எல்லாம் என் மனதிலே நிற்கவில்லை. வறுமையிலே, வறட்சியிலே வாடிக்கொண்டிருக்கும் அந்த இராமநாதபுரமும், அந்த மக்களும்தான் எனக்குத் தெரிகிறார்கள் என்றார்கள். ஆக, வறட்சி கொண்டவர்கள்தான் நாங்கள். அதிலே சந்தேகம் இல்லை. ஆனால் எழுச்சி கொண்டவர்கள். இந்த இராமநாதபுரத்தைப் பொறுத்தவரை சாதாரண நரேந்திரராக இருந்தவரை, அமெரிக்காவிற்கு அனுப்பி, சுவாமி விவேகானந்தராகத் திரும்பிப் பெற்றவர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட, இன்றைக்கு இந்தியாவெல்லாம் புகழும், தமிழருக்கெல்லாம் உள்ளம் குளிரும் திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம்—ஜனாதிபதி அவர்களை அனுப்பி வைத்தவர்களும் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு திரு. அப்துல் கலாம் அவர்களுடைய எம்எல்ஏ. யார் என்று கேட்டால் நான்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நானேதான். ஆக, அப்படிப்பட்ட சிறப்புடைய இந்த இராமநாதபுரம் வறுமையுடையது என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆக்வே, நான் கலைஞர் அவர்களையும், அமைச்சர்களையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால்,

*'ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்*
*மூத்தோன் வருக என்னாதவருள்*
*அறிவுடையோ னாறு அரசும் செல்லும்'*

அரசு செல்லுவதானால், அறிவுடையோன் பக்கம்தான் செல்லும். நாங்கள் வறுமையிலே வாடுகின்றோம். நீங்கள் எல்லாம் கருணை செய்தால்தான் இராமநாதபுரம் மாவட்டத்தை—ஏனென்றால் நான் கலைஞர் பெயரால்தான் ஓட்டுக் கேட்டிருக்கிறேன். நான் சொன்ன திட்டங்கள் எல்லாம், நான் கொடுத்த வாக்குறுதி எல்லாம், கலைஞர் பெயரால்தான் கொடுத்திருக்கிறேன். ஆகவே, நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து என்னுடைய தொகுதிக்கு நீங்கள்—இந்தக் காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரை, எங்களுடைய உள்ளத்திலே உறுதியாக நாங்கள் நம்புவது, காமராஜர் ஆட்சி அமைய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) காமராஜர் ஆட்சி எப்படியாவது அமைய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) காமராஜர் ஆட்சி அமைவதற்கு எங்களுடைய உள்ளமெல்லாம் துடித்துக்கொண்டிருக்கும்போது, எங்களுக்கு ஆட்கள் அவ்வளவு போதாது என்று நினைத்தோம். ஆனால், இன்றைக்கு நீங்கள் அளிக்கின்ற திட்டங்கள், கலைஞர் அளிக்கின்ற திட்டங்கள்—காமராஜர் பிறந்த தினத்தைக் கல்வி தினமாகவும், அவருடைய பிறந்த தினத்திலே வாரத்திற்கு இரண்டு முட்டைகளும், இராஜீவ் பெயரிலே கணக்கற்ற வலைகள்,



மீனவர்களுக்காக ஐஸ் பெட்டிகள், கவச உடைகள், காந்தி பிறந்த நாளிலே வேலையில்லாப் பட்டதாரிகளுக்காக நலத் திட்டங்கள்; ஆக, இப்பொழுது நடந்துகொண்டிருப்பது காமராஜர் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதை சின்ன காமராஜர் ஆட்சி என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எங்களுடைய பெயரால் நடப்பதற்கு இதை காமராஜர் ஆட்சி என்று, சின்ன காமராஜர் ஆட்சி என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். காமராஜருடைய ஆட்சியைத்தான் நாங்கள் இப்போது பார்க்கின்றோம்.

இப்போது 5,000 விசைப் படகுகளுக்கு விற்பனை வரி விலக்களித்தீர்கள். இராஜீவ் காந்தி பெயராலே வலைகள், ஐஸ் பெட்டிகள், உயிர் காக்கும் கவச உடைகள் எல்லாம் அளித்தீர்கள். 6,000 ரூபாய் கர்ப்பிணிப் பெண்களுக்கும், 15 ஆயிரம் ரூபாய் திருமண உதவியும் கொடுக்கும் உங்களிடம் ஒரு வேண்டுகோளை வைககின்றேன். 15 ஆயிரம் ரூபாய் நிதி உதவி பெற வேண்டுமென்றால் அவர்கள் 10–வது வரை படித்திருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறீர்கள். மீனவக் குடும்பங்களிலே 10–வது வரை படிக்க முடியாது. பலரால் படிக்க முடியவில்லை. 8–வது வரை படித்தவர்கள் நிறையப் பேர், இந்த உதவியைப் பெறமுடியாமல் என்னிடம் வந்து நிற்கிறார்கள். ஆகவே, கருணைகூர்ந்து—'எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா' இந்த பாரதியினுடைய பாட்டை, யாரைப் பார்த்துப் பாடலாம் என்று பார்க்கும்பொழுது,

*'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா*
*உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா'*

இப்படிப் பாடும்பொழுது,

*'களையி ழந்த நாட்டிலே முன்போலே*
*கலை சிறக்க வந்தனை வா வா வா'*

*'தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா*
*எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா'...*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே பாட்டாக இருக்கின்றது இன்றைக்கு! *(சிரிப்பு)*

**திரு. கு. ஹசன் அலி:** ஒவ்வொரு தமிழனையும் பார்த்து இந்தப் பாடலை பாரதி பாடினாலும், இந்த உலகத்தில் உள்ள தமிழர்களுக்கெல்லாம் இது சென்று சேர வேண்டுமென்றால் இந்தப் பாடலை நான் கலைஞரைப் பார்த்து மட்டும்தான் பாட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கலைஞரைப் பார்த்துச் சொல்கிறேன்.

'எளிமைகண்டு இரங்குவாய்'—எளிமையான இந்த நாட்டிலே, நாட்டுப் படகுகளுக்கு 250 லிட்டர் டீசல் மானியம் வழங்கும் தாங்கள், அதை 375 ஆக உயர்த்தினால், நீங்கள் எப்படி 1,000 லிட்டர் டீசல் மானியத்தை 1,500 ஆக உயர்த்தும்போது, இன்று மீனவ மக்கள் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்திலே, அதை எப்படிப் பேசுகிறார்கள் தெரியுமா? நன்றி சொல்லப் போகும்போது என்ன செய்துவிட்டாய் என்று கேட்டவர்கள் எல்லாம், இன்னமும் செய்ய வேண்டும் என்று சொல்ல வைத்த கலைஞருக்கு, மீனவர்கள் சார்பாக அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1,500 ஆக உயர்த்திவிட்டதினாலே மீனவர்களுடைய குடிகள் எல்லாம் உயர்ந்துவிடும் என்று கருதி விடாதீர்கள். 1,500 என்பது 2,000 என்று ஆனாலும், மீனவர்களுடைய வாழ்க்கையில் உள்ள துன்பங்களைப் பார்க்கின்றபோது, 'ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்' தான். அவர்களுடைய...

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இன்னும் பாலுக்கு வரவில்லையே, மீனிலேயே இருக்கிறீர்கள். அடுத்து பாலுக்கு வந்துவிடுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏனென்றால், நேரம் ஆகிவிட்டது.

**திரு. கு. ஹசன் அலி:** இந்த மீனவர்களுடைய பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட வேண்டுமானால், ஒரு சில திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஏப்ரல் 15 முதல் மே 29 ஆம் தேதி வரை ஒன்றரை மாதம் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடியாத நிலையிலே இருக்கும்பொழுது அவர்கள் படும் துன்பங்கள் சாதாரணமானவை அல்ல. அவர்களுக்கு 30 கிலோ அரிசி மானியமாக வழங்கினால் அவர்களுடைய துயரம் ஓரளவிற்குக் குறையும் என்று நினைக்கிறேன்.

கடற்கரைச் சாலைகளும் மீன் வண்டிகள் செல்வதற்கு தோதானதாக இல்லை. பிரதான சாலைகளிலேயிருந்து கடற்கரைச் சாலைகளுக்குச் செல்வதற்கு சிமென்ட் ரோடுகள் அமைத்துத் தர வேண்டும். இன்றைய நிலையிலே, இந்தக் கடற்கரைப் பகுதியிலே ரோந்துப் பணியிலே ஈடுபடுவதற்குப் போதுமான அளவு ஜீப் வசதி இல்லை, அங்கே விசைப்



படகுகள் இல்லை. முக்கியமாக நீங்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால், என்னுடைய இராமநாதபுரம் பகுதியிலேதான் அகதிகளுடைய வருகை அதிகமாக இருக்கிறது. இந்த அகதிகளினுடைய வருகையின்போது, அவர்களுக்கு மீட்புப் படகுகள் அவசியமாக இருக்கின்றன. மீட்புப் படகு ஏற்கெனவே 4 வாங்கினார்களாம், ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோடியாம். அது எங்கே போய்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது time. 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் இன்னும் பாலுக்கும் போகவில்லை.

**திரு. கு. ஹசன் அலி:** இது என்னுடைய கன்னிப் பேச்சுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சுதான். அதற்கு ஒரு time வேண்டுமில்லையா? நேரே பாலுக்கு வாருங்கள், ஆவின் பாலுக்கு.

**திரு. கு. ஹசன் அலி:** ஏற்கெனவே இந்த மீட்புப் படகு என்பது இருக்கிறது சார். வேறு விஷயத்தைப் பேசினால்கூட, இதை முக்கியமாக நீங்கள் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி.

**திரு. கு. ஹசன் அலி:** இரண்டு நாட்களுக்கு முன்னால், 10 பேர் வந்த படகு ஒன்று கவிழ்ந்து, 5 பிணங்கள் மிதந்தன. அப்பொழுது எங்கே இருந்தது அந்த மீட்புப் படகு? இராமேஸ்வரத்திலே பவழம் என்ற பெயரிலே ஒரு மீட்புப் படகு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அது மீட்புப் படகு அல்ல, அதையே மீட்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். (சிரிப்பு) அப்படிப்பட்ட மோசமான நிலையிலே வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் ஒரு கோடி ரூபாய் என்று வாங்கிய அந்த நான்கு படகுகளையும், எந்தவிதமான மராமத்தும் செய்யாமல் இன்று வீணாகும் நிலையிலே வைத்திருக்கிறார்கள். சுனாமி சமயத்திலே ஒதுக்கப்பட்ட 4859 கோடி ரூபாய் நிதியிலே, எத்தனையோ சுனாமிபோல அடித்துச் சென்றுவிட்டார்கள். ஆக, மிஞ்சிய ஆயிரம் கோடியை மீனவர் மறுவாழ்வுக்கு ஐயா கலைஞர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) அளித்திருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதுதான்.

முக்கியமாக இன்றைக்குள்ள இந்த மீனவக் குடும்பங்கள் தங்களுடைய கணவன்மாரை, தங்களுடைய உறவினரை அனுப்புகின்றபோது, இவர்கள் போருக்கு அனுப்புவதுபோலத்தான் அனுப்ப வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு நாளும் காலையிலே நான் எழுந்தவுடன் எனக்கு வருகின்ற

தொலைபேசியோ, 'ஐயா, என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இத்தனை பேர் படகுகளில் சென்றார்கள். இத்தனை பேரில், இத்தனை பேரைக் காணவில்லை. இன்று வரை படகு திரும்பவில்லை' என்று சொல்கின்றார்கள். ஆகவே இதை முக்கியமாக மீன் துறை அமைச்சர் கவனத்திலே எடுத்துச் செய்ய வேண்டும்.

ஐயா, இந்த மீனவப் பெண்கள் படுகின்ற துன்பத்தை மட்டும் சொல்லிவிட்டு, முடித்துக்கொள்கின்றேன். ஒரே ஒரு சம்பவத்தை நான் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். நான் சென்ற ஓர் இடத்திலே இரு மீனவப் பெண்கள் வந்தார்கள், 16, 17 வயது. எங்களுக்கு வேலைவாய்ப்பு வாங்கித் தாருங்கள் என்று கேட்டார்கள். ஏனம்மா, நீங்கள் படிக்கவில்லையா என்று கேட்டேன். எங்களுக்கு படிப்பதற்கு ஆசை இருக்கிறது. ஆனால், அதற்கான பஸ் வசதி எங்களுக்கு இல்லை; இங்கிருந்து செல்வதற்கு பஸ் வசதி இல்லை; அது நேரத்தோடு வருவதில்லை என்றார்கள். ஆகவே, ஒரு விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். அங்கே அவர்களுக்கு நிறைய இடங்களிலே கழிப்பிடம் இல்லை. ழிப்பிடம் அவர்களுக்கு எங்கே தெரியுமா? கடற்கரை ஓரத்திலேதான். அங்கு சுற்றி இருக்கக்கூடிய 25 சதவிகிதம் கடலால் சூழப்பட்டதுதான் என் தொகுதி. அந்தத் தொகுதியிலே கழிப்பிட வசதிகள் இல்லை. ஏன் கழிப்பிட வசதி இல்லை என்று கேட்கும்பொழுது, அங்குள்ள அதிகாரிகளை அழைத்து, உடனடியாக இங்கே கழிப்பிடங்களை ஏற்படுத்துங்கள் என்று சொல்லும்பொழுது, ஏற்படுத்தி விடலாம், அதற்கு யார் தண்ணீர் கொடுப்பார்கள் என்று கேட்டார்கள். சரி, தண்ணீரைக் கொடுத்துவிட்டாலும், அதை யார் மராமத்து பார்ப்பார்கள், அங்கே மின்சாரம் எப்படி வரும் என்று கேட்டார்கள். ஆகவே, ஒரு துறையைப் பற்றிப் பேசும்பொழுது மற்ற துறைகளினுடைய அமைச்சர்களும் ஒத்துழைத்தால்தான் அந்தத் துறையினுடைய நடவடிக்கைகளை சிறப்பாக நாம் மேற்கொள்ள முடியும். ஆகவே, இப்பொழுது இலங்கைத் தமிழ் அகதிகளினுடைய வரத்து அதிகமாக இருப்பதால், அங்குள்ள...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் பேசாதீர்கள், பால், மீன்.

**திரு. கு. ஹசன் அலி:** ஐயா, இலங்கை அகதிகள் வருவதே இராமேஸ்வரத்தில்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இலங்கை அகதிகளைப் பற்றியெல்லாம் பேசக்கூடாது.

**திரு. கு. ஹசன் அலி:** இராமநாதபுரத்திற்குத்தான் வருகிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் அரசாங்கம் பார்த்துக்கொள்கிறது.

பிற்பகல் 12–05

**திரு. கு. ஹசன் அலி:** இப்போது என்னுடைய தொகுதியிலே உள்ள அந்த மீனவப் பெண்கள் கருவாடு வியாபாரமும், மீன் வியாபாரமும் செய்வதற்காகத் தலைமேல் தூக்கி வைத்து கருவாடு விற்றுப் பிழைக்கிறார்கள். சமயங்களில் அடிக்கக்கூடிய காற்றுகளாலும், வந்த சுனாமியாலும் பாதிக்கப்பட்டு, இவையெல்லாம் வீணாகிவிட்டன. இது வீணாகிவிட்ட பிறகு அவர்கள் சில கடன்களைப் பெற்றிருக்கிறார்கள், வங்கிமூலமாக. இந்த வங்கிமூலமாகப் பெற்ற கடன்களும் பல இலட்சங்கள் அல்ல, 10 ஆயிரம், 5 ஆயிரம், 7 ஆயிரம் என்று; ஆனால், இவர்கள் அதைத் திரும்பக் கொடுக்க முடியவில்லை. இவர்கள், இந்தக் கருவாடுகளையெல்லாம் விற்றுத்தான் கொடுக்க வேண்டும். அந்தக் கருவாடுகள் எல்லாம் தண்ணீரிலே அடித்துச் சென்றுவிட்டன. ஆகவே, கருணைகூர்ந்து, அவர்களுக்கெல்லாம் இந்தக் கடன் தொகையை மானியமாக வழங்கிட வேண்டும். ஏறக்குறைய 15 இலட்சம் பேர் வாழ்கிற இந்தத் தமிழகத்திலே, இந்த மீனவர்களுக்கு ஒரு வாரியம் இல்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியுமா? எல்லாத் துறையினருக்கும் வாரியம் இருக்கும்போது ஏன் இந்த மீனவர்களுக்கு மட்டும் வாரியம் இல்லை? எனவே, அவர்களுக்காக உடனடியாக அதற்கு வாரியம் அமைக்க வேண்டும் என்று ஐயா அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குளச்சலிலே மீன்பிடித் துறைமுகத்தை உடனே அமைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எதிரொலி மணியன். (குறுக்கீடு) நீங்கள் எதிரொலியுங்கள். (குறுக்கீடு) இல்லை. நாங்கள் அவையை நடத்த வேண்டும். 12 பேர் பேச வேண்டும். மீனுக்கு மட்டும் இவ்வளவு நேரம் என்றால், பாலுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்? படகு என்று சொல்கிறார். (குறுக்கீடு) இத்தனை நிமிடத்திலே முடிக்கிறேன் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் சார்பில் இரண்டு பேர் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஹசன் அலி அவர்கள் எல்லாவற்றையும் [illegible] எனவே, சேகருடைய நேரத்தையும் சேர்த்து [illegible] பேசவிடுங்கள்.

227481

**திரு. டி. சுதர்சனம்:** ஒரே நிமிடத்திலே அவரே உரையை முடித்துவிடுவார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. சேகருக்கு வாய்ப்பு இருக்காது.

**திரு. டி. சுதர்சனம்:** வேண்டாம், வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஏற்கெனவே கேட்டது மாதிரி பாலுக்கு வாருங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆழிக்கால், கரியபட்டணம், பெரியவிளை, புதூர், மண்டைக்காடு, கொட்டிப்பாடு மீனவக் கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைக்க வேண்டும். இராஜாக்கமங்கலம் துறைமுகத்திலே, முட்டம் மீனவக் கிராமங்களிலே, BOOT திட்டத்திலே நிறைவேற்றுவதற்குத் தயாராகக் கோரப்பட்டுள்ள டெண்டர்களைப் பிரித்து திட்டத்தைத் தொடங்க ஆணையிட வேண்டும். தொண்டியிலே மீன்பிடித் துறைமுகம் வர வேண்டும். இவை எல்லாவற்றையும்விட, இந்த மீனவர்கள் சென்று வரும்போது, முக்கியமாக இந்த விசைப் படகுகளுடைய விஷயத்திலே கவனம் செலுத்த வேண்டும். என்னுடைய இராமநாதபுரம் தொகுதியிலே உள்ள அந்த மீனவ மக்களுக்காக உள்ள மருத்துவமனை, முக்கியமாக இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் மருத்துவமனைகளில் உள்ள சீர்கேட்டைப் போக்க வேண்டும். சீர்கேடு மிக, மிக அதிகமான நிலையில் இருக்கிறது. அங்குள்ள மருத்துவமனைகள் மக்களுக்கா, மாக்களுக்கா என்று நினைக்கக்கூடிய வகையில்தான் உள்ளது. அதையும் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். (குறுக்கீடு) என்ன கோரிக்கை சொல்லச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) என்னுடைய தொகுதி பற்றித்தான் சொல்கிறேன். ஆகவே, இதுவரை என்னைப் பேச அனுமதியளித்த அன்பான என்னுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விலாங்கு மீன் மாதிரி தப்பித்துப் தப்பித்துப் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்!

**திரு. கு. ஹசன் அலி:** எனக்குப் பேசுவதற்குத் தூண்டுகோலாக அமைந்த எங்களுடைய கட்சித் தலைவர் சுதர்சனம் சார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி, நன்றியோடு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, எதிரொலி மணியன்.



***திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளம், மீன்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு, எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, விவசாயிகளுடைய வாழ்க்கையில் எப்போதும் விடியல் இல்லை என்று சொல்வார்கள். விடியலின் தொடக்கமே வெள்ளி முளைப்பது என்று சொல்வார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே வெள்ளி முளைப்பதற்குப் பதிலாக அள்ளிக் கொடுக்கும் சூரியன் அல்லவா இங்கே முளைத்துவிட்டது? ஆம், ஆட்சிக்கும் வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 'எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் ஊர்க் கோடி, தெருக் கோடி, செத்தால் மேலே போடுகிற கோடி' என்றுதான் சொல்வான் விவசாயி. ஆனால், அவனுக்கு ரூ. 7,000 கோடியை வாங்கிக் கொடுத்து, அவன் வாங்கியிருந்த கடனையும் அடைத்து, அவன் வீட்டு அண்டா, குண்டா, அடுக்குச் சட்டி அத்தனையும் ஜப்திக்குப் போகாமல், அவன் மானம் தெருக் கோடிக்குப் போகாமல் காப்பாற்றிய கருணையுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விவசாயிகளினுடைய இன்னொரு முகமாக, அவனது உபதொழிலாக இருப்பது பால் உற்பத்தி என்று சொன்னால் அது மிகையாகாது.

பிற்பகல் 12–10

ஒரு விவசாயி, தான் விவசாயம் செய்திருக்கிற விவசாயப் பொருட்களை மகசூல் செய்து, அதைக் காசாக, பணமாகக் காண்கின்ற நாளுக்கு மூன்று மாதங்கள் ஆகின்றன. கரும்பாக இருந்தால், 10 மாதங்கள், 12 மாதங்கள்கூட ஆகின்றன. ஆனால், அந்த இடைப்படும் நாட்களிலே அவனது எல்லாப் பணிகளுக்கும் இடையில் பாலமாக இருந்து காப்பாற்றுகின்ற தொழில் பால் உற்பத்திதான். அதன்மூலம்தான் அவன் வாரந்தோறும் காசைப் பார்க்கிறான். அப்படிப்பட்ட பாலுக்கு, உரிய விலை இப்போது கிடைப்பதில்லை. தரத்தை நம்மாலே உறுதி செய்ய முடியாத பாட்டிலில் அடைக்கப்பட்ட தண்ணீருக்குக்கூட ஒரு லிட்டர் 12 ரூபாய் என்கிறார்கள். ஆனால், தரமான பாலுக்கு, தரம் உறுதி செய்யப்பட்ட பாலுக்கு இந்த அரசு கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்குக் காரணம், குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே ஒரு லிட்டர் பால் 7 ரூபாய் 25 காசுக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்திலே 7 ரூபாய் 50 காசுக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலே 9 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. பல மாவட்டங்களிலே 10 ரூபாய்க்கும் கொள்முதல்

செய்யப்படுகிறது. ஏன் இந்த மாறுபாடு? தாங்கள் இதை விளக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், பால் உற்பத்தியாளர்களுக்கு மகிழ்ச்சியூட்டும்விதமாக, எப்படிப்பட்ட வங்கியிலும் எளிதாக அவன் கடன் பெற்று, கறவை மாடுகள் வாங்குவதற்கு இந்த அரசு உதவிட வேண்டும். மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தை உள்ளடக்கி, வேலூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து பிரித்து, புதியதாக திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதற்குக் காரணம், வேலூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தையும் தாண்டி, கடந்த கால அண்ணா தி.மு.க. ஆட்சியிலே, மூன்று வருட காலமாக காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, கருங்குழிக்குப் பக்கத்திலே இருக்கிற சாணூர் மையத்திற்கு அனுப்பப்பட்ட, வந்தவாசி வட்டத்தைச் சார்ந்த 20 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினுடைய பால் அத்தனையும் ஏற்கப்பட்டு, இன்னும் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் 10 இலட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதேவேளையில், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிக அளவில் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், அவற்றைக் கொள்முதல் செய்து குளிரூட்டும் நிலையங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டுமானால், இருப்பது இரண்டே இரண்டு குளிரூட்டும் நிலையங்கள்தான். ஒன்று திருவண்ணாமலையில், மற்றொன்று செய்யாறுக்கு அருகிலுள்ள அனக்காவூரில் இருக்கிறது. இதில் அனக்காவூரிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில், பல நேரங்களிலே பால் உபரியாகிவிடுகின்ற காரணத்தினாலே, வாங்க மறுக்கிறார்கள். ஒரு சில நேரங்களிலே வாங்கிய பாலை நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, காஞ்சிபுரம் மாவட்டம் கருங்குழிக்கு அனுப்பிவிடுகிறார்கள். அங்கே போய் அது சேருவதற்குள் தயிராக மாறிவிடுகிறது. இதனால் உற்பத்தியாளர்கள், சங்கம் இரண்டுமே பாதிக்கப்படுகிற நிலைமை. வாங்காவிட்டால் உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம், வாங்கி அனுப்பினால் சங்கத்திற்கு நஷ்டம். எனவேதான், திருவண்ணாமலைக்கும், அனக்காவூருக்கும் இடையிலே குளிரூட்டும் மையம் ஒன்றை எனது தொகுதியிலே அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் கேன்கள் மூலம் கொள்முதல் செய்யும் பாலை, குளிரூட்டும் மையங்களுக்குக் கொண்டு போய் எடை போடும்போது 5 லிட்டர், 10



லிட்டர் எடை குறைவு என்று சொல்கிறார்கள். இது வாடிக்கையாக இருக்கிறது. சங்கத்திற்கும் வேதனையாக இருக்கிறது. இதை மாற்றிட, எடை மெஷின் ஒன்றை ஒவ்வொரு வேனிலும் இருக்குமாறு இந்த அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தரம் நிர்ணயம் செய்யும்போது தவறு இருந்தால், சம்பந்தப்பட்ட சங்கத்தின் பொறுப்பாளரை அழைத்து, அந்தப் பாலை ஆய்வு செய்து, அதை முடிவு செய்ய வேண்டுமென்பது அனைத்துப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுடைய கோரிக்கை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நாங்கள் படித்த காலத்திலே, மதிய உணவோடு பால் பவுடர் வழங்கினார்கள். இந்த அரசும் சத்துணவோடு முட்டை வழங்குவதைப்போல, பால் பவுடரையும் சேர்த்து வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு மீனவர் நலனில் அக்கறை உள்ளதாகக் காட்டிக்கொண்ட கடந்த கால அரசு, அவர்கள் சுனாமியாலே பாதிக்கப்பட்டபோது, அவர்களுடைய மறுவாழ்வுக்கும், புனரமைப்புக்கும் மத்திய அரசு வழங்கிய சுனாமி நிதியை முறையாகச் செலவு செய்யாமல் போனதை நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். எனவே, அந்த சுனாமி நிதியை, சில பேர் பினாமி நிதியாக மாற்றிக்கொண்டார்கள். அந்த சுனாமி நிதியை, பினாமி நிதியாக மாற்றிக் கொண்டிருக்கிற அந்தக் கடந்த கால ஆட்சியைச் சேர்ந்த பல பேரை நீங்கள் இனம் கண்டு. இன்னும் சொல்லப் போனால், தமிழகத்து மக்கள் ஏற்கெனவே இனம் கண்டுதான் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தக் காட்டாட்சியை மாற்றியிருக்கிறார்கள். எனவே, இந்த பினாமிகளை நீங்கள் கண்டுபிடித்து, சுனாமி நிதியிலே தி.மு.க...

*பிற்பகல் 12–15*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்சி மாற்றங்கள், நீங்களும் இங்கே வருகிறீர்கள், நாங்களும் அங்கே வருகிறோம். காட்டாட்சி தர்பார் என்று சொன்னார்கள். அப்படியென்றால் நீங்கள் மாறுகிறபோது அந்தக் காட்டாட்சி தர்பார் உங்களிடத்திலும் நடைபெற்றிருக்கிறதா என்பதை நான் இந்த அவையின்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் யார், எந்த ஆட்சி, எப்படிப்பட்ட ஆட்சி என்பதையெல்லாம் கண்டுதான் வாக்களித்து இன்றைக்கு ஒரு மாற்றத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேவேளையில் அந்த மக்களுக்கு நன்மையைச் செய்ய வந்திருக்கிற இந்த அரசாங்கத்தை நீங்கள் பாராட்ட வேண்டும். இன்னும் சொல்லப் போனால்,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கருத்துக் கணிப்பிலே நன்றாக வந்துவிட்டது. நீங்கள் பேசுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** அதேபோல, எனது தொகுதியைச் சார்ந்த சில கோரிக்கைகளை நான் இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கூட்டத் தொடரிலே நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற பொதுவிவாதத்திலே நான் பேசுகிறபோது, எனது தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம், ஆண்டுக்கு 750 கர்ப்பிணிகளுக்குப் பிரசவம் பார்த்து மாநில அளவில் விருது பெற்றிருக்கிறது. அதைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டேன். நிதிப் பற்றாக்குறையால் அது நிறுத்தப்பட்டிருந்தாலும், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, எனது தொகுதியிலுள்ள சேத்துப்பட்டு, பெரியகொழப்பலூர் மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று நான் மீண்டும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பெரணமல்லூர் தொகுதியைச் சுற்றி, அந்தக் கிராமத்தைச் சுற்றி, பேரூராட்சியைச் சுற்றி கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். ஆனால், அந்தப் பெரணமல்லூர் பேரூராட்சி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வந்தவாசி–ஆரணி சாலையில் ஓடிக்கொண்டிருக்கும் அத்தனை அரசுப் பேருந்துகளையும், பெரணமல்லூர் பேரூராட்சியின் வழியாக வந்து போக இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், வந்தவாசியிலிருந்து ஆரணி செல்கின்ற வழியில் இடைப்பட்ட அந்தப் பெரணமல்லூருக்குப் போவதனாலே எந்த ஊருக்கும் பாதிப்பு கிடையாது. குறிப்பாக, சடத்தாங்கல் என்ற அந்தக் கூட்டு ரோட்டிலேயிருந்து சங்கம்பூண்டி வரை எந்தக் கிராமமும் இடையில் இல்லாததால்



எவருக்கும் பாதிப்பு இல்லை. இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தூரம் மாத்திரமே கடக்கக்கூடிய இந்தத் தடத்தில் அரசுப் பேருந்துகளைக் கட்டாயம் இயக்கி அந்தப் பெரணமல்லூர் நகரத்தின் மக்களுடைய கோரிக்கையை, நீண்டநாள் கோரிக்கையை இந்த அரசாங்கம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டு, இந்த மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், 7 நிமிடங்கள். அதே மீன், கருவாடு அங்கேயே இருக்கிறது என்று சொல்லிவிடாதீர்கள். 7 நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, எல்லோருக்கும் 7 நிமிடங்கள்தான்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வள மானியக் கொள்கைக் குறிப்பில் பல நல்ல திட்டங்கள் உள்ளன. அவற்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. குமரி மாவட்டம் இரயுமன்துறை, தேங்காய்பட்டினத்தில் ரூபாய் 30.55 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் தடையில்லாச் சான்றிதழ் அளித்துள்ளதாகவும், இதில் மாநில அரசின் பங்குத் தொகையில் முதல் தவணையாக ரூபாய் 200 இலட்சமும், தனியார் நிலங்களுக்கு நஷ்டயீடு வழங்க ரூபாய் 72.75 இலட்சமும் ஒதுக்கியுள்ளதாகவும், ரூபாய் 23.5 கோடி செலவில் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்றும், BOOT திட்டத்தின்கீழ் முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலம் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துக்கொள்ள அரசாணை வழங்கியுள்ளதாகவும் கொள்கைக் குறிப்பு கூறுகிறது.

இந்த அறிவிப்புகள் குமரி மாவட்ட மக்களுக்கு, அதிலும் கடலோரப் பகுதி மக்களுக்கு மிகவும் இனிப்பான செய்திகளாகும். மாவட்ட மக்களின் சார்பாக மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பணிகளையும், ஆளுநர் உரையில் அறிவித்திருந்த குளச்சல் வர்த்தகத் துறைமுகத்திற்கான பணிகளையும் விரைவுபடுத்துமாறும், BOOT திட்டத்தின்படி வரவழைக்கப்பட்டுள்ள டெண்டர்களைத் திறந்து பணியினை வேகப்படுத்துமாறும் பணிவாய் வேண்டுகிறேன். '.....and set our Catamarans free to capture the leaping wealth of the tide....' என்று

சரோஜினி நாயுடு கூறுகிறார். கடலுக்குள் சென்று மீன் பிடிப்பவர்கள் மட்டும்தான் மீனவர்கள் என்று தற்போது கருதப்பட்டு வருகிறது. இது தவறு. மீன் சுமந்து சென்று விற்றல், மீன் உலர்த்துதல், இரை கோருத்தல், மால் முடித்தல் போன்ற வேலை செய்பவர்களையும் மீனவர் பட்டியலில் சேர்க்க வேண்டும். அதைப்போல், உள்நாட்டு மீனவர்களையும் மீனவர் பட்டியலில் சேர்க்க வேண்டும். கடற்கரை மீனவர்களுக்குரிய எல்லாச் சலுகைகளும் உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12–20

மகளிர் மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக மீனவப் பெண்களுக்குப் பஞ்ச கால நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. இவர்கள் மீனவர்கள் அல்ல எனக் காரணம் காட்டி, 2005–2006 ஆம் ஆண்டுக்கான பஞ்ச கால நிவாரணம் இதுவரையிலும் வழங்கப்படவில்லை. குமரி மாவட்டத்தில், குறிப்பாக, நீரோடி முதல் இரயுமன்துறை வரை உள்ள பகுதிகளுக்கு அதை உடனே வழங்குவது அவசியம்.

தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மழை, புயல், வெள்ளம் காரணமாக மீன் தொழிலில் ஈடுபட முடியாத நான்கு மாத காலத்திற்கு ரூபாய் 1,200 வழங்கப்படுகிறது. இத்தொகை ஒரு நாளைக்கு ரூபாய் 10-தான் ஆகிறது. வறுமைக் கோட்டிற்குங்கீழே உள்ள இத்தொகையை உயர்த்தப் பணிவாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மீன்களின் இனவிருத்திக்காக 45, 60 நாட்கள் ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு, மீனவர்களுக்கு வேலையில்லா நிலை ஏற்படுகிறது. இத்தகைய நேர்வுகளில் விசைப் படகுத் தொழிலாளிகளுக்கும், அதன் உரிமையாளர்களுக்கும் பாண்டிச்சேரி அரசு 90 கிலோ அரிசியும், 300 ரூபாயும் வழங்குகிறது. தமிழகத்திலும் இது தேவை.

கடலில் செல்லும் மீனவர்கள் காணாமல் போனால் அவர்கள் இறந்துவிட்டதாக அறிவிக்க ஏழு ஆண்டுகள் ஆகின்றன. கரையில் ஒருவர் காணாமல் போனால் சில ஆண்டுகள் கழித்து வரக்கூடும். ஆனால், கடலில் ஒருவர் சில ஆண்டுகள் வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை. எனவே, காணாமல் போனவர் ஆறு மாதங்களுக்குள் வரவில்லையெனில், அவரை இறந்ததாக அறிவித்து, அக்குடும்பத்திற்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டியது அவசியம்.

மீனவர்கள், தலைச்சுமடு மீனவப் பெண்கள் உட்பட, கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம்மூலம் பெற்ற கடன் தமிழகம் மொத்தம் கணக்கிட்டால் சுமார் ரூ. 85 கோடி எனக்



கூறப்படுகிறது. தமிழகத்தின் பல்வேறு பிரிவு மக்களின் கண்ணீரைத் துடைத்து வாழ்வளித்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இயலுமெனில் மீனவ மக்களின் இக்கடனைத் தள்ளுபடி செய்வது குறித்துப் பரிசீலனை செய்யப் பணிவாய் வேண்டுகிறேன்.

மீனவர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்தல், வள்ளம், கட்டு மரம், விசைப் படகு போன்றவற்றை இன்சூர் செய்ய கம்பெனிகளை அதிகாரப்படுத்துதல், கடலில் காணாமல் போனவர்களைத் தேட அதிக வேகப் படகு மற்றும் ஹெலிகாப்டர் வசதி செய்தல், கடலரிப்பைத் தடுக்கத் தேவையான இடங்களில் தூண்டில் வளைவுகள், இயற்கை அரண்கள் அமைத்தல் போன்றவற்றுக்கு அரசு உரிய முக்கியத்துவம் நல்க வேண்டும்.

சுனாமி பாதித்த மாவட்டங்களில் உள்ள கடற்கரைக் கிராமங்களின் புனரமைப்புக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்த ரூபாய் 1,550 கோடிக்கான புதிய திட்டத்தில் எனது தொகுதிக்குட்பட்ட நீரோடி முதல் இரயுமன்துறை வரை உள்ள பகுதிகள் விடுபட்டுள்ளன. அதையும் இணைக்குமாறு வேண்டுகிறேன். இரயுமன்துறையில் ஒருபுறம் தாமிரபரணி ஆறு, மறுபுறம் கடல். இரண்டுக்கும் நடுவே சுமார் 100 குடும்பங்கள், பள்ளிக்கூடம் மற்றும் சத்துணவுக் கூடம் உள்ளன. புயல், மழைக் காலங்களில் இப்பகுதி மக்களின் உயிர் படும்பாடு சொற்பதங்களுக்கு அப்பாற்பட்டது. இவர்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

இரயுமன்துறை முதல் நீரோடி வரை விடுபட்ட பகுதிகளில் தடுப்புச் சுவர் அமைக்கவும், வள்ளவிளை பகுதியில் கடலரிப்பால் வீடுகளை இழந்தோருக்குப் புதுக் குடியிருப்புகள் வழங்கவும், கடலோரங்களில் மிகப் பழமையான குடிசைகளுக்குப் புது வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும், சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் அரசு கட்டிக் கொடுத்த வீடுகளைப் பழுது பார்க்கவும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கடல் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, இயற்கைச் சீற்றத்தால் தமிழ்நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் வைத்து, படகையும், உடைமைகளையும் இழந்தவர்களும், 2003–ல் கேரளாவில் கடலுக்குள் நடந்த கலவரத்தில் படகு மற்றும் உடைமைகளை இழந்தவர்களும் நிவாரணம் மற்றும் தொழில் தொடங்க மானியத்துடன்கூடிய கடனுதவி கேட்டு அரசுக்கு மனு செய்துள்ளனர். இவர்களின் வேண்டுகோளை அரசு பரிசீலனைக்குட்படுத்த வேண்டும்.

சுனாமியையொட்டி மத்தியில் இருந்தும், மாநிலத்தில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வந்துள்ளது. இதில் பெரும் முறைகேடுகளும், ஊழலும் நடந்துள்ளன. பணம் வந்த இடமும், போன இடமும் தெளிவில்லாமல் உள்ளது. கடந்த ஆட்சி இவற்றை, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் அமுக்கி வைத்துள்ளதைப்போல் ஆக்கியது. முழு உண்மைகளை வெளியில் கொணர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–25

நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கவும், நாகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இதுவரையிலும் நிவாரணம் கிடைக்காத மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் வேண்டும். சுனாமி தாக்கிய வேளையில் குமரி மாவட்டம், கீழமணக்குடி, திருச்சிலுவை நாதர் ஆலயத் திருவிழாவிற்கு ஒலி, ஒளி அமைத்திருந்த ரெக்ஸ் சவுண்ட்ஸ் உரிமையாளருக்குப் பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. சுனாமியால் வாழ்விழந்து நிற்கும் அவருக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர்கள் பயனடையும்வண்ணம், பாலின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் ஒரு லிட்டர் பாலின் கொள்முதல் விலை ரூ.7.50. விற்பனை விலையோ ரூ.13.00. ஒரு லிட்டர் தண்ணீருக்குக் கிடைக்கும் விலைகூட ஒரு லிட்டர் பாலுக்குக் கிடைப்பது இல்லை. எனவே, கால்நடை விவசாயத்தைப் பாதுகாக்க, கொள்முதல் விலையைச் சற்று உயர்த்த வேண்டும். கேரளாவில் பாலுக்குக் கூடுதல் விலை கிடைப்பதால், அந்த மாநிலத்துடன் ஒட்டியுள்ள விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பால் உற்பத்தியாளர் சங்கங்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளன. சங்க உறுப்பினர்களிடம் அதிக விலை கொடுத்து தனியார் வியாபாரிகள் பால் கொள்முதல் செய்து, கேரளாவில் அதிக விலைக்கு விற்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்தத் திட்டம் தீட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜோசப், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** செயற்கை முறைக் கருவூட்டலுக்கான உறைவிந்துக் குச்சிக்கு அரசு கால்நடை மருத்துவமனையில் ரூ.15/–ம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25/–ம், என பாரபட்சமாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கடந்த திமுக. ஆட்சிக் காலத்தில் ஒரேவிதமான கட்டணமாக ரூ.15/– வசூலிக்கப்பட்டு



வந்ததைப்போல் மாற்றி அமைக்க வேண்டும். சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம், கால்நடைகளுக்கு விபத்துக் காப்பீடு, சங்க உறுப்பினர்களுக்கு நல உதவி நிதி, ஓய்வூதியம் போன்றவற்றை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும். அரசு அவ்வப்போது அறிவிக்கும் மானியம் மற்றும் நிதி உதவி, பிரதம பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்குச் சென்றடையாமல், மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய அளவிலேயே, இது சரிக்கட்டப்படுகிறது. எனவே, இச்சலுகைகள் பிரதம பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்குச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும். தேனி மாவட்டத்தில் மலைப் பகுதியில் மாடு மேய்ப்பதறகாகப் பட்டி அமைக்கக்கூடாது என வனத் துறை கடும் நிபந்தனை விதிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே இதை பேசிவிட்டார்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இதைக் கைவிடக் கோரி அங்கே விவசாயிகள் சங்கம் போராடி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நன்மாறன் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும். தருமபுரி ஒன்றியத்தில் பாக்கியாக உள்ள ரூ.8½ கோடி பால் பணத்தை, மேலும் காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 8–7–1980–க்குப் பின் பணியமர்த்தப்பட்ட அனைத்து ஊழியர்களையும் (மணியடிக்கப்பெற்றது) பணிவரன்முறைப்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழக அரசு வெளியிட்ட அரசாணை எண் 86, நாள் 12–3–2001–ன்படி அனைவரையும் நிரந்தரப்படுத்தி, அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் மற்றும் சலுகைகளை வழங்கவும், பிரதம கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் கிராம நல ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகையினை ரூ.500/– ஆக உயர்த்தவும் வேண்டுகிறேன். பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில், தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்கவும், காலமுறை ஊழியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைக்கும்படியும், பால் விற்பனைக்குத் தற்போது லிட்டர் அடிப்படையில் வழங்கும் கமிஷனைக் கைவிட்டு, விற்பனைத் தொகையில் 5 சதவிகிதக் கழிவு வழங்கிடவும், ஆவின் இணையத்தில் உள்ள காலி இடங்களை நிரப்பும்போது, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கவும் வேண்டும். மதுரை ஆவின் பால் பண்ணை... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொன்னதையே நிறையச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். Repeated ஆக இருக்கிறது.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** ஒரு 1/2 second சார். மதுரை ஆவின் பால் பண்ணை தென்னிந்தியாவிலேயே இலாபகரமாக இயங்குகிறது. ஆனால், 20 வருடங்களாக இதன் பணியாளர்கள் நிரந்தரப்படுத்தப் படாமல் உள்ளனர். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உலகநாதன். 7 நிமிடங்களில் உங்கள் பேச்சை முடிக்க வேண்டும்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னைப் பேச அனுமதித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமத்தையும், நகரத்தையும் இணைக்கும் தொழில், கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும், நகர்ப்புற மக்களின் நுகர்வுக்கும் உதவுகிறது.

வேலை நீக்கம் செய்யப்பட்ட 1,200 மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்து, அவர்கள் வீடுகளில் விளக்கு ஏற்றியவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான். இன்றும் பணிபுரியும் அவர்கள் சார்பில் முதல்வருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் வளத் துறை மானியக் கோரிக்கையில் நிறைகள் பல இருப்பினும், சில கருத்துகளைச் சொல்லி, அவற்றைப் பதிய வைக்க விரும்புகிறேன். ஆவின் இல்லம் சகல வசதிகளோடு மாதவரத்தில் கட்டப்பட்டு, பயன்பாடற்றுக் கிடக்கிறது. ஆனால், உயர் அதிகாரிகள் காரணமாக அந்த அலுவலகத்திற்குச் செல்லாமல், மாதந்தோறும் இலட்சக்கணக்கான ரூபாய் வாடகை கொடுத்து நந்தனத்தில் உள்ள அலுவலகத்தில் தற்போது இயங்குகிறது. இதனால் நிர்வாகச் செலவுகள் உயர்ந்துகொண்டே செல்கின்றன. கடந்த 15 ஆண்டுகளுக்கு முந்தைய செலவுகளோடு ஒப்பிட்டு ஆய்வுசெய்து, வீண் விரயச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழகத்தில் பால் கொள்முதல், பால் விநியோகம் கூடுதலாகி உள்ளது என்பது மகிழ்ச்சியான செய்தி. கிராமப்புறங்களில் பால் உற்பத்தி செய்ய



கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அதற்குத் தகுந்த வகையில் உள்கட்டமைப்பு வசதிகளும், தொழிலாளர் எண்ணிக்கையும் மேம்படுத்தப்பட வேண்டும். பால் ஏற்றிச் செல்லும் டேங்கர் லாரிகள் சுமார் 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. இதனால், இவற்றை இயக்குவதற்கு ஏராளமான பணச் செலவும், காலதாமதமும் ஏற்படுகிறது. சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் 15 டேங்கர் லாரிகள் வாங்குவதாக அறிவிப்புச் செய்துகொண்டேயிருந்தார்கள். ஆனால், கடைசி வரையில் வாங்கவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், புதிய டேங்கர் லாரிகள் வாங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்வதோடு பால் பைகளை எடுத்துச் செல்லும் tub பற்றாக்குறை கடந்த ஆட்சியில் உள்ளதைக் கண்டுகொள்ளாத நிலையும் இருந்தது. தனியார் லாரிகளைப் பயன்படுத்திப் பால் விநியோகம் செய்வதால், காலி tub-களைக் கொண்டு வந்து சேர்க்காத நிலையும் உள்ளது.

ஈரோடு கால்நடைத் தீவனப் பண்ணையின் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிப்பது பாராட்டுக்குரியது. அதேநேரத்தில் மாதவரத்தில் இருந்த கால்நடைத் தீவனப் பண்ணை பல ஆண்டு காலமாக இயங்காமல் இயந்திரங்கள் துருப்பிடித்துக் கிடக்கின்றன. இதை தேசிய பால் பெருக்கக் கழகம் மறுசீரமைப்புச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இதேநிலையில்தான் மதுரை கப்பலூரிலுள்ள தீவனப் பால் பண்ணையின் நிலையும் உள்ளது. எனவே, இதையும் சரி செய்ய வேண்டுகிறேன். தனியார் நடத்தும் கால்நடைத் தீவன நிறுவனங்கள் பெரும் இலாபத்தோடு நடைபெறும்போது, நமது நிறுவனத்தில் நலிவு ஏன் என அரசு உரிய ஆய்வு செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் மீண்டும் வேலைக்குச் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுக்கு 5 சதவிகிதத் தனி ஊதியம் இதுவரை வழங்கப்படவில்லை. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்று, பல்வேறு சாதனைகள் படைத்துள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 5 சதவிகிதத் தனி ஊதியத்தையும் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஊழியர்களுக்குப் பதவி உயர்வு, வழங்குவதில் பல குளறுபடிகள் நடந்துள்ளன. இவற்றைப் போக்க, சீனியாரிட்டி அடிப்படையில் promotion வழங்கப்பட வேண்டும். சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டம் இருந்ததால், ஆவினில் பெருமளவு ஆள் பற்றாக்குறை உள்ளது. 8 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்கப்படுகிறது. தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழிலாளர் நியமனம் தேவை. அதில் பணியில் இருக்கும்போது இறந்து போன

தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை தந்து வேலை வழங்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு இணையான பென்ஷன் ஆவின் ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். கால்நடைத் தீவனப் பிரிவு இயங்காததால், அதன் ஊழியர்களை இணை ஊழியர்களாக இயக்க வேண்டும். சோழிங்கநல்லூரில் பால் பண்ணைக்குச் சொந்தமான இடங்கள் தனியார்களின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டும். மாவட்ட, ஒன்றியங்களில் மாத ஊதியம் 18 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தில் நீண்ட காலமாகப் பணிபுரிகின்ற அவல நிலையை இந்த அரசு மாற்றியமைக்க வேண்டும். மாநிலம் முழுவதும் ஆவின் ஊழியர்களுக்கு ஒரே சம்பளம், பஞ்சப்படி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும்.

*பிற்பகல் 12–35*

பால் உற்பத்தியைப் பெருக்க, கிராமப்புற ஏழையெளிய, நலிவடைந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் அரசு கடன் வழங்க வேண்டும். மேலும், உற்பத்தியாகும் பாலை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்முதல் செய்யும் பாலைப் பாதுகாக்க குளிர் சாதன நிலையம், மாவட்ட, ஒன்றிய அளவில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மதுரை ஆவின் பால் பண்ணை மிகவும் இலாபகரமாக இயங்குகிறது. அதில் உள்ள பதிலித் தொழிலாளர்கள் சுமார் 20 ஆண்டு காலமாக நிரந்தரப்படுத்தப்படாமல் உள்ளார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மீன்வளத் துறை 1983 ஆம் ஆண்டு மீன்பிடி சட்டத்தில் பல சிரமங்கள் இருப்பதாகப் பல மீனவர் அமைப்புகள் தெரிவிக்கின்றன. அவர்களோடு பேசி உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.

தடை செய்யப்பட்ட கொள்ளிமடி வலைகளைத் தமிழகத்தின் கடலோரங்களில் சிலர் பயன்படுத்துகின்றனர். இதனால் மீன் இனம், கடல்வாழ் உயிரினங்கள் அழிகின்றன. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மீன்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்வதற்காக ஏப்ரல், மே மாதங்களில் 45 நாட்கள் மீன்பிடித் தொழில் நிறுத்தப்படுகிறது. இந்தக் காலத்தில் மீனவர்கள் யாரும் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்வதில்லை.



இந்தக் காலத்திற்கு கேரளாவில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. அதைப்போல நமது மாநிலத்திலும் மாதம் ரூபாய் 300/–ம், இலவச அரிசியும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர் பருவ கால நிதியாக மீனவர்களிடம் வசூலித்த தொகையோடு அரசு மானியமும் சேர்த்து தற்போது ரூபாய் 1,200/– வழங்கப்படுகிறது. இதில் மாநில அரசு ரூபாய் ஆயிரமும், மத்திய அரசு ரூபாய் ஆயிரமும் சேர்த்து, ரூபாய் 3,000/– என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

விசைப் படகுகளுக்கு மானிய விலையில் டீசல் வழங்கப்படுகிறது. ஆனால், நாட்டுப் படகுகளுக்கு டீசல், கட்டுமரத்துக்கு மண்ணெண்ணெய் ஆகியவற்றை, வருமானம் குறைவான நாட்டுப் படகு கட்டுமர மீனவர்களுக்கும் வழங்கும் மானிய விலைத் திட்டம் அமலாக்கப்பட வேண்டும்.

மீனவர் கூட்டுறவுச் சங்க ஊழியர்களான மீனவர்கள் விபத்தில் இறந்து போனால் நிவாரணம் ரூபாய் 1,00,000/– வழங்கப்படுகிறது. இயற்கையாக இறந்தாலும், மீனவர் குடும்பங்கள் படும் துன்பம் சாதாரணமானதல்ல. எனவே, இயற்கை மரணத்திற்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவ மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வங்கிகள்மூலம் கடன் வழங்கி சுயதொழில் தொடங்கிட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். சுமார் ஒரு கோடி மீனவர்கள் உள்ள மீனவக் குடும்பங்களுக்குத் தனியாக வாரியம் அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டு மீன்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மீன் வளர்ப்பதற்கான திட்டங்கள் இருந்தாலும், அத்திட்டங்கள் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதோடு நின்றுவிடுகின்றன. எனவே, நாட்டு மீன் உற்பத்தியை அதிகப்படுத்தும்விதமாக ஊராட்சி ஒன்றிய அளவில் மீன் வளர்க்க, நேரடியாக மாதிரிப் பண்ணைகள் நிறுவி, மீன் வளர்ப்பு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கொழுப்புச்சத்து போன்ற சத்துக்கள் பல உணவுப் பொருட்களில் உள்ளதாக சர்ச்சையைக் கிளப்புகின்ற நிலையில், மீன் வளர்ப்பை ஊக்கப்படுத்த வேண்டும். மீன்வளத் துறைமூலம் மீனவர்களுக்கு விற்பனை வரி– *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள், உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** விலக்களிக்கப்பட்ட டீசல் மாதம் ஒன்றுக்கு 1,500 லிட்டர் வழங்கப்படுகிறது. சுனாமியால் சீரழிந்துள்ள மீனவர்கள் வாழ்க்கையில் இது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மீனவர்கள் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசலைப் பெறுவதற்கு மீன்வளத் துறை உதவி இயக்குனரிடம் பதிவு செய்து அடையாள அட்டை வழங்கப்பட்டு, அரசும், மீன்வளத் துறையும் அங்கீகரித்துள்ளதால், தாங்கள் விரும்பிய டீசல் விற்பனை நிலையங்களில் டீசல் பிடிக்க முடியாத நிலை உள்ளது. மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நடத்தப்படும் டீசல் விற்பனை நிலையங்களில் மட்டும் டீசல் பிடிக்க நிர்ப்பந்திக்கப்படும் நிலை உள்ளது. இதனால் மீனவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். மீன்வளத் துறை நடத்தும் டீசல் நிலையங்களில் கடன் பெற முடியவில்லை. தூரம் பிரச்சினையாக உள்ளது. மேலும் சில அசௌகரியங்கள் உள்ளன. எனவே, மீனவர்கள் விரும்பி மீன்வளத் துறை உதவி ஆணையரிடம் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட டீசல் விற்பனை நிலையங்கள்மூலம் டீசல் பிடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, எனக்கு மீன்வளத் துறை, பால் வளத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. காமராஜ், 5 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

***திரு. பெ. காமராஜ்:** ஐயா, இது கன்னிப் பேச்சு. அரசியல் வானில் விடிவெள்ளியாய், அதாவது என்றும் கறுப்பும், சிவப்புமாய் விடியும் அந்த விடிவெள்ளியாய் விளங்கும் என் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையைக் கொண்டுள்ள நமது கழக ஆட்சியில், கால்நடை பராமரிப்புத் துறையில் மீன்வளம் மற்றும் பால் வளம் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி தெரிவித்து, பல்கலைக்கழகங்கள் எல்லாம் படிக்கின்ற எங்கள் அறிவாலயமே! கரூர் வட்டம், நெரூர் பகுதியில் சிறு விதையாகக் கிடந்த என்மீது, கருணை மழைப் பொழிந்து, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினராக்கிய, ஏழு வள்ளல்களும் எழுந்து வணங்குகின்ற எட்டாவது வள்ளலே! எங்கள் உயிரே! முல்லைக் கொடிக்குத் தேர் தந்த பாரியைவிட, இரு வண்ணக் கொடிக்குத் தன்னையே தந்த வள்ளல் பெருமானே! எங்கள் முதல்வரே! முக்கடலின் சந்திப்பில் முக்காலமும்



போற்றும் முப்பால் தந்த அய்யன் வள்ளுவனுக்கு வான்புகழ் சிலை தந்த முத்தமிழே! நீங்கள் நடக்கும் பாதச் சுவடுகள், நாங்கள் படிக்கும் அரிச்சுவடுகள். தமிழ் கூறும் நல்லுலகின் நம்பிக்கைச் சூரியனே! முதல்வரே! உங்களை வணங்குகிறேன்.

'முடிந்த வரை முயற்சிப்பதல்ல முயற்சி; எடுத்ததை முடிக்கும் வரை முயற்சிப்பதே முயற்சி' என்ற இலட்சியத்தோடு, ஏழை, எளிய மக்களின் பசி போக்க இரண்டு ரூபாய்க்கு ரேஷனில் அரிசி; உலகத்தின் உயிர்த் துடிப்பான விவசாயிகளின் கடன் தள்ளுபடி. விரல் நுனியில் நாட்டு நடப்பை, விஞ்ஞான வளர்ச்சியை, குடிசையில் இருப்போரும், கூலித் தொழிலாளியும் அறிந்துகொள்ள வண்ணத் தொலைக்காட்சி. வளர்ந்த தமிழகம், வளமான தமிழகம் படைக்க தொழிற்புரட்சி என மக்களுக்காகவே வாழும் முதல்வரே! தங்களுடைய பாதம் வணங்கி, என் உரையைத் தொடர்கிறேன்.

கழகத்தின் சுருதியே! எங்களின் குருதியே! என் வெற்றிக்கு வியர்வை சிந்திய உயர்வே! உன்னதமே! இனமானக் காவலரே! பேராசிரியர் பெருந்தகையே! மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே! தங்களுக்கும், தழைக்கின்ற உறவோடு, தளராத அன்போடு, அழைக்கின்றபோதெல்லாம் அவனியிலே வலம் வந்து, அண்ணாவின் இயக்கத்தை ஆலம் விழுதென இஞ்ஞாலத்தில் இறக்கிய எங்கள் தளபதி, சிங்காரச் சென்னையின் சிருங்காரம், கழகத்தின் அடுத்த தலைமுறையின் பிரம்மன், இளைஞர்களின் எழுச்சி நாயகன், உள்ளாட்சியில் நல்லாட்சி காணும் நாளைய வரலாறு, எங்கள் அன்புத் தலைவர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது வெற்றிக்காக மட்டுமல்லாமல், கரூர் மாவட்டத்தின் அனைத்துத் தொகுதிகளின் வெற்றிக்காகப் பாடுபட்ட என் வாழ்வின் வழிகாட்டி, கழக உடன்பிறப்புகளின் கருவூலம், கொடை வள்ளல், எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கேசி. பழனிசாமி அவர்களுக்கும், என் வெற்றிக்காக உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும். என்னை இந்த உலகுக்குத் தந்திட்ட எனது தாய், தந்தைக்கும், என்னை ஆளாக்கிய என் அண்ணன் கேஎஸ்பி. கதிர்காமத்திற்கும், எனக்கு முகவரி தந்த என தொகுதி மண்ணின் மைந்தர்களுக்கும், நண்பர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றிப் பெருக்கை நலமோடு வெளிப்படுத்துகிறேன். அனைவருக்கும் முதலிலே என் அவை வணக்கம்.

கால்நடை பராமரிப்புத் துறையில் மீன்வளமும், பால் வளமும் பற்றிய எனது கருத்து வளத்தை இந்த அவையிலே வைக்கிறேன்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலார் அருள் மொழியில் அரசாட்சி செய்யும் நமது கழக ஆட்சியில், கால்நடை பராமரிப்புக்குப் பஞ்சமில்லை. உழவர்களின் செல்வமாய் விளங்கும் கால்நடைகளை, நோய்களிலிருந்து காப்பாற்றி மேம்படுத்திட, காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 'கால்நடை பாதுகாப்புத் திட்டம்' என்ற பெயரால் 18–1–2000 அன்று ஒரு திட்டம் கொண்டு வந்தார், நம் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அவற்றின் நலன் காக்க, ஒன்றியத்திற்கு, ஒரு மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் 4,620 முகாம்கள் நடத்த, அந்த நாளிலேயே ரூபாய் 2.29 கோடி நிதியை ஒதுக்கியவர்தான் நம் முதல்வர். வளர்ப்புப் பிராணிகளுக்கு ரூபாய் 5/– வீதம் வசூலிக்கப்பட்டு வந்த மருத்துவக் கட்டணம் 1996–லேயே நீக்கம். கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட ஒரு ரூபாய் கட்டணமும் அப்போதே ரத்து. பண்ணைகளில் அவற்றைப் பராமரிக்கும் தினக் கூலிகளாகப் பணிபுரிந்த 1,185 பேரில், 10 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்த 877 பேர், 1997–98–ல் கழக ஆட்சியிலே பணி நிரந்தரம். கழக ஆட்சியில், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு ரூபாய் 2.56 கோடியில் புதிய கட்டடம் கட்டப்பட்டது.

1997–98–ல் தென் மாவட்டங்களில் நீல நாக்கு நோய் தாக்கி, இறந்த கால்நடைகளுக்காக, ஏழை, எளிய விவசாயிகளுக்கு ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கியவர் முதல்வர் அவர்கள்.

தங்கள் கண்ணீரால்தான் கடல் உப்பு கரிக்கிறது என்ற அளவிலே, கடலிலேயே தங்கள் வாழ்வைக் கரைத்து, என்றும் கரையேறாமல் இருக்கும் மீனவர்களுக்கு 'சிங்காரவேலர் வீட்டு வசதித் திட்டம்' என்றொரு திட்டம் கொண்டு வந்து, கடந்த நம் கழக ஆட்சியில் அவர்களுக்காக 12,603 வீடுகள் கட்டித் தரப்பட்டன. அவர்களின் வீடு கட்டும் செலவு ரூபாய் 32,000/– லிருந்து ரூபாய் 37,000/– ஆக அப்போதே உயர்த்தப்பட்டது.

கழக ஆட்சியில், 36 மீனவக் குடியிருப்புகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் அப்போதே இணைப்புச் சாலைகள். மீனவர்கள் காப்புறுதித் திட்ட நிதி ரூபாய் 35,000/–லிருந்து ரூபாய் 50,000/– ஆக உயர்வு பெற்றது. மீனவர் குழுக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 1,341 மீனவக் குடும்பங்களுக்கு 1 கோடியே 27 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி. மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 902 மீனவக் குடும்பங்களுக்கு ரூபாய் 2.45 கோடி நிவாரணத் தொகை. மீனவர்களைக் காத்திட ரூபாய் 4.50 கோடி செலவில் நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்னும் பெயர்களில் ஐந்து ரோந்துப் படகுகள் 16–11–1999 முதல் இயக்கம்.



2000–2001–ல் விபத்தில் இறக்கும் மீனவ மகளிர் குடும்பங்களுக்கு ரூபாய் 15,000 என்றும், காயமடையும் மகளிருக்கு ரூபாய் 7,500 நிவாரண உதவி என்றும் வழங்க ஏற்பாடு. தற்போது 5,000 விசைப் படகுகளுக்கு, ஒரு விசைப் படகிற்கு மாதம் ஒன்றுக்கு 1,000 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி விலக்கு என்ற இருப்பதைத் தளர்த்தி, கடந்த 1–8–2006 முதல் அந்த உச்சவரம்பை 1,000 லிட்டரிலிருந்து 1,500 லிட்டர் என்று உயர்த்தி வரி விலக்கு அளிக்க நமது அரசு முடிவெடுத்துள்ளது. டீசலாலேயே எரிந்துகொண்டிருந்த மீனவர்களின் வயிற்றை, இந்த அறிவிப்பானது நிச்சயம் அணைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறேன்.

பிற்பகல் 12–45

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் வலைகள், கை விளக்குகள், மீன்களை எடுத்துச் செல்ல மிதிவண்டிகள், உயிர் காக்கும் உடை, ஐஸ் பெட்டிகள் மற்றும் நிலை அறியும் கருவிகள் ரூபாய் 100 கோடி செலவிலே வழங்க நமது அரசு முடிவெடுத்துள்ளது. சிறு தொழில் மீனவர்களுக்கு உயிர் காக்கும் கவச உடைகள் வழங்குவதும் மீன்வள மேம்பாட்டு இயக்கத்தில் ஒரு முக்கிய உதவியாகும். இதனால், மீனவர்களின் இறப்பு மற்றும் விபத்துக்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் ஒரு உடையின் விலை ரூபாய் 1,000 வீதம் கடல் மீனவர்கள் 10,000 பேருக்கு 90 சதவீதம் மானிய விலையில் உயிர் காக்கும் கவச உடைகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிதிநிலை அறிக்கையில் சொன்ன அறிவிப்பு, நமது அரசு மீனவர்களின் உயிர்ப் பாதுகாப்பில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதையே காட்டுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மைய அரசின் நிதி உதவியுடன் ரூபாய் 23.50 கோடி மதிப்பீட்டில் நமது தலைவர் கலைஞர் அவர்களின் கனிவான பரிந்துரையின்பேரில், ஒரு புதிய மீன்பிடித் துறைமுகம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற அறிவிப்பு இந்த ஆட்சியில் மீனவர் நலனை மீன் ருசியென எடுத்துக்காட்டுகிறது. கருவாடு மீனாகுமா என்றவர்களின் கடந்த கால ஆட்சியில் இந்த மீன்வளத் துறை கருவாடாகத்தான் போய்க்கொண்டிருந்தது என்பதையும் அந்த மீனவர்கள் இந்த நேரத்திலே எண்ணிப் பார்ப்பார்கள். மீண்டும் தலைவர் ஆட்சியில் கருவாடு மீனாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்..

அடுத்தது பால் வளம். பாலிலே தண்ணீர் கலக்காத ஒரு அரசாக இந்த அரசின் பால் வளத் துறை இருந்து வருவதை எண்ணி, மனிதர்களும்,

ஏன் பாலைக் கொடுக்கும் மாடுகளும்கூட நினைந்து போற்றும் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். பால் உற்பத்தியாளர்களுக்கு, உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்யவும், நுகர்வோருக்குத் தேவையான சுகாதாரமான முறையில் பதப்படுத்தப்பட்ட, தரமான பால் மற்றும் பால் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும் தொடங்கப்பட்ட ஆவின் நிறுவனம், தற்போது இந்தியாவின் இதர மாநிலங்களும் போற்றும்வண்ணம் செயல்பட்டு வருகிறது.

பால் குளிரூட்டும் திறன் நாள் ஒன்றுக்கு 2.28 இலட்சம் லிட்டர் அதிகரிக்க, 61 பால் குளிர்விப்பான்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவப்பட உள்ளன என்ற அறிவிப்பும், 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்கிறார்களே, அந்த அரசை நமக்கு நினைவுபடுத்துகின்றன.

எனது தொகுதியில், கிருஷ்ணராயபுரத்தில், தற்போது ஒரு வட்டாட்சியர் அலுவலகம் உள்ளது. ஆனால், கடவூர் ஒன்றியப் பகுதி மக்கள் எந்தவொரு கோரிக்கைக்கும் குளித்தலைக்குச் செல்ல 56 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். அங்கு செல்ல சரியான பேருந்து வசதிகளும் இல்லை. இதற்கே இரண்டு பேருந்துகள் மாறி, மாறிச் செல்ல வேண்டும். எனவே, கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு, கடவூர் வட்டம் என்ற பெயரில் ஒரு புதிய வட்டம் புதிதாகத் தோற்றுவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கோரிக்கை கடந்த கழக ஆட்சியிலேயே கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், இடையில் வந்த இருண்ட ஆட்சியில், இது கண்ணகி சிலைபோல் அருங்காட்சியகத்திற்குச் சென்றுவிட்டது. மீண்டும் கண்ணகி சிலையை நிறுவிய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இந்தக் கோரிக்கையையும் கொஞ்சம் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடவூர், இடையப்பட்டி அருகில் உள்ள பொன்னணி ஆறு அணைக்கட்டு எனது தொகுதியில் உள்ளது. ஆனால், என் தொகுதி மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. காரணம், இதன் பாசனமெல்லாம் திருச்சி மாவட்டத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. முடத்தேக்கு என்கிறார்களே, அந்த மாதிரி இந்த நீர் எங்கோ தோன்றி, எங்கோ பாய்கிறது. இந்த அணைக்கட்டுக்கான அனைத்து மராமத்துச் செலவுகளும் கரூர் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இந்த அணைக்கட்டிலிருந்து இடது புறம் மூன்று கிலோ



மீட்டருக்குப் புதிதாக ஒரு கால்வாய் வெட்டி, அக்கால்வாயினை முள்ளிப்பாடி குளத்தோடு இணைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் 1,500 ஏக்கர் விவசாய விளை நிலங்கள் பயன்பெறவும், தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீரவும் வழிவகை ஏற்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடவூரிலிருந்து கிருஷ்ணராயபுரத்திற்கும், கரூருக்கும் பஸ் வசதி இல்லை. பள்ளி மாணவ, மாணவிகள், வேலைக்குச் செல்லும் தொகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, என் தொகுதியில் மேற்கண்ட பகுதிகளுக்கு பஸ் வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு பணிவாக வேண்டிக்கொள்கிறேன்.

வெள்ளியணை பெரிய குளத்தையும், அக்குளத்திற்கு நீர் வரும் குடகனாறு வாய்க்காலையும் தூர் வாரி, மராமத்து செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வெள்ளியணை பெரியகுளம்—ஒருங்கிணைந்த குளித்தலை தொகுதியாக இருந்து, அதிலே மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வெள்ளியணை பகுதி விவசாயிகள் படும் சிரமங்கள் நன்கு தெரியும் என்று இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் கொடுங்கள், ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. பெ. காமராஜ்:** ஆகவே, இந்தக் கோரிக்கையைப் பரிவோடு பரிசீலிப்பார் என்று நம்புகிறேன். மயிலம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, அந்தப் பகுதிவாழ் மக்கள் நலம் பெற, இந்த மக்கள் நலன் காக்கும் அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல 12–50*

எனது தொகுதியின் தலைமையிடமான கிருஷ்ணராயபுரத்திற்கான அரசு மருத்துவமனை சுமார் 4 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள கோவக்குளம் என்ற இடத்தில் உள்ளது. அதற்குப் போதிய பேருந்து வசதியும் இல்லை, போதிய மருத்துவ வசதியும் இல்லை. எனவே, போதிய பேருந்து வசதியும், போதிய மருத்துவர் வசதியும் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் ஒன்றியத்தில் கவரப்பட்டி, சக்கரக்கோட்டை மற்றும் கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் தாழியாம்பட்டி ஆகிய ஊர்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கரூர் மாவட்டத்தில் கறவை மாடுகள்மூலம் கறவை செய்யப்படும் பாலில் 90 சதவீதம் எனது தொகுதியின் கடவூர் பகுதியிலிருந்துதான் கரூரில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. ஆனால், கரூர் பால் குளிரூட்டும் நிலையமானது 30,000 லிட்டர் பாலை மட்டுமே குளிரூட்டும் திறன் கொண்டதாக உள்ளது. எனவே, எனது தொகுதி, கடவூர் ஒன்றியத்திலே, தரகம்பட்டியிலேயே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசால் கரூர் மாவட்டத்தில் தொடங்கப்படவுள்ள கால்நடை நுண்ணுயிர் ஆராய்ச்சி நிலையத்தை எனது தொகுதியின் தலைமையிடமான கிருஷ்ணராயபுரத்தில் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைத்தல் என்ற திட்டத்தின்கீழ், வரும் நிதியாண்டில் கரூர் மாவட்டத்திற்கான மருத்துவக் கல்லூரியை எனது தொகுதியான மாயனூர் பகுதியில் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் மருத்துவக் கல்லூரி தொடங்கினால், அதற்கான நிலம் மற்றும் அடிப்படை வசதிகள் அனைத்தும் இப்போதே உள்ளன என்பதால், மாயனூரை மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்ய வேண்டும் என்று, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியின் தலைமையிடமான கிருஷ்ணராயபுரத்தில் உள்ள ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் இல்லை. எனவே, மாநில அளவிலான போட்டிகளில் வெற்றிபெறும் அவர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள மாயனூரில் உள்ள மூடப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையை மீண்டும் இயக்க ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் தற்போது ஆபத்துக் காலங்களில் உதவுவதற்கான தீயணைப்பு நிலையம் ஏதும் இல்லை. எனவே, தரகம்பட்டியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



தரகம்பட்டி சார் பதிவாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்திற்கு என்று பொது மக்களால் இலவசமாக நிலம் வழங்கப்பட்டு பத்தாண்டுகள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், உரையை முடியுங்கள் சீக்கிரம். இன்னும் இரண்டு அமைச்சர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. பெ. காமராஜ்:** அந்த இடத்தில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் அமைத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள பெரும்பாலான சாலைகள் மண் சாலைகளாக உள்ளன. அவற்றைத் தார்ச் சாலைகளாக மாற்ற அரசு சிறப்பு நிதியை ஒதுக்கி, உடனே அதைச் செயல்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்து, அந்தப் பகுதி மக்களின் தணியாத தாகத்தைத் தீர்க்க வேண்டுகிறேன். இந்தப் பகுதிகள் காவிரிக் கரையோரம் இருந்தாலும், இந்த மக்களுக்குக் காவிரி நீர் கிடைப்பதில்லை. அதாவது, சன்னதி தெருவில் இருந்து கொண்டு இவர்களால் சாமி கும்பிட முடியவில்லை.

எனது கோரிக்கைகள் எல்லாம் சத்தான கோரிக்கைகள். அதே சமயம் எல்லாமே முத்தான கோரிக்கைகள் என்று சொல்லி, இந்த முத்துக்கள் எல்லாம் மு.க. என்று எல்லோராலும் அன்பாய் அழைக்கப்படும் என் தலைவர் முதல்வர் கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று என் சார்பிலும், என் தொகுதி கிருஷ்ணராயபுரம் மக்கள் சார்பிலும் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைத் தன்மை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசருக்கெல்லாம் அரசன் போன்றவன் என்ற கருத்தை வலியுறுத்தும்

*"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க் கொளி"*

என்ற குறளை நினைத்து, அதன் வழி நிற்கும், வாராது வந்த மாமணியாய் வரலாற்று நன்கொடையாய் விளங்கும் என் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, மானியக் கோரிக்கையின்மீதான எனது கன்னிப் பேச்சை இந்த மன்றத்திலே நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

ஆயம்புப பணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நன்றி. மாண்புமிகு உறுப்பினர் பி. பலராமன். ரொம்ப short-ஆகப் பேசுங்கள், speed ஆகப் பேசுங்கள்.

***திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வரலாறாய், தமிழகத்தின் விடிவெள்ளியாய், வெற்றியின் விலாசமாய், விவேகத்தின் இருப்பிடமாய், துணிச்சலின் பிறப்பிடமாய்த் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

சாதாரண, ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, சான்றோரும், ஆன்றோரும் சரித்திர சகாப்தம் படைத்திட்ட, தமிழகச் சட்டமன்றத்தில் இன்று மீன்வளம் மற்றும் பால் வளம் ஆகிய துறைகளின்மீது நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையில் பேசிட மாபெரும் வாய்ப்பினை உருவாக்கித் தந்த மகத்தான மாதரசி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதம் தொட்டு என் இதயபூர்வமான நன்றியை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்ததொரு வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கின்ற பொன்னேரி தொகுதி வாக்காள மக்களுக்கும், என்னை ஈன்ற தாய், தந்தைக்கும், ஜனநாயக மக்கள் கூட்டணிக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் மீனவர்கள் நலனுக்காகக் கீழ்க்கண்ட திட்டங்களைக் கொண்டு வந்து சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்கள். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். மீனவர்கள் இலவச வீட்டு வசதித் திட்டம், மீனவர்கள் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீனவர்கள் குழுக் காப்புறுதித் திட்டம், மீனவர்கள் மகளிர் காப்புறுதித் திட்டம், மீனவர்கள் தனி நபர் விபத்துக் காப்புறுதித் திட்டம், மீனவர்கள் டீசல் மானிய நிவாரணத் திட்டம், இலங்கைக் கடற்படையினரால் பிடிபடும் தமிழக மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய ஆறு இடங்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

கடலூர் நீர் வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 8.52 இறால் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட திட்டம். இந்த அரசு கொடுத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 38-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தில் 5-ஐ மட்டும்



குறிப்பிட்டுள்ளதை நான் படித்துப் பார்த்தேன். மீனவர் நலனுக்காக ஒரு புதிய திட்டம்கூட இல்லாதது வருந்தத்தக்கதாக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர்கள் கூட்டுறவு இணையம் பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983-ன்கீழ் 6-11-1991-ல் பதிவு செய்யப்பட்டு, கடல் நீர்வள மேம்பாட்டுத் திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் செயல்பட்டுவருகிறது. மேலும், இத்திட்டத்தினைச் செயல்படுத்த அம்மா எடுத்த தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக ஒருங்கிணைந்த கடல் மீன்வாழ் மேம்பாட்டுத் திட்டம், பகுதி 1-ல் ரூபாய் 16 கோடியே, 99 இலட்சமும், பகுதி 2-ல் 4.5 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீனவர்களுக்கு மீன் வலைகள், கட்டுமரங்கள், வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டன. தற்போது இந்த அரசு கூட்டுறவு நிலவள வங்கிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள கடனைத் தள்ளுபடி செய்துள்ளது. அதேபோன்று, மீனவர்கள் பெற்ற கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பகுதி மூன்றில், இந்த அரசு கொள்கை விளக்கக் குறிப்பில் ஏதும் குறிப்பிடாதது குறித்துக் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். இந்தத் திட்டத்திற்கு அரசு நிதியொதுக்கீடு செய்து, மீனவ மக்களுக்குக் கடன் வழங்கி, இந்தத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த வலியுறுத்துகின்றேன்.

பிற்பகல் 12-55

உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் வழங்கப்பட்ட சலுகைகள்போல, மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டதுபோல, மீனவர்களுக்குச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்துகின்றேன்.

மாண்புமிகு அம்மா ஆட்சியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பழவேற்காடு மீனவர் பகுதிக்கு மீஞ்சூர் வழியாகச் சென்று சுற்றி வருவதற்குப் பதிலாக, நெட்டுக்குப்பம் முகத்துவாரத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாலம் ஒன்றை அமைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. எங்களுடைய பொன்னேரி தொகுதி மக்களின் நலன் கருதி, இந்தத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தில் 2,461 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் 89.30 மில்லியன் கன மீட்டர் ஆய்வுப் பணி

நடைபெறுவதாக சேது சமுத்திரக் கால்வாய் லிமிடெட் தமது அறிக்கையில் கூறியிருக்கிறது. ஆகஸ்ட் 1, 2006 முதல் இதுவரையில் 6.26 மில்லியன் கன மீட்டர் கால்வாய்தான் தோண்டப்பட்டுள்ளது. இந்தக் கணக்கை வைத்துப் பார்க்கும்போது குறைந்தது 16 ஆண்டு காலமாகும். சேது சமுத்திரத் திட்டம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் வழியாக அமல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் இப்பகுதியில் வாழுகின்ற சுமார் 3.5 இலட்சம் மீனவ மக்கள், கால்வாய் தோண்டும்போது பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று அரசை வலியுறுத்துகின்றேன். பாக் ஜலசந்தி-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தின்மூலமாக மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற ஒரு தவறான கருத்தினை நம்முடைய உறுப்பினர் அவர்கள் மாமன்றத்திலே சொல்கிறார்கள். சேது சமுத்திரத் திட்டம் குறித்து அறிய, மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்களோடு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக நாகப்பட்டினத்திலேயிருந்து, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மூக்கையூர் வரை உள்ள அனைத்து மீனவக் கிராமங்களுக்கும் நாங்கள் சென்று வந்தோம். அங்கேயுள்ள மீனவ மக்களிடையே சேது சமுத்திரத் திட்டம் ஒரு பெரும் வரவேற்பை ஏற்படுத்தியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், சேது சமுத்திரத் திட்ட நிதியிலிருந்து, நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் வரையுள்ள மீனவ மக்களுக்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்தப் பகுதியிலே உள்ள மீனவ மக்களுக்காக நலத் திட்டங்களை வழங்கி வருகிறார்கள். மல்லிப்பட்டினத்தில் மீனவர்கள் கடலுக்குச் சென்று வருகின்ற நேரத்திலே, அங்கே Light House இல்லை என்று சொன்னார்கள். உடனே, மத்திய அமைச்சர் அவர்கள், இந்த 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு இல்லாமல், உடனடியாக 1½ கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அந்த மல்லிப்பட்டினம் கடற்கரைப் பகுதியிலே Light House-ஐ அமைக்க உத்தரவிட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி. பலராமன்:** மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருப்பது உண்மை. அவர்களுக்கு நலத் திட்டங்களை வழங்கியிருப்பதாகச்



சொல்லியிருக்கின்றீர்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையிலேயே நலத் திட்டங்களின்கீழ் உதவி கிடைத்ததாகத் தெரியவில்லை. பாக் ஜலசந்தி கால்வாயை அகலப்படுத்தும் பணி நடைபெறுவதால் கப்பலுக்கு அடியில் மீனவர்கள் வலை மாட்டிக்கொண்டு, சின்னாபின்னமாக்கப்படுகிறது. இது குறித்துப் புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேது சமுத்திரத் திட்டத்தை ஆதரிக்கிறார்களா, இல்லையா? அதைச் சொல்லுங்கள். சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று சொல்கிறார்களா? இல்லையா? சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே– (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடு) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அந்த மீனவர்களுக்கு நிவாரணப் பணிகளுக்கான உதவிகள் தேவையென்று கேட்டாரே தவிர, சேது சமுத்திரத் திட்டத்திற்குள்ளே செல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரைட். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** சார், அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தை உருவாக்குகிறபோது, மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்காக நிவாரணம் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார். அதுமட்டுமல்ல, சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோதே, உங்கள் தேர்தல் அறிக்கையிலே, ஆளுநர் உரையிலேயே, சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு விரைந்து செயல்படுத்தும் என்று இவ்வரசு நம்புகிறது என்றுகூடச் சொல்லி, வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று 2001-லிருந்து 2006 வரையிலே பேசியிருக்கிறீர்கள். அதைத்தான், சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி மிகுந்த ஆர்வத்தோடு ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள். ஒரு மணி ஆகிவிட்டது. (குறுக்கீடு) ஜெயக்குமார், உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால், முடிந்ததற்குப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பதிலுரைக்குப் பிறகு பேசுங்கள். உட்காருங்கள்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆனால், மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன், இந்த நேரத்தில். அடுத்தபடியாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே மீனவர்கள் எங்கேயும் பாதித்துவிடக் கூடாது என்று முதலமைச்சர் அவர்களும், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களும் விவாதித்து, நம்முடைய இந்தியப் பிரதமர், அன்னை சோனியா காந்தி மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் அந்தத் திட்டத்தைத் தொடங்கியபோது, மீனவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் அதனால் பாதிக்கப்படக் கூடாது என்று திட்டமிட்டு, பல இடங்களிலே சின்னச் சின்னத் துறைமுகங்களையும் அமைத்து, அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தச் சுற்றுப் பயணத்திலே மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களோடு நானும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. நல்லக்கண்ணு, திரு. டி.கே. ரங்கராஜன் போன்றவர்களெல்லாம் சுற்றுப் பயணம் செய்து, மீனவர்களோடு கலந்து பேசி, அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையிலே ஆறுதல் சொல்லிவிட்டு வந்தோம். அதற்குப் பிறகு, மீனவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, இப்போது அந்தத் திட்டத்திலே 40 சதவீதப் பங்கு முடிவுற்று, 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அந்தத் திட்டம் அமலபடுத்தப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன கருத்துக்குள்ளே நாங்கள் நுழையவில்லை.



அவர்கள் கேட்பது, மூன்றரை இலட்சம் மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு நிவாரணப் பணிகள் வேண்டும் என்றுதான் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உறுப்பினர், சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். ஜெயக்குமார், உட்காருங்கள், அவர் பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு அளித்த விளக்கத்தில் தெளிவாகச் சொன்னேன். ஒவ்வொரு கிராமத்திலும் சென்று, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டத்திலுள்ள மீன் துறை அதிகாரிகளை அழைத்து, அந்தக் கிராமத்திலுள்ள மீனவ மக்களை அழைத்து, உங்களுக்கு இந்த சேது சமுத்திரத் திட்டத்தால் எந்தப் பாதிப்பாவது இருக்கிறதா? ஆழப்படுத்துகின்ற பணியில் ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்று கேட்கின்ற நேரத்தில், அங்குள்ள மீனவர்கள், மிகத் தெளிவாக, நல்ல முறையில், நன்மை பயக்கின்ற வகையில் இந்தத் திட்டம் இருக்கிறது என்றும், ஆழப்படுத்துவதனால் மீன் வளர்ப்பு குறையுமா என்றுகூட நம்முடைய மத்திய அமைச்சர் அவர்களே மீனவ மக்களிடத்தில் கேட்டபோது, ஆழப்படுத்துவதனால் மீன்வளம் அதிகரிக்குமே தவிர, குறையாது என்றுதான் மீனவர்கள் சொன்னார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பலராமன். (குறுக்கீடு) உட்காருங்கள். பதிலுரைக்குப் பிறகு கடைசியிலே கேளுங்கள். (குறுக்கீடு) ஜெயக்குமார், அமைச்சருடைய பதிலுரைக்குப் பிறகு நீங்கள் கேள்வி கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பலராமன், நிறைய பேப்பர் வைத்திருக்கிறீர்களே?

**திரு. பி. பலராமன்:** இல்லை, இல்லை. கொஞ்சம்தான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லுங்கள். என்ன?

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைப்பாட்டைப் பற்றி இங்கே கேள்வி எழுப்பினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட

[திரு. டி. ஜெயக்குமார்] [2006 ஆகஸ்ட் 19

வேண்டும் என்பதிலே எங்கள் கட்சிக்கு மாறுபட்ட கருத்து இல்லை.
ஆனால், மீனவர்களுடைய வாழ்வாதாரங்களைப் பறித்து, அவர்களைச்
சாகடித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்பதுதான்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
நிலைப்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட மூன்று
மாதுங்களுக்கு முன்பாக, அந்த மண்ணை ஆழப்படுத்துகின்ற— tug என்று
சொல்வார்கள்; அந்தக் கப்பல் 100 கோடி ரூபாயிலே உள்ளே மூழ்கிப்
போயிருக்கிறது. எனவே, உங்களுடைய கணக்குப்படிப் பார்த்தால்,
வலைகள் அறுக்கப்பட்டிருக்கின்றன. மீனவர்கள் வாழ்வாதாரங்கள்
எல்லாம் பறிக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை பேருக்கு எவ்வளவு
நிவாரணங்களைக் கடந்த காலங்களில் நீங்கள் கொடுத்திருக்கின்றீர்கள்
என்ற அந்த விவரத்தை இந்த அவை முன்னாலே வைக்க முடியுமா
என்பதை நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டத்தை ஆதரிப்பதாகச் சொல்கிற இவர்கள்,
இராமநாதபுரம் மாவட்டத்திலே, அங்கே கூட்டம் நடக்கிறபோதுகூட,
இதைப் பற்றி மக்களிடம் கலந்தாய்வு செய்ய வேண்டும் என்று
சொல்லுகிறபோதுகூட, உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களேகூட
வெளிநடப்புச் செய்து, தகராறுகளெல்லாம் ஏற்பட்டன, உங்கள் ஆட்சிக்
காலத்திலே. பத்திரிகையிலே படித்திருக்கிறோம். இதற்கான ஒத்துழைப்பே
கொடுக்காத சூழ்நிலையில்கூட, மத்திய அரசாங்கத்திலே இருக்கிற
மாண்புமிகு அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் எடுத்துக்கொண்ட
முழு முயற்சியின் காரணமாக, அதுவும் குறிப்பாக, அங்கேயிருக்கிற அந்தச்
சுற்றுச்சூழலையும் விசாரித்து, முழுமையாகக் கண்டறிந்த பின்னர்தான்,
அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கேயிருக்கிற
மீனவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துக் கொண்டுதான்
இருக்கிறோம், பிரச்சினைகள் இல்லை. வேண்டுமென்றே, அரசியல்
ஆக்குவதற்காக, இந்தப் பிரச்சினையைத் திசை திருப்புவதற்காகத்தான்,
சிலர் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்களே தவிர, இந்த அரசு
எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது.
வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள். 13 நிமிடங்கள்
ஆகிவிட்டன.



2006 ஆகஸ்ட் 19]

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
ாகப்பட்டினம் நகரத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட
்லியான்தோட்டம் பகுதி மக்கள், வீடுகள் இழந்து தவித்தபோது,
ாண்புமிகு அம்மா அவர்களால், நாகப்பட்டினம் ஒன்றியத்திற்கு
ட்பட்ட நெத்தியம் என்ற கிராமத்தில், தற்காலிகக் குடியிருப்பு
ற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும், அவர்களுக்கு செல்லூர் என்ற
ராமத்தில் நிரந்தரக் குடியிருப்பு கட்டித் தர ஏற்பாடு
சய்யப்பட்டதாகவும், ஆனால், அப்பணி இதுவரை நிலுவையில்
ள்ளதாகத் தெரிகிறது. இந்நிலையில் கடந்த 10–7–2002 நெத்தியம்
ராமத்திலுள்ள தற்காலிகக் குடியிருப்புகள், தீ விபத்து ஏற்பட்டு
ற்றிலும் எரிந்துவிட்டதால், பாதிக்கப்பட்ட 75 குடும்பங்கள் குடியிருக்க
டின்றி வெட்டவெளியில் வாழ்ந்து வருவதாகத் தெரிகிறது. இவர்கள்
ங்குவதற்குத் தற்காலிக வீடுகள் கட்டித் தருவதற்கு வழிவகை செய்ய
இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக
றிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா
அவர்கள் ஆட்சியில் முதன்முதலாக தமிழ்நாட்டிலிருந்து டெல்லி
மாநகருக்கு, வாரம் மூன்று முறை 40,000 லிட்டர் பால், விற்பனைக்காக
ரெயில் டேங்கர் மூலம் கொண்டு செல்லப்பட்டதை இந்த மாமன்றத்திற்கு
நினைவூட்ட விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பால் கொள்முதல் 1–6–2002 முதல் ஒரு லிட்டர் ரூ.9.50
முதல் ரூ.10.50 வரை, ஒரு லிட்டருக்கு கிட்டத்தட்ட 1 ரூபாய் வீதம் 25
இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டதால், நாள் ஒன்றுக்கு
25 இலட்சம் ரூபாய், மாதத்திற்கு ரூ. 7.50 இலட்சம் வீதம், வருடத்திற்கு
சுமார் 90 கோடி ரூபாய் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்தது,
மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில். வாழ்க்கைத் தரத்தை
உயர்த்த வழி செய்த மாண்புமிகு அம்மா அவர்களை இந்த நேரத்தில்
பால் விற்பனையாளர்கள் பாராட்டிக்கொண்டிருப்பதை நான்
நினைவூட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று, 26–12–2004 அன்று ஏற்பட்ட ஆழிப் பேரலையின்
கோரத் தாண்டவம் நடந்த சில மணி நேரத்திலேயே, பாதுகாப்புக் கருதி
காவல் துறையினர், வேண்டாம் என்று புரட்சித் தலைவி அம்மா
அவர்களுக்குக் கூறியபோது, 'என் உயிரைப் பற்றி எனக்குக்
கவலையில்லை'; மக்களைத் தான் காக்க வேண்டுமென்ற எண்ணத்தில்,
'காப்பாற்றியே தீருவேன்' என்று, பாதிக்கப்பட்ட கடலோர மக்கள்
அனைவரையும் சந்தித்து, ஆறுதல் கூறி, சுனாமியால் பாதிக்கப்பட்ட
அனைத்து மீனவ மக்களின் வாழ்வை, இயல்பு நிலைக்குக் கொண்டு

வந்து (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்கள் நலனைக் காப்பாற்றி, மீனவர்களின் காவலர் எங்கள் அம்மா அவர்கள், மீனவர்களுக்குக் காவல் தெய்வமாகத் திகழ்ந்தார்கள். பாதிக்கப்பட்ட மீனவ மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறக்கூட மனமில்லாமல், மருத்துவமனையில் சென்று படுத்துக்கொண்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை பேப்பர் வைத்திருக்கிறீர்கள்?

**திரு. பி. பலராமன்:** நான்கே நான்குதான் ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எடுத்து வைத்துக் கொண்டு வாசித்துக்கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே விவாதங்கள் காரசாரமாக அமையக்கூடாது என்றுதான் நாங்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் குறுக்கிடுவதில்லை. ஆனால், தேவையில்லாமல் இன்றைய முதல்வர் மருத்துவமனையிலே படுத்துக்கொண்டிருந்தார் என்று தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். தலைவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு இருந்தாரே தவிர, சுனாமி வந்துவிட்ட காரணத்தாலே அங்கே போய் படுத்துக் கொள்ளவில்லை. அப்போதும்கூட, அவருடைய கடமையை நிறைவேற்றியிருக்கிறார். மத்திய அமைச்சர்களையெல்லாம் அனுப்பியிருக்கிறார். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையெல்லாம் அனுப்பியிருக்கிறார். எனவே, தொடர்ந்து அவர் பேசுவதைக் கைவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே என்னுடைய பொன்னேரி தொகுதியில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பலராமன், point-ஐ மட்டும் சொல்லுங்கள்.

**திரு. பி. பலராமன்:** Point-ஐ மாத்திரம்தான் சொல்கிறேன் பொன்னேரி தொகுதியில்—



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஏதாவது எழுதி வைத்திருந்தால் என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் கொடுத்துவிடுகிறேன்.

**திரு. பி. பலராமன்:** ஐயா, தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில ஒரு சில சம்பவங்கள், நிகழ்ச்சிகள் பற்றி மட்டும் கூற விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில், இயற்கைச் சீற்றத்தால் மீனவர்களைக் காப்பாற்ற முடியாமல் போவதால், புயல் பாதுகாப்பு மையங்களைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்துகின்றேன்.

அதேபோன்று, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை என்னுடைய தொகுதிக்குத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களை வலியுறுத்துகின்றேன். பொன்னேரி தொகுதியில், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய, ஏழையெளியவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற காரணத்தினால், ஏழைகளாக இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற விதத்தில், பெரிய தொழிற்சாலை எதுவும் இல்லாததால், தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மீஞ்சூர் ஒன்றியத்திற்குட்பட்ட இடையஞ்சாவடி ஊராட்சியில், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட மணலி புதுநகரில், சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கின்றார்கள். தனி ஊராட்சியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். செங்குன்றத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற R.T.O. office-ஆனது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கோரிக்கைகள் முழுவதையும் எழுதிக் கொடுங்கள் என்று நான் சொல்கிறேன், அல்லவா?

**திரு. பி. பலராமன்:** செங்குன்றத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், தற்போது எங்களுடைய பகுதியிலே இடம் இருக்கின்ற காரணத்தால், என்னுடைய பொன்னேரி தொகுதியில் அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று இந்தக் கோரிக்கையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சென்னை–கொல்கத்தா செல்லும் நெடுஞ்சாலை இருப்பதால், பஞ்சட்டி ஊராட்சியில் ஒதுக்கியுள்ள அரசுக்குச்

சொந்தமான இடத்தில் மோட்டார் வாகன அலுவலகம் மட்டுமின்றி, அங்கு மருத்துவமனை ஒன்றையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) ஊர் பூராவும் பிரச்சினையிருக்கிறது.

**திரு. பி. பலராமன்:** கடந்த 20 ஆண்டு காலத்திற்கும் மேலாக பொன்னேரி தொகுதியில் பாடியநல்லூர் ஊராட்சியில் சுமார் 4 ஏக்கர் நிலம் போக்குவரத்திற்காக வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் பொது மக்கள் நலன் கருதி, மாநகரப் போக்குவரத்துப் பணிமனை ஒன்றை விரைவில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். சென்னை–கொல்கத்தா நெடுஞ்சாலையில் உள்ள பஞ்சட்டி கிராமத்தில், ஆரம்பச் சுகாதார மையம், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேடடுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, காரணோடை ஊராட்சியில் உள்ள 57-F மற்றும் 58-B போன்ற பேருந்துகள் நிற்பதற்கு ரோடுதான் இருக்கின்ற காரணத்தினால்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு)

**திரு. பி. பலராமன்:** 5 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பொறுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சரும், சட்டப் பேரவை உறுப்பினருமான திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள். இந்த விளக்கத்தைத் தருவதன்மூலம், அவருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தைப்போல, தமிழ்நாட்டிலே யாருக்காவது ஏற்பட்டிருக்குமானால், அந்தச் சந்தேகத்தை நீக்க வேண்டுமென்பதற்காகச் சில செய்திகளை மட்டும் நான் சொல்ல விரும்புகின்றேன். Sethusamudram Coproration—அந்த நிறுவனத்தின் தலைவராகவும், நிர்வாக இயக்குனராகவும் இருந்து வரும் திரு. என்.கே. ரகுபதி, ஐ.ஏ.எஸ். அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

சுற்றுச்சூழல் தொடர்பாக மிகவும் தீவிரமான திட்டம்; நெறிமுறைகளும் பின்பற்றப்பட்டு வருவதால், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும்போதோ, நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு



செயல்முறைக்கு வரும்போதோ, அதனால் மீன் உற்பத்தியாகும் ஆதாரத் தலங்களுக்கு எந்தவிதமான இடையூறோ, பாதிப்போ ஏற்படாது என்றும், மீனவர்களுக்கும், அவர்களது வாழ்வாதாரத்திற்கும் சிறிதளவும் பாதிப்பு ஏற்படாது என்றும், உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்றால், சேது சமுத்திரத் திட்டத்தினால், மீன்வளத்திற்கான புதிய தலங்கள் உருவாகி, மீனவர்களின் வாழ்க்கை மேம்பாடு அடையும் என்றும், மீன்பிடித் தொழிலை மேலும் சிறப்புறச் செய்யும் வகையில், 60 கோடி ரூபாய் செலவிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், தொண்டி, தஞ்சை மாவட்டத்தில் சேதுபாவாசத்திரம், நாகை மாவட்டத்திலே மல்லிப்பட்டினம் ஆகிய துறைமுகங்கள் மீன்பிடித் துறைமுகங்களாக உருவாக்கப்படும் என்றும் திரு. ரகுபதி அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

மேலும், கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையிலுள்ள, Centre for Advanced Studies என்ற அமைப்பின் இயக்குநராக இருந்து வரும் டாக்டர் பாலசுப்பிரமணியன் அவர்களின் கண்காணிப்பில் சேது சமுத்திரத் திட்டத்திற்காக, மணலை வாரி அப்புறப்படுத்தும்போது, மீன்வளம் இதனால் பாதிக்கப்படுகிறதா என்று தினந்தோறும் ஆய்வு செய்து அறிக்கையாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில், அந்த ஆய்வின்மூலம் மீன்வளத்திற்கோ, மீனவர்களுக்கோ, எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

அதுமட்டுமல்லாமல், சேது சமுத்திரத் திட்டத்திற்கென சுற்றுச்சூழல் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிற்கு மத்திய அரசின் National Bio-diversity Authority-யின் தலைவராக உள்ள டாக்டர் கன்னையன் என்பவர் தலைவராக இருந்து வருகிறார். இந்தக் குழுவில், சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் அறிவியல் தொடர்பான விஞ்ஞானிகள் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழுவினரும், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறும்போது, மீன்வளத்திற்கோ, மீனவர்களுக்கோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்று உறுதிபடச் சொல்லியிருக்கிறார்கள். இதையும் மீறி, எங்கேயாவது ஒரேயொரு மீனவர் பாதிக்கப்பட்டார் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வார்களேயானால், அவர்களுடைய குறைகளையும் தீர்ப்பதற்கு இந்த அரசும், மத்திய அரசும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Time 1¼ ஆகிவிட்டது.

**திரு. பி. பலராமன்:** 5 நிமிடங்கள்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பலராமன், நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர், கொஞ்சம் பொறுங்கள். அவர் நன்றி சொல்லிவிட்டும். (குறுக்கீடு) மணி என்ன ஆகிறது?

பிற்பகல் 1–15

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதை அறிய விரும்புகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். யாரும் எழுந்திருக்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, not allowed. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** ஓடாச்சேரி என்னும் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியில் பயன்படுத்திய அந்தச் சொற்றொடரை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, அப்போது நான் (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்மீது ** (குறுக்கீடுகள்) கோர்ட்டில் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. ஆனால், ஏற்கெனவே டான்சி வழக்கில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தண்டனை பெற்றவர்கள், இப்பொழுதும் பெங்களூர் கோர்ட்டில் சொத்துக் குவிப்பு வழக்கிலே இருப்பவர்கள் தேர்தலிலே நிற்கலாமா? அவர்களும் இந்தப் பேரவையிலே பணியாற்றலாமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஜெயக்குமார், சொல்கிறேன், கேளுங்கள், இந்தப் பிரச்சினையை இழுத்தது உங்கள் மெம்பர். தெரிகிறதா? (குறுக்கீடுகள்) உங்கள் மெம்பர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இது தேவையா? இதற்குத்தான் சொல்வது நன்றி சொல்லச் சொன்னால், இதையா சொல்வது? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** கன்னிப் பேச்சு என்றால் எதை வேண்டுமானாலும் பேசலாமா நீங்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இதை நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சொன்னதை நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கடைசியிலே பாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கடைசியில் குறும்புத்தனம் செய்கிறார் பாருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) Right. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) Not allowed. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை எடுத்து வைத்தது உங்கள் உறுப்பினர்தானே? (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் எதற்காக இப்படிப் பேசினார்? தேவையா? (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அவர் எதற்கு அப்படிப் பேசினார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் எல்லோரும். அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி சார்பில் ** என்று ஒரு கேள்வி கேட்டார்கள். பொதுவாக அரசியல்வாதிகள்மீது எத்தனையோ வழக்குகள் எத்தனையோ நீதிமன்றங்களிலே இருக்கின்றன. ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். நீதிமன்றத்திலே (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) அதைப்பற்றியே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அதைப்பற்றியே பேசக்கூடாது. உட்காருங்கள். அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் உரையாற்றுங்கள்.

***மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடாச்சேரி என்னும் சிற்றூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றிய என்னை ஓர் ஊராட்சி மன்றத் தலைவராக, திருவாரூர் ஒன்றியப் பெருந்தலைவராக, திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு மாவட்டப் பிரதிநிதியாக.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், கொறடாவும் அந்த உறுப்பினர் பேசியதை நியாயம் என்று சொல்கிறார்களா? (குறுக்கீடுகள்) அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மைக் கொடுங்கள் சார், நீக்கட்டும் என்று அவர் சொல்லட்டும். உங்கள் உறுப்பினர் பேசியதை நீக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீக்குங்கள் என்று சொல்லுங்கள். நீக்கிவிடலாமா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** என்னங்க? நீங்கள்தான் நீக்கிவிட்டீர்களே, நாங்கள் அதில் தலையிடவேயில்லையே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருப்பது, இந்த முடிவைச் செய்ய வேண்டியது, யார் தேர்தலிலே நிற்கலாம், யாருக்கு தேர்தலிலே நிற்பதற்கு அருகதை இருக்கிறது, யார் சட்டமன்றத்திற்குள்ளே வாலாம், யார் எதிர்க்கட்சித் தலைவராக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இருக்கலாம் என்பதை மக்கள் முடிவு செய்திருக்கிறார்கள். தேர்தல கமிஷன்தான் அதை முடிவு செய்ய வேண்டுமே தவிர, இங்கே இருக்கிற அமைச்சர் முடிவு செய்வதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மக்கள்தான் முன்னாலேயே முடிவு எடுத்துவிட்டார்கள் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், சொல்லுங்கள்.

பிற்பகல் 1–20

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்திற்கு இருக்கக்கூடிய உரிமையைப் பற்றி நான் இங்கு சொல்லவில்லை. ஜெயக்குமார்மீதுகூட case இருக்கிறது. தேர்தல் ஆணையத்திடம் வழக்கு இருக்கிறது. இப்படி எல்லாம்தான் இருக்கிறது. அதனால், மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, ** என்று அவர் பேசினார். (குறுக்கீடு) அதற்காகத்தான் நான் சொன்னேன். இதையெல்லாம் பார்த்தால், இப்பொழுது பெங்களூர் நீதிமன்றத்திலே, சொத்து வழக்கு இருப்பவர்தானே, உங்களுடைய தலைவி, அம்மா? சொல்லுங்கள் பார்க்கலாம். (குறுக்கீடு) இல்லையா, எத்தனை வழக்குகள்? டான்சி வழக்கு இல்லையா? அவர் மன்னிப்புக் கேட்கவில்லையா? சொத்து வாங்கியதைத் திருப்பிக் கொடுக்கவில்லையா? அவ்வளவு கோபம் வருகிறது உங்களுக்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் எழுந்தால், அவருக்குப் பேச அனுமதி கொடுக்கிறீர்கள். கொறடாவும் எழுந்திருக்கிறார். எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். இதை நீங்கள் அனுமதித்தீர்களானால், இந்த அவையை முறையாக நடத்த இயலாது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேச அனுமதி கேட்டால், அவரை நீங்கள் அனுமதிக்கலாம். கொறடாவெல்லாம் எப்பொழுது வேண்டுமானாலும் எழுந்திருக்க முடியாது. விதியில் இல்லை. முன் வரிசைக்கு வந்து உட்கார்ந்து கொண்டால், எல்லோரும் எழுந்து பேச முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, நான் இதைத்தான் தினமும் சொல்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு வாய்ப்புக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுக்க வேண்டும். அவர் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் அத்தனை பேரும் எழுந்திருப்பதை முதலில் நிறுத்த வேண்டும். நீங்கள் அவ்வளவு பேரும் எழுந்து நின்றால், (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் அத்தனை பேரும் எழுந்து நின்றால், அதுவும் கிடையாது. அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பலராமன் அவர்கள், ** என்று கேட்டார். உடனே அந்த வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்களும் நீக்கிவிட்டீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழக்கைப் பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார். அதையும் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதை நீக்கும்போது, இதையும் நீக்குவதுதானே முறை? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தார். ஏறத்தாழ அரை மணி நேரம் பேசினார். நீங்கள் "முடியுங்கள், முடியுங்கள்" என்று சொன்ன பிறகும்கூட, "ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்" என்று சொல்லி, அரை மணி நேரம் பேசிவிட்டு, கடைசியாக முடிக்கும்போது இப்படியொரு குறும்புத்தனம் பண்ணினாரே, அது நியாயமா என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒத்துக் கொள்கிறாரா? அதை நியாயம் என்று ஒத்துக்கொள்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் செய்தது தவறு என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? அவர் செய்தது சரியா என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லுங்கள். தவறுதானே? (குறுக்கீடு) முதலில், 'ஆமாம்' என்று சொல்லுங்கள். அதற்குப் பின்பு மற்றதைப் பார்ப்போம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது தவறு என்று சொல்கிறீர்களா, இல்லையா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் அதை நீக்கியிருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது தவறு என்று சொல்கிறீர்களா, இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வழக்கு சம்பந்தப்பட்டிருப்பதனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்று கேட்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவரிடம் நான் கேட்கிறேன். ** உங்களுடைய உறுப்பினர் பேசியது தவறா, இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அது தவறில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறுதானே?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தவறில் வராது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறு என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இன்னமும் நியாயம் கற்பிக்கப் பார்க்கிறார், தவறு இல்லையென்று. அதனால்தான் இந்தப் பக்கம் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது. கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'ஒன்றைக் கொடுத்துவிட்டு, ஒன்பதை வாங்கிக் கட்டிக்கொள்ளக்கூடாது' என்று. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதால்தான் நாங்களும் சொல்ல வேண்டி வருகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் எதிர்கட்சித் துணைத் தலைவரிடம் ஒரேயொரு கேள்வி கேட்கிறேன். உங்கள் உறுப்பினரை நன்றி சொல்லி முடிக்கும்படி நான் சொன்னேன். அவர் கடைசியாக அந்த வார்த்தையைச் சொன்னது தவறு என்கிறீர்களா, இல்லை என்கிறீர்களா? (குறுக்கீடு) அது வேறு. அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்பது நான் முடிவெடுத்தது. நீங்கள் தவறு என்கிறீர்களா, தவறு என்கிறீர்களா? (குறுக்கீடு) தவறு என்கிறீர்களா? முதலில் தவறு என்பதை ஒத்துக்கொள்ளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டீர்கள். பிரச்சினை முடிந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நான் முடிவெடுத்தது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆனால், அதே பிரச்சினையை மீண்டும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். அதாவது, உங்கள் உறுப்பினர்தான் ஆரம்பித்தார் இல்லையா? அவர் செய்தது தவறு என்பதை முதலில் சொல்லுங்கள். அடுத்தது நான் முடிவெடுக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதும், நீக்காததும் உங்களுடைய உரிமை. உங்களுடைய அதிகாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** நான் கேட்க விரும்புவது, அவர் செய்தது சரியா என்பதை மட்டும் சொன்னால், பிறகு இவர் கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது பற்றி நீங்கள் பரிசீலிக்கலாம். (குறுக்கீடு) அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் என்ன கேட்டார்? ** அதை யார் என்ன சொல்லப் போகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆனால், அமைச்சர் சொன்னது பூராவும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பெங்களூரில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள், அமைச்சர் அவர்கள் நிற்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆனால், இங்கே எதிர்க் கட்சி கொறடா மாண்புமிகு செங்கோட்டையன் அவர்கள்மீது வழக்கேகூட இன்றைக்கும் கோர்ட்டிலே நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது. அவர் சட்டமன்ற உறுப்பினராக இங்கே வரவில்லையா? அதனாலே, இதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். வழக்குகள் எத்தனை வேண்டுமானாலும் இருக்கலாம், இன்னும் நிரூபிக்கப்படவில்லை. நிரூபிக்கப்படாதபொழுதுதான் அவர் சட்டமன்ற உறுப்பினராக இங்கு வருகிறார். ஆனால், முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்மீது பல வழக்குகள் இன்றைக்கு நிலுவையிலே இருந்துகொண்டிருக்கின்றன. பல வழக்குகள் எல்லாம் நிரூபிக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அவரே இங்கு வந்தார். (குறுக்கீடுகள்) இன்னும் சொல்லப்போனால், சென்ற ஆண்டு, சென்ற முறை மாண்புமிகு இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர், ஆறு மாத காலம், அவர்மீது வழக்கு இருக்கிறபொழுதே, அவர் தேர்தலிலே நிற்காமலே முதலமைச்சர் பதவிப் பொறுப்பினை ஏற்றாரே! அதற்குப் பிறகு இது தவறு, நீங்கள் பதவியேற்றதே தவறு என்று சுப்ரீம் கோர்ட்டே சொல்லிவிட்டதே. இது நாடறிந்த உண்மைதானே! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்திலே pending–லே இருக்கிறதைப் பற்றியே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள், நீங்கள். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடு) செங்கோட்டையன், நான் உங்களுடைய துணைத் தலைவரிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களுடைய உறுப்பினர் பேசியது தவறு என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்) ஒத்துக்கொள்கிறீர்களா? (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் பலராமன் பேசியது, கடைசியிலே, அவர் குறும்புத்தனமாகப் பேசினார், பார்த்தீர்கள் அல்லவா? (குறுக்கீடு) அந்த உறுப்பினர் பேசியதைத் தவறு என்று சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவரைச் சொல்லச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) நான் பேசியது தவறு என்று அவரையே சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பிறகு என்ன?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேச்சிலே அவர் என்ன பேசினார்? ** என்று உங்களைக் கேட்கிறார். நீங்கள், இல்லை, முடியாது என்று சொன்னால், சரி என்று உட்கார்ந்துவிட்டுப் போகிறார். இதிலே என்ன இருக்கிறது? ** என்று

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உங்களைத்தானே கேட்கிறார்? (கூச்சல்–குழப்பம்) அதிலே என்ன தவறு இருக்கிறது? (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடாச்சேரி என்னும் சிற்றூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த என்னை ஒரு ஊராட்சி மன்றத் தலைவராக, ஒன்றியப் பெருந் தலைவராக, மாவட்டக் கழகத்தினுடைய பிரதிநிதியாக, பின்னர் மாவட்டத்தினுடைய துணைச் செயலாளராக, மாநில விவசாய அணிச் செயலாளராக இரண்டு முறை நியமித்து, இன்று என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி இதுபோல் வருவது, அவர்களுக்குப் பேச நேரம் கிடைக்கும் வரையிலும் பேசுவது, பிறகு ஏதாவது வேண்டுமென்றே தகராறு வருகிற மாதிரி கடைசி ஒரு நிமிஷம் நீங்கள் கொடுக்கிற நேரத்திலே பேசுவது, பிறகு தகராறு உருவாக்குவது, வெளிநடப்புச் செய்வது, இதையே ஒரு திட்டமாக வைத்துக்கொண்டு இங்கே சட்டமன்றத்திலே அலுவல்கள் நடக்கவிடாமல் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால், அது எதுவும் நடக்காது. மக்கள் இங்கே நல்ல தீர்ப்பை அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–30*

பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) கலைராஜன் (குறுக்கீடு) சரி, ரைட், போங்கள்.

***மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னை அமைச்சராக்கி அழகு பார்க்கிற உலகத்



தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழகத்தினுடைய முதல்வர் ஐயா டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மார்க்ஸ *க்கு ஒரு ஏஞ்சலைப்போல அரசியல் பணிகளில் நட்போடு பழகி, ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்திருக்கிற இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், என்னை என்றைக்கும் மதி என்று அன்போடு அழைத்து, அரசியல் வாழ்விலே என்னைச் சிறப்பாக எடுத்து அழைத்து வருகிற உலகத் தமிழ் இளைஞர்களின் ஒப்பற்ற தளபதியாம், எங்கள் அண்ணன், எதிர்கால எழு ஞாயிறு அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை அன்போடு அரவணைத்து அரசியலில் நிலைநிறுத்திக் காட்டிய மரியாதைக்குரிய மின் துறை அமைச்சர் மாண்புமிகு ஐயா ஆற்காட்டார் அவர்களுக்கும், மலையே மோதினாலும், நிலை குலையாத, எங்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய தளபதி அவர்களாலே நூற்றுக்கு நூறு வெற்றியைப் பெற்றுத் தந்தவர்கள் என்ற பாராட்டினைப் பெற்ற எங்கள் மாவட்ட கழகத்தினுடைய செயலாளர் அன்பிற்குரிய சகோதரர் அண்ணன் பூண்டி கலைச்செல்வன் அவர்களுக்கும், நாகை நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினர், நாகை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் அன்பிற்குரிய சகோதரர் ஏ.கே.எஸ். விஜயன், எம்.பி. அவர்களுக்கும், எனக்காகத் தேர்தல் பணியாற்றிய திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மானமிகு ஐயா வீரமணி அவர்களுக்கும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் ஐயா வரதராஜன் அவர்களுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தேசியக் குழு உறுப்பினர் ஐயா தோழர் நல்லக்கண்ணு அவர்களுக்கும், இந்த ஜனநாயக நாட்டில் தன்னால் ஒரு தீமை வந்துவிடக்கூடாது என்பதற்காக, தன்னையே தேடி வந்த பிரதமர் பதவியைக்கூட வேண்டாமென்று அர்ப்பணித்துக்கொண்ட அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அய்யா ராமதாஸ் அவர்களுக்கும் மற்றும் கூட்டணி இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கும், நகர, ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர்களுக்கும், திருவாரூர் சட்டப் பேரவைத் தொகுதியில் 26,933 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்று வரை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு உற்ற துணையாக, நண்பராக இருக்கிற திருவாரூர் ஐயா தென்னவன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக வந்த நேரத்தில், இந்த நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய தமிழர்களுக்கு மாத்திரமல்லாமல், தமிழ்ச்

சமுதாயத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்த மாபெரும் தலைவர்களுக்கும் இன்றைக்கு நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்களுக்கு தன்னுடைய நன்றியைச் செலுத்த வேண்டுமென்பதற்காக, ஐந்தாவது முறையாக அரியாசனத்தில் அமர்ந்த நேரத்தில்தான், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அறியா சனங்களாகிய அரிசனங்களும் அர்ச்சகர் ஆக வேண்டுமென்பதற்காக, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்ற சட்டத்தை இன்றைக்கு இயற்றியிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இந்த நாட்டில் இருந்த குலக் கல்வித் திட்டத்தை ஒழித்து அனைத்துச் சாதியினரும் அருமையான கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக, இலவசக் கல்வியைக் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய பிறந்த நாளில்தான், 'கல்வி வளர்ச்சி நாளாக', அவர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தில் இரண்டு முட்டைகளை இந்த மாணவர்களுக்கு அளித்து, அந்த நினைவைக் கொண்டாடியிருக்கின்றீர்கள்.

அதுமட்டுமல்லாமல், ஒரு மார்க்சிய சிந்தனையாளராக நீங்கள் இருக்கின்ற காரணத்தினால், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற ஒரு கொள்கையை இந்த நாட்டில் நிலைநிறுத்த வேண்டுமென்பதற்காக, ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்படும் என்ற திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள், தாம் மரணம் எய்துகின்றபோது, உங்களுடைய கரத்தைப் பற்றிக் கொண்டுதான் உயிர் நீத்தார்கள். அந்த நினைவாகத்தான் இன்றைக்கு இஸ்லாமிய நண்பர்களுக்கு இந்த மாமன்றத்திலே இரண்டு அமைச்சர்களை வழங்கியிருக்கிறீர்கள். இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சலுகை வழங்குவதற்கான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, சென்ற ஆட்சிக் காலத்தில், மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தாங்கள் ஐந்தாவது முறை அரியணை ஏறிய பிறகு அந்தச் சட்டத்தை நீக்கியதால்தான், இன்றைக்குப் பேராயர்களும், கன்னிமார்களும் உங்களைப் பார்த்து வணக்கம் சொல்லி வருகிறார்கள். அப்படிப்பட்ட தலைவர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற நேரத்தில் நான் இன்றைக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறேன்.



இன்றைக்கு விவாதத்தில் கலந்துகொண்ட அத்தனை உறுப்பினர்களும் சிறப்பான கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தத் துறையைப் பொறுத்தளவில், தரமான பாலினை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று, தரம் மாறாமல் நுகர்வோருக்கு அளிக்கப்படுவதை நல்ல ஒரு நிலையாக எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தத் துறைமூலமாகச் சிறப்பாக நடத்திடுவதற்காகப் பல்வேறு மிகச்சிறந்த கருத்துகளை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு யுனிவர்சிட்டியில் பேராசிரியர்கள் பாடம் நடத்துவதைப்போல இன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துகளையெல்லாம் முழுமையாக ஏற்றுக்கொண்டு, என்னுடைய அறிவிப்புகளை இன்றைக்கு அறிவித்து, அந்த அறிவிப்புகளின்மூலமாக, பெரும்பாலும் அந்தத் தோழர்கள், மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்து வைத்த கருத்துகளுக்கு சிறப்பான பதிலாக அமைந்திருக்கும் என்று கருதுகிறேன்.

*பிற்பகல் 1–35*

அந்த அடிப்படையில், நம்முடைய தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், கழக ஆட்சிக்கு முன்பு, 2005–2006 ஆம் ஆண்டில் ஒன்றியங்கள்மூலம் சராசரி பால் கொள்முதல் நாளொன்றுக்கு 21.59 இலட்சம் லிட்டர் மட்டுமே இருந்தது. தற்போது நம்முடைய தலைவர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஊக்கம் காரணமாக கடந்த மூன்று மாத காலத்தில், சராசரி பால் கொள்முதல் நாளொன்றுக்கு 24.26 இலட்சம் லிட்டர் என உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட 12 சதவிகிதம் அதிகமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல் முறையாக 26–6–2006 அன்று இந்தத் துறையினுடைய வரலாற்றிலேயே அதிகபட்சமாக 25.37 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் வரலாற்றில் சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதைப் பேரவைக்குப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு, கடந்த 2005–2006 ஆம் ஆண்டில் மாவட்ட ஒன்றியங்கள்மூலமாக விற்பனை செய்த பால் நாளொன்றுக்குச் சராசரியாக 8.86 இலட்சம் லிட்டர் மட்டுமே. ஆனால், கழக ஆட்சிக்குப் பிறகு இன்றைக்குச் சராசரி பால் விற்பனை 9.42 இலட்சம் லிட்டர் ஆகும். கடந்த ஆண்டைவிட பால் விற்பனையில் 6 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் நான் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

15 மொத்த குளிர்விப்பான்கள் 1.65 கோடி ரூபாய் செலவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவப்படும் என்பதையும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் (National Cooperative Development Corporation) மூலம் பால் சங்கங்களுக்கான பால் கேன்கள், கட்டடங்கள், பால் பரிசோதனைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக, மதுரை, புதுக்கோட்டை, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள பால் சங்கங்களுக்கு 7 கோடி ரூபாய் நிதி ஆதாரம் ஏற்படுத்தப்படும் என்பதையும், தீவிர பால் உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின்மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களை உள்ளடக்கிய திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 5 ஆண்டுகளில் படிப்படியாகப் பால் உற்பத்தியைப் பெருக்கவும், விற்பனையை மேம்படுத்தவும், இது தொடர்பான தளவாடங்களை உருவாக்கவும், மத்திய அரசிடமிருந்து 7 கோடியே 73 இலட்சம் ரூபாய் 100 சதவிகிதம் மானியமாகப் பெறப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு, தஞ்சாவூரில் உள்ள பால் பண்ணையைப் பன்னாட்டுத் தரச் சான்று பெறத்தக்க வகையில் புதுப்பிக்கவும், கிராம அளவில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், மத்திய அரசிடமிருந்து 8 கோடியே 59 இலட்சம் ரூபாய் 100 சதவிகித மானியமாகப் பெறப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிவடைந்த கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய தருமபுரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் இலாபகரமாகச் செயல்படவும், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கங்களுக்குத் தரவேண்டிய நிலுவைத் தொகையை வழங்கவும், 5 ஆண்டுகளில் படிப்படியாக 9 கோடியே 71 இலட்சம் ரூபாய் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு ஆண்டில், 2005–2006 மற்றும் 2006–2007 ஆண்டுகளுக்கு 50 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாக 3 கோடியே 50 இலட்சம் ரூபாயும், மாநில அரசின் மானியமாக 3 கோடியே 50 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



திண்டுக்கல் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்திய[illegible]ர்கள் ஒன்றியத்தின் புனரமைபபுத் திட்டத்திற்காக ஒரு கோடியே 80 இ[illegible]ட்சம் ரூபாய் மானியம் பெற திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதையும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கிராம அளவில் தரமான, தூய்மையான பால் உற்பத்திக் கொள்முதல் திட்டம், இரண்டாண்டுகளில் 536 சங்கங்களின்மூலம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்பதையும், கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், வேலூர் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன், ஒரு கோடி ரூபாய் செலவில் அதிக பால் கறவைத் திறன் கொண்ட ஒரு இலட்சம் பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்படும்.

பசும்புல் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித மானிய நிதியுதவியுடன் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர் ஆகிய ஒன்றியங்களில், மொத்தம் 60 ஏக்கர் நிலப்பரப்பில் பசும்புல் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மதுரை, கப்பலூர் கால்நடைத் தீவன ஆலையில் தீவன உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு புதிய முழுமையான பால் பண்ணை—பால் பவுடர் தொழிற்சாலை நபார்டு வங்கியின்மூலமாக 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்தத் திட்டத்திற்காக நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்ததற்கு அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (குறுக்கீடு) அவர்தான் ஒத்துழைப்புக் கொடுத்தார்.

தமிழகத்தில் 2006–2007 ஆம் ஆண்டில் குறைந்தது 100 மகளிர் சங்கங்கள் அடங்கிய 300 புதிய சங்கங்கள் உருவாக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று இலட்சம் பால் உற்பத்தியாளர்களை விபத்துக் காபபீட்டுத் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்யப்படும் என்பதையும், தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடியில் கலப்பின பொலி காளைகள் மற்றும் எருமையின பொலி காளைப் பண்ணை அமைக்கப்படும்.

பிற்பகல் 1–45

நிலையான செயற்கை முறைக் கருவூட்டல் மையங்களை, நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் மையங்களாக மாற்றுதல், உதகை ஜெர்சி

மைய கரு மற்றும் பொலி காளைப் பண்ணை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், செயற்கை முறைக் கருவூட்டலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் மற்றும் வல்லுநர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகிய பணிகள் தேசிய பசு மற்றும் எருமை இனப்பெருக்க அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 3 கோடி ரூபாய் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

தமிழகத்திலுள்ள முக்கியமான 52 இரயில் நிலையங்களில் ஆவின் பால் பொருட்களை விற்பதற்கு ஐ.ஆர்.சி.டி.சி. என்ற இரயில்வே துறையின் அனுமதி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில்தான் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய பால் பொருட்கள். சென்னை அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில் சர்க்கரை நோயாளிகளுக்காக, சர்க்கரை இல்லாத ஐஸ்கிரீம் மற்றும் இனிப்பு சேர்க்கப்படாத யோகர்ட் அறிமுகப்படுத்தப்படும்.

இந்த ஆண்டு சேலத்தில் உள்ள பால் பண்ணையிலிருந்து மிக உயர் வெப்ப நிலையில் பால் பதப்படுத்தி, பேக்டீரியா போன்ற நுண்கிருமிகள் தவிர்த்த நிலைக்கெடா சிப்பம் கட்டும் நிலையம் உலகத் தர அளவில் 12 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தி, பால் ஏற்றுமதிக்கு வழிவகை செய்யப்படும்.

நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் அணுகி, என்னிடமும் அந்தக் கருத்துகளையெல்லாம் தெரிவித்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, பெரிய மனதோடு என்றைக்கும் தொழிலாளர்களுடைய நலனைக் கருதக்கூடிய முதல்வர் அவர்கள் நமக்கு இருக்கிற காரணத்தால், அவர்கள் தொழிலாளர்களுக்கு வேண்டிய சில சலுகைகளை வழங்க வேண்டுமென்று அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், தொழிலாளர்களுக்கான நல அறிவிப்புகள் ஒரு சிலவற்றை நான் அறிவிக்க இருக்கிறேன். ஆவின் நிறுவனப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகள்மீதான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வெளியிடுகிறேன்.

ஆவின் நிறுவனத்தில் பணிபுரியும் ஏறத்தாழ 5,000 ஊழியர்களுக்கு அளிக்கப்படும் இரண்டு ஜோடி சீருடைகளுக்கான தையல் கூலி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 100 ரூபாய்



கூடுதலாக வழங்கப்படும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த 5,000 ஊழியர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர சலவைப்படி 25 ரூபாய் என்பது 50 ரூபாயாக உயர்த்தித் தரப்படும். அதற்காக ஆண்டு ஒன்றுக்கு 15 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நள்ளிரவுக்குப் பின்னரும் பணிபுரியும் ஏறத்தாழ 2,000 ஊழியர்களுக்கு வழங்கப்படும் இரவு நேரப் பணிப்படி ரூபாய் 5-லிருந்து ரூபாய் 10 ஆக உயர்த்தித் தரப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 1989 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் சென்னை ஆவின் நிறுவனத்தில் மீண்டும் பணியமர்த்தப்பட்ட ஏறத்தாழ 700 தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினையேற்று, அவர்களுக்கு 5 சதவிகிதத் தனி ஊதியத்துடன்— நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உலகநாதன் அவர்கள்கூட இதைப் பற்றிப் பேசினார்கள், அவர்களுக்கு 5 சதவிகிதத் தனி ஊதியத்துடன்— ஊதிய மறு நிர்ணயம் செய்து, ஆகஸ்ட் 2006 முதல் பணப் பயன் வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை இணையத்தின் கால்நடை தீவனப் பிரிவில் பணிபுரிந்த 131 பணியாளர்கள், 1992 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்ட ஒன்றியத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டனர். அந்த ஒன்றியத்தின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால், அந்தப் பணியாளர்கள் 2002 ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை இணையத்தில் தற்காலிகமாக மாற்றுப் பணி முறையில் அமர்த்தப்பட்டனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இவர்களின் நீண்ட காலக் கோரிக்கையினையேற்று, சென்னை இணையத்தில் மீண்டும் அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகப் பணிபுரிய அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் சீரிய அறிவுரைகளின்படி, சென்னையில் சுமார் 200 பணியாளர்களுக்கும், மாவட்ட ஒன்றியங்களில் சுமார் 400 பணியாளர்களுக்கும் தகுதி மற்றும் பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை அளித்திடும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையையேற்று, இணையம் மற்றும்—கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் தடைச் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், ஐந்தாவது முறையாக இன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, அந்தச் சட்டங்களையெல்லாம் நீக்கிய பிறகு, இணையம் மற்றும்—மாவட்ட ஒன்றியங்களில் முக்கியமான பிரிவுகளில் காலியாக உள்ள ஏறத்தாழ 1,000 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–50*

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிக் காலத்தில் உயிரிழந்த ஏறத்தாழ 270 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, அவர்களின் தகுதிக்கேற்ப compassionate ground— கருணை அடிப்படையில் உடனடியாகப் பணி நியமனம் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மருத்துவமனைகளில் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற்ற ஊழியர்களுக்குத் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த மருத்துவச் செலவுத் தொகையை, ஊழியர்களின் மருத்துவப் பட்டியல் தொகையில் 75 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ஓர் ஊழியருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் நிறுவன விற்பனைப் பிரிவில் பணிபுரியும் ஏறத்தாழ 1,500 களப் பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையின்பேரில், மழைக்காலங்களில் அவர்களுக்கு rain coat வழங்கபபடும் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் அதிகமாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதவரம் பால் பண்ணையிலுள்ள பணியாளர்கள் குடியிருப்புகளைப் புதுப்பிக்கவும், உள்சாலைகள் பழுதுபார்க்கவும் மற்றும் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் 30 இலட்சம் ரூபாய் பகுதி–2 திட்டத்தின்கீழ் செய்யப்படும் என்பதையும் அறிவித்து, அனைத்து ஆவின் நிறுவன ஊழியர்களின் குறைகளைக் களைந்திடும் வகையில், இதுவரை



அவர்களுக்கு ஒரு Standing Order— நிலை ஆணை என்பது இல்லாமல் இருந்தது. இன்றைக்கு அது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு, அந்த ஆவின் ஊழியர்களுக்கு நிலை ஆணையும், திருத்தப்பட்ட பணி விதிகளும் விரைவில் உருவாக்கப்படும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறையின்மூலமாகப் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்திருக்கிறோம். தக்க அதிகாரிகள், அலுவலர்களைக் கொண்டு அதற்கான முடிவுகளைத் தீவிரப்படுத்தி, நிச்சயமாகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் அவை நிறைவேற்றித் தரப்படும் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறி, தாங்களெல்லாம் அளித்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தேனும், பாலும், செவ்விளநீரும் கலந்து, செம்மொழி, ஆம் நம் மொழி, தமிழ் மணக்க, மணக்க, வணக்கம் தெரிவித்துக்கொள்கின்றேன். திருவள்ளூர் மாவட்டம், சிறப்புக்குரிய திருவொற்றியூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட, கடலோரக் கிராமமாம், காசி விஸ்வநாதர்கோயில் குப்பத்தில், ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்த என்னை, திருவொற்றியூர் சட்டப் பேரவைத் தொகுதியில் வேட்பாளராகத் தேர்வு செய்து, வெற்றி பெறும் வாய்ப்புகளை அமைத்துத் தந்து, என்னை வெற்றி பெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, 'யார் தருவார் இந்த அரியாசனம், புவியரசோடு எனக்குமொரு சரியாசனம்' என்று என்னை மீன்வளத் துறையின் அமைச்சராக உயர்த்தி அழகு பார்க்கும், என் உயிர்த் தலைவர், வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாகட்டும் எனத் துணிந்து, தமிழே தனது உயிர் மூச்செனவும், தமிழர் வாழ்வே தன் வாழ்வெனவும் கொண்டு, இன நலம், மொழி நலம் காக்கும் தொண்டே தன் பிறவிக் கடன் என்று, இயக்கச் செம்மல், தன்மானத் தந்தை பெரியாரின் உணர்வு, இனமான ஏந்தல் அண்ணாவின் இதயத் துடிப்பு, தொண்டால், தியாகத்தால், திறமையால் பெற்ற தகுதியால், தமிழகத்தின் தலைவராம், அண்ணாவுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்று, ஐந்தாவது முறையாகத் தமிழக அரசுக்கு அழகு சேர்க்கும் தமிழனின் வரலாறு, எங்கள் உயிர்த் தலைவர், காலத்தால் அழியாத காவியம் பெற வந்த மாபெரும் தமிழ்க்

கவி மன்னன், முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கமல மலர்ப் பாதங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) என் கண் மலரை வைத்து காணிக்கையாக்குகிறேன். செந்தமிழ்ச் சிற்பி பேராசிரியர் அவர்களுக்கும், ஆற்றலாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி. 'சிங்க இளைஞனே, திருப்பு முகம், திற விழி' என்ற புரட்சிக் கவிஞரின் பொன்மொழி கொண்டு, இளைஞரணி என்னும் எழிலூட்டி, எதிரிகளை அதிரவைக்கும் எங்கள் இனிய தளபதி, எங்கள் வழியில், விழியில் நிறைந்து, உணர்வில் உறைந்து, உயிரில் கலந்த உறவாகி, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் நேரமின்மை காரணமாக கடைசி 20 நிமிடங்கள் மட்டும் பொதுக்கூட்ட மேடையில் பேசி, எதிரிகளின் சூழ்ச்சியை முறியடித்து என்னை வெற்றி பெறச் செய்திட்ட, எனது வெற்றிக்கு வித்திட்டு எனக்கு முகவரி தந்த எங்கள் அண்ணன், வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் மன்னன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் வாழ்நாள் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ள வரை என் நன்றியினைக் காணிக்கையாக்குவேன்.

பிற்பகல் 1–55

எங்களுடைய மகிழ்வு நிறைந்த மாவட்டச் செயலாளர் அண்ணன் இ.ஏ.பி. சிவாஜி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. நான் பால் மறந்த காலம் முதல் எங்கள் உயிர்த் தலைவர் கலைஞரின் பாசறையில் என்னைப் பயில வைத்து, 'மகனே என்றைக்கும் கறுப்பு, சிவப்பு இரு வண்ணக் கொடியை ஏந்தியிரு' என்று என்னை வளர்த்து, என்னை ஆளாக்கிய என் அன்புத் தந்தை திரு. கே. பரசுராமன் அவர்களுக்கும், என் அன்புத் தாய் மாணிக்காச்சியம்மாள் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

என்னை வெற்றி பெறச் செய்த திருவொற்றியூர் வாக்காளப் பெருமக்களுக்கும், உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிச் செயல் வீரர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றி. மீனவச் சமுதாயத்தின் மகத்தான மாமனிதர் என்ற நிலையில் மட்டுமல்ல, ஒரு காலத்தில் இந்தியத் திருநாடே வியந்து போற்றிய வீரர், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், தந்தை பெரியார் அவர்களால் நான் மதித்த ஒரே தலைவர் சிங்காரவேலர் எனப் போற்றப்பட்டவர், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் தொழிலாளர் இயக்கம் குறித்து அறிவை எனக்குப் புகட்டிய ஆசான் என்று பாராட்டப்பெற்றவர், தொழிற்சங்க இயக்கத்தை இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கியது மட்டுமல்லாமல், சென்னைக் கடற்கரையில் 1923 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே



முதன்முறையாக மே தினத்தைக் கொண்டாடிய முதல் தலைவர் சிங்காரவேலர். அந்தச் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்குச் சிறப்புச் சேர்க்க, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கு 'சிங்கார வேலர் மாளிகை' எனப் பெயர் சூட்டி, அம்மாளிகை முகப்பில் சிங்காரவேலரின் கம்பீரமான முழு உருவச் சிலையைத் திறந்து வைத்து, மீனவச் சமுதாயத்தைப் பெருமைப்படுத்திய முதல் தலைவர் இன்றைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தான் என்பதனை இந்தப் பேரவையில் நன்றியுடன் எடுத்துக் கூறி, நலமுடன் பதிவு செய்ய விரும்புகின்றேன.

'காக்கா இளைப்பாற கருவேல மரம இருக்கு, என் மக்கள் இளைப்பாற மாமரத்து நிழல் இருக்கா' என்று கோரைப்புற்களும், வைக்கோலும் வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்த ஏழை மீனவர்களின் வாழக்கைச் சூழலை நேரில் பார்த்து 1975–76 ஆம் ஆண்டு மீனவ மக்களின் வளமான வாழ்வுக்கு வழி திறக்கும் வகையில் மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டத்தைத் தொடங்கி வைத்த தலைவர் கலைஞர் அவர்கள் அத்திட்டத்திற்கு மீனவத் தலைவர் சிங்காரவேலர் வீட்டு வசதித் திட்டம் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்ததையும் நினைவுகூர்ந்து, தமிழக மீனவச் சமுதாய மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

இன்றைய நிலையில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் சிங்காரவேலர் வீட்டு வசதித் திட்டத்தின்மூலம் வீடுகள் பெற்று வாழ்ந்து வருகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் முத்தமிழ் அறிஞர், மூதறிஞர், தலைவர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான் என்பதனை மீண்டும், மீண்டும் தெரிவிப்பதில் மகிழ்கின்றேன்.

1989–90 ஆம் ஆண்டில் மீனவச் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்து மீனவச் சமுதாய இளைஞர்கள் உயர் கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் இடம் பெற்று மீனவச் சமுதாயம் முன்னேறுவதறகு வழி வகுத்துத் தந்த முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை மீனவச் சமுதாயத்தினர் மறக்க முடியுமா?

மீனவ மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள், சிமெண்ட் சாலைகள், இணைப்புச் சாலைகள் அமைத்துத் தந்த அருளாளர் எங்கள் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ மக்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூர்கிறார்கள்.

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இலவசமாக மோட்டார் பொருத்திய 5 சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டன முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் முந்தைய அரசில் என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் காணாமல் போய் அயல்நாட்டில் கைதாகும் நிகழ்வுகளில், அவர்கள் திரும்பி வரும் வரையில் அவர்களது குடும்பத்தைக் காத்திடும் பொருட்டு நாளொன்றுக்கு 50 ரூபாய் வீதம் நிதி வழங்கும் திட்டம், இலங்கைக் கடற்படையினால் சுடப்பட்டு உயிர் இழக்கும் மீனவக் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி, மீனவக் குடும்பங்களுக்குப் பாதுகாப்பளித்தது இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் என்பதனைச் சுட்டிக்காட்டுவது என் கடமையாகும்.

பிற்பகல் 2–00

மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுச் சந்தா ரூபாய் 14-ஐ மாநிலம் மற்றும் மத்திய அரசுகள் சமமாகப் பகிர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது முழு ஊனம் அடையும் மீனவருக்கு ரூ.50 ஆயிரமும், பகுதி ஊனம் அடையும் மீனவருக்கு ரூ.25 ஆயிரமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 5,71,233 பேர் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர்.

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களில் பொருத்துவதற்குரிய வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கு அரசு மானியமாக 20 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மீனவர்களுக்கு டீசல் எரி எண்ணெய் வாங்குவதற்குச் செலுத்த வேண்டிய புதிய கலால் வரி, மானியமாகத் திருப்பி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 5 ஆயிரம் மீனவர்கள் பயன்பெறுகிறார்கள். மீனவர்களுக்கு டீசல் எரி எண்ணெய்மீதான விற்பனை வரியினைச் செலுத்துவதிலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படுகிறது. அதன்படி இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்காகவும், விசைப் படகுகளுக்காகவும் மீனவர்களால் வாங்கப்படும் டீசல் எரி எண்ணெய் விலையில் ஒரு லிட்டருக்கு 6 ரூபாய் 74 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 20,200 மீனவர்கள் பயனடைகிறார்கள்.

மீன்வள ஆதாரத்தைப் பெருக்கும் நோக்கில் வணிக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இறால் இனங்களைக் கடலில் இருப்புச் செய்யும்



திட்டத்தின்கீழ் 15 முதல் 20 நாட்கள் வளர்ச்சி அடையும் இறால் குஞ்சுகளை, புதுக்கோட்டை, நாகை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 12 இடங்களில் இருப்புச் செய்ய ஒரு கோடியே 28 இலட்சம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 36 மில்லியன் இறால் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு கடலில் இருப்புச் செய்யப்பட்டுள்ளன.

கடலில் மீன் இருப்பினை அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கடலோரத்தில் மீன் உற்பத்தியை அதிகரிக்க 10 முதல் 25 மீட்டர் ஆழத்தில் 11 இடங்களில் செயற்கை உறைவிடங்கள் அமைக்க ஒரு கோடியே 60 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

உயிர் காக்கும் கவச உடைகள் 10 ஆயிரம் கடல் மீனவர்களுக்கு 90 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 7 இலட்சம் மீனவர்களில் 3 இலட்சத்து 85 ஆயிரம் மீனவர்கள் முழுநேரம் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டிலுள்ள 591 மீனவக் கிராமங்களில் வசித்து வருகின்றனர். தற்போதைய நிலவரப்படி 3,98,581 உறுப்பினர்களைக் கொண்ட 795 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 1,27,462 உறுப்பினர்களைக் கொண்ட 424 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 6,039 உறுப்பினர்களைக் கொண்ட 25 இதர வகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 718 உறுப்பினர்களைக் கொண்ட 10 மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்களும், 502 உறுப்பினர்களைக் கொண்ட மாநிலக் கூட்டுறவு இணையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இம்மாநிலத்தில் வாழும் மீனவ மற்றும் மீனவ மகளிரின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுகின்றன.

தமிழகத்தில் 10 இடங்களில் 13 கோடி ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மீன் இறங்கு தளங்கள் அமைக்க மத்திய விவசாய அமைச்சகம் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. புன்னக்காயல், முடசலோடை, பழவேற்காடு, ஜெகதாபட்டினம், சேதுபாவாசத்திரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 6 இடங்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4 இடங்களில் வீரபாண்டியபட்டணம் கிராமத்தைத் தவிர மற்ற 3 இடங்களில் அதாவது ஆற்காட்டுத்துறை, சோழியக்குடி மற்றும் மண்டபத்தில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

தமிழகத்தில் மத்திய அரசிடமிருந்து 50 சதவீத நிதியுதவி பெற்று 15 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் பின்வரும் 9 இடங்களில்

புதியதாக மீன் இறங்கு தளங்கள் விரைவில் அமைத்திட அரசு கருதியுள்ளது:

தூத்துக்குடி மாவட்டம் கீழவைப்பார், தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம், காஞ்சிபுரம் மாவட்டம் கடலூர் பெரியகுப்பம், திருவள்ளூர் மாவட்டம் பெரியமாங்கோடு, திருவள்ளூர் மாவட்டம் அண்ணாமலைச்சேரி, இராமநாதபுரம் மாவட்டம் சின்ன ஏர்வாடி, இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை, புதுக்கோட்டை மாவட்டம் ஆர். புதுப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னகரம்.

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டணத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு மாநில அரசு 31 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நில ஆர்ஜிதப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

பிற்பகல் 2–05

நாகப்பட்டினம் மாவட்டம், புகழ்பெற்ற பூம்புகாரில், மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாதிரி ஆய்வுப் பணிகளை சென்னை தேசிய கடல் நுட்ப நிறுவனம் மேற்கொண்டுள்ளது. ஆய்வறிக்கை பெறப்பட்டவுடன், இத்திட்டத்தினை நிறைவேற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இது தவிர, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 50 கோடி ரூபாய் செலவில் 10 புதிய மீன் இறங்குதளங்கள்—உலக வங்கி உதவியுடன் நாகப்பட்டினம், பழையாறு, மல்லிப்பட்டினம், மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களை உலகத் தரத்திற்கு இணையாக உயர்த்திடவும், பழவேற்காடு, பரங்கிப்பேட்டை, அண்ணன்கோயில், திருமுல்லைவாசல், புன்னக்காயல் ஆகிய இடங்களில் நிரந்தர முகத்துவார வசதிகளை ஏற்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, முதல் கட்டமாக 34 கோடி ரூபாய் உலக வங்கியினால் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் உள்ள 1,99,671 உள்நாட்டு மீனவர்களில் 60,500 மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்கிறார்கள். ஆண்டுக்கு 1 இலட்சத்து 18 ஆயிரம் மெட்ரிக் டன் உள்நாட்டு மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. துறையின் கட்டுப்பாட்டில், 8 தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் உள்ளன. ஆண்டிற்கு 3,025 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள்



உற்பத்தி செய்யப்பட்டு மீன் குஞ்சு வளாத்தெடுக்கும் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதுடன் தனியாருக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ் இனக் காவலர், முத்தமிழறிஞர், மூதறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில்தான், அதாவது 1974 ஆம் ஆண்டில்தான் அரசு நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. அந்த நிறுவனம், மண்டபம், தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர் பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களை நிர்வகிக்கின்றது. மீனவர்களுக்கான தரமான வலைகளைத் தயாரித்து விற்பனை செய்யும் பொருட்டு, இராயபுரத்தில் மீன் வலைத் தயாரிப்பு நிலையமும் நிர்வகிக்கிறது. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் துறைமுக அணைக் கரையில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கு நிலையங்கள்மூலம், மீனவர்களுக்கு டீசல் வழங்கப்படுகிறது. வண்ண மீன் உற்பத்தி விற்பனை செய்வதில், வண்ண மீன் காட்சியகம் நிர்வகித்தல், முதலிய பல்வேறு பணிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருணை மிகுந்த அறிவுரைகளின்படி மீனவர்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் புதிய அறிவிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**அறிவிப்புகள்:** தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மொத்தம் 2,500 சதுர மீட்டர் பரப்புள்ள மீன் வளர்ப்புக் குளங்களைப் பழுதுபார்த்து, அவற்றின் மீன் குஞ்சுகள் உற்பத்தித் திறனை அதிகரித்திடும் திட்டத்தை 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றிட தமிழினத்தின் தனிப்பெரும் தலைவர், தமிழக முதல்வர், கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைகளின்படி, செம்பரம்பாக்கத்தில் 6 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்புப் பிரிவு ஒன்று தொடங்கப்படும்.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் ஒரு வண்ண மீன் காட்சியகம் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்நாட்டு மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, மானியத்துடன்கூடிய மீன்பிடி வலைகள், பரிசல்கள் ஆகியவை வாங்கி வழங்கிட ஏழைகளின் பாதுகாவலர், தமிழ் இனத்தின் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அனுமதி அளித்துள்ளார்கள்.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள கீழமணக்குடி கிராமத்தில் 4 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவில் கழிவு நீரில் மீன் வளர்க்கும் திட்டம் நிறைவேற்றப்படும்.

சிதம்பரத்திற்கு அருகில், எழிலார்ந்த கிள்ளை என்னும் மீனவர் கிராமத்தில் இறால் பண்ணையில், ஒரு ஹெக்டேரில் 2 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கொடுவா மீன் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 2–10

தூத்துக்குடியில் உள்ள துறையின் ஆராய்ச்சி நிலையத்தில் மீன் உணவுத் தயாரிப்பில் உள்ள மூலப் பொருட்களுடன் தேவையான அளவு புரதச் சத்து சேர்த்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கழி நண்டுகளைக் கொழுக்க வைக்கத் தேவையான தீவனம் தயாரிக்கப்படும்.

தஞ்சாவூர் மற்றும் மேட்டூர் அணையில் உள்ள பழுதடைந்த பனிக்கட்டி நிலையங்கள் ரூ.18 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் அலுவலகக் கட்டடங்களாக மாற்றப்படும்.

40 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, சேத்துப்பட்டிலுள்ள நீர் நிலையினை ஆழப்படுத்தி மழை நீர் சேமிப்பு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மீன்வளத் துறையின் நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக 25 இலட்சம் ரூபாய் செலவில் வண்ண மீன் கண்காட்சி மற்றும் மீனவர்களுக்கான கருத்தரங்கம், விளையாட்டுப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

1997–98–ல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த டீசல் மானியத்தை உயர்த்தித் தந்தவர் முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விசைப் படகிற்கு மாதம் ஒன்றுக்குத் தற்போது 1,000 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதை, 1–8–2006 முதல் 1,500 லிட்டர் அளவுக்கு உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்கு 50 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 5,000 விசைப் படகுகளுக்கு இந்த மகத்தான சலுகையை வழங்கி மீனவர் சமுதாயம் எண்ணி, எண்ணி மகிழ்ந்து பெருமைப்படத்தக்க வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் வாரி வழங்கியுள்ளார்கள்.

குமரி மாவட்ட மீனவ மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மத்திய அரசின் நிதியுதவி பெற்று, குளச்சலில்



23 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பகுதி மீனவர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழையெளியோர்களின் மேம்பாட்டையே இரவும், பகலுமாகச் சிந்தித்தும், எழுதியும், பேசியும், கவிதை புனைந்தும் ஊக்கம் தந்திடும் எங்கள் இதயத் துடிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, "கற்பனைக்கு மேனி தந்து, கால் சலங்கை போட்டு வைத்தேன், கால் சலங்கை போன இடம் கடவுளுக்கும் தெரியவில்லை" என்று சுனாமியால் உறவுகளையும், உடைமைகளையும், உயிர்களையும் பறிகொடுத்துப் பரிதவித்த மீனவ மக்களுக்கு கூடுதல் வலைகள், கை விளக்குகள், மீன்களை எடுத்துச் செல்ல மிதிவண்டிகள், உயிர் காக்கும் உடை, ஐஸ் பெட்டிகள், ஆகியவற்றினை, மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

சுனாமி பேரழிவால் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கடலோர மீனவக் கிராமங்களில் வாழும் மீனவ மக்களின் மனநிலையை உற்சாகப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள 591 கடல் மீனவக் கிராமங்களுக்கும், மீனவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தவும், மீனவர்களின் மாவட்ட, மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் அவர்கள் கலந்துகொள்ள ஊக்குவிக்கவும் தேவையான பல்வேறு அடிப்படை விளையாட்டுச் சாதனங்களை குறிப்பாக கிரிக்கெட், கைப்பந்து, கால்பந்து, கபடி, கேரம், செஸ் போன்ற விளையாட்டுச் சாதனங்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் வழங்குவதற்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மொத்தம் 60 இலட்சம் ரூபாய் செலவில் தமிழக முதல்வர் அவர்கள் வாரி வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவச் சமுதாயத்தில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதல் இடம் மற்றும் இரண்டாம் இடம்பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் வழங்கப்படுவதுபோல ஊக்கப் பரிசுகள் இவ்வாண்டு முதல் வழங்கப்படும்.

மேலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 10 ஆம் வகுப்பில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவிகளுக்கும் பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் வழங்கப்படுவதுபோல கைக்கப் பரிசுகள் இவ்வாண்டு முதல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மீன் வளத் துறையில் நடைமுறையில் உள்ள பல்வேறு வளர்ச்சி, ஆராய்ச்சி மற்றும் மீனவர் நலத் திட்டங்களைப் பெரிதும் மக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் மீன் துறைத் தலைமை அலுவலகத்தில் தொடுதிரை மென் பொருட்களுடன் 2 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

மீன்வளத் துறை மானியக் கோரிக்கைமீது சட்டமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு முடிந்த அளவு நான் பதில் வழங்கியுள்ளேன்.

*பிற்பகல் 2–15*

இங்கே 147 வெட்டுத் தீர்மானங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பார்த்தேன். முடிந்த வரை இம்மாமன்றத்தில் பதில் சொல்லியிருக்கின்றேன். என் பதிலுரையில் இடம் பெறாத உங்கள் கோரிக்கைகளை என் நினைவில் வைத்துக்கொண்டு, வருங்காலத்தில் கருணை உள்ளம் கொண்ட நமது தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படியும், அறிவுரைப்படியும் அவற்றை நிறைவேற்றிட ஆவன செய்வேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு கோரிய தொகையை இந்த அரசுக்கு வழங்கும் வகையில் மீன்வளத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி வேண்டி, தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், தமிழகக் காவலர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி, இந்த அளவுக்கு எனக்கு மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு தமிழ் மணக்க, மணக்க வணக்கம் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்வாழ் உயிரினங்கள், இறால், நண்டு போன்றவை எல்லாம் மிக அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. குறிப்பாகச் சொல்ல



வேண்டுமென்று சொன்னால், ஒரு கிலோ நண்டு 400 ரூபாய், இறால் 400 ரூபாயிலிருந்து 800 ரூபாய்க்குக்கூட விற்கப்படுகிறது. இந்த விலையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு நம்முடைய மீன்வளத் துறை நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, ஐஸ் மீன்கள் வெளி மாநிலங்களிலிருந்து நம்முடைய பகுதிக்கு வருகின்றன. அப்படி வருகின்ற அந்த மீன்கள், ரொம்ப நாள் ஐஸில் இருந்த காரணத்தால் பல வியாதிகள் அதன் வழியாக நம் ஊருக்கு வருவதாகக் கூறுகிறார்கள். அதனையும் தடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத்தைப் பற்றிய பதிலுரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்காக ஏராளமான அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு துணைக் கேள்வி. பதிலித் தொழிலாளர் நிரந்தரம் என்பது நீண்டகாலக் கோரிக்கையாக இருக்கிறது. மதுரை ஆவின் பால் பண்ணை நிர்வாகம் தென் இந்தியாவிலேயே சிறப்பாக இயங்குகிறது என்று குறிப்பிடுகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் குறித்து அமைச்சரிடமிருந்து உரிய பதில் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** அந்தப் பகுதிநேரப் பணியாளர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று, Supreme Court–லே அந்தத் தொழிலாளர்களுக்கு விரோதமான, அதாவது அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படாமல் வேறு விதமான மாறுபட்ட தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. Co-operative Department-லே அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அவர்களிடம் அந்த நகல் இருக்கிறது. அந்த நீதிமன்றத்தினுடைய உத்தரவுக்கு மாறாகவோ அல்லது அதைப் பற்றிப் பரிசீலனை செய்து நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களை அணுகி கருணை அடிப்படையில் ஏதாவது முடிவெடுக்க முடியுமேயானால், அதற்குத் தொழிற்சங்கத் தலைவர்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து, ஒரு முடிவு செய்து, நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின், குறிப்பாக மீனவ மக்களுடைய கிட்டத்தட்ட 30 ஆண்டு காலக் கோரிக்கையை, நாங்களும், கன்னியாகுமரி மாவட்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட 7 சட்டமன்ற உறுப்பினர்களும் சுற்றுலாத் துறை அமைச்சர் மாண்புமிகு சுரேஷ் ராஜன் அவர்களுடைய தலைமையிலே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, குளச்சலிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அளித்தோம். அந்தக் கோரிக்கையைப் பரிவோடு ஏற்று, இந்த நிதிநிலை அறிக்கையிலே 23½ கோடி ரூபாயில் குளச்சலிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. மானியக் கோரிக்கையிலும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், அது உடனடியாக நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காகக் குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், குமரி மாவட்ட மக்களின் சார்பாகவும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 23½ கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்திற்கு உடனடியாக அரசு ஆணை வழங்கி இந்தத் திட்டம் தொடங்கப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அமைச்சரைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** கூடிய விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 7, (குறுக்கீடு) கோபாலன், என்ன? சொல்லுங்கள்.

***திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி பால் உற்பத்தியாளர் சங்கம் 1985 ஆம் ஆண்டு ஏறக்குறைய 3½ கோடி கடன் நிதியால் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில், கூட்டுறவு, வனத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தோட்டக்கலைத்



துறை போன்ற அனைத்திற்கும் அரசாங்கம் 100 சதவிகிதம் மானியம் வழங்கியது. அப்பொழுது நான் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தேன். அடிக்கல் நாட்டி 7 ஆண்டு காலத்திற்குப்பின் திரு. ஜெயில்சிங் அவர்களை வரவழைத்து அது திறக்கப்பட்டது. மிகச் சிறப்பான முறையில் நடைபெற்ற அச்சங்கத்திற்கு 50 சதவிகிதம் கடனாகவும், 50 சதவிகிதம் மானியமாகவும்தான் நாங்கள் கேட்டு வந்தோம். ஆனால், ஒன்றையுமே ஏற்றுக்கொள்ளவில்லை. 100 சதவிகிதம் மற்ற துறைகள் மானியமாகப் பெற்றபொழுது நாங்கள் பெற முடியவில்லை. இப்பொழுது அந்தச் சங்கம் நலிவுற்ற நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. 2004 ஆம் ஆண்டு ஒரு லிட்டர் பாலுக்கு ஒரு ரூபாய் அரசாங்கம் உயர்த்திய காரணத்தினால், மாதத்திற்கு 8½ இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, இன்று ஏறக்குறைய 80, 90 இலட்சம் ரூபாய் நஷ்டத்திலே அது இயங்கிக்கொண்டிருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விளக்க வேண்டாம். கேள்வியை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. போ. கோபாலன்:** அந்தச் சங்கத்திற்கு 90 இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்தால், 34,000 விவசாயிகள் வாழக்கூடிய நிலை ஏற்படும். தயவுசெய்து இந்த அரசு அதைப் பரிசீலித்து ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 90 இலட்சம் ரூபாய் வேண்டும் என்று கேட்கிறீர்கள். அவ்வளவுதானே? அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** கடந்த ஆட்சிக் காலத்தில், பால் ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் பாராளுமன்றத் தேர்தலின்போது உயர்த்திவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற வகையில் அங்கிருக்கக்கூடிய பாக்கிக்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு வார காலத்திற்கு முன்பு 15 இலட்சம் ரூபாய் Federation-லிருந்து அனுப்பி வைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) போகப் போக அந்த வளர்ச்சியைப் பொறுத்து, பாக்கித் தொகையும் அளிக்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 7–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7–கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.



திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை – மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.93,98,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,33,03,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 8–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 8–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– பால் வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.



**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.



திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

திரு. செ. தாமோர்தரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.



திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,93,88,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 21–8–2006 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 ஆகஸ்ட் 19

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேர வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 21-8-2006 திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசின அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

21-8-2006, திங்கட்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21-8-2006 (திங்கட்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

23. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

24. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2006 ஆகஸ்ட் 19]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

69. மானியக் கோரிக்கை எண் 7-கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

70. மானியக் கோரிக்கை எண் 8-கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

71. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006-2007. (தமிழ்)

# இணைப்பு I

*(75ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 7–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### முன்னுரை

மீன்வளம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும் மற்றும் கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. 1,076 கி.மீ.–க்கும் கூடுதலான கடற்கரையினைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், மொத்த மீன் பிடிப்பில் கடல் மீன் பிடிப்பே பிரதானமாக உள்ளது. இக்கடற்கரையோரப் பகுதி கீழ்க்கண்டவாறு நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது:

1. வடக்கே பழவேற்காடு முதல் தெற்கே கோடிமுனை வரை சோழமண்டலக் கடற்கரை சுமார் 357.2 கி.மீ.
2. கோடிமுனை முதல் தனுஷ்கோடி (பாக் ஜலசந்தி) வரை சுமார் 293.9 கி.மீ.
3. தனுஷ்கோடி முதல் கன்னியாகுமரி (மன்னார் வளைகுடா) வரை சுமார் 364.9 கி.மீ.
4. கன்னியாகுமரி முதல் நீரோடி வரை மேற்கே அரபிக் கடலில் 60 கி.மீ. நீளமுள்ள சிறு கடற்பகுதி

நமது நாடு 8,118 கி.மீ. நீளமுள்ள கடற்கரையுடன், மேற்குக் கடற்கரையில் 0.86 மில்லியன் கிலோ மீட்டரும், கிழக்குக் கடற்கரையில் 0.56 மில்லியன் சதுர கிலோ மீட்டரும், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் 0.60 மில்லியன் சதுர கிலோ மீட்டரும் உள்ளடக்கியதாக மொத்தம் 2.02 மில்லியன் சதுர கிலோ மீட்டர் தனி உரிமைப் பொருளாதார மண்டலமாக (EEZ) உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 1,076 கி.மீ. நீளக் கடற்கரையும், 0.19 மில்லியன் சதுர கிலோ மீட்டர் தனி உரிமைப் பொருளாதார மண்டலமும், 41,412 சதுர

கி.மீ. கடற்படு நிலத்தொடரும் கொண்டு மீன் வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்பு ஆகியவற்றில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது. கடல் உணவுப் பொருள் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு பெரும் பங்கு வகிக்கின்றது. கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தில் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்பட) பரந்த நிலப்பரப்பு உடையதாக இருப்பினும், அவற்றை முழுமையான நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு மேலும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

உள்நாட்டு மீன்வளத்தில், 3.71 இலட்சம் எக்டேர் நீர்ப்பாப்பில் நீர்த்தேக்கங்களும், பெரிய நீர்ப்பாசன மற்றும் நீண்ட பருவ காலக் குளங்கள், குறுகிய பருவ காலக் குளங்கள் மற்றும் குட்டைகள், உப்பங்கழிகள், கழிமுகங்கள் ஆகியவை மீன் பிடிப்பிற்கும், மீன் வளர்ப்பிற்கும் ஏற்புடையவையாக உள்ளன. சுமார் 5,000 எக்டேர் நீர்ப்பரப்பளவு நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 56,000 எக்டேர் உவர் நீர்ப்பரப்பில் தற்போது சுமார் 4,455 எக்டேர் பரப்பளவிற்கு மட்டுமே உவர் நீர்வாழ் உயிரின உற்பத்திக்கெனப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மீன்வள ஆதாரத்தை மேம்படுத்துவதற்கும், மீன்வளத்தைப் பாதுகாப்பதற்கும், மாநிலத்தில் மீன் பிடிப்பை தங்களுடைய முழு வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள மீனவ மக்களின் சமூகப் பொருளாதார நலத்தை உயர்த்துவதை முக்கியக் கோட்பாடாகக் கொண்டு, மீன்வளத் துறை 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## நிர்வாக அமைப்பு

மீன்வளத் துறையின் துறைத் தலைவராக உள்ள மீன் துறை சிறப்பு ஆணையர் தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் செயற்பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார். மீன்வளத் துறை ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 3 மீன் துறை இணை இயக்குநர்கள் மற்றும் 3 மீன் துறை துணை இயக்குநர்களின் தலைமையில் மீன் துறை உதவி இயக்குநர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மீனவர் நலத் திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன.



## மீன்வளத் துறையின் கொள்கை–நோக்கங்கள்

முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

1. அண்மைக்கடல் பகுதிகளில் பெருமளவு மீன் பிடிப்பினைக் குறைப்பதற்காக இதுவரை பிடிக்கப்படாமல் இருக்கும் மீன்வளத்தினை மீனவர்கள் பயன்படுத்த ஊக்குவித்தல்.
2. கடலோரங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள், மீன் இருப்பை அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் போன்றவற்றின்மூலம் அண்மைக்கடல் பகுதிகளில் நீர்வாழ் உயிரின உற்பத்தி ஆதாரங்களைப் பெருக்குதல்.
3. சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான ஆதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
4. மீன்களைக் கரை சேர்த்தல் மற்றும் மீன் விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.
5. மீனவ மக்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம் அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.
6. தற்போதைய நிலைக்கேற்ப நடைமுறையில் உள்ள மீன்வளச் சட்டங்களை மாற்றியமைத்தல்

## 1. மீன்வள மேம்பாட்டு இயக்கம்

தமிழகத்தில் மீன்வள மேம்பாட்டு இயக்கம் மீன் உற்பத்தியைப் பெருக்கவும், மீனவர்கள், மீன் வளர்ப்போர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மற்றும் மீன் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், கடலோர மற்றும் உள்நாட்டு ஏழை மீனவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடவும், பாரம்பரிய மீனவ மற்றும் மீன் வளர்ப்போரின் சமூகப் பொருளாதார நலன்களை மேம்படுத்திடவும், பாரம்பரிய மீனவ சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், மேம்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில் சார்ந்த பாரம்பரிய மீனவ மக்களின் மீன் உற்பத்தியினைப் பெருக்கி உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 19

**மீன்வள மேம்பாட்டு இயக்கத்தின்கீழான திட்டங்கள்**

(1) நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை

(2) குளம், குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பைப் பிரபலமாக்குதல்

(3) கடலோரப் பகுதிகளை நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்காக மேம்படுத்துதல்

(4) கடலோர மீன்வளத்தை மேம்படுத்துதல்

(அ) மீன்வள இருப்பை அதிகப்படுத்துதல்

(ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்

(5) மீன் பிடிப்பிற்குப் பின் உதவியும் விற்பனையும்

(அ) மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல்

(ஆ) மீன் சில்லறை விற்பனை கட்டமைப்பு வசதிகள் அமைத்தல்

(6) கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(அ) உயிர் காக்கும் மிதவைகள்/உயிர் பாதுகாக்கும் கவச உடைகள்

(ஆ) புவிநிலை அறிவிக்கும் கருவிகள்

(7) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி வசதிகளை வலுவாக்குதல்

**2. கடல் மீன்வளம்**

**2.1 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்**

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குவதற்காக மீனவர்களுக்கு நிதியுதவியினை விரிவாக்கும் நோக்கத்துடன் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களில் பொருத்துவதற்குரிய வெளிப்பொருத்தும் மோட்டார் இயந்திரங்களை வாங்குவதற்காக, அரசு மானியத் தொகையினை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/–க்கு உயர்த்தியுள்ளது. இத்திட்டமானது 2006–07 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.



2006 ஆகஸ்ட் 19]

**2.2 உயர் வேக டீசல் எரியெண்ணெய்மீதான மத்திய கலால் வரியைத் திருப்பியளித்தல்**

விசைப் படகு உரிமையாளர்களின் துயரங்களைக் குறைத்திடவும், விசைப் படகுகளின் இயக்கத்திற்கு ஏற்படும் செலவுத் தொகையினைக் குறைத்திடவும், உயர் வேக டீசல் எரியெண்ணெய் வாங்குவதற்குச் செலுத்த வேண்டிய மத்திய கலால் வரியினை, அரசானது மானியமாகத் திருப்பி அளிக்கிறது. தற்போது நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி மீனவர்களுக்கு டீசல் மானியத் தொகையாக ஒரு லிட்டருக்கு ரூ.1.50 (மாநில அரசின் தொகையாக ரூ.0.30–ம், மத்திய அரசின் தொகையாக ரூ.1.20–ம் ஒரு லிட்டருக்கு) வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 5,000 மீனவர் குடும்பங்கள் பயன்பெறும். இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியினைப் பெற்று 2006–07 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**2.3. மீனவர்கள் பயன்படுத்தும் டீசல் எரியெண்ணெய்மீதான விற்பனை வரி விலக்கு அளித்தல்**

தமிழகத்தில் இயந்திரமயமாக்கப்பட்ட படகுகள் மற்றும் விசைப் படகுகள் ஆகியவற்றுடன் மீன் பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் டீசல் எரியெண்ணெய் விலை உயர்வினால் தங்களது படகுகளை இயக்குவதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, மீன் பிடிப்பதற்காக மீனவர்களால் வாங்கப்படும் உயர் வேக டீசல் எரியெண்ணெய்மீதான விற்பனை வரியினைச் செலுத்துவதிலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்காகவும், விசைப் படகுகளுக்காகவும் மீனவர்களால் வாங்கப்படும் டீசல் எரியெண்ணையின் விலை ஒவ்வொரு லிட்டருக்கும் உத்தேசமாக ரூ.6.74 காசுகள் குறைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் சுமாராக 20,200 மீனவப் பயனாளிகள் பயனடைவர். விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல், மீன்பிடி விசைப் படகுகளுக்கு மாதம் ஒன்றுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 1,000 லிட்டரிலிருந்து 1,500 லிட்டராக உயர்த்தி 1–8–2006 முதல் வழங்க இந்த அரசு உத்தரவிட்டுள்ளது.

**2.4. அண்மைக்கடல் மீன்வள ஆதாரத்தினை மீன் மற்றும் இறால் குஞ்சுகளை இருப்பு செய்வதன்மூலம் அதிகரிக்கச் செய்தல்**

**(அ) மீன்வள இருப்பை அதிகப்படுத்துதல்** (Sea Ranching)

அண்மைக்கடலில் அதிக அளவு மீன் பிடித்தல் மட்டுமின்றி கடல் நீரை மாசுபடுத்தும் நகர்ப்புறத் தொழிற்சாலைகள் மற்றும் வேளாண்மைக்

கழிவுகள், மேலும் நில ஆக்கிரமிப்பு, நதிகளின் நீரோட்டத் தடுப்பு, சதுப்பு நிலக் காடுகளின் அழிவு மற்றும் வண்டல் படிதல் போன்றவற்றால் மீன்வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன மனித பர்க்கத்தின் நடவடிக்கைகளினால் மீன் இருப்பு பெரிதும் பாதிக்கப்பட்டு மீன் இனவிருத்தியும் பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக மீன் உற்பத்தி குறைந்து வருகிறது.

எனவே, அண்மைக்கடலில் குறைந்து வரும் மீன்வள ஆதாரத்தைப் பெருக்கவும், அளவுக்கு அதிகமாக மீன் பிடித்தலினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கவும், வணிகரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இறால் இனங்களை கடலில் இருப்பு செய்யும் பணி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 15 முதல் 20 நாட்கள் வளர்ச்சியடைந்த இறால் குஞ்சுகளை இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 12 இடங்களில் இருப்பு செய்ய அரசால் ரூ.128.40 இலட்சம் செலவின அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 35.50 மில்லியன் இறால் குஞ்சுகள் வளர்த்து கடலில் இருப்பு செய்யும் திட்டத்தின்கீழ் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

**(ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள்**

செயற்கை முறை மீன் உறைவிடங்கள் என்பன கடல் உயிரின வாழ்க்கைக்கு உதவுவதற்கென, மறு சுழற்சி செய்யப்படும் தன்மையுடைய, கடல் நீருக்கடியில் இடப்படும் சாதனங்களாகும். இவை கடல் சூழல் அமைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவுகின்றன. மீன்கள் உணவிற்கும், இனப்பெருக்கத்திற்கும் இவ்வுறைவிடங்களில் வந்து குழுமும். இதனால் மீன் உற்பத்தி அதிகரிக்கும். மேலும் இச்சாதனங்கள் உள்ள இடங்களில், மீன்பிடி விசைப் படகுகள் இறால்மடி மீன் பிடிப்பினை மேற்கொள்ள இயலாது.

எனவே, தமிழக அண்மைக்கடலோரப் பகுதிகளில் 50 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்திடும் திட்டம் மீன்வள மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டது. ஐந்தாண்டு காலத்திற்குள் 50 இடங்களில் ரூ.500 இலட்சம் செலவில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்திட அரசு கொள்கை அளவில் அனுமதி வழங்கியது. கலவா, கொடுவா மற்றும் பல்வேறு வகையான மீன் உறைவிடங்களில் வசிக்கும் மீன்களுக்கான பல்வேறு வகையான மாதிரிகள் வடிவமைக்கப்பட்டு கடற்கரையோரப் பகுதிகளில் நிறுவப்படும்.



11 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைப்பதற்கு அரசு ரூ.160 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

இதற்கான ஆலோசனைப் பணி மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான வடிவங்கள அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. (1,800 எண்ணங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன). நிறுவும் பணி நடைபெற உள்ளது.

**(இ) கடல் மீனவர்களுக்கு உயிர் காக்கும் கவச உடைகள் வழங்குதல்**

கடல் மீன்பிடித் தொழில் செய்தல் என்பது ஆபத்தானது என்பதைக் கருத்தில் கொண்டு, மீனவர்களுக்கு கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அளித்தல், கடலில் மோசமான வானிலை மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளில் உதவுதல் ஆகியவை சமீப காலங்களில் முக்கியத்துவம் அடைந்துள்ளன. பாரம்பரிய மற்றும் சிறு தொழில் மீனவர்களுக்குத் தேவையான விலை குறைந்த உயிர் காக்கும் உபகரணங்கள் வழங்குதலின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு மீன்வள மேம்பாட்டு இயக்கம் தமிழக அரசால் வடிவமைக்கப்பட்டது. தமிழ்நாட்டு சிறு தொழில் மீனவர்களுக்கு உயிர் காக்கும் கவச உடைகள் வழங்குவதும் மீன்வள மேம்பாட்டு இயக்கத்தில் ஒன்றாகும். இதனால் இறப்பு மற்றும் விபத்துகளின் எண்ணிக்கை குறையும்.

ஒரு உடையின் விலை ரூ.1,000 வீதம் கடல் மீனவர்கள் 10,000 பேருக்கு 90 சதவீதம் மானிய விலையில் உயிர் காக்கும் கவச உடைகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.5. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்

### மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுதல்

**(i) இராமேஸ்வரம்**

இராமேஸ்வரத்தில் ரூ.48.69 கோடி செலவில் புதிதாக மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு பெங்களூர் மத்திய மீன்வள கடலோரப் பொறியியல் நிறுவன இயக்குநரால் தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கிட மாவட்ட மற்றும் மாநில அளவிலான கடலோர மேலாண்மைக் குழுவால் இசைவு தெரிவிக்கப்பட்டு, மத்திய கடலோர மேலாண்மைக் குழுவின் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கும்பொருட்டு கருத்துரு பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 19

**(ii) குளச்சல் மற்றும் பூம்புகார்**

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மாதிரி ஆய்வுப் பணி மேற்கொள்ளும்பொருட்டு தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ரூ.25.00 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. பூம்புகாரைப் பொறுத்தமட்டில் மாதிரி ஆய்வுப் பணி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மைய அரசின் நிதி உதவியுடன் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய மீன்பிடித் துறைமுகம் கட்டப்படும்.

**(iii) தேங்காய்ப்பட்டினம்**

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை பெங்களூர் மத்திய மீன்வள கடலோரப் பொறியியல் நிறுவன இயக்குநரால் தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூ.30.55 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ரூ.200 இலட்சம் மாநில அரசின் பங்குத்தொகையில் முதல் தவணையாகவும், ரூ.72.75 இலட்சம் தனியாரின் நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காகவும் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தனியார் நிலத்தைக் கையகப்படுத்த ரூ.72.75 இலட்சம் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வருவாய் கடல் புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரால் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(iv) முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலம்துறை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலம்துறையில் தனியார் முதலீட்டில் சொந்தமாகக் கட்டி இயக்கி மாற்றியளிக்கும் (BOOT) திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகம் அமைத்துக்கொள்ள அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(v) சென்னை மற்றும் தூத்துக்குடி**

ஏற்றுமதி மேம்பாட்டிற்காக உட்கட்டமைப்புகள் மற்றும் அதன் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ள மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் அதற்கான குழு (ASIDE COMMITTEE)



2006 ஆகஸ்ட் 19]

கீழ்க்கண்ட மீன்பிடித் துறைமுகங்களை உலகத் தரத்திற்கு இணையாக உயர்த்திடும்பொருட்டு ரூ.12.42 கோடி ஒப்பளித்துள்ளது.

| | |
|---|---|
| தூத்துக்குடி | 5.04 கோடி |
| சென்னை | 6.38 கோடி |
| குளிர்பதன வசதித் திட்டம் | 1.00 கோடி |

தூத்துக்குடி துறைமுகத்தில் தூர் வாரும் பணி மேற்கொள்ள ரூ.203 தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கும், இலட்சம் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கும். இலட்சம் தூத்துக்குடி துறைமுகப் குளிர்பதன வசதித் திட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் குளிர்பதன வசதித் திட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க திட்ட மதிப்பீட்டுத் 4 அலகுகள் (Units) ஏற்படுத்திக் கொடுக்க திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவிகிதப் பயனாளிகள் பங்குத்தொகை நீங்கலாக ரூ.340.97 இலட்சத்தை மீன் துறைக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் வழங்கியுள்ளது. குளிர்பதன வசதித் திட்டத்தில் 4 அலகுகள் (4 Units under Cold chain facilities) அமைக்க நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.90 இலட்சத்தை தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தூர் வாரும் பணியினைப் பொறுத்தவரை தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் முதற்கட்டமாக, துறைமுகப் பொறுப்புக் கழகமே தன்னுடைய சொந்த மிதவைத் தூக்கிமூலம் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டுத் தொகை செலவில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திடும்பொருட்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் இரண்டு தவணைத் தொகையாக ரூ.286 இலட்சம் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு விடுவித்துள்ளது. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(vi) தொண்டி மற்றும் இராமேஸ்வரம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டி மீன் இறங்குதளம் தற்போது கடற்படையினரால் பயன்படுத்தப்பட்டு வருவதால் அங்குள்ள மீனவர்கள் அதற்கு மாற்று வசதிகள் அமைத்துத் தரக் கோரி வருகின்றனர். சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை மத்திய அரசின் கப்பல, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. மேற்படி திட்டத்தின்கீழ் செயல்படுத்தபபட உளள பல்வேறு திட்டங்களில் தொண்டியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டமும் உள்ளது. அதன்படி, தற்போது உள்ள தொண்டி மீன் இறங்குதளத்திற்கு அருகில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டத்தை

ரூ.2.50 கோடி செலவில் நிறைவேற்ற சேது சமுத்திரக் கழகம் முடிவு செய்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் 'ட்டி' ஜெட்டிகளை பழுதுபார்க்கும்பொருட்டு ரூ.20 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் 'ட்டி' ஜெட்டி பணிகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரால் தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.6. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள்

தமிழகத்தில் கடந்த 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமியால் மீனவர்களின் உயிர், உடைமை போன்றவற்றிற்குப் பெரும் சேதம் விளைவித்துள்ளது. மீன்பிடித் துறைமுகங்களும் மற்றும் மீன் இறங்குதளங்களும் பகுதி சேதமடைந்துள்ளன. தமிழகத்திலுள்ள பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்களான பழையாறு, சின்னமுட்டம், சென்னை, தொண்டி, நாகப்பட்டினம், ஆற்காட்டுத்துறை, மல்லிப்பட்டினம், கடலூர், முடசலோடை, தூத்துக்குடி, புன்னக்காயல் மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகியவற்றின் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு ரூ.18.5 கோடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கடுவையாறு, உப்பனாறு, அம்மணாறு மற்றும் வெட்டாறு ஆகிய 4 ஆற்று முகத்துவாரங்களை ஆழப்படுத்தும்பொருட்டு ரூ.1 கோடியும் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மராமத்துப் பணிகள் மேற்கூறிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

## 2.7. சுனாமி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் புனரமைப்புப் பணிகள்

26-12-2004 அன்று அடித்த சுனாமி கடல் சீற்றம் காரணமாக சேதம் அடைந்த மீன்பிடி சாதனங்கள் விவரம் கீழ்க்கண்டவாறு:

1. கட்டுமரங்கள் (அனைத்து வகை) - 35,530
2. வலலங்கள் (அனைத்து வகை) - 11,118
3. மீன்பிடி விசைப் படகுகள் - 4,430
4. வலைகள் - 2,200.07 மெட்ரிக் டன்கள்

அரசு, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிக் கலன்கள் மற்றும் தளவாடங்களைப் பழுதுபார்க்கவும், மாற்றி அமைக்கவும் பல்வேறு வகையான திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்தது. மீனவர்களுக்கு ஏற்பட்



இழப்பினை மதிப்பீடு செய்யவும், உதவிகளை நல்கவும் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. அஃதன்படி துணை ஆட்சியர் தலைமையில் வருவாய்த் துறை மற்றும் மீன்வளத் துறை அலுவலர்கள் இணைந்த குழு, பாதிப்புகளை ஆய்வு செய்து, அவ்வாய்வின்மேல் 10 விழுக்காடு மாவட்ட வருவாய் அலுவலரால் மீண்டும் ஆய்வு செய்து நிவாரணம் வழங்கப்பட்டது. நாளதுவரை மீன்பிடிக் கலன்கள் மற்றும் வலைகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் குறித்த அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது:

**26-12-2004 அன்று சுனாமியால் சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களின் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் 30-6-2006 முடிய வழங்கப்பட்ட நிவாரணம்**

| வ. எண் | சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களின் வகைப்பாடு | மதிப்பீட்டு விவரம் | | | நிவாரணம் வழங்கப்பட்ட மீன்பிடி உபகரணங்களின் விவரம் | | | மொத்தம் வழங்கப் பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | உருவாக் கப்பட்ட சொத்து (எண்ணிக் கையில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பகுதி | முழுமை | பகுதி | முழுமை | பகுதி | முழுமை | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1. | எல்லா வகையான கட்டுமரங்கள் | 4147 | 31383 | 35530 | 13503 | 16156 | 29659 | 52.230 | 19771 |
| 2. | எல்லா வகையான வல்லங்கள் | 2978 | 8140 | 11118 | 3896 | 732 | 4628 | 8.982 | 4092 |
| 3. | விசைப் படகுகள். | 1775 | 2655 | 4430 | 2283 | 374 | 2657 | 49.047 | 2150 |
| | மொத்தம் | 8900 | 42178 | 51078 | 19682 | 17262 | 36944 | 110.259 | - |
| 4. | வலைகள் (M.T.) | 2200.07 | - | - | - | - | 39316 | 37.279 | 39316 |
| 5. | இயந்திரங்கள் | 1560 | - | - | 3030 | - | 3030 | 1.515 | 3030 |
| | இறுதி மொத்தம் | - | - | - | - | - | - | 149.053 | - |

[2006, ஆகஸ்ட் 19

## உலக வங்கியின் நிதி உதவி

நாகப்பட்டினம், பழையாறு, மல்லிப்பட்டினம் மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் ஏற்கனவே உள்ள மீன்பிடித் துறைமுகங்களை உலகத் தரத்திற்கு மேம்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும், பழவேற்காடு, பாங்கிப்பேட்டை, அண்ணன்கோயில், திருமுல்லைவாசல், புன்னக்காயல் ஆகிய இடங்களில் நிரந்தர முகத்துவார வசதிகளை ஏற்படுத்தவும், கடலூர் மாவட்டம் அண்ணன்கோயில் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைத்திடவும், மேலும் கடல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மீன்பிடிப் படகுகளில் தொலைத் தொடர்பு சாதனங்கள் பொருத்துதல் மற்றும் இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்களுக்கு உதவிகள் வழங்கிடவும், உலக வங்கிக்கு ரூ.80.60 கோடி நிதி உதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட துறைமுக நவீனப்படுத்துதல் மற்றும் 4 முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறப்பு செய்தல் பணிகளை மேற்கொள்ள விருப்பம் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகர் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## ஆசிய மேம்பாட்டு வங்கியின் உதவி

பல்வேறு மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணி மற்றும் அகழ்வுப் பணி ஆகியவற்றை மேற்கொள்ள ஆசிய மேம்பாட்டு வங்கி ரூ.12.21 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ.74.30 இலட்சத்தில் கடலூர் மீன்பிடித் துறைமுகத்தில் மின் வசதி செய்தல், சாலை அமைத்தல், கட்டடங்களைப் பழுதுபார்க்கும் பணி மற்றும் சேதுபாவாசத்திரம், கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் மற்றும் புன்னக்காயல் மீன் இறங்குதளங்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

## மீன் இறங்குதளங்கள் அமைப்பதற்கு மத்திய திட்டக் குழுவின் உதவி

மத்திய அரசின் திட்டக் குழு, தமிழகத்தில் 10 இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.5 கோடி வீதம் மொத்தம் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மீன் இறங்குதளங்களுக்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.



2006 ஆகஸ்ட் 19]

## இயற்கைப் பேரிடர் நிவாரண உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளைப் பழுதுபார்க்க ரூ.11.49 கோடி நிவாரணம் இயற்கைப் பேரிடர் நிவாரண உதவியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் கீழே தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | பணியின் பெயர் | நிர்வாக ஒப்புதல் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | முடசலோடை மீன் இறங்குதளம் | 12.00 |
| 2. | பழையார் மீன்பிடித் துறைமுகம், நாகை மாவட்டம் | 300.00 |
| 3. | நாகப்பட்டினம் மீன் இறங்குதளம் | 43.50 |
| 4. | கோட்டைப்பட்டினம் மீன் இறங்குதளம் | 55.00 |
| 5. | தொண்டி மீன்பிடித் துறைமுகம் | 20.00 |
| 6. | தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம் | 4.50 |
| 7. | புன்னக்காயல் மீன் இறங்குதளம் | 13.00 |
| 8. | ஆற்காட்டுத்துறை மீன் இறங்குதளம் - ஈட்டுத் தொகை | 3.50 |
| 9. | சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம் | 72.00 |
| 10. | கடலூர் அணுகு கால்வாய் ஆழப்படுத்துதல் | 40.00 |
| 11. | சென்னை மீன்பிடித் துறைமுகம் மறு சீரமைப்புப் பணி | 430.50 |
| 12. | 4 இடங்களில் ஆற்று முகத்துவாரங்களை ஆழப்படுத்துதல் | 100.00 |
| 13. | மல்லிப்பட்டினம் மீன் இறங்குதளம் | 55.00 |

சென்னை மீன்பிடித் துறைமுக மறு சீரமைப்புப் பணிக்காக ரூ.4.30 கோடி சென்னைத் துறைமுகக் கழகத்திற்கு அரசால் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதர பகுதிகளில் மீன்பிடித் துறைமுகத் திட்ட வட்டப் பிரிவால் மேற்கண்ட பணிகள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 19

## 2.8. தமிழ்நாட்டில் பத்து இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தமிழகத்தில் பத்து இடங்களில் ரூ.13.128 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளங்கள் அமைக்க மத்திய விவசாய அமைச்சகம் நிர்வாக ஒப்புதல் வழங்கியது. ஒப்புதல் அளிக்கப்பட்ட பத்து இடங்களில் புன்னக்காயல், முடசலோடை, பழவேற்காடு, ஜெகதாப்பட்டினம், சேதுபாவாசத்திரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஆறு இடங்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய நான்கு இடங்களில் வீரபாண்டியபட்டினம் கிராமத்தைத் தவிர மற்ற மூன்று இடங்களான ஆற்காட்டுத்துறை, மண்டபம் மற்றும் சோழியக்குடி ஆகிய இடங்களில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 2.9. தமிழ்நாட்டில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தமிழகத்தில் மத்திய அரசிடமிருந்து 50 சதவீத நிதியுதவி பெற்று ரூ.15.28 கோடி செலவில் கீழ்க்கண்ட 9 இடங்களில் புதிதாக மீன் இறங்குதளங்கள் அமைக்க அரசு கருதியுள்ளது. மேலும், மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க, தேவைப்படும் நிலத்தினை மாற்றம் செய்திடவும் மற்றும் மாநில அளவிலான கடலோர நிர்வாக ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்று பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | கீழவைப்பாறு | தூத்துக்குடி மாவட்டம் |
| 2 | தருவைக்குளம் | தூத்துக்குடி மாவட்டம் |
| 3 | கடலூர் பெரியகுப்பம் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 4 | பெரியமாங்கோடு | திருவள்ளூர் மாவட்டம் |
| 5 | அண்ணாமலைச்சேரி | திருவள்ளூர் மாவட்டம் |
| 6 | சின்ன ஏர்வாடி | இராமநாதபுரம் மாவட்டம் |
| 7 | கீழக்கரை | இராமநாதபுரம் மாவட்டம் |
| 8 | ஆர்புதுப்பட்டினம் | புதுக்கோட்டை மாவட்டம் |
| 9 | பொன்னகரம் | புதுக்கோட்டை மாவட்டம் |

## 2.10. தற்போது பயன்பாட்டிலுள்ள மீன்பிடித் துறைமுகம்/மீன் இறங்குதளங்களைப் பழுதுபார்த்தல்

தமிழகத்தில் தற்போது பயன்பாட்டிலுள்ள கீழ்க்கண்ட மீன்பிடித் துறைமுகம்/மீன் இறங்குதளங்களில் பழுதுபார்த்தல் மற்றும் மராமத்துப் பணிகளை 50:50 என்ற விகிதத்தில் மேற்கொள்ளும்பொருட்டு மத்திய அரசு ரூ.99.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி ஆணை வழங்கியுள்ளது.



2006 ஆகஸ்ட் 19]

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம் மற்றும் இராமேஸ்வரம், கோட்டைப்பட்டினம் மற்றும் சின்ன ஏர்வாடி ஆகிய 3 மீன் இறங்குதளங்களில் பழுது மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்ட தொகையில் முதல் தவணையாக மத்திய, மாநில அரசுகள் தலா ரூ.25.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.50.00 இலட்சம் வழங்கியுள்ளன.

மத்திய/மாநில அரசுகள் இரண்டாவது மற்றும் இறுதித் தவணையாக தலா ரூ.21.15 இலட்சம் வீதம் மார்ச் 2006–ல் விடுவித்துள்ளது. தூத்துக்குடி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் பழுது பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. சின்ன ஏர்வாடி மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகிய இடங்களில் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

## 2.11. மீனவர்கள் கடல் பாதுகாப்புத் திட்டங்கள்

### (அ) அயல்நாடுகளில் கைதாகும் தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவித் தொகை வழங்குதல்

புயல், வெள்ளம், கடலின் நீரோட்டம் மற்றும் படகின் இயந்திரக் கோளாறுகள் போன்ற காரணங்களினால் மீன்பிடி விசைப் படகுகள், கடலில் திசை மாறி, சர்வதேசக் கடல் எல்லைக்கோட்டைக் கடந்து பிற நாடுகளில், குறிப்பாக இலங்கைக் கடற்பகுதிக்குச் சென்றுவிட நேரிடுகின்றன. இவ்வாறு சர்வதேசக் கடல் எல்லையைக் கடந்து செல்லும்போது மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். பொருள் ஈட்டும் நபர் இல்லாத நிலையில் மீனவர் குடும்பங்கள் வாழ்க்கை நடத்த இன்னலுறுகின்றன. அத்தகைய குடும்பங்களின் துயர் களைவதற்காக, அம்மீனவர் வீடு திரும்பும் வரை அக்குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ரூ.50/– வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. இவ்வாறு அயல்நாட்டினரால் பிடித்துச் செல்லப்படும் மீனவர்களின் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்கிட ஏதுவாக நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு இறக்கும் மீனவர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி அளித்தல்

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி

மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் இந்தியக் கடற்பகுதிக்குள் மீன் பிடித்து வருகின்றனர். விசைப் படகில் இயந்திரக் கோளாறு மற்றும் மோசமான வானிலை போன்ற சில காரணங்களினால், தவறுதலாக மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்று விடுகின்றனர். இவ்வாறு சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். அதுபோன்ற சமயங்களில் இலங்கைக் கடற்படையினரால் சுட நேர்ந்து ஏழை மீனவர்கள் உயிரிழப்புக்கு உள்ளாகின்றனர். அதுபோன்ற சூழ்நிலைகளில் அத்தகைய நிகழ்வுகள் அனைத்தையும் இலங்கை அரசிடம் எடுத்துரைப்பதற்காக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டு, இறக்க நேரிடும் தமிழக மீனவர்களின் குடும்பங்கட்கு ரூ.1 இலட்சம் நிதியுதவியினை வழங்கும்பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொகையினை விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கையை கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## 3. உள்நாட்டு மீன்வளம்

தமிழக உள்நாட்டு நீர்நிலைகள் பெரு நீர்த்தேக்கங்கள், சிறிய/பெரிய பாசனக் குளங்கள் நீண்ட கால மற்றும் பருவகாலக் குளம், குட்டைகள் ஆகியவை ஒருங்கிணைந்த 3.71 இலட்சம் எக்டேர் நீர்ப்பரப்பளவைக் கொண்டுள்ளன. இதுவுமல்லாமல், 7,400 கி.மீ. நீளமுள்ள நதிகள் மற்றும் கால்வாய்கள் மீன் வளர்ப்புக்கு நல்ல நம்பிக்கை அளிப்பதாக உள்ளன. அரசுடைமையாக்கப்பட்ட 30,000 எக்டேர் பரப்புள்ள நீர்நிலைகள் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மீன் குஞ்சுகள் இருப்பு செய்யவும், மீன் பிடிப்பிற்காகவும் குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளன. சுமார் 5,000 எக்டேர் பரப்பளவுள்ள கிராமியக் குளங்கள் கூட்டின மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்திற்கேற்ப மேம்படுத்தப்பட்டு, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்மூலம் அளிக்கப்பட்டுள்ளன. கூட்டின மீன் வளர்ப்பு நடவடிக்கை, நன்னீர் இறால் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்பு ஆகியவை மீன் வளர்ப்போரிடையே ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் மொத்த உள்நாட்டு மீன்வள ஆதாரம் 4.50 இலட்சம் மெட்ரிக் டன்கள். இருப்பினும், தற்போதைய மீன் உற்பத்தி 1.15 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். உள்நாட்டு மீன் உற்பத்தி, மீன்வள ஆதாரவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:





| வ. எண் | ஆதாரங்கள் | பரப்பளவு (எக்டேர்) | பரப்பளவின் பங்கு (சதவீதத்தில்) | மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியின் பங்கு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | நீர்த்தேக்கங்கள் | 52,000 | 14 % | 1.15% |
| 2. | பெரும்பாசன மற்றும் நீண்ட காலக் குளங்கள் | 97,000 | 26% | 0.25% |
| 3. | குறுகிய காலக் குளங்கள் | 1,58,000 | 43% | 86.50% |
| 4. | உவர் நீர் ஆதாரங்கள் மற்றும் குட்டைகள் | 63,000 | 17% | 12.10% |

அட்டவணையின்படி, உள்நாட்டு மீன் உற்பத்தியின் குறுக்கு மற்றும் நெடுக்கான சோதனைகளில் நீர்த்தேக்கம் மற்றும் பெரும்பாசனக் குளங்கள் மிக அதிக வளத்தைப் பெற்றுள்ளது தெளிவாகிறது. எங்கெங்கு இயலுமோ, அங்கெல்லாம் நவீன அறிவியல் நீர்வாழின வளர்ப்பினை மேற்கொண்டு, உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது மீன் உற்பத்தியைப் பெருக்கவும், அதன்மூலம் உள்நாட்டு மீனவர்களுக்கு வருவாயை அதிகரிக்கவும் உறுதி செய்யும்.

### 3.1. மீன் குஞ்சு உற்பத்தி

தமிழ்நாட்டில் மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் 8 தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஆண்டொன்றுக்கு 3,025 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதுடன், தனியாருக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

### 3.2. மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையம்

துறையின் கட்டுப்பாட்டில் 27 மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களின்மூலம் சுமார் 360 இலட்சம்

மீன் குஞ்சுகள் உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்காக விரலிகளாக வளர்த்தெடுக்கப்படுகின்றன.

### 3.3. நீர்த்தேக்கங்கள்

துறையின் கட்டுப்பாட்டில் 52,000 எக்டேர் பரப்பளவு கொண்ட 52 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இந்த நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் பணியினைத் துறை மேற்கொண்டு வருகிறது. இந்த நீர்த்தேக்கங்களில் உள்ள மீன்வள ஆதாரங்களைக் கீழ்க்காணும் முறைகளில் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

1. மீன்பிடி உரிமம் வழங்கும் முறை
2. அருகிலுள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களைப் பயன்படுத்தி பங்கு மீன் பிடிப்பு
3. குத்தகை

### 3.4. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

உள்நாட்டு நீர்நிலைகளில் விஞ்ஞான ரீதியில் மீன் வளர்ப்பினை மேற்கொண்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்து இத்திட்டத்தை விரிவுபடுத்துதலே மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பொதுவான நோக்கமாகும்.

தற்சமயம் 12 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மத்திய அரசின் நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மீன் வளர்க்க விரும்பும் பயனாளிகளுக்கு மீன் வளர்ப்பு முறை பற்றிய பயிற்சி அளித்தல், குளங்களைக் குத்தகைக்கு எடுப்பதில் உதவுதல் முதல், மீன் வளர்த்து அறுவடை செய்வது வரை, தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை அளித்தல் ஆகியவை இம்முகமையின்மூலம் செயலாக்கப்படுகின்றன.

### 3.5. தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம்

1985 ஆம் ஆண்டு பரிட்சார்த்த முறையில் விழுப்புரம், மதுரை, தேனி மற்றும் கடலூர் ஆகிய 4 மாவட்டங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மீன்வளத்தைப் பெருக்கிட நீண்ட பருவ காலக் குளங்கள் மற்றும் பெரிய பாசனக் குளங்களில் மொத்தம் 10,000 எக்டேர் நீர்ப்பரப்பு மேற்கூறிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகின்றன. இக்குளங்கள் பொது ஏலத்தின்மூலம் குத்தகைக்கு விடப்படுகின்றன. இத்திட்டம்





மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளதுடன் கிராம வேலைவாய்ப்பையும் உருவாக்கியுள்ளது.

### 3.6. குளிர்ந்த நீரில் மீன் வளர்ப்பு செய்யும் திட்டம்

தமிழகத்தில் குளிர்ந்த நீர் நிரம்பிய நீர்நிலைகள் பல உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டம் இத்தகைய இயற்கை வளமிக்க நீர்நிலைகளைக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய/மாநில அரசுகளிடமிருந்து ரூ.51.50 இலட்சம் செலவின அனுமதி பெற்று குளிர்ந்த நீரில் மீன் வளர்ப்பினைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.7. மீன்வள மேம்பாட்டு இயக்கத் திட்டங்கள்

இத்திட்டத்தின்கீழ் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட கீழ்க்காணும் இரண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

#### (அ) நீர்த்தேக்க மீன்வள வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை

இத்திட்டத்தின்மூலம் விஞ்ஞான முறையில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்த்தேக்கங்கள், நீர்நிலைகளில் மீனவளத்தினைப் பெருக்குதல், உற்பத்தி செய்யப்பட்ட மீன்களை அறுவடை செய்யத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், அறுவடைக்குப் பின் தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

#### (ஆ) மீன் வளர்ப்புக் குளங்களில் மீன்களுடன் நன்னீர் இறால் ஒருங்கிணைத்து வளர்த்தல்

மீன் வளர்ப்போர் கெண்டை மீன்களுடன் அதிக அளவில் ஆதாயம் தரும் மீன் வகையான நன்னீர் இறால்களையும் ஒருங்கிணைத்து வளர்த்து அதிக இலாபத்தினைப் பெற்றிட வழிவகை செய்வது இத்திட்டத்தின நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 800 எக்டேர் நீர்நிலைகளில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மீன வளர்ப்போர் இறால் குஞ்சுகளை வாங்கி இருப்பு செய்திட இத்திட்டத்தில் மானிய உதவி வழங்கப்படுகிறது.

### 3.8. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியினைச் சார்ந்து வாழும் மக்களின் பொருளாதார வளத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன்

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கோவை மாவட்டம், சோலையார் பகுதியில் பொம்மீன் பொரிப்பகம் அமைக்க ரூ.10 இலட்சத்தினை அரசு ஒப்பளிப்பு செய்து அப்பணி முடிவுற்றது. 2006-07 ஆம் ஆண்டிற்கு பொம்மீன் பொரிப்பகம் கட்டுமானப் பணியினை ரூ.41 இலட்சம் செலவில் நிறைவேற்றிட அரசு கருதுகிறது.

## 3.9. நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூடுகளில் மீன் வளர்த்தல்

தமிழ்நாட்டில் 52,000 எக்டேர் பரப்பளவில் 52 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவை மொத்த உள்நாட்டு நீர்ப்பரப்பில் 14 விழுக்காடு ஆகும். மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்படும் உள்நாட்டு மீன்வளம் ஒரு விழுக்காடு ஆகும். நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தி எக்டேருக்கு 12-லிருந்து 42 கிலோ வரை அமைந்துள்ளது. இது மிகக் குறைவாகும். ஆனால், நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சு இருப்பு செய்து வளர்ப்பதனை விடுத்து, கூண்டுகளில் மீன் வளர்ப்பு மேலாண்மையினை மேற்கொண்டால் எக்டேர் ஒன்றின் மீன் உற்பத்தி மேலாண்மையினை அதிகரித்திட இயலும். இவ்வாறு கூண்டுகளில் மீன் வளர்த்தல் மீன் உற்பத்தித் திறனை அதிகரிக்க சிறந்த வழிமுறையாகும்.

தற்சமயம், ஆழியாறு நீர்த்தேக்கத்தில் இத்திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது. மிதவைக் கூடுகளில் மீன் வளர்த்தல் சுய உதவிக் குழுக்கள்மூலம் செயலாக்க சிறந்த திட்டமாகும். ஆதலால் இத்திட்டம் வரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தக்கூடிய நீர்த்தேக்கங்களில் உள்நாட்டு மீனவர்கள்/சுய உதவிக் குழுக்கள்மூலம் செயலாக்கப்படும்.

## 3.10. அலங்கார மீன் வளர்ப்பு மேம்படுத்துதல்

அலங்கார மீன் வளர்ப்பு நடவடிக்கை சமீப காலமாக மிகப் பெரும் அளவில் வளர்ச்சி பெற்று வருகிறது. எங்கெங்கு நன்னீர் வள ஆதாரங்கள் உள்ளனவோ, அங்கெல்லாம் இந்நடவடிக்கைக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. கிராமப்புற வேலைவாய்ப்புகளில் அலங்கார மீன் உற்பத்திக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. அலங்கார மீன் வளர்ப்புத் தொழில்நுட்பம், குறைந்த மூலதனம் மற்றும் குஞ்சு உற்பத்திப் பிரிவினைக் குடிசைத் தொழிலாக அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. சென்னையில்



கொளத்தூரில், சுமார் 250 வீடுகள் அலங்கார மீன் உற்பத்தியினை குடிசைத் தொழிலாக அபிவிருத்தி செய்துள்ளன. ஆனால் மீன் பண்ணையாளர்களின் தொழில்நுட்பம் துவக்க நிலையில்தான் உள்ளது. இத்தொழில்நுட்பம் மேலும் உயர்த்தப்பட்டால், மீன் பண்ணையாளர்கள் போதுமான அளவு பயன்பெறுவார்கள். எனவே, தலைசிறந்த அலங்கார மீன் உற்பத்திப் பிரிவு ஒன்று அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரிவு மீன் பண்ணையாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி வழங்கிடப் பயன்படுத்தப்படும்.

## 3.11. நீர்வாழின ஆதாரக் கொள்கை

நீர்வாழ் உயிரின ஆதாரங்கள் என்பது புரதச் சத்து நிறைந்த உணவு, வேலைவாய்ப்பு மற்றும் வருவாயைப் பெருக்குவதற்கான அடிப்படை வளமாகும். தமிழகம் 1,076 கி.மீ. நீளக் கடற்கரையில் 1.9 இலட்சம் எக்டேர் தனிப் பொருளாதார மண்டலம் மற்றும் 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்தொடர் நிலப்படுகையும் கொண்டுள்ளது. 7 இலட்சம் மீனவர்கள் 591 கடல் மீனவ கிராமங்களில் தொழில் செய்து வாழ்ந்து வருகின்றனர். உள்நாட்டு மீன்வள ஆதாரங்களில் நீர்த்தேக்கங்கள், நீண்ட/குறுகிய காலக் குளங்கள், உவர் நீர்நிலைகள் போன்றவற்றை உள்ளடக்கிய 3.7 இலட்சம் எக்டேர் நீர்ப்பரப்பு உள்ளது. இவ்வாதாரங்களைச் சார்ந்து சுமார் 1.80 இலட்சம் உள்நாட்டு மீனவர்கள் தொழில் செய்து வாழ்ந்து வருகின்றனர். ஆதாரங்களின்மீதான சார்தல் அதிகரித்துள்ளதால் கூடுதல் மீன் பிடிப்பு காரணமாக அவர்களுக்கிடையே தகராறுகள் ஏற்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழலுக்கு எந்தக் கேடும் ஏற்படாவண்ணம் நீர்வாழ் உயிரின ஆதாரங்களில் நிலையான மீன் பிடிப்புக்கு உறுதி செய்ய வேண்டும். எனவே, மக்கள்தொகைக்கு ஏற்றவாறு சமமான பகிர்தலுடன்கூடிய நிலையான மீன் உற்பத்திக்கு ஏற்ப நீர்நிலைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் மீன்வளக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். மீன்வளம் பெரிய தொழிலாக இருப்பதால் இக்கொள்கை தமிழகத்தில் மீன் பிடிப்பு மற்றும் மீன் வளர்ப்பில் உள்ள பிரச்சினைகள் மற்றும் முன்னேற்றங்களின் அடிப்படையில் வகுக்கப்பட வேண்டும். நிகழ்கால மற்றும் வருங்காலச் சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிலையான நீர்வாழின உணவு உற்பத்தியினைப் பெருக்கிட உணவு, பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் வளர்ப்பு முக்கியத்துவம் நிறைந்த நீர்வாழ் உயிரின ஆதாரங்கள் மற்றும் மேலாண்மையை உள்ளடக்கிய மீன்வளக் கொள்கை உருவாக்கப்பட்டு வருகிறது.

## 3.12. கடற்பாசி வளர்ப்பு

கடல் நீர்வாழின வளர்ப்பினில் "கடற்பாசி" முக்கிய இனங்களில் ஒன்றாகும். 'அகர்' , 'கெரஜினின்', 'அல்ஜினேட்', 'மேனிடால்' மற்றும் ஐயோடின்' உற்பத்திக்கான மூலப்பொருளைத் தருகிறது. பல உயிர்ச் சத்து சேர்க்கைப் பொருள் மற்றும் சில மருந்துப் பொருட்கள் கடற்பாசிகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் கடற்பாசி வளம் அடிப்படையாகவே அமைந்துள்ளது. கடற்பாசி வளர்ப்பு மீன் பிடிப்புக்கு மாற்றாக சரியான புதிய மாற்று வேலைவாய்ப்பாக அமையும். இதன்மூலமாக அண்மைக்கடல் பகுதிகளில் மீன் பிடிப்பு நெருக்கம் குறையும். கடற்பாசி வளர்ப்புமூலம், ஒரு மீனவர் குடும்பம் ரூ.200/- முதல் 250/- வரை சம்பாதிக்கலாம். கடற்பாசி வளர்ப்பு நடவடிக்கைகளில் சுய உதவிக் குழுக்களைப் பங்கு கொண்டு ஈடுபட ஊக்கப்படுத்தப்படும்.

## 4. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில் 56,000 எக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளில் இறால் பண்ணைகளை அமைக்க வாய்ப்பு உள்ளது. இதில் 4,455 எக்டேர் மட்டுமே இறால் வளர்ப்புக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் இறால் வளர்ப்பிற்காக மாண்புமிகு உச்ச நீதிமன்ற ஆணையின்படி அமைக்கப்பட்ட நீர்வாழ் உயிரின ஆணையம் 3,331 எக்டேர் பரப்பில் இயங்கி வந்த 883 இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்த ஆணையத்திற்கு உதவிட மாநில அளவிலான குழுவும், மாவட்ட அளவிலான குழுக்களும் அமைக்கப்பட உள்ளன.

இது தவிர நீண்ட கடலோரப் பகுதிகள் இதர கடல்சார் செயல்பாடுகளுக்கும் உகந்ததாக உள்ளன. அண்மைக்கடல் மீன் பிடிப்பில் உள்ள பிரச்சினைகளைத் தவிர்க்கும்பொருட்டு சுய உதவிக் குழுக்கள் மூலம் இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## 5. ஆராய்ச்சி

### 5.1. துறையின் நடவடிக்கைகள்

மீன்வளத்தினை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இத்துறை சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு இடங்களில் ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துள்ளது. மாநில மீனள ஆராய்ச்சிக் குழு இறுதி செய்த 19 திட்டங்களில் ஆராய்ச்சி





மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் மீன் துறை ஒருங்கிணைந்து செயல்படும். மீன் துறையில் மேற்கொள்ளப்படும் சில முக்கிய ஆராய்ச்சிப் பணிகள் வருமாறு:-

1. பெருரக கெண்டை மீன்களின் இனப்பெருக்கத்தை நீட்டித்தல்/ பன்முறைப்படுத்துதல்
2. தனி வளர்ப்பு மற்றும் பல்வகை வளர்ப்புமூலம் நன்னீர் இறால் வளர்ப்பு
3. சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீடு
4. கடல் மீன் வளர்ப்பு செயல்முறை விளக்கப் பண்ணை
5. நன்னீர் மீன்/அலங்கார மீன் மற்றும் நன்னீர் இறால் ஆகிய வர்த்தக ரீதியில் முக்கியத்துவமான மீன்களுக்கு உரிய உணவு அளவை மதிப்பீடு செய்தல

### 5.2. இதர ஆராய்ச்சித் திட்டங்கள்

சுய உதவிக் குழுக்களின் கோட்பாடு, மீன்வளம் உள்ளிட்ட அனைத்து வகையான தொழில்களிலும் புதிய உத்வேகம் பெற்று வருகிறது. மீன்வளம் சார்ந்த தொழில்களைப் பிரபலப்படுத்தத் தேவையான பயிற்சிகளை இத்துறை சுய உதவிக் குழுக்களுக்கு அளித்து வருகின்றது.

தற்போது பழவேற்காடு ஏரியின் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் வகையில் ரூ.26.275 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பல்நோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 1. கூண்டுகளில் நண்டுகளைக் கொழுக்க வைக்க பயிற்சி அளித்தல்<br>2. கூண்டுகளில் சிங்கி இறால் வளர்த்து கொழுக்க வைக்க பயிற்சி அளித்தல் | ரூ.13.075 இலட்சம் |
| 3. கடற்பாசி வளர்த்தல்<br>4. கோழித் தீவனம் தயாரித்தலில் பயிற்சி | ரூ.13.20 இலட்சம் |

## 6. பயிற்சி மற்றும் விரிவாக்கம்

***6.1*** மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் (80:20) மீன் துறை பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் 3 மீனவர் பயிற்சி மற்றும் விற்பனை நிலையங்களும் ஒரு விழிப்புணர்வு மையமும் கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் மீனவர்கள், விவசாயிகள் மற்றும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளோருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2005-06 ஆம் ஆண்டு MPLAD நிதியிலிருந்து கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையில் ஒரு மீனவர் பயிற்சி நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

***6.2*** இயந்திரப் படகு பராமரிக்கவும், இயக்கவும் மற்றும் நவீன மீன்பிடிக் கலன்களை இயக்கவும், மீனவ மாணவர்களுக்கு 10 மாதப் பயிற்சி ஒன்று மாநிலத்தில் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சி மையத்திலும் 50 முதல் 60 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர இளநிலை இயந்திரக் கம்மியர் பயிற்சியும் இந்தப் பயிற்சி மையங்களில் தரப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மாதம் ரூ.200/- வழங்கப்படுகிறது.

***6.3*** மீன் துறையில் தகவல் இணைப்புக்குரிய தரவுகளைப் பலப்படுத்துவதற்காக மைய அரசுத் திட்டம் ஒன்று ரூ.68.10 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, அத்திட்டத்தை அமல்படுத்த ரூ.5.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.18 இலட்சத்தை மத்திய அரசு வழங்கியுள்ளது. 18 கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள் மாவட்ட மையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

### உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் விற்பனை

மீன் மிக விரைவில் கெட்டுப் போகும் தன்மை உடைய உணவுப் பொருள் என்பதால் மிகக் குறுகிய நேரத்தில் நுகர்வோருக்குக் கிடைக்க சிறந்த மேம்பாடு பெற்ற இறங்குதளங்கள் மற்றும் கையாளும் முறைகள், விற்பனை நிலைய விநியோகம், போக்குவரத்து வசதிகள் ஆகியவை தேவை. மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு அவர்களது பொருட்களுக்கு உரிய நல்ல விலை கிடைக்க மீன் பிடிப்புக்குப் பின் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விற்பனை வசதிகள் முறையாக உருவாக்கப்பட வேண்டும். இது கட்டாய விற்பனையைத் தடுக்க உதவும். ஆகவே, மீன்களை வெட்டி சுத்தப்படுத்தும் நிலையங்கள், குளிர்பதன நிலையங்கள், குளிர்சாதனப் பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகள் மற்றும்



நவீன சில்லரை விற்பனை நிலையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான விரிவான திட்டம் தீட்டப்படும்.

## 7. மீன்வளத்தில் கூட்டுறவு

தற்போதைய நிலவரப்படி, 3,98,581 உறுப்பினர்கள் கொண்ட 795 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 1,27,462 உறுப்பினர்களைக் கொண்ட 424 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 6039 உறுப்பினர்கள் கொண்ட 25 இதர வகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 718 உறுப்பினர்களைக் கொண்ட 10 மாவட்ட மீனவக் கூட்டுறவு இணையங்களும், 502 உறுப்பினர்கள் கொண்ட, ஒரு மாநில மீனவக் கூட்டுறவு இணையமும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இம்மாநிலத்தில் வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிரின் முன்னேற்றத்திற்கான முகமைகளாகச் செயல்படுகின்றன.

## 8. மீனவர் நலத் திட்டங்கள்

இம்மாநிலத்தில் உள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திட கீழ்க்காணும் நலத் திட்டங்களைத் தொடர்ந்து இந்த ஆண்டிலும் அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும்:

1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்
2. கடல் மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்
4. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி
5. சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவி அளித்தல்

### 8.1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

தமிழகத்தில் வாழும் மீனவர்களின் இன்னல்களைக் களைந்திட மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, 1975-76 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 50,887 வீடுகள் மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசால் 2,000 வீடுகள் கட்டிட ரூ.740 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள், 96 ஆழ் குழாய்க் கிணறுகள் மற்றும் 7 சமூக நலக் கூடங்கள் ரூ.8400.5 இலட்சம் செலவில் கட்டிக் கொடுத்திட மத்திய அரசின் அனுமதி வழங்கப்பட்டு, அதன்படி முதல் தவணையாக ரூ.37.38 இலட்சத்தை மத்திய அரசு விடுவித்துள்ளது. மத்திய அரசு விடுவித்த தொகையுடன், மாநில அரசு தனது பங்கையும் சேர்த்து மொத்தம் ரூ.74.76 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 8.2. தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடலோரப் பகுதிகளிலுள்ள கடல் மீனவர்களின் துயரத்தினை கடலில் மீன் பிடிக்க இயலாத மழை/புயல் வெள்ளக் காலங்களில் குறைத்திட அரசானது சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தினை தமிழக மீனவர்களுக்காக செயல்படுத்துகிறது.

மத்திய அரசின் விதிமுறை வழிகாட்டுதல்களின்படி இத்திட்டத்தின்கீழ் ஒரு வருடத்தில் 8 மாதங்களுக்கு மாதம் ரூ.75/- வீதம் மீனவப் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும். அவ்விதத்தில் வசூல் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.600/- உடன் 50% பங்குத் தொகை, அதாவது தலா ரூ.300/-வீதம் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையாகச் சேர்க்கப்படும். அவ்விதமாக மொத்தம் ரூ.1200/- கடலில் மீன் பிடிக்க இயலாத மழை/புயல் வெள்ளக் காலமான நான்கு மாதங்களில் மீனவப் பயனாளிகளுக்குப் பட்டுவாடா செய்யப்படும். இத்திட்டம் 2006-07 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

### 8.3. மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுச் சந்தாத் தொகையான ரூ.11/-ஐ மாநில மற்றும் மத்திய அரசுகள் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன. சந்தாத் தொகை மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின்கீழ் விபத்தினால் இறக்க நேரிடும்/நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ.50,000/-ம், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ. 25,000/-ம் வழங்கப்படுகிறது. ரூ.43.84 இலட்சம் காப்புறுதி சந்தாத் தொகை செலுத்தி புதுடெல்லியிலுள்ள மீனவர் கூட்டுறவு இணையத்தின்மூலமாகக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டம் 2006-2007 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.



### 8.4. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதியுதவி

மீனவர் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு காரியத்திற்காக அரசு ரூ.5 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இறந்த மீனவரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்குகளை மேற்கொள்ள தலா ரூ.500/- வழங்கப்படும். இத்திட்டம் 2006-2007 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

### 8.5. மீன் துறைக்கு சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள்

26-12-2004 அன்று இந்தோனேஷியக் கடற்பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தால் பெரும் சீற்றத்துடன் ஏற்பட்ட ஆழிப்பேரலை தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியைத் தாக்கியது. இந்த ஆழிப்பேரலையால் முன்னெப்போதும் இல்லாத அளவில் 13 கடலோர மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. சுனாமி பேரலை மீனவர்களின் உயிருக்கும், அவர்களுடைய மீன்பிடி சாதனங்களுக்கும் கடும் சேதத்தை விளைவித்தது.

சுனாமியால் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 507 மீன்பிடி கிராமங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. 1,26,182 குடிசைகள் மற்றும் வீடுகளுக்கு சேதத்தை ஏற்படுத்தியதுடன் 8,010 உயிர்ச் சேதத்தையும் விளைவித்தது. மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி இறங்குதளங்கள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்ட டீசல் விற்பனை நிலையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்கள், அலுவலகக் கட்டடங்கள் கடுமையாகச் சேதமடைந்தன. துறையின் ஒரு ரோந்துப் படகு மிகவும் கடுமையாகச் சேதமடைந்தது. மற்றொரு ரோந்துப் படகு சுனாமி பேரலையால் அடித்துச் செல்லப்பட்டது.

மீனவர்களுக்கு ஏற்பட்ட துயரத்தைக் களைந்து, அவர்களுடைய மீன்பிடித் தொழிலை மீண்டும் துவக்கவும், அவர்களுடைய மீன்பிடிப் படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களை மாற்றியமைக்கவும் அல்லது பழுதுபார்க்கவும் அரசு பல்வேறு நிவாரண உதவிகளை ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 9. புதிய திட்டங்கள்

### 9.1. மீன் விதைப் பண்ணைகளை மேம்படுத்துதல்

தமிழகத்தில் தற்போது நீர்நிலை ஆதாரங்களில் இருப்பு செய்ய சுமார் 1,700 இலட்சம் தரமான மீன் குஞ்சுகள் தேவைப்படுவதாகக்

கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், அரசு உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தனியார் பண்ணைகளில் ஆண்டுக்கு 1,100 இலட்சம் விரலிகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. நடப்பு 2006–07 ஆம் ஆண்டு மீன் குஞ்சுகள் உற்பத்தித் திறனை அதிகரிக்க 2,500 சதுர மீட்டர் பகுதி வளர்ப்புக் குளங்களைப் பழுதுபார்க்க மொத்தம் ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 9.2. மீன்வளத் துறையின் நூற்றாண்டு விழா கொண்டாடுதல்

மீன்வளத் துறை வரும் 2007 ஆம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது. எனவே, 2006–07 ஆம் ஆண்டில் அலங்கார மீன் கண்காட்சி, கருத்தரங்கம், மீன் பண்ணையாளர்கள் சந்திப்பு, விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 9.3. செம்பரம்பாக்கத்தில் அலங்கார மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்புப் பிரிவு அமைத்தல்

அலங்கார மீன் உற்பத்தியினைப் பெருக்கிடவும், இத்தொழில்நுட்பத்தினை மேம்படுத்திடவும், மீனவர்கள் மற்றும் சுய உதவிக் குழு மீனவ மகளிரின் திறமையை உயர்த்திடப் பயிற்சி வழங்கிடவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகளுடன்கூடிய சினைமீன் இருப்பு, உற்பத்தி மற்றும் வளர்ப்புக்காக அலங்கார மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்புப் பிரிவு ஒன்று செம்பரம்பாக்கத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் அமைத்திட ரூ.6.75 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 9.4. உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி உள்ளீட்டுப் பொருள்கள் வாங்க மானிய உதவி

மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் மீன்வள உற்பத்தியில் தங்களின் முழு முயற்சியினை வழங்கும் பங்கு மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், உள்நாட்டு மீன் வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீன் பண்ணையாளர்களுக்கு உதவவும், 100 மீனவர்களுக்கு 50 சதவிகித மானியத்தில் ரூ.3,500/– வீதம் கண்ணாடி நாரிழைப் பரிசல்கள் வாங்க மொத்தம் ரூ.3.50 இலட்சமும் மற்றும் P40 மற்றும் P16 அளவு வலைக்கூண்டுகள் 100 எண்ணிக்கைகள் விநியோகிக்க 50 சதவிகித மானியத்தில் மொத்தம் ரூ.8.50 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.





## 9.5. ஒகேனக்கல்லில் அலங்கார மீன் காட்சியகம் அமைத்தல்

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் ஒரு சுற்றுலா மையமாக உள்ளது. ஒகேனக்கல்லில் ஒரு அலங்கார மீன் காட்சியகம் அமைத்தால், பொது மக்களுக்கு அலங்கார மீன் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை உருவாக்கவும், பள்ளி மாணவர்களுக்கு கல்விப் பயனளிக்கவும் உதவும். எனவே, அங்கு ரூ.25 இலட்சம் நிதி மதிப்பீட்டில் ஒரு அலங்கார மீன் காட்சியகம் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 9.6. சிதம்பரத்தில் கழிவு நீரில் மீன் வளர்ப்பு

கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நகராட்சியில் கழிவு நீர் வெளியேற்றம் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட சுத்தப்படுத்துதலுக்குப் பிறகு வெளியேறும் நுண்ணுயிர்ச் சத்துள்ள கழிவு நீரை மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்த முடியும். வீடுகள் மற்றும் தொழிற்கூடங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீரின் தன்மைகள் மீன் வளர்ப்பு காரணமாகப் பயன் தருவதாக மாற்றப்படுவதோடு, சுற்றுச்சூழல் மாசு குறைவது மட்டுமல்லாமல், நுகர்வோருக்கு நல்ல புரதச் சத்துமிக்க மீன் உணவும் குறைந்த விலைக்குக் கிடைக்கும். எனவே, சிதம்பரத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள கீழமணக்குடி கிராமத்தில் கழிவு நீரில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள ரூ.4.21 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 9.7. கிள்ளை இறால் பண்ணைகளில் "கொடுவா மீன்" வளர்ப்பு

சிதம்பரத்தில் கிள்ளையைச் சுற்றி பல இறால் பண்ணைகள் உள்ளன. கிள்ளையில் உள்ள ஒரு இறால் பண்ணை மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பண்ணையில் கொடுவா மீன் வளர்ப்பு மேற்கொள்வதன்மூலமாக நீர்வாழின வளர்ப்பாளர்கள், சுய உதவிக் குழுக்கள், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மாவட்ட உவர் நீர் இறால் வளர்ப்பு மேம்பாட்டு முகமை உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்திடலாம். எனவே, கிள்ளையில் 1 எக்டேரில் ரூ.2.26 இலட்சம் செலவில் கொடுவா மீன் வளர்ப்பு மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

## 9.8. கழி நண்டுகள் கொழுக்க வைத்தலுக்கான தீவனம் தயாரித்தல்

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் சுய உதவிக் குழுக்கள், நீர்வாழின வளர்ப்பாளர்கள் போன்றவர்களால் கழி நண்டுகள் கொழுக்க வைத்தல் நடைபெற்று வருகிறது. இதன் உணவிற்கான செலவினத்தைக் குறைக்க ஏற்கெனவே தூத்துக்குடியில் நடைபெற்று வரும் தீவனப்

பிரிவுகளில் நடைமுறையில் உள்ள மூலப்பொருள்களுடன் தேவையான புரதச் சத்து சேர்த்து விலை மதிப்புள்ள தீவனம் ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### 9.9. தஞ்சாவூர் மற்றும் மேட்டூர் அணையில் உள்ள குளிர்பதன நிலையங்களை அலுவலகக் கட்டடங்களாக் மாற்றுதல்

தஞ்சாவூர் மற்றும் மேட்டூர் அணையில் உள்ள குளிர்பதன நிலையங்கள் மூடப்பட்டு, இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்ட பின் கட்டடங்கள் மட்டுமே இருந்தன. எனவே மீன் துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) தஞ்சாவூர் மற்றும் மீன் துறை உதவி இயக்குநர் (உள்நாடு) மேட்டூர் அணை அலுவலகங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் பழுதுகள் பார்த்து செப்பனிட ரூ.18.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 9.10. சேத்துப்பட்டு குட்டையை மேம்படுத்துதல்

சேத்துப்பட்டு குட்டை, நிலத்தடி நீரை இருத்தி வைக்கக்கூடிய குட்டையாக உள்ளது. தற்போது இக்குட்டை, இப்பகுதியைச் சுற்றி வாழ்ந்து வரும் மக்களாலும், குடியிருப்புகளாலும் கொட்டப்பட்டு வரும் குப்பைகள் மற்றும் கழிவு நீர் காரணமாக சேறு அதிகமாகச் சேர்ந்து தூர்ந்து உள்ளது. எனவே, இக்குட்டையைத் தூர் எடுத்து ஆழப்படுத்தி, நீர்வரத்து வசதிகள் செய்து அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ரூ.40 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 10. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமாகும். இன்று வரை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

(i) கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து மீன் பிடித்தல்.

(ii) தூண்டுதல் முறை இனவிருத்திமூலம் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்தல், மீன் வளர்ப்போருக்கு விற்பனை செய்தல்.



(iii) மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களைப் பராமரித்தல்.

(iv) மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கு நிலையங்கள்மூலம் மானிய விலையில் மீனவர்களுக்கு டீசல் வழங்குதல்.

(v) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொது மக்களுக்குத் தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்தல்.

(vi) மீனவர்களுக்குத் தரமான மீன் வலைகளைத் தயாரித்து விற்பனை செய்யும்பொருட்டு மீன் வலை தயாரிப்பு நிலையம் நிர்வகித்தல்.

(vii) சென்னைக்கு அருகில் நீலாங்கரையில் இறால் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிலையத்தின் கட்டமைப்பு வசதிகள் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துக்கு கடல்வாழ் உயிரினம் அதிகரிப்புத் திட்டம் நிறைவேற்றிட வசதி செய்தல்.

(viii) காரங்காடு மாதிரி இறால் பண்ணையை நிர்வகித்தல்

(ix) அலங்கார மீன் உற்பத்தி விற்பனை செய்தல் மற்றும் அலங்கார மீன் காட்சியகம் நிர்வகித்தல்.

(x) மதிப்பூட்டிய மீன் பொருட்கள் விற்பனை செய்தல்

(xi) நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தில் வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்களை மானிய விலையில் வழங்குதல்.

### 10.1. நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன் குஞ்சு இருப்பு செய்யப்பட்டு மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களைப் பணியமர்த்தி தினசரி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது:

| | | | |
|---|---|---|---|
| (1) | சாத்தனூார் அணை | (2) | பவானிசாகர் |
| (3) | ஆழியாறு | (4) | அமராவதி |
| (5) | திருமூர்த்தி | (6) | உப்பாறு |
| (7) | பாலாறு–பொறந்தலாறு | (8) | பெரும்பள்ளம் |

## 10.2. மீன் குஞ்சு உற்பத்தி

இக்கழகம் சாத்தனூர் அணை மற்றும் ஆழியாறு அணையிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வள[illegible]யத்துடன் அ[illegible], திருமூர்த்தி, உப்பாறு மற்றும் பாலாறு–பொறந்தலாறு ஆகிய இடங்களில் மீன் குஞ்சு வளர்ப்புப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் பெரும் பகுதி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதோடு மீன் துறை மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கும் மற்றும் தனி நபர்களுக்கும் மீன் குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

## 10.3. மீன் பதனிடுதல்

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபத்தில் உள்ள பனிக்கட்டி நிலையம் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## 10.4. டீசல் வழங்கும் நிலையங்கள்

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் பழையாறு போன்ற மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் துறைமுக மீன் இறங்குதளங்களில் 24 டீசல் வழங்கு நிலையங்களை மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப் படகு இயக்குபவர்களின் நலன் கருதி இயக்கி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டு மொத்தம் 47,977 கிலோ லிட்டர் டீசல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.248.33 இலட்சங்கள் தரகுத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

## 10.5. மீன் விற்பனை

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் திருவண்ணாமலை போன்ற நகரங்களில் சில்லரை விற்பனை நிலையங்கள்மூலமாக மீன்களையும், பொரித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது.

## 10.6. மீன் வலை பின்னும் நிலையம்

இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2005–2006 ஆம் ஆண்டு 57 டன் நைலான் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.159.48 இலட்சத்திற்கு மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



## 10.7. இறால் குஞ்சு பொரிப்பகம்

சென்னைக்கு அருகே உள்ள நீலாங்கரையில் இயங்கி வந்த இறால் குஞ்சு பொரிப்பகத்தில் ஒரு பகுதி கட்டமைப்பு வசதிகள் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்திற்கு 'கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டம்' நிறைவேற்றிட வழங்கப்பட்டுள்ளது. இறால் குஞ்சு பொரிப்பகத்தில் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்துக்கு நீர்வாழ் உயிரினங்கள் உற்பத்தி செய்யும்பொருட்டு குத்தகைக்கு விடப்பட்டு உள்ளது.

## 10.8. இறால் வளர்ப்புப் பண்ணை, காரங்காடு

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணையைத் தனியாருக்குக் குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10.9. அலங்கார மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு அரசு அளித்த நிதியுதவியின்கீழ் மீன் வளர்ச்சிக் கழகம் ஆழியாறு மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் அலங்கார மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும், ஆழியாறு மற்றும் திருமூர்த்தி நகரில் அலங்கார மீன் விற்பனையுடன்கூடிய அலங்கார மீன் காட்சியகங்களை நிறுவி பராமரித்து வருகிறது. அலங்கார மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்த வகையில் ரூ14.51 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

## 10.10. மதிப்பூட்டிய மீன் பொருட்கள் விற்பனை

மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் குறைந்த மதிப்புள்ள மீன்களை மதிப்பூட்டிய மீன் பொருட்களாக மாற்றி விற்பனை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 10.11. நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் திட்டம்

நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ், மானியத்துடன் வெளி/உள்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 11. தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983–ன்கீழ் 6–11–1991–ல்

பதிவு செய்யப்பட்டு, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்விணையத்தில், தற்போது 589 தொடக்க மீனவக் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்டக் கூட்டுறவு இணையங்களும் உறுப்பினர்களாக உள்ளன. இவற்றிடமிருந்து ரூ.89.095 இலட்சம் பங்குத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது. பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்குடன் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 11.1. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் : பகுதி–1

முதல் கட்டமாக பகுதி ஒன்று திட்டம் ரூ.1,699.047 இலட்சத்தில் காஞ்சிபுரம்/திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து கடலோர மாவட்டங்களில் 78 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1361.35 இலட்சம் மதிப்புள்ள 2,108 மீன்பிடி இடு பொருட்கள் 4,234 மீனவர்களுக்கு 25% மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனைக்காக இத்திட்டத்தின்மூலம் 19 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 118 இரு சக்கர வாகனங்கள் 25% மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் மீனவ கிராமங்களில் மீனவப் பிரதிநிதிகளுக்குக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி மற்றும் உள்/வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் பராமரிப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்களுக்கு இணையச் செயல்பாடுகளில் தீவிர ஈடுபாடு ஏற்படுத்திடவும், திட்டம் குறித்து அறிந்திடவும் மீனவ கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயனடைந்திட தாங்களாகவே மீன் விற்பனை, இயந்திர உதிரி பாகங்கள் விற்பனை போன்ற சுய தொழில் செய்திட ரூ.19.50 இலட்சம் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக 24 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 11.2. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் : பகுதி இரண்டு திட்டம்

பகுதி–2 திட்டத்தின் செயல்பாடு 1–4–98 முதல் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் 100 மீனவ கிராமங்களில் ரூ.4,506.250 இலட்சம் மதிப்பில் 3,565 மீன்பிடி அலகுகள் 5 ஆண்டுகளில் வழங்கிட அரசு



ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டிற்காக ரூ.800.620 இலட்சம் அரசு அனுமதித்ததன் பேரில் 57 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 1,308 மீனவர்களுக்கு ரூ.574.90 இலட்சம் மதிப்பில் 542 மீன்பிடி இடுபொருட்களும், இரண்டாவது ஆண்டில் 4 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 81 மீனவர்களுக்கு ரூ.41.24 இலட்சம் மதிப்பில் 46 மீன்பிடி இடுபொருட்களும் 25 சதவிகித மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தற்போது வட்டி விகிதத்தினை 10 விழுக்காடாகக் குறைத்துள்ளதால், நடப்பு ஆண்டில் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10% வட்டி விகிதத்தில் ரூ.431.48 இலட்சத்தில் மீன்பிடி சாதனங்கள் 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11.3. பணிமனை

இவ்விணையத்தின்மூலம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தருவைக்குளம் மற்றும் கொம்புத்துறையிலும் இயந்திர உதிரிபாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கான ஆயில் விற்பனைக்காகவும், ரூ.3.20 இலட்சம் முதலீட்டில் தொழிற்பட்டறைகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### 11.4. டீசல் விற்பனை மையம்

மீனவர்கள் இணையத்தின் வருவாயைப் பெருக்கிடவும், தரமான, சரியான அளவில் டீசல் கிடைத்திடவும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | கிராமத்தின் பெயர் | விற்பனை செய்யப்பட்ட டீசல் (கொள்ளளவு) | இலாபம் (ரூ.) |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | சேதுபாவாசத்திரம் | 14.44.850 | 7.00.710 |
| திருவள்ளூர் | பழவேற்காடு | 7.99.332 | 5.05.765 |
| தூத்துக்குடி | வேம்பார் | 6.56.532 | 4.06.964 |
| கடலூர் | அண்ணன்கோயில் | 3.50.353 | 2.62.692 |

மேற்படி டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக மீனவப் பயனாளிகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம் நீலாங்கரையிலும்,

விழுப்புரம் மாவட்டம் அனுமந்தையிலும், நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரிலும், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையிலும், தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளத்திலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்திலும் டீசல் விற்பனை நிலையங்கள் துவக்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.5. மண்ணெண்ணெய் விநியோகம்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மீனவர்களுக்கு இணையத்தின் வாயிலாக வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு மாதம் ஒன்றிற்கு 100 லிட்டர் வீதம் லிட்டர் ஒன்றிற்கு ரூ.27.60-க்கு விற்பனை செய்ய அரசு ஆணை வழங்கியுள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக தூத்துக்குடி மாவட்டத்தில் ஆலந்தலை மற்றும் அமலிநகர் மீனவ கிராமத்தில் மேற்படி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏனைய கிராமங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.6. உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை

இணையத்தின்மூலம் மீன் துறை உதவி இயக்குநர்கள் பரிந்துரைக்கும் பாரம்பரிய மீனவர்களுக்கு உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் அரசு மானியத் திட்டத்தில் 1,718 (மத்திய மற்றும் மாநில அரசு மானியத் திட்டத்தில் 1,514 இயந்திரங்களும், தொண்டு நிறுவனங்கள் வாயிலாக 204 இயந்திரங்களும்) இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2006-07 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## 11.7. குளிர்காப்புப் பெட்டிகள் வழங்குதல்

மீன்வள மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ், மீனவப் பயனாளிகளுக்கு கடல் பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின்மூலம் 50 விழுக்காடு மானியமாக வழங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இதுவரை 376 நூறு லிட்டர் கொள்ளளவுள்ள குளிர்காப்புப் பெட்டிகள் மற்றும் 225 லிட்டர் கொள்ளளவுள்ள 234 குளிர்காப்புப் பெட்டிகளும், ஆக மொத்தம் 610 குளிர்காப்புப் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இக்கொள்கை விளக்கக் குறிப்பின் மூலம் மீனவ சமுதாயத்திற்கும், மீன்வளத்தை மேம்படுத்துவதற்கும் இவ்வரசு பல்வேறு நலத் திட்டங்களைக் கீட்டி செயல்படுத்தி வருகிறது என்பது நன்கு புலனாகும்.



# இணைப்பு II

(75ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—பால் வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

கூட்டுறவு பால் பண்ணைகளின் வெற்றிக்குத் தமிழகத்தில் உள்ள கோடிக்கணக்கான சிறிய மற்றும் வறுமைக்கோட்டிற்கும் கீழேயுள்ள விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழ்நாட்டில் பால் வளத் துறை 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதலாக 1963 ஆம் ஆண்டு சென்னையில், மாதவரத்தில் பால் பண்ணை தொடங்கப்பட்டது. பின்னர் 1967-ல் மதுரையில் இரண்டாவது பால் பண்ணை உருவாக்கப்பட்டது. பால் வளத் துறையின் கூட்டுறவு அமைப்பு தனித்தன்மை வாய்ந்த மூன்று அடுக்கினைக் கொண்டதாகும். கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மாவட்ட அளவில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் மாநில அளவில் இணையம் ஆகிய மூன்று அமைப்புக்களை பால் வளத் துறை உள்ளடக்கியுள்ளது. தொடக்கத்தில் கிராம, மாவட்ட மற்றும் மாநில அளவில் உள்கட்டமைப்பு வசதிகள் மாநில திட்ட நிதி ஒதுக்கீட்டின்மூலம் பால் வளத் துறையால் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு பால் வள வாரியத்தின் செயல்பாடுகளாகிய பால் கொள்முதல், குளிரூட்டல், பதப்படுத்துதல், பால் பைகளில் அடைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவை, 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதி அன்று பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டது.

மத்திய அரசு 1992 ஆம் ஆண்டு பால் மற்றும் பால் பொருட்கள் ஆணையைப் பிறப்பித்து, தனியார் பால் பண்ணைகள் தொடங்க அனுமதித்து, பால் மற்றும் பால் பொருட்கள் கையாளுதலை,

ஒழுங்குபடுத்தப்பட்ட பிரிவின்கீழ் அதிகரிக்க வழிவகை செய்தது. இதன் காரணமாக, ஒழுங்குபடுத்தப்பட்ட பிரிவின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட பால், நாள் ஒன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் என்ற அளவை எட்டியது. (கூட்டுறவுத் துறை 29 இலட்சம் லிட்டர் மற்றும் தனியார் பால் பண்ணைகள் 13 இலட்சம் லிட்டர்). கால்நடை பராமரிப்புத் துறை மாதிரி ஆய்வு மற்றும் மதிப்பீட்டின்படி மொத்த பால் உற்பத்தி நாளொன்றுக்கு 127 இலட்சம் லிட்டர் ஆகும். இதில் பால் உற்பத்தியாளர்கள் 57 இலட்சம் லிட்டர் பாலை தங்களுடைய சுய தேவைக்குப் பயன்படுத்துகின்றனர்.

## பால் வளத் துறையின் குறிக்கோள்

(அ) பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல்

(ஆ) நுகர்வோருக்குத் தேவையான சுகாதாரமான முறையில், பதப்படுத்தப்பட்ட தரமான பால் மற்றும் பால் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல்.

பால் வளத் துறை மற்றும் பால் கூட்டுறவுகள் மேற்கூறிய குறிக்கோளை நிறைவேற்ற, கீழ்க்காணும் செயல்பாடுகளை செய்து வருகின்றன:

(1) பால் உற்பத்தியாளர்களுக்குச் சொந்தமான கறவையினங்களுக்கு மருத்துவ சிகிச்சை, தீவனம் வழங்குதல் மற்றும் இன மேம்பாடு.

(2) கறவை இனங்களின் இன மேம்பாடு மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல். அதிக தரமான பசும்புல் ஒன்றிய நிலத்தில் விளைவித்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்.

(3) சங்கப் பணியாளர்களுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் முதலுதவிப் பயிற்சி அளித்தல். நவீன கால்நடை பராமரிப்பு முறை மற்றும் நடைமுறைப் பயிற்சிகள்மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல். மேலும் பால் கறவையினங்களுக்குத் திறமையான முறையில் சமன்படுத்தப்பட்ட மற்றும் சிக்கன முறையில் தீவனம் வழங்கப் பயிற்சி அளித்தல்.





(4) சங்க உறுப்பினர்களிடமிருந்து தரமான பாலைச் சேகரித்துப் பெறுதல், பால் சேகரிப்புத் தடங்கள்மூலம் சங்கத்தில் உற்பத்தியாகும் பாலைச் சேகரம் செய்தல், புதிய பால் போக்குவரத்துத் தடம் ஏற்படுத்துதல், நவீனமான பால் பண்ணைகளில் பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பைகளில் நிரப்புதல், தரக் கட்டுப்பாட்டு முறையைச் செயல்படுத்துதல்.

பால் உற்பத்தி அதிகமாக உள்ள இடத்தில் குளிரூட்டும் நிலையம், மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல், பால் கேன்கள் வழங்குதல், பால் பரிசோதனை கருவி, திரவ நைட்ரஜன் குடுவை, செயற்கை முறைக் கருவூட்டல் கருவி மற்றும் சங்கத்திற்குத் தேவையான பரிசோதனைக் கருவிகள் வழங்குதல்.

சமன்படுத்தும் பண்ணைகளில் உபரி பாலை, பால் பவுடர், வெண்ணெய் மற்றும் நெய்யாக உற்பத்தி செய்தல். திறனுக்கு மேல் பெறும் உபரி பாலை அருகிலுள்ள மாநில சமன்படுத்தும் பால் பண்ணைக்கு அனுப்பி, பால் பொருட்களாக மாற்றம் செய்தல். (அட்டவணை I-ல் காண்க)

பால் பதப்படுத்தும் இயந்திரங்களின் திறனை அதிகரித்து, உபரிப் பாலைக் கையாளுதல், தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை பால் பதப்படுத்தும் பல நிலைகளில் கடைப்பிடித்தல், உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து, நுகர்வோருக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்களை வழங்குதல்.

மத்திய/மாநில அரசுத் திட்டங்கள் செயலாக்கம்மூலம் பால் உற்பத்தியாளர்கள் நலன் காத்தல்.

பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையின்றி பால் பணம் பட்டுவாடா செய்ய ஒன்றியத்திற்கு உதவுதல் மற்றும் நலிவடைந்த ஒன்றியங்களை நிதி நட்டத்திலிருந்து தடுத்து உதவுதல்.

சங்கங்கள் இலாபத்தில் இயங்குவதற்கும், பால் பண பட்டுவாடா குறித்த காலத்தில் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

இணையம் மற்றும் ஒன்றியம் பால் உற்பத்தியாளர்கள் பால் பண பட்டுவாடாவிற்கு முன்னுரிமை அளிக்கிறது.

[2006 ஆகஸ்ட் 19

**அட்டவணை–I**

**மாநகர பால் பண்ணைகள் மற்றும் சமன்படுத்தும் பண்ணை விவரங்கள்**

| வ. எண் | பண்ணை | பால் பதப்படுத்தும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | பால் பவுடர் தயாரிக்கும் திறன் (மெ. டன்னில்) | வெண்ணெய் தயாரிக்கும் திறன் (மெ. டன்னில்) | நெய் தயாரிக்கும் திறன் (மெ. டன்னில்) |
|---|---|---|---|---|---|
| 1 | மத்திய பால் பண்ணை, மாதவரம் | 2 | – | – | – |
| 2 | அம்பத்தூர் பால் பண்ணை, அம்பத்தூர் | 4 | – | – | – |
| 3 | சோழிங்கநல்லூர் பால் பண்ணை | 4 | – | – | – |
| 4 | சேலம் | 3 | 10 | 10 | 7 |
| 5 | ஈரோடு | 3 | 40 | 10 | 10 |
| 6 | மதுரை | 2 | 10 | 10 | 8 |
| 7 | கிருஷ்ணகிரி | 2 | 10 | 10 | 6 |

சென்னை அம்பத்தூரில் உள்ள பால் உபபொருட்கள் பண்ணையில் யோகர்ட், ஐஸ்கிரீம், கோவா, குலோப் ஜாமூன், மோர், தயிர், மைசூர்பா மற்றும் லஸ்ஸி ஆகிய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

மாவட்ட ஒன்றியங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, இணையம் அவற்றிற்குத் தேவையான சிறப்பான கருத்துரைகளை அவ்வப்பொழுது வழங்கி வருகிறது. மேலும் திட்டமிடல், விரிவாக்கம், குளிர்விப்பான் மற்றும் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுதல் ஆகிய பணிகளை முழுமையாக மேற்கொள்கிறது. ஒன்றியங்களில் உற்பத்தி செய்யப்படும் பால் பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி மற்றும் டெட்ரா பால் வகைகள் ஆகியவற்றை இணையம் தமிழ்நாடு மற்றும் மற்ற மாநிலங்களில் விற்பனை செய்து உதவுகிறது.



)06 ஆகஸ்ட் 19]

**ால் வளத் துறை**

பால் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, பதிவு செய்து, அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு பால உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளை பால் வளர்ச்சித் துறை செய்து வருகிறது.

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை கீழ்க்கண்ட சட்டபூர்வ பணிகளைச் செயல்படுத்துகிறது:

விசாரணை, ஆய்வு, தண்ட வசூல் நடவடிக்கை மற்றும் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் நிர்வாகக் குழுவினைக் கலைத்து, தனி அலுவலர்கள் நியமனம் செய்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களின் செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகிய சட்டபூர்வப் பணிகளைப் பால் வளத் துறை செய்து வருகிறது. நீதிமுறை சார்புடைய அதிகாரங்களான தகராறுகளைத் தீர்த்தல், மேல்முறையீடு, சீராய்வு, மறு ஆய்வு போன்றவற்றை முடிவு செய்யும் அதிகாரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் சரக துணைப் பதிவாளர் (பால்பதம்) ஆகியோர்களுக்கு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை, 1992–ன்கீழ், தமிழ்நாடு மாநிலத்திற்குப் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், மாநில பதிவு அதிகாரியாகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் செயல்பட்டு வருகின்ற தனியார் பால் பண்ணைகள் உள்பட, அனைத்துப் பால் பண்ணைகள் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாண்டாலோ அல்லது பால் பொருட்களிலுள்ள மொத்த சத்து வருடத்திற்கு 500 மெட்ரிக் டன்னுக்கும் மேலாகக் கையாண்டாலோ, அவை பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை, 1992–ன்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/மாநில பதிவு அலுவலருக்கு நாளொன்றுக்கு 10,000 லிட்டர் முதல் 2,00,000 லிட்டர் வரை பால் கையாளும் பால் பண்ணைகளுக்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஆணையர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சரகத் துணைப் பதிவாளர் (பால்பதம்) ஆகியோர்களுக்குப் பதிவு பெற்ற

[2006 ஆகஸ்ட் 19

பால் பண்ணைகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், கால முறை ஆய்வு மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மைய அரசின் மானியத்தில் ஆரம்பிக்கப்பட்ட தரக் கட்டுப்பாடு பரிசோதனைக் கூடம் பால் வளத் துறை ஆணையர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. பால் நுகர்வோருக்குத் தரமான பால் விநியோகம் செய்யும் நோக்குடன் விற்பனை மையம் மற்றும் கடைகளிலிருந்து மாதிரி (Sample) சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்படுகிறது.

### தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

- தமிழ்நாட்டில் 7,701 சங்கங்கள் செயல்படுகின்றன.
- தமிழ்நாட்டில் 1,285 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

### மாவட்ட ஒன்றியங்கள்

தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களை உள்ளடக்கிய 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்படுகின்றன.

- 4,445 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள பால் கறவை மாடுகளுக்கு 2,355 கருவூட்டல் மையங்கள்மூலம் செயற்கை முறைக் கருவூட்டல் செய்யும் வசதியுள்ளது.
- 3,401 பால் கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடை மருத்துவ நலத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, அனுபவமிக்க கால்நடை மருத்துவர்கள்மூலம் மருத்துவ வசதி செய்து தரப்படுகிறது.
- சங்க உறுப்பினர்களின் அவசர கால அழைப்பை ஏற்று சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.
- 42 முழுநேர கால்நடை மருத்துவப் பிரிவுகளும், 51 அவசர கால மருத்துவப் பிரிவுகளும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் இயங்கி வருகின்றன.
- ஈரோடு பால் பண்ணையிலிருந்து மதர் டெய்ரி, புதுடெல்லிக்கு 40,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரயில் டேங்கர்கள்மூலம் செறிவூட்டப்பட்ட பால் (சராசரியாக வாரம் மூன்று நாட்கள்) அனுப்பப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 19]

## அட்டவணை–II

**கூட்டுறவு பால் பண்ணைகளின் விவரங்கள் :**

| வ. எண் | இனம் | விவரம் |
|---|---|---|
| 1. | மொத்தம் செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 7,701 |
| 2. | ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் | 21.19 இலட்சம் |
| 3. | பால் வழங்கும் உறுப்பினர்கள் | 4.05 இலட்சம் |
| 4. | சங்கங்களில் பால் உற்பத்தி (நாளொன்றிற்கு) | 25.09 இலட்சம் லிட்டர் |
| 5. | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 6. | மாநில அளவிலான இணையம் | 1 |
| 7. | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) | 21.59 இலட்சம் லிட்டர் |
| 8. | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) | 8.49 இலட்சம் லிட்டர் |
| 9. | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) | 8.87 இலட்சம் லிட்டர் |
| 10. | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால் பண்ணைகளின் எண்ணிக்கை | 15 |
| 11. | இணையத்தின் பால் பண்ணைகள் எண்ணிக்கை | 4 |

[2006 ஆகஸ்ட் 19

| வ. எண் | இனம் | விவரம் |
|---|---|---|
| 12. | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 19.46 இலட்சம் லிட்டர் |
| 13. | இணையத்திலுள்ள பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 10.00 இலட்சம் லிட்டர் |
| 14. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 39 |
| 15. | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 13.23 இலட்சம் லிட்டர் |
| 16. | பால் கொள்முதல் வழித்தடங்கள் | 474 |
| 17. | ஒன்றியங்களில் பால் விநியோக வழித்தடங்கள் | 194 |
| 18. | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் | 98 |
| 19. | பால் சமன்படுத்தும் பண்ணைகளில் பால் பவுடர் பண்ணைகள் | 4 |
| 20. | பால் பவுடராக மாற்ற உபயோகிக்கப்படும் பாலின் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 7 இலட்சம் லிட்டர் |
| 21. | தானியங்கி பால் விநியோக நிலையங்கள் எண்ணிக்கை | 218 |



2006 ஆகஸ்ட் 19]

## மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் கொள்முதல்

ஒன்றியங்களில் ஜூன் 2006-ல் கொள்முதல் செய்யப்பட்ட பால் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை–III**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | ஜூன் 2006 (நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்) |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 54 |
| 2. | விழுப்புரம் | 186 |
| 3. | வேலூர் | 330 |
| 4. | தருமபுரி | 162 |
| 5. | சேலம் | 436 |
| 6. | ஈரோடு | 242 |
| 7. | கோயம்புத்தூர் | 246 |
| 8. | நீலகிரி | 21 |
| 9. | மதுரை | 232 |
| 10. | திண்டுக்கல் | 46 |
| 11. | திருச்சி | 330 |
| 12. | தஞ்சாவூர் | 36 |
| 13. | புதுக்கோட்டை | 12 |
| 14. | சிவகங்கை | 35 |
| 15. | விருதுநகர் | 18 |
| 16. | திருநெல்வேலி | 72 |
| 17. | கன்னியாகுமரி | 10 |
| | மொத்தம் | 2,468 |

[2006 ஆகஸ்ட் 19

### பால் கொள்முதல் விலை

பசும் பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.10.50 (கொழுப்புச் சத்து 4.5%, இதரச் சத்து 8.5%) மற்றும் எருமைப் பால் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.12.50 (கொழுப்புச் சத்து 7%, இதரச் சத்து 8.8%) என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் விலை, கொழுப்புச் சத்து மற்றும் இதரச் சத்துக்கள் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

### ஒன்றியம் மற்றும் சென்னை மாநகர பால் விற்பனை

மாவட்ட ஒன்றியங்களில் சராசரியாக நாளொன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட பால் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை-IV**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | ஏப்ரல்–ஜூன் 2006 வரை (நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்) |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 |
| 2. | விழுப்புரம் | 28 |
| 3. | வேலூர் | 58 |
| 4. | தருமபுரி | 16 |
| 5. | சேலம் | 117 |
| 6. | ஈரோடு | 97 |
| 7. | கோயம்புத்தூர் | 181 |
| 8. | நீலகிரி | 22 |
| 9. | மதுரை | 148 |
| 10. | திண்டுக்கல் | 21 |
| 11. | திருச்சி | 101 |
| 12. | தஞ்சாவூர் | 11 |
| 13. | புதுக்கோட்டை | 6 |
| 14. | சிவகங்கை | 27 |
| 15. | விருதுநகர் | 5 |
| 16. | திருநெல்வேலி | 52 |
| 17. | கன்னியாகுமரி | 24 |
| | மொத்தம் | 915 |
| 18. | சென்னை மாநகரில் பால் விற்பனை | 925 |
| | ஆக மொத்தம் | 1840 |



2006 ஆகஸ்ட் 19]

### விற்பனை செய்யப்படும் பாலின் வகைகள்

நான்கு வகையான பால் சென்னை மாநகரத்தில் பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:

**அட்டவணை - V**

| வ. எண் | பாலின் வகைகள் | சதவிகிதம் | |
|---|---|---|---|
| | | கொழுப்புச்சத்து | இதரச்சத்து |
| 1 | இரு நிலை சமன்படுத்திய பால் | 2% | 9% |
| 2 | ஒரு நிலை சமன்படுத்திய பால் | 3% | 8.5% |
| 3 | நிலைப்படுத்திய பால் | 4.5% | 8.5% |
| 4 | முழுக் கொழுப்பு செறிந்த பால் | 6% | 9% |

24 வட்டார அலுவலகங்கள், 516 பால் டிப்போக்கள், 364 பால் விற்பனை மையங்கள், 38 மொத்த பால் விற்பனையாளர்கள், 89 பால் சில்லரை விற்பனையாளர்கள், 18 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பால் பைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 42 ஆவின் பாலகங்கள், 185 சில்லரை உரிமம் பெற்றவர்கள், 12 மொத்த

விற்பனையாளர்கள், 4,824 சில்லரை விற்பனை நிலையங்கள்மூலமாகப் பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனைமூலம் பூர்த்தி செய்கிறது.

218 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மற்றும் 175 கண்ணாடி இழைத் தொட்டிகள்மூலமாக நுகர்வோர்களுக்கு நிலைப்படுத்திய பால், எருமைப் பால், இருநிலை சமன்படுத்திய பால் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் பால் பொருட்கள் விற்கப்படுகின்றன. எருமைப் பால் தற்பொழுது, மொத்த பால் வழங்கும் பிரிவுமூலம் விற்கப்படுகிறது. தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் பாக்கெட் பாலும் விற்பனை செய்யப்படுகிறது.

**பால் விற்பனை விலை**

**அட்டவணை-VI**

**பைகளில் விற்கப்படும் பல்வேறு வகையான பால் விலை பின்வருமாறு உள்ளன:**

| இரு நிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Double Toned Milk | | ஒரு நிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Toned Milk | | நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Standardised Milk | | முழுக் கொழுப்பு செறிந்த பால் (லிட்டர் ஒன்றுக்கு Full cream Milk | |
|---|---|---|---|---|---|---|---|
| 2.0% 9.0% | | 3.0% 8.5% | | 4.5% 8.5% | | 6.0% 9.0% | |
| பால் அட்டை | அதிக பட்ச சில்லரை விலை | பால் அட்டை | அதிக பட்ச சில்லரை விலை | பால் அட்டை | அதிக பட்ச சில்லரை விலை | பால் அட்டை | அதிக பட்ச சில்லரை விலை |
| ரூ.11.50 | ரூ.13.00 | ரூ.12.50 | ரூ.14.00 | ரூ.14.50 | ரூ.16.00 | ரூ.16.50 | ரூ.18.00 |





**அட்டவணை-VII**

**தானியங்கி பால் வழங்கும் நிலையத்தில் பால் விற்பனை விலை**

| இருநிலை சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Double toned milk | | நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) Standardised Milk | | எருமைப் பால்* (லிட்டர் ஒன்றுக்கு) Buffalo Milk | |
|---|---|---|---|---|---|
| 2.0% / 9.0% | | 4.5% 8.5% | | 7.0% / 9.0% | |
| பால் அட்டை | அதிகபட்ச சில்லரை விலை | பால் அட்டை | அதிகபட்ச சில்லரை விலை | பால் அட்டை | அதிகபட்ச சில்லரை விலை |
| – | ரூ. 11.00 | ரூ.14.00 | ரூ.14.50 | – | ரூ.16.00 |

*நிறுவனங்களுக்கு மட்டும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**பால் வளத் துறையின் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக் கூடம்**

பால் வளத் துறையில் இயங்கி வரும் தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைக் கூடம், பால் நுகர்வோருக்குத் தரமான பால் வழங்கப்படுவதை உறுதி செய்ய விற்பனை மையம் மற்றும் கடைகளிலிருந்து மாதிரி பால் சேகரித்து பரிசோதிக்கிறது.

**தரம் உறுதி செய்தல்**

சென்னை மாநகரத்தில் இயங்கும் மூன்று பால் பண்ணைகளுக்கு ஐ.எஸ்.ஓ. 9001 : 2000 தரச் சான்றிதழ் பிப்ரவரி 2004 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் செப்டம்பர் 2005 ல் உணவுப் பாதுகாப்புக் (HACCP) கொள்கை தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அம்பத்தூரில் இயங்கும் பால் உபபொருட்கள் பண்ணைக்கும் ஐ.எஸ்.ஓ. (I.S.O.) மற்றும் உணவுப் பாதுகாப்புக் (HACCP) கொள்கை தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றிதழ் 3 ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கதாகும். உணவுப் பாதுகாப்புக் கொள்கை தரச் சான்றிதழ் (HACCP) பெறப்பட்டுள்ளதன்மூலம் ஆவின் விற்பனை செய்யும் பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினை உறுதி செய்கிறது.

**உட் கட்டமைப்பு மேம்பாடு**

அதிகரித்து வரும் பால் உற்பத்தியை எதிர்கொள்ளும் வகையில், ரூ.353.55 இலட்சம் செலவில் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பால்

பண்ணை மற்றும் குளிரூட்டு நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது

**புல் வளர்ப்புத் திட்டம்**

மாவட்ட ஒன்றியங்களில் மழை நீர் மற்றும் நீர்ப்பாசன வசதி அமைப்புள்ள 19,017 ஹெக்டேர் நிலத்தில் புல் வளர்ப்புத் திட்டம் செயலாக்கப்படுகிறது. மாவட்ட ஒன்றியங்களில் மொத்தம் 31 ஹெக்டேர் நிலத்தில் பசும்புல் வளர்க்கப்படுகிறது. இதில் 25 ஹெக்டேர் நிலம் மத்திய அரசின் "பசும்புல் வளர்ப்புத் திட்டத்தின்கீழ்" புல் வளர்ப்பு செயலாக்கப்படுகிறது.

**மைய அரசு பங்களிப்புத் திட்டங்கள்**

**மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்**

பால் பண்ணைத் தொழிலில் ஆர்வம் உடைய சொத்துக்கள் இல்லாத கிராமப்புறப் பெண்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் சார்ந்த பெண்கள் சுய உதவிக் குழு அங்கத்தினர்களைத் தேர்வு செய்து, அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் ரூ.649.464 இலட்சம் மதிப்பீட்டில் 2002-2003 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. திட்டக் கால இறுதியில் 10,000 பெண்களுக்கு கூட்டுறவுக் கொள்கைகள் குறித்த சட்ட அறிவு, கால்நடைகளுக்கான செயற்கை முறைக் கருத்தரிப்பு, முதலுதவி, விவசாயப் பயிற்சித் திட்டம், கறவை மாடுகள் பராமரிப்பு, பால் சோதனைக் கருவி உபயோகித்தல், பால் கலப்படம் கண்டுபிடிப்பு, சம்பந்தப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, உட்கட்டமைப்பு வசதிகள் ஒவ்வொரு மகளிர் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இச்சங்கங்களுக்கு நிர்வாக ஊக்கத் தொகை, பால் குளிர்விக்கும் செலவு, பால் ஊக்கத் தொகை மற்றும கறவை மாடு வாங்கக் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுகிறது.

மத்திய அரசு 2002 முதல் 2005 வரையிலான 3 வருட காலத்திற்கு ரூ.649.464 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. அதில் 90 விழுக்காடு தொகையான ரூ.584.518 இலட்சம் மத்திய அரசின் பங்காகும். மீதமுள்ள 10 விழுக்காடு தொகையான ரூ.64.946 இலட்சம் நடைமுறைப்படுத்தும் ஒன்றியங்களின் பங்காகும்.



மத்திய அரசு முதல் வருடத் தொகையாக ரூ.227.839 இலட்சம் விடுவித்துள்ளது. ஏழு நடைமுறைப்படுத்தும் ஒன்றியங்களும் மற்றும் இணையமும் சேர்ந்து ரூ.198.961 இலட்சம் செலவு செய்துள்ளது. மொத்தக் குறியீடான 145 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நிறுவப்பட்டு, 10,150 மகளிர் சேர்க்கப்பட்டுள்ளனர். நாளொன்றிற்கு சராசரியாக 24,481 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

மீதமுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடத்திற்கான மானியத் தொகையான ரூ.356.679 இலட்சத்தை (ரூ.197.999 இலட்சம் + ரூ.158.680 இலட்சம்) முழுமையாக வழங்க மத்திய அரசை இணையம் கேட்டுக்கொண்டுள்ளது. மத்திய அரசு இரண்டாம் வருட முதல தவணையாக ரூ.74.29 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

**தீவிர பால் பெருக்குத் திட்டம்**

சிவகங்கை-இராமநாதபுரம் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் வள நடவடிக்கைகளை மேம்படுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தக்கூடிய தீவிர பால் பெருக்குத் திட்டத்திற்கான ரூ.312.15 இலட்சம் 100 சதவிகிதம் மானியமாக வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பால் பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல், மனித வள மேம்பாடு மற்றும் கால்நடை பராமரிப்ட ஆகிய பணிகள் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

முதல் தவணையாக மத்திய அரசு ரூ.55.45 இலட்சம் வழங்கியுள்ளது மத்திய அரசின் நிதி மற்றும் ஒன்றிய நிதியுடன் சேர்த்து ரூ.56.61 இலட்ச செலவிடப்பட்டு, பயன்பாட்டுச் சான்றிதழ் (Utilisation Certificate) மத்தி அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக நடப்பு ஆண்டில் இரண்டாவது தவணையா மத்திய அரசு ரூ.102.44 இலட்சம் வழங்கியுள்ளது

**தரமான தூய பால் உற்பத்திக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்து**

கிராமப்புறங்களிலிருந்து பெறப்படும் பால் தூய்மையானதாகவு தரமானதாகவும் உள்ளதா என்பதை உறுதி செய்யும்பொருட் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு "தரமா தூய பால் உற்பத்தி" என்னும் ஒரு திட்டத்தை உருவாக்கி உள்ளது.

[2006 ஆகஸ்ட் 19

இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்குத் தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவங்கள் (Antiseptic) ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக் கூடங்கள் நுண்ணுயிர் சோதனைகள் செய்வதற்கு ஏற்றவாறு தரக் கட்டுப்பாடுகள் மேம்படுத்தப்படுகின்றன. ஆரம்ப நிலையிலேயே பால் உடனடியாகக் குளிரூட்டப்படுவதற்காகச் சங்கங்கள் அளவில் தேவைப்படும் இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கும் பயிற்சி, எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவம் மற்றும் தரக் கட்டுப்பாடு, பரிசோதனைக் கூடத்தை மேம்படுத்துதல், திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகின்றது. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மட்டும் மத்திய அரசு 75 சதவீதம் மானியம் வழங்குகின்றது. மீதமுள்ள 25 சதவீதம் செலவினத்தை பயனடையும் ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 2004–2005 மற்றும் 2005–2006 ஆகிய ஆண்டுகளுக்கு வேலூர், விழுப்புரம், திருச்சி, தருமபுரி மற்றும் சேலம் ஆகிய ஒன்றியங்களுக்கு மத்திய அரசு மொத்தம் ரூ.640.180 இலட்சம் மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் 2005–06 மற்றும் 2006–07 ஆகிய ஆண்டுகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக காஞ்சிபுரம்–திருவள்ளூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஒன்றியங்களுக்கு ரூ.285.28 இலட்சம் வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 68 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும். இதன்மூலம் பால் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 2.67 இலட்சம் லிட்டர் உயரும்.

33 மொத்த பால் குளிர்விப்பான்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும் பணி விரைவுபடுத்தப்பட்டு வருகின்றது. ஒன்றியங்களில் இரண்டு பரிசோதனைக் கூடங்களில் தரக் கட்டுப்பாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.338.97 இலட்சம் முழுவதும் அந்தந்த ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.



2006 ஆகஸ்ட் 19]

**புனரமைப்புத் திட்டம்**

**மத்திய, மாநில அரசுகளின் கூட்டுத் திட்டம்–"கூட்டுறவுகளுக்கு உதவுதல்"**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" என்னும் திட்டத்தை நட்டத்தில் இயங்கும் ஒன்றியங்கள் மற்றும் இணையங்களைச் சீரமைப்பதற்காகவும், மேலும் நட்டத்தைச் சரிசெய்து இலாபகரமாகச் செயல்படுத்தவும் உருவாக்கியது.

இத்திட்டத்தின்கீழ் நட்டத்தில் செயல்படும் ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவை தங்களது நட்டத்தைச் சரிசெய்துகொள்வதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிசமமாக 50 விழுக்காடுத் தொகையை அரசு மானியமாக வழங்கும்.

மத்திய அரசு கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின்கீழ் தருமபுரி ஒன்றியத்தைப் புனரமைப்பு செய்ய ரூ.970.99 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 50 விழுக்காடு மத்திய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் மானியமாக வழங்கும்.

திண்டுக்கல் ஒன்றியத்திற்கு கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின்கீழ் ரூ.180 இலட்சம் வழங்குவதற்கான கருத்துரு ஒன்று மத்திய அரசிற்கு, மாநில அரசின் பரிந்துரையுடன் அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**களவெளி ஜெர்சி கலப்பினப் பசு செயல் திறன் பதிவுத் திட்டம்**

பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கறவையினங்களின் இனப்பெருக்கத்திற்குத் தேவையான கலப்பினக் காளைகளை உற்பத்தி செய்வதற்கு "களவெளி ஜெர்சி கலப்பினப் பசு செயல் திறன் பதிவுத் திட்டம்" இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பால் உற்பத்தியாளர்களிடையே உள்ள பசுக்களில் அதிகபட்சமாக ஒரு நாளில் 12 லிட்டர் பால் கறந்த கறவைகளில், 1,600 நோயற்ற கறவைகளைத் தேர்வு செய்து, செயற்கை முறைக் கருவூட்டல்மூலம் கருத்தரிக்கச் செய்து, கன்று ஈன்றவுடன், அதன் பால் அளவு கணக்கிடப்படும். அதிகப் பால் கறந்த கறவைகள் எதிர்வரும் காலங்களில் கலப்பினக் காளைக் கன்றுகள் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் தாய்ப் பசுக்களாகத் தேர்வு செய்யப்பட உள்ளன.

**வம்சாவழி சோதனைத் திட்டம்**

பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கறவையினங்களைச் சிறந்த கலப்பினக் காளைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்வதற்காக

இணையத்தால் "வம்சாவழி சோதனைத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மரபுத் திறன் மிகுந்த காளைகளைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 20 கலப்பினப் பொலிகாளைகளின் விந்தைச் சேகரித்து, செயற்கை முறைக் கருவூட்டல்மூலம் பால் உற்பத்தியாளர்களிடையே உள்ள கறவைகளைக் கருத்தரிக்கச் செய்து, அக்கறவைகளுக்குப் பிறந்த கிடாரிகளின் முதல் ஈற்று பால் அளவு, கொழுப்புச் சத்து, இதரச் சத்து மற்றும் முதல் கன்று ஈனுகையில் அவற்றின் வயது போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணநலன்களை ஆராய்ந்து, ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கலப்பினக் காளைகளில் அதிகப் பால் கொடுக்கக்கூடிய சிறந்த மரபுத் திறனுயர்ந்த பொலிகாளைகள் இனப்பெருக்கத்திற்காகத் தேர்வு செய்யப்படுகின்றன.

**பசும்புல் வளர்ப்புத் திட்டம்**

மத்திய அரசு புல்வெளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில், 100 சதவிகிதம் மானியமாகப் பெறப்பட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின்மூலமாகக் கூட்டுறவு ஒன்றியங்களில் 60 ஏக்கர் நிலப்பரப்பில், புல்வெளி மேம்பாடு மற்றும் பசும்புல் உற்பத்தி செயலாக்கப்பட்டு வருகிறது. பசும்புல் வழங்குவதன்மூலம் ஒன்றியங்களிலுள்ள கால்நடைகளில் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

இத்திட்டம் மாவட்ட ஒன்றியங்களின் செயலாக்கத்தில் உள்ள விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை-VIII**

| வ. எண் | மாவட்ட ஒன்றியம் | நிலஅளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| (1) | சேலம் | 7 |
| (2) | ஈரோடு | 7 |
| (3) | மதுரை | 9 |
| (4) | கோயம்புத்தூர் | 7 |
| (5) | காரைக்குடி | 15 |
| (6) | புதுக்குடி (தஞ்சாவூர்) | 15 |
| | மொத்தம் | 60 |





**தொலைநோக்குத் திட்டம்–2006–2007**

**பசும்புல் திட்டம்**

அதிக மகசூல் தரும் பசும்புல் வகையான கோ.3, பாரா புல் மற்றும் பி.என்.2 ஆகியவை உபயோகமில்லாத விவசாயத்திற்கேற்ற 60 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டு, அதிக மகசூல் தரும் குச்சி ரகப் புல் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கால்நடைத் தீவனம்**

ஈரோடு ஒன்றியத்திலுள்ள கால்நடைத் தீவனத் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 100 மெடன் தீவனம் உற்பத்தி செய்யத் தேவையான இடுபொருட்கள் கொள்முதல் செய்யப்படும்.

**பகுதி-II —2006-2007-திட்டம்**

பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.242.94 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கீடு ரூ.147.94 இலட்சம். மீதமுள்ள ரூ.95.00 இலட்சத்தைப் பயனாளி ஒன்றியங்கள்/சங்கங்கள் செலவிடும்:

(அ) 1000 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில், கேன் ஒன்றுக்கு ரூ.2,200/- விலை மதிப்பில், 5,000 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பால் கேன்கள் கொள்முதல் செய்யப்படும். இத்திட்டத்திற்கான நிதியினை தமிழக அரசு 50 சதவிகிதமும், மீதமுள்ள 50 சதவிகிதத்தைப் பயன் அடையும் ஒன்றியம்/சங்கம் ஏற்றுக்கொள்ளும்.

(ஆ) 250 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பால் சேகரிக்கும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உபகரணங்கள் பால் சேகரிக்கும் தட்டு, புனல், மஸ்லின் துணி வடிகட்டி, அளவு பாத்திரம் மற்றும் பரிசோதனை பாட்டில் ஆகியவை அடங்கிய பெட்டி ஒன்று ரூ.5,000/- செலவில் கொள்முதல் செய்யப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.12.50 இலட்சம் ஆகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களாக உள்ள மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இத்திட்டம் 100 சதவிகித மானிய உதவியுடன் செயல்படுத்தப்படும்.

(இ) பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான 20 லி. கொள்ளளவுள்ள 10 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும். ஒரு குளிர்விப்பானின் விலை ரூ.8.00 இலட்ச மதிப்பீட்டில், 10 மொத்த பால் குளிர்விப்பான்கள் மதிப்பீடு ரூ.80.00 இலட்சம் ஆகும். மொத்த மதிப்பீட்டில் 50 சதவிகிதம் தமிழக அரசும், மீதமுள்ள 50 சதவிகிதம் பயன்பெறும் ஒன்றியம் மற்றும் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளும்.

(ஈ) மாதவரம் பால் பண்ணையிலுள்ள அரசுக் குடியிருப்புகளுக்கு கதவு சாளரம் புதுப்பித்தல், மின் சாதனம் பொருத்துதல், வெள்ளையடித்தல், கூரைப்பகுதி பழுதுபார்த்தல், உள் சாலை பழுதுபார்த்தல், புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.30.44 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(உ) பால்வளத் துறைக்குச் சொந்தமான 30 ஏக்கர் தரிசு நிலத்தில் ரூ.10.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தற்போதுள்ள ஊழியர்களைக்கொண்டு, சொட்டு நீர்ப் பாசன முறையில் மா, பசுந் தீவனம் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால் கொள்முதல்**

2006–2007 ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 27.00 இலட்சம் லிட்டர் பால் சங்க அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. மாவட்ட ஒன்றியங்கள் நாளொன்றிற்கு 23.50 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளன. இது சென்ற ஆண்டு சராசரியாக நாளொன்றிற்கு கொள்முதல் செய்யப்பட்ட 21.59 இலட்சம் லிட்டருடன் ஒப்பிடும்போது குறியீட்டிற்கு 9 சதவிகிதம் அதிகமாகும்.

**பால் விற்பனை**

2005–2006 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 8.87 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்ததை ஒப்பிடுகையில், சென்னை மாநகரில் 2006–2007 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படும். 2005–2006 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 8.87 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்ததை ஒப்பிடுகையில், ஒன்றியங்களில் 2006–2007 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.75 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படும்.



**பால் பொருட்கள் தயாரிப்பு**

குறைந்த கலோரி உள்ள ஐஸ்கிரீம், யோகர்ட் ஆகிய பால் பொருட்களின் சோதனை உற்பத்தி செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வகையான பால் பொருட்கள் 2006–2007 ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்கப்படும்.

**பால் பதப்படுத்தும் திறனை அதிகரித்தல்**

2006–2007 ஆம் ஆண்டில் அதிகப்படியான பால் பதப்படுத்துதல், பால் பைகளில் அடைத்தல் ஆகிய பணிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அந்தந்த மாவட்ட ஒன்றியங்களில் உள்ள நிதி ஆதாரத்தைக்கொண்டு ரூ.606.00 இலட்ச மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படவுள்ளது.

**மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்**

2006–2007 ஆம் ஆண்டில் மத்திய அரசின் மானியம் மற்றும் அந்தந்த மாவட்ட ஒன்றியங்களில் உள்ள நிதி ஆதாரத்தைக்கொண்டு ரூ. 562.35 இலட்சம் மதிப்பீட்டில், 61 மொத்த பால் குளிரூட்டும் இயந்திரங்கள் அமைத்து இயக்கப்படவுள்ளன.

**பால் கூட்டுறவு தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைத் துறை 01-10-1987 முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது. மாநில அளவிலான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், மாவட்ட அளவிலான பால் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்குகளை சட்டபூர்வமாகத் தணிக்கை செய்யும் பொறுப்பு இத்துறையைச் சார்ந்தது. இத்துறையில் கூட்டுறவுத் துறை போன்ற பிற துறைகளிலிருந்து அயற்பணியில் 370 பணியாளர்கள் தற்பொழுது பணிபுரிந்து வருகின்றனர்.

**அரசு வருவாய்**

2004–2005 ஆம் ஆண்டுக்குரிய தணிக்கைக் கட்டணம் குறித்த மொத்த கேட்பு ரூ.30.59 இலட்சம் ஆகும். இத்தொகையில் ரூ.28.44 இலட்சம் இதுவரையில் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையை வசூலிக்க தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டுக்கான அடிப்படை தணிக்கை விதி கட்டணத்தின

மொத்த கேட்புத் தொகை ரூ. 54.93 இலட்சம் ஆகும். இதில் ரூ.53.68 இலட்சம் இதுவரையில் வசூல் செய்யப்பட்டு, மீதமுள்ள தொகையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தணிக்கை முன்னேற்றம்**

| ஒன்றியங்களில் தணிக்கை விவரம் | |
|---|---|
| 1998–1999 | 17 ஒன்றியங்களில் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. |
| 1999–2000 | 17 ஒன்றியங்களில் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. |
| 2000–2001 | 16 ஒன்றியங்களில் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஒன்றியத்தில் தணிக்கை நிலுவையில் உள்ளது. |
| 2001 –2002 | 14 ஒன்றியங்களில் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மூன்று ஒன்றியங்களில் தணிக்கை நிலுவையில் உள்ளது. |
| 2002–2003 | 13 ஒன்றியங்களில் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. நான்கு ஒன்றியங்களில் தணிக்கை நிலுவையில் உள்ளது. |
| 2003–2004 | 8 ஒன்றியங்களில் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஒன்பது ஒன்றியங்களில் தணிக்கை நிலுவையில் உள்ளது. |
| 2004–2005 | 17 ஒன்றியங்களில் தணிக்கை நிலுவையில் உள்ளது. |
| **இணையத்தின் தணிக்கை** | |
| 2002–2003 | தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது |
| 2003–2004 | தணிக்கை முடியும் தருவாயில் உள்ளது. |

**கொள்கை உருவாக்கம்**

பசுவின் மடியிலிருந்து பெறப்படும் பாலின் தரத்தைத் தொடர்ந்து பாதுகாத்திட "ஆவின்" அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. ஆவின், 2006-2007 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது:





(அ) ரூ.562.35 லட்சம் மதிப்பில் 61 பால் குளிர்விப்பான்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவப்படவுள்ளன. இதனால் மாநிலத்தின் பால் குளிர்வூட்டும் திறன் நாளொன்றுக்கு 2.28 இலட்சம் லிட்டர் அதிகரிக்கும்.

(ஆ) ரூ.6.00 கோடி செலவில் பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் •பால் பண்ணைகள் விரிவாக்கம் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) 2 இலட்சம் லிட்டர் பால் பண்ணை மற்றும் 20 டன் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க தமிழக அரசு/நபார்டு வங்கியின் பண உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் பால் பண்ணைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், இதன்பொருட்டு திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றுய் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்குத் தீவிர பால் பெருக்குத் திட்டம்மூலமாக மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறுதல்.

(உ) திண்டுக்கல், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் தூய பால் உற்பத்தியை மேம்படுத்துதல்.

(ஊ) மத்திய / மாநில அரசுகளிடம் நிதியுதவி பெற்று, தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஒன்றியங்களைப் புனரமைப்பு செய்தல்.

**தரமான, தூய பால் உற்பத்தி**

சங்கங்களிலிருந்து தரமான பாலைக் கொள்முதல் செய்வதில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் முழுக் கவனம் செலுத்துகிறது.

தூய பால் உற்பத்தி என்பது பால் உற்பத்தி மட்டும் அல்லாமல் கால்நடை பராமரிப்பு, தீவனம், செயற்கை முறை கருவூட்டல், விவசாயிகளுக்குப் பயிற்சி, சங்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி, பால் சேகரிக்கும் இடங்களில் தூய்மை, நுண்மங்கள் இல்லாத ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பால் பாத்திரங்கள் உபயோகித்தல் மற்றும் பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் ஆகியவை ஆகும். இதன் பயனாக பாலில் உள்ள நுண்ணுயிர் எண்ணிக்கை குறையும்.

[2006 ஆகஸ்ட் 19

தரமான தூய பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ், பால் கூட்டுறவுச் சங்கங்களால் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:

1) அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் படிப்படியாக மாற்றப்படும்.

2) பசுவின் மடியைச் சுத்தம் செய்து, தரமான பாலைப் பெற துருப்பிடிக்காத பெயில்ஸ் (Pails) மற்றும் கிருமிநாசினி (Antiseptic) போன்றவற்றை உள்ளடக்கிய பால் சேகரிப்பு களப் பெட்டிகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

3) அதிக அளவில் தூய பால் உற்பத்திக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

4) தூய பால் உற்பத்தி முறையை விளக்கும் தமிழ் புத்தகங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.


5) கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமையுடன் இணைந்து கால்நடை பராமரிப்பு மற்றும் இனவிருத்திமூலம் அதிக அளவில் கால்நடைகளைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**முடிவுரை**


தரமான பாலைக் கொள்முதல் செய்து, பாலைப் பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்வதன்மூலம் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை முன்னேற்றுவதற்கு ஆவின் நிறுவனம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் வருங்காலங்களில் பால் பொருட்களை உலகத் தரத்திற்கு உயர்த்தவும், நுகர்வோருக்குத் தரமான பாலை வழங்கிடவும், பால் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடவும் ஆவின் நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.



[2006 ஆகஸ்ட் 19]




[2006 ஆகஸ்ட் 19








2006 ஆகஸ்ட் 19]


பால் உற்பத்தி




சென்னை
மாநகர பால் விற்பனை
நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்
10
8
6
4
2
0
1996-97
1997-98
1998-99
1999-00
2000-01
2001-02
2002-03
2003-04
2004-05
2005-06
சென்னை விற்பனை 7.93 8.09 7.76 7.34 7.22 7.21 6.54 6.96 7.61 8.49
ஆண்டு




ஒன்றிய பால் விற்பனை
நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்
10.00
9.00
8.00
7.00
6.00
5.00
4.00
3.00
2.00
1.00
0.00
1996-97
1997-98
1998-99
1999-00
2000-01
2001-02
2002-03
2003-04
2004-05
ஒன்றிய விற்பனை 6.21 6.59 6.68 6.59 6.49 6.06 5.92 6.69 8.10
ஆண்டு




V 211, 31'P06
P06.12.1
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227481
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.